ஒரு நெய்தல் நிலத்தின் கதை



கந்தசாமி முத்துராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
23 NOV 2012

659377

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நெய்தல் நிலத்தின் கதை

கந்தசாமி முத்துராஜா

University of Peradeniya
23 NOV 2012
Library
659377

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41–B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை– 600 098.
☎: 26258410, 26251968, 26359906

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Language : Tamil
Oru Neithal Nilathin Kadhai
Author : **Kandhasamy Muthu Rajah**
First Edition : December, 2011
Copyright : Author
No.of Pages : xii + 258 = 270
Typesetting : NCBH Computers
Publisher
New Century Book House Pvt. Ltd.,
Chennai - 600 098.
Tamilnadu State, India.
Email : ncbhbook@yahoo.co.in

ISBN: 978-81-234-1587-7
Code No. A1979
Rs.170/-

Branches

Ambattur 044-26359906, 26258410, 26251968 **Ashok Nagar** 044-24899351 **Thiruvanmiyur** 044-24404873 **Trichy** 0431-2700885 **Tanjore** 04362-231371 **Pondicherry** 0413-2213111 **Tirunelveli** 0462-2323990 **Madurai** 0452-2344106, 2350271 **Dindigul** 0451-2432172 **Coimbatore** 0422-2380554 **Salem** 0427-2450817 **Hosur** 04344-245726 **Ooty** 0423-2441743 **Vellore** 0416-2234495.

ஒரு நெய்தல் நிலத்தின் கதை
ஆசிரியர் : கந்தசாமி முத்துராஜா
முதல் பதிப்பு : டிசம்பர், 2011

அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்.,
142, ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேட்டை, சென்னை - 14
☎ : 28482973

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது உறவுமுறை அண்ணா

மூதறிஞர்

பேராசிரியர்

கார்த்திகேசு சிவத்தம்பி

அவர்களின் பாதங்களில்

இந்நூலைச்

சமர்ப்பணம் செய்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புரை

தமிழ்ச் சமூகம் நீண்ட நெடிய கடற்கரையினைப் பெற்றுள்ளது; நெடுங்காலம் கடலோடு தொடர்புகொண்ட கடற்கரை வாழ்முறையின் பண்பாட்டினைப் பெற்றுள்ளது. ஆனாலும் தமிழ்ச் சமூகத்தின் தேசிய உளப்பாங்கில் கடற்கரை வாழ்வும், பண்பாடும் உரிய இடத்தினைப் பெறவில்லை. கடற்கரை வாழ்வு மிகப்பெரிய இயற்கை, சமூக-அரசியல் நெருக்கடிகளைச் சந்தித்துக்கொண்டிருக் கின்றதெனினும், அச்சிக்கல்கள் தமிழ் பேசும் தேசிய இனங்களின் தேசியச் சிக்கல்களாக உருமாற்றம் பெறவில்லை. சமூக-அரசியல் தளத்தில் நிலவும் இந்நிலைமையைப் போன்றே, இலக்கியத் தளத்திலும், பழந்தமிழ் இலக்கியத்தில் நெய்தல்திணை பெற்ற இடத்தினைப் போன்று, நவீன தமிழ் இலக்கியத்தில் நெய்தல் நிலஞ்சார் வாழ்வு போதுமான அளவுக்குக் கவனிப்பைப் பெறவில்லை. இவ்வகையில் **'ஒரு நெய்தல் நிலத்தின் கதை'** முக்கியத்துவத்தினைப் பெறுகின்றது.

கந்தசாமி முத்துராஜா 1950கள் தொடங்கி 80கள் முடிய, ஈழக் கடற்கரை கிராமமொன்றின் கிராம வாழ்வின் முழுப் பரிமாணத்தை நம்மை அறிய வைக்கின்றார். அக்கிராம வாழ்வின் உறவுமுறைகள், நம்பிக்கைகள், சடங்குகள் என அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கிய சமூகக் கட்டமைப்பு இயக்கத்தின் முழு தரிசனத்தை தரிசிக்கின்றோம். இத் தரிசனத்தை அளிப்பவர்கள் இந்த நெடுங்கதையில் வரும் மீன் மணம் வீசும் மனிதர்கள்தான். அவர்கள் நம் சகாப்தத்தின் கிராம மனிதர்கள் போன்று எளிமையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பும் நிறைந்தவர்கள்; மூட நம்பிக்கைகளுக்கும் மரபுகளுக்கும் அடிபணிந்தவர்கள்; வஞ்சனைக்கும், சூழ்ச்சிக்கும் எளிதில் பலியாகிவிடக் கூடியவர்கள். இறுதியில், வரலாற்றின் தொடக்கத்திலிருந்து சொந்தமாயிருந்த தங்கள் மண்ணையும் கடலையும் பறிகொடுத்துவிடக் கூடியவர்கள். ஆனாலும் எந்நாளிலும் வாழ்வின் மீதான நம்பிக்கையை இழந்துவிடக் கூடியவர்களல்லர்.

இந்நெடுங்கதை நெஞ்சைத் தொடும் மனிதர்களுடன் நம்மை வாழவைப்பதன் மூலம் இலக்கியப் பிரதியாகவும், கடற்கரை கிராம வாழ்வின் சமூகக் கட்டமைப்பை வரைந்து காட்டுவதன் மூலம் மானிடவியலின் இன வரைவியல் பிரதியாகவும் பல்பரிணாமத்தைப் பெறுகின்றது. ஈழப் போராட்டத்தின் விளைவால் தேசிய அடையாளஞ்சார் பிரச்சினையில் தீவிரக் கவனம் செலுத்தும் வாசகர்களுக்கு இந்நூல் அரிய கருவூலமாகத் திகழும்.

-பதிப்பகத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரை

ஈழத்திற்கும் தமிழ்நாட்டுக்குமான சமகால இலக்கியத் தொடர்பு ஆறுமுக நாவலர் தொடங்கி ஷோபா சக்தி வரை ஒரு நூற்றாண்டுக்கும் மேலாகத் தொன்மையானது. புனைகதையாளர்களுள், செ. கணேசலிங்கன், டானியல், செ. யோகநாதன் என்ற பெயர்கள் தமிழ்நாட்டு வாசகர்களால் மறக்க முடியாதவை. அந்த வரிசையில் கடைக்குட்டிப் பிள்ளையாக கந்தசாமி முத்துராஜா வந்திருக்கிறார்.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக அயலுறவுத் தமிழ்த் திட்டத்தின்கீழ் கனடாவில் இளங்கலை இலக்கியப் படிப்பு மாணவனாக அவரை ஆறு ஆண்டுகளுக்கு முன் நான் அறிமுகம் செய்துகொண்டேன். அப்பட்டத்திற்குரிய குறு ஆய்வுத் திட்ட ஏடாக ஆழியவளை என்ற அவரது சிற்றூர் பற்றிய குறு வரைவினை (monograph) மதிப்பீடு செய்யும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. "அது நூல் வடிவம் பெறும் தகுதியுடையது" என்ற என் கருத்தினை ஏற்று அந்நூல் இலங்கையில் வெளியிடப்பட்டது.

ஈழத்திலும் உலகெங்கிலுமுள்ள தமிழர்களின் மனத்திலும் எரிந்துகொண்டிருந்த தீ தற்காலிகமாக அணைக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் புகைந்துகொண்டுதான் இருக்கிறது. கொத்துக் குண்டுகளால் கந்தக பூமியான மண்ணில் மீண்டும் புற்கள் தளிர்க்கின்றன. பூக்கள் மலர்கின்றன. மனிதமும் விடுதலையாகும் ஒருநாள் மலர்ந்தே தீரும்.

"ஒரு நெய்தல் நிலத்தின் கதை" என்ற இந்த நாவல் இனவரைவியல் நெறிமுறை கைவந்தது செ. கணேசலிங்கனும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

டானியலும் ஈழத்தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியலைத் தம் நாவல்களில் பதிவு செய்துள்ளனர். புலம் பெயர்ந்த தமிழரென எஸ். பொவும், தம் நாவலில் சிலவற்றைப் பதிவு செய்துள்ளார். இவர்களது எழுத்துக்களால் பதிவு பெறாத நெய்தல் நில வாழ்வியல் ஒன்றைக் கந்தசாமி முத்துராஜா இந்த நாவலில் காட்டுகிறார்.

கடலன்னையின் மடியில் பிறந்து வளர்ந்த மீனவ மக்கள் பற்றிய இலக்கியப் பதிவினைத் திருமதி ராஜம்கிருஷ்ணனும் வண்ணநிலவனும் தம் எழுத்துக்களில் தந்துள்ளனர். கடலோரக் கிராமத்தின் கதை ஒன்றினை மதம் சார் பின்னணியில் தோப்பில் முகமது மீரானும் தந்துள்ளார். முத்துராஜாவின் பதிவுகள் இவர்களது முயற்சிகளிலும் வித்தியாசமானது.

சம்மாட்டியார் என்ற பெயரில் சிறு முதலாளிகளான மீனவ வாழ்க்கையின் இருப்பிடம், குடும்ப உறவுகள், மண உறவுகள், ஏழைத் தொழிலாளர்களின் வாழ்நிலை, கொழும்பு நகரத்தில் உலர்மீன் (கருவாடு) வணிகம் செய்யும் சிங்கள முதலாளிகளுக்கு அவர்கள் அடிமைப்பட்ட முறை, மொழிவழக்கு முதலிய ஏராளமான சேதிகளை இந்நாவலில் காணலாம். தனது அனுபவங்களை இந்த ஒரே நாவலில் பதிவு செய்துவிடவேண்டும் என்ற முத்துராஜாவின் உணர்வு செய்திகளின் அளவையும் கனத்தையும் அதிகப்படுத்திவிட்டதோ என்றுகூட எண்ணத் தோன்றுகிறது.

எடுத்துரைப்பியல் (narratology) குறித்த புதிய கொள்கைகளும் சிந்தனைகளும் நிறையப் பேசப்படும் காலம் இது. மந்திரவாத யதார்த்தம் (magical realism) சார்ந்த கோணங்கியின் எழுத்துக்கள் கூட முழுமையாகப் புரிந்துகொள்ளப்படாத ஒரு சூழ்நிலையே தமிழ் மாணவர்களிடமும் ஆய்வாளர்களிடமும் நிலவுகிறது. இந்த நிலையில் முத்துராஜாவின் மொழிநடை அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்கொண்ட கதைப்பொருளுக்கு இசைவான தன்மையினை நுணுக்கமாக ஆய்வு செய்பவர்கள் மட்டுமே சொல்ல இயலும். ஒரு வாசகன் என்ற முறையில் நான் இந்தப் பொறுப்பை ஏற்க விரும்பவில்லை.

நாவலின் முன்பகுதிக் கதைக்கும் பிற்பகுதிக் கதைக்கும் இடையிலே கால இடைவேளை நம்மைத் திணறடிக்கிறது. தமிழ்ப் புனைகதை எழுத்துக்களால் காலம் கொலை செய்யப்படுவதற்கு செயகாந்தன் எழுத்துக்களில் நிறையச் சான்றுகள் உண்டு. ஆயினும் அவரது கலை உணர்வு மிகுந்த மொழி வெளிப்பாடு அதை வாசகன் கண்ணிலிருந்து மறைத்துவிடும். அந்த வகையில் முத்துராஜா இன்னும் நெடுந்தொலைவு செல்லவேண்டும் என்று நான் கருதுகிறேன்.

இன்னமும் எழுதப்படாத ஈழத்தின் வரலாறு நீள்கிறது. இவரைப் போலப் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தவர் நினைவிலே தோய்வதோடு அது நிறைவு பெற்றுவிடாது. இந்தக் கடைக்குட்டியின் பங்களிப்பு அத்திசையிலும் இருக்கவேண்டும் என வாழ்த்துகிறேன்.

தொ.பரமசிவன்
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்
மனோன்மணியம் சுந்தரனார்
பல்கலைக்கழகம்.
திருநெல்வேலி, தமிழ்நாடு
இந்தியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

இது பெரும்பாலும் தூய தமிழில் படைக்கப்பட்ட புதினமாகும். ஆனாலும் தமிழில் இல்லாத ஒலி வகைகளை ஈடு செய்கின்ற ஸ ஷ ஜ போன்ற கிரந்த எழுத்துக்கள் தேவைப்படும் இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. தமிழ் மொழி, ஓர் எழுத்துத் தொடக்கம் ஒன்பது எழுத்து வரையுள்ள சொல் அமைப்பைக் கொண்டது. ஒரு சொல்லில் ஒன்பது எழுத்துக்கு மேல் காணப்பட்டால் எங்கோ இலக்கணத் தவறு உள்ளது என்பது பொருள். எனவே ஒன்பது எழுத்துக்கு மேற்படாமல் இப்புதினத்தில் சொற்களை அமைத்துள்ளேன். சிலவேளை எங்காவது எழுத்துக்கள் அதகரித்துக் காணப்படலாம். அவை திருத்தப்பட வேண்டியவை.

தமிழ்ப் புத்தகங்கள் சிலவற்றில் பத்து பதினொரு வரிகள்வரை முற்றுத் தரிப்பின்றி தொடர் வசனமாக அமைக்கப்பட்டு அங்கே பொருள் மயக்கம் தருவதைக் கண்ணுற்றேன். தமிழ் இலக்கண அறிஞர்கள் கூறிய 'மயங்க வைத்தல்' தவறு அவற்றில் காணப்பட்டது. பிற மொழிப் படைப்புகளை நோக்கியபோது ஒரு தனிச்சொல்லே ஒரு வசனமாக அமைந்திருந்து சிறப்புக் கொடுப்பதையும் அனுபவித்தேன். இப்புதினத்தின் வசனங்களை பெரும்பாலும் சிறிது சிறிதாகவே அமைத்துள்ளேன்.

உரையாடல் கொண்ட வசனங்களில் இனியில்லை என்ற தேவை கருதி,

அதன் உயிரோட்டத்தை உணர்ச்சியுடன் காட்டுவதற்காக ஒருசில இடங்களில் ஆங்கிலச் சொற்களை அப்படியே தமிழில் பதிந்துள்ளேன்.

எடுத்துக்காட்டாக 'பிறின்சிப்பல்' என்ற சொல்லைக் குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Face என்பது முகம். Preface என்பது முகவுரை. 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பது பழமொழி. எனவே முகவுரை

என்பது அந்த நூலில் உள்ளதைச் சுருக்கமாகக் கூறுவதாகும். தேங்காய்ப் பாலின் முதற்பால்போல் பிழிசாறாக கொடுப்பதாகும்.

சில படைப்புகளில் புத்தகம் நூறு பக்கமாக இருக்கும். அதன் முகவுரை முப்பது பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கும்.

மனிதரின் சிந்தனை வளர்ச்சியில் விவேகம், அறிவு, ஞானம் எனும் மூன்று நிலைகள் காணப்படும். ஞான நிலையை அடைந்தோர்க்கு எல்லா மொழியும், எல்லா மதமும், எல்லா மனிதரும் ஒன்றாகவே தெரியும்.

முதலாவது எனது தாய் மொழியாகிய தமிழையும் அத்தோடு உலகத்து அனைத்து மொழிகளையும் நான் நேசிக்கின்றேன். தமிழில் மிகுந்த ஆர்வம் உள்ளவர்களுக்கு இந்நாவல் அதிகமான தேடலை வழங்கும் என்பது எனது நம்பிக்கையாகும்.

இந்நாவலை மனமுவந்து வெளியிடும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனத்துக்கு என் மனம் நிறைந்த நன்றிகள்.

கந்தசாமி முத்துராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நெய்தல் நிலத்தின் கதை

1

"வெற்றி வெற்றி கந்தையா....! வென்றுவிட்டார் கந்தையா...." என்ற வெற்றி முழக்கம் அன்றைய தினம் வானத்தைப் பிளந்தும் ஒலித்துக் கொண்டிருந்தது.

1956 ஆம் ஆண்டில் நடைபெற்ற இலங்கையின் பாராளுமன்றத் தேர்தலில் பருத்தித்துறைத் தொகுதியில் கம்யூனிஸ் கட்சி வேட்பாளர் பொன்னம்பலம் - கந்தையா வெற்றிவாகை சூடினார். அந்த வெற்றிச் செய்தியை அவரின் ஆதரவாளர்கள் தொண்டை கிழியக் கத்தியபடி பருத்தித்துறைத் தொகுதியின் மூலைமுடுக்குகள் எங்கும் ஊர் ஊராகத் தெரிவித்துச் சென்றனர்.

பருத்தித்துறைத் தொகுதி என்பது யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடமராட்சிப் பிரதேசத்தில் வங்கக் கடலோரமாக நெழிந்து வளைந்து ஏறத்தாழ முப்பது மைல் நீளத்துக்கு மேற்கிலிருந்து கிழக்காக நீண்டு செல்கின்ற நிலப்பரப்பு. இங்கு நெய்தல் மருதத் திணைகளுக்குரிய நீர் நில வளங்கள் காணப்படுகின்றன. இதன் மேற்குப் பக்கத்தில் பருத்தித்துறை நகரமும் கிழக்குப் பிரதேசத்தில் பின்தங்கிய பல கிராமங்களும் அமைந்துள்ளன. இக்கிராமங்களை 'கிழக்கூர்' என்ற புனைபெயரில் மக்கள் பரவலாக அழைத்துக்கொள்வர்.

கிழக்குப்பக்க ஊர்களில் கடற்கரையிலிருந்து சிறிது உள்நோக்கி, ஊரைக் கிழக்கு மேற்காய் ஊடறுத்துச் செல்லும் தற்போது காணப்படும் களிமண்வீதி அக்காலத்தில் இருந்ததில்லை. வெறும் மண் நிலம்தான் இருந்தது. இயந்திர வாகனங்களை இவ்வூர்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்பதரிது. பெருந்தொகையாக மீன் பிடிபட்டால் மாத்திரம் அவற்றைக் கொண்டு செல்வதற்காக வரும் 'ஜீப் வண்டிகள்' மண்ணைக் கிண்டிக் கிளறி 'உறுமி உறுமி' இரைந்தபடி முக்கி முனகிக்கொண்டே மெதுவாகச் செல்வதைக் காணலாம்.

அன்றைய தினம் கூடாரம் கழற்றப்பட்ட திறந்த ஜீப் வண்டி ஒன்று குறைந்த வேகத்தில் ஊரை ஊடறுத்துச் சென்றுகொண்டு இருந்தது. அதற்குள் வெள்ளை நிற வேட்டி உடுத்த நால்வர் தமது வெள்ளை நிறத் தலைப்பாகைத் துணிகளால் விசுக்கி விசுக்கி ஜீப்புக்குள் நின்ற நிலையில் "வெற்றி வெற்றி கந்தையா வென்றுவிட்டார் கந்தையா" என்று சத்தமிட்டபடியே சென்றனர்.

இடுப்புக்கு மேலே வெற்றுடலுடன் ஒருவர் ஜீப் வண்டியின் கூடாரக் கம்பியில் சாய்ந்து நின்றபடி கம்பூனிஸ் கந்தையாவின் படத்துடன்கூடிய விளம்பரத் தாள்களை அள்ளி அள்ளி எறிந்தபடி சென்றார். வேகம் குறைந்த சரிவு காற்றில் அங்கும் இங்குமாக பல நிறங்களில் அந்த விளம்பரத் தாள்கள் பறந்து சென்றன. சாரம் உடுத்து அதை மடித்துக் கட்டியபடி வெற்று உடலுடன் சையிக்கிள் வளையம் உருட்டித் திரியும் ஊர்ப் பொடியன்கள் அந்த ஜீப் வாகனத்தைத் தொடர்ந்து ஓடிச் சென்றனர். விளம்பரத் தாள்களை அவர்கள் பொறுக்கி எடுத்தனர். விளம்பரத் தாள்கள் கிடைக்காத ஏனைய சனங்களுக்கும் அவற்றில் சிலவற்றை அவர்கள் விநியோகித்தனர்.

மாரிகாலத்தின் வெள்ளப் பாய்ச்சலில் கழுவப்பட்ட தொடுவாய் நில மண்பரப்பு வெள்ளை நிறச் சீனிபோல் காட்சியளித்தது. அதன்மேல் ஜீப் வாகனத்தின் சக்கரங்கள் சுற்றிச் சுழன்று செல்லும்போது ஜீப்பின் பின்பக்கச் சில்லுகள் மண்ணை ஆறடி தூரத்திற்கு பூவாணம்போல் தூவிச் சென்றன. தோராயமாக ஒரு மைல் தூரமளவில் அந்த ஜீப்புடன் போட்டிக்கு ஓடிச்சென்ற அந்த ஊர்ப் பொடியன்கள் ஈற்றில் களைத்த நாய்கள்மாதிரி வாயினுள் புகுந்த மண்ணைத் துப்பித் துப்பிச் சில்லுப் பதிந்த மண் பள்ளத்திலிருந்து அந்த ஜீப் வாகனம் கண்ணுக்கெட்டிய தூரத்தில் மறையும்வரை அதை வைத்தகண் வாங்காமல் தமது வாயை 'ஆ' என்று திறந்தபடி பார்த்துக் கொண்டிருந்தனர். வியர்த்து நனைந்த அவர்களின் கறுத்த உடல்கள்மீது பால்வெள்ளைநிறமான மணல் ஒட்டியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்தித்துறையின் கிழக்கே ஏறத்தாழ இருபது மைல் தூரத்தில் தாளையடி எனும் கடற்கரை ஊர் உள்ளது. அங்கே தென்னிலங்கைச் சிங்கள மீன் வியாபாரிகள் வாடி அமைத்து மீன் வியாபாரம் செய்து கொண்டிருந்தனர். அவர்களில் பஸ்ரியான் சில்வா முதலாளி என்பவர் 'டிங்கி' எனும் பெரிய இயந்திர வாகனம் ஒன்றை வைத்திருந்தார். அந்த டிங்கி மீனை ஏற்றிக்கொண்டு பனை தென்னைகளில் முட்டிமோதாதபடி வளைந்து விலத்தி சத்தமிட்டபடி ஊர்மனைப் பாதையால் ஓடிச்செல்வதைக் காணலாம். டிங்கி என்பது பெரிய ஜீப்பும் அல்ல லொறியும் அல்ல. இரண்டுக்கும் இடைப்பட்ட அளவிலுள்ளது. ஏறத்தாழ தற்போதை இராணுவ மூடுகவச வாகனத்தின் அமைப்பைக் கொண்டது.

இதைத்தவிர அவ்வூர் மக்கள் வேறு இயந்திர வாகனங்களைக் காண்பதரிது. சைக்கிள் எனப்படும் மிதி வண்டிகள் ஒரு சிலரிடம் மட்டும் பாவனையில் இருந்தன. பருத்தித்துறை போன்ற பட்டினங்களுக்கு மக்கள் இரட்டை மாட்டு வண்டில்களில் பயணம் செய்வர். கூப்பன் எனப்படும் றேசன் கடைச் சாமான்களை மாட்டு வண்டிலில் ஏற்றிக்கொண்டு தமது ஊர்களுக்குச் செல்வர். நடந்தும் மக்கள் பயணங்களை மேற்கொள்வர். முப்பது மைல் தூரத்திலுள்ள தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகனை நடந்து சென்றும் தங்கள் நேர்த்திகளை நிறைவுசெய்வர்.

தேர்தற்காலச் சலசலப்பும் தேர்தல் முடிந்தவுடன் ஓய்ந்துவிடும். அதன்பின் அரைக்காற்சட்டை அணிந்த பட்டணத்து ஆண்கள் சிலர் புறா வேட்டைக்கும் மிருக வேட்டைக்குமென சிலவேளைகளில் ஜீப் வாகனத்தில் இவ்வூர்களுக்கு வந்து போவதைக் காணலாம்.

பாராளுமன்ற வேட்பாளர் பொன் கந்தையாவின் தேர்தல் பணிகளுக்குத் தன் தொழிலாளரை உதவி செய்யவிட்டுத் தானும் ஓடி ஆடித் தடல்புடலாக அலுவல் பார்த்தபடி செல்லையாச் சம்மாட்டியார் மிகுந்த நேரப்பளுவுடன் திரிந்தார். வாக்களிப்பும் நிறைவுற்றது. தேர்தல் முடிவும் அறிவிக்கப்பட்டது. பொன் கந்தையாவின் வெற்றியால் செல்லையாச் சம்மாட்டியார் உச்சி குளிர்ந்த மகிழ்வில் மிதந்தார். தன் தொழிலாளருக்கும் விடுமுறை அறிவித்தார். தொழிலாளிகள் தமது வசதிக்கேற்ப கள் காராயும் குடித்து கந்தையாவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் வெற்றியைக் கொண்டாடினர். இதைப்பார்த்த மேற்குப்புறக் கரைவலை சின்னத்துரைச் சம்மாட்டியின் தொழிலாளரின் வயிறு மிகவும் பற்றி எரிந்தது. அவர்கள் பொன் கந்தையாவை எதிர்த்து நின்ற அபேட்சகருக்கு வாக்களித்தோராவர்.

மறுநாள் மதியம் தனது தெற்குத்திசைக் காணி வளவின் அடிப்பனை மண்ணுக்குள் போத்தல் சரிந்துவிடாமல் சீவல்கார மாணிக்கன் அழுத்தி வைத்துச் சென்ற இரண்டு போத்தல் பெண்பனைக் கள்ளைக் குடித்துவிட்டு கடற்கரை ஓரமாய் அமைந்த பந்தல் வாடி நிழலுக்குள் கடலைப் பார்த்தபடி செல்லையாச் சம்மாட்டி நின்றார். அவர் குட்டி போட்ட பூனைபோல் கடலை உற்றுப் பார்ப்பதுவும் கரைவலை வாடியுடன் இணைந்திருக்கும் தனது வளவுக்குள் போய் வருவதுமாய்த் திரிந்தார். அந்த வளவினுள் அமைந்துள்ள தெற்குப்பக்கக் கொட்டிலுக்குள் பலங்கொண்ட பாலைமரப் பலகையால் செய்யப்பட்ட பாட்டன் காலத்துப் பெட்டகம் ஒன்று இருந்தது. அதன் மறைவில் சாராயப் போத்தல் ஒன்றும் ஒரு கண்ணாடிக் குவளையும் எந்த நாளும் குறைவற்று இருக்கும். அடிக்கடி அந்தக் கொட்டிலுக்குள் போய்வரும் சம்மாட்டியார், தான் ஏற்கெனவே குடித்த கள்ளுக்கு மேல் தன் வயிற்றுக்குள் சிறிது சிறிதாகச் சாராயத்தை ஊற்றிக் கொள்வார். நேரம் செல்லச் செல்ல அவரின் கண்கள் சிவப்படையும் அளவைக்கொண்டு அவரின் ஏற்றத்தையும் அறிந்து கொள்ளலாம்.

அது வாடைச் சரிவுகாற்று வீசுகின்ற பிற்கோடைக் காலம். மீன் செவ்வல் வெளிப்படுகின்ற நல்ல நீரோட்டச் சூழலாக அன்றைய கடல் நோக்கம் காணப்பட்டது. கிழக்குப் பக்கத்துக் கரைவலைவாடியின் மூத்ததம்பிச் சம்மாட்டிக்கு முந்தாநாளில்தான் இருபது மடிக்கு நெய்த்தோலி மீன் பிடிபட்டது. அந்தப் பெருமையில் அவரின் தொழிலாளிகள் தமது நெஞ்சை நிமிர்த்தியபடி திமிருடன் திரிந்தனர்.

செல்லையாச் சம்மாட்டியின் தொழிலாளரில் மீன்செவ்வல் பார்ப்பதில் அப்புக்குட்டி என்பவன் மிகுந்த திறமைசாலியானவன். நல்ல கண் கூர்மை உள்ளவன். உயர்ந்த கடலில் தூரத்தில் வருகின்ற மீன் செவ்வலைக்கூட இனமறிந்து பார்ப்பான். இது லாகன், இது தேறை, இது நெய்த்தோலி, இது கீரைமங்கு, இது சாளைமங்கு என்று கடலுக்குள் மீன் உலாவும்போதே அச்சொட்டாகச் சொல்லக்கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்டிக்காரன். சுருண்ட முடியும் தேய்ந்த பல்லும் வெற்றிலை போட்டுச் சிவந்த வாயும் சிவப்பான உடலும் நரம்புகள் வெளியில் தள்ளியபடி தோற்றமளிக்கும் இறுகிய உடற்கட்டுமாக ஒரு மல்யுத்த வீரன்போல் அப்புக்குட்டி காட்சி அளிப்பான்.

கடற்கரை மணல் மேட்டில் இழுத்து வைத்த கரைவலை வள்ளத்தின் கடையார்க் குட்டையில் குதித்து ஏறிக் கடலை உற்று நோக்கியபடி செவ்வல் பார்த்துக்கொண்டு அப்புக்குட்டி நின்றான். நீண்ட நேரமாக வெயிலுக்குள் நின்றதால் தண்ணீர்த் தாகம் அவனது முகத்தில் தெரிந்தது. எனவே கரைவலை வாடியை நோக்கிக் கையை உயர்த்திச் சைகைமொழி காட்டினான். சில நிமிடங்களில் தண்ணிப் பெடியன் என்பவன் பெரிய ஒரு தகரக் குவளைக்குள் தண்ணீர் கொண்டு ஓடிவந்து கீழே நின்றவாறு உயர்த்தி நீட்டினான். குனிந்து அதை வாங்கிய அப்புக்குட்டி வாயை அலசிக் கொப்பளித்துவிட்டு தண்ணீரைக் குடித்தான். குடித்தபின் நின்றநிலையில் 'தொப்' பென்று குவளையை மண்ணில் போட்டான். தண்ணிப் பெடியன் அந்தக் குவளையை எடுத்துக்கொண்டு வாடியை நோக்கி விரைந்து சென்றான். கரைவலை, அரிவி வெட்டுப் போன்ற தொழில்களில் குடிதண்ணீர் பரிமாறும் பொடியன்களை 'தண்ணிப்பெடியன்' என்ற தொழிற்பெயரில் அழைப்பது மரபான வழக்கம்.

கடலைப் பார்த்தவாறு தனது தலைப்பாகைக்குள் செருகி வைத்திருந்த வல்லுவத்தை எடுத்து நூலால் சுருட்டிக் கட்டியிருந்த அதைப் பக்குவமாய் விரித்து அதிலிருந்து நான்கு பாக்குப் பிளகை எடுத்து வாயை ஆ என்று பாக்கைக் கொடுப்புக்குள் போட்டு 'மொடக் மொடக்' என்று அப்புக்குட்டி கடித்தான். ஒரு வெற்றிலையை எடுத்து அதன் நுனியைக் கிள்ளி எறிந்துவிட்டு நேர் கோடாகக் கிழித்து அதன் ஒரு துண்டில் சுண்ணாம்பைப் பூசி அதை வாய்க்குள் திணித்தான். புகையிலையை எடுத்து முறுக்கித் திருகி ஒரு துண்டைக் கிள்ளி எடுத்து அதைத் தனது முன் பல் வரிசையில் பல் விளக்குவதுபோல் நாலு தரம் உரசியபின் அதை வாயினுள் போட்டு எல்லாவற்றையும் சேர்த்து துளாவிச்சப்பி, ஊறிவரும் வெற்றிலைச் சாற்றை உறிஞ்சி உறிஞ்சி ருசித்தபடி விழுங்கிக் கொண்டிருந்தான். அதேநேரம் அவனின் கழுகுக் கண்களோ உயர்ந்த கடலின்மேலே நிலைகுத்தி நின்றன. அடிக்கடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிலை போடுவதால் அப்புக்குட்டியின் சிவந்த உதடுகள் எப்போதும் கருஞ்சிவப்பாய் காணப்படும். அதனால் 'வீரப்பழ வாயன்' என்ற பட்டப்பெயரும் அவனுக்கு புழக்கத்தில் இருந்தது.

செல்லையாச் சம்மாட்டி நிற்கும் பந்தலுக்கும் அப்புக்குட்டி நின்று செவ்வல் பார்க்கும் வள்ளத்திற்கும் இடைப்பட்ட தூரம் ஏறத்தாழ முன்னூறு மீற்றர் இருக்கும். அந்தப் பந்தலை அண்மித்து கடற்கரைப் புட்டியில் இழுத்து வைத்த இன்னொரு வள்ளத்தில் சில தொழிலாளர் கரைவலையை ஏற்றிக்கொண்டிருந்தனர். மீன் செவ்வலுக்கு வளைத்துப் போடும் 'சாளைவலை' என்னும் வலைத்தொகுதி வேறொரு வள்ளத்தில் ஏற்றப்பட்டு எந்நேரமும் அது தயார் நிலையில் இருக்கும்.

செல்லையாச் சம்மாட்டியார் அரைக்குவளை சாராயத்தை ஊற்றி உறிஞ்சினார். அந்த உசாருடன் வந்து கடற்கரை மண் புட்டியில் பாதங்களைப் புதைத்தபடி உயர்ந்த கடலையும் செவ்வல் பார்க்கும் அப்புக்குட்டியையும் தலையாட்டும் சேவல்போல் மாறி மாறிப் பார்த்தவாறு யோசித்தபடி நின்றார்.

அப்போது, கடலில் மீன் செவ்வல் ஒன்று மூன்று கம்பான் - ஐநூறு மீற்றர் - தூரத்தில் இருண்ட கருஞ்சிவப்பாய் மெல்லென ஊர்ந்தபடி கரைநோக்கி வந்துகொண்டு இருந்தது. தனது கூர்மையான ஊசிக் கண்ணால் அது நெய்த்தலி மீன் செவ்வல் என்பதை அப்புக்குட்டி இனங்கண்டு கொண்டான்.

வள்ளத்தின் குட்டையில் நின்ற அப்புக்குட்டி திடீரெனத் துள்ளிக் குதித்தான். வெற்றிலை வல்லுவத்துடன் தலைப்பாகையைக் களற்றி கடற்கரை மண்புட்டியில் வீசி எறிந்தான். தனது சாரத்தை உரிந்து இரண்டாக மடித்து அதனால் விசுக்கி விசுக்கி வள்ளத்தில் வலையை ஏற்றிக்கொண்டிருக்கும் தொழிலாளரைப் பார்த்துச் சைகை காட்டத் தொடங்கினான்.

"இறக்குங்கோடா..
வள்ளத்தை இறக்குங்கோடா
சாளைவலை வள்ளத்தை இறக்குங்கோடா"

என்று உரத்துச் சத்தமிட்டபடி சாரத்தால் வேகமாக விசுக்கி விசுக்கி சைகை காட்டியபடி அங்குமிங்கும் துள்ளிப் பாய்ந்து ஓடித்திரிந்தான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவனது கண்களோ கடலில் வரும் மீன் செவ்வலில் நிலை குத்தி நின்றன.

செல்லையாச் சம்மாட்டியும் மீன் செவ்வலைக் கண்டுவிட்டார். அவர் மனதில் மகிழ்ச்சி பொங்கியது. உள்ளங்காலில் இருந்து உச்சிவரை அவரின் உடல் குளிர்ந்தது. காலைக்கிளப்பி வள்ளத்தை நோக்கி சம்மாட்டியார் ஓடினார்.

எல்லோருமாகச் சேர்ந்து சில கணப்பொழுதில் வள்ளத்தைத் தள்ளிக் கடலில் விழுத்தினர். சம்மாட்டியார் தனது சாரத்தைக் கழற்றிக் கடற்கரை மண்ணில் தூக்கி எறிந்தார். ஓடிப்பாய்ந்து வள்ளத்தின் கடையாரில் ஏறினார். கோவணத்துடன் நின்று சுக்கான் பிடித்து வலையை வளைத்தார். பலம்கொண்ட நான்கு இளந்தாரி ஆண்களின் கை கால் உடலெங்கும் நரம்புகள் புடைத்து மிதக்க கடற்காற்று அவர்களின் மார்புகளை நாக படம்போல் விரித்துக்கொடுக்க மூச்சு இரைக்க இரைக்க, தமது உச்ச வேகத்தில் துடுப்புகளால் கடல்நீரைக் கோலிக்கோலி வலித்தனர். வள்ள அணியத்தின் கீழ்ப்பகுதி நுரையைக் கக்கியவாறு கடலை இரண்டு துண்டாகக் கிழித்துக்கொண்டு குதிரை வேகத்தில் பறந்து சென்றது.

கரையில் நின்ற அப்புக்குட்டி சாரத்துணியால் சைகை போட்டுக்கொண்டே ஓடும் வள்ளத்தை வழி நடத்தினான். அவனைப்பார்த்தபடி அவன் காட்டும் வழிமுறையில் செல்லையாச் சம்மாட்டியார் வள்ளத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார். அப்புக்குட்டி சாரத்தால் விசுக்கி விசுக்கிக்கொண்டே துடுப்பு வலிப்போரை உரத்த குரலில் உசார்ப் படுத்தினான்.

"விலியுங்கோடா, வேகமாய் வலியுங்கோடா
வலி... வலி... வலி...
வலையை மடக்கு
வலையை மடக்கு
வலியுங்கோடா...
வலியுங்கோடா...
குறுக்கை வை
குறுக்கை வை" என்று சத்தமிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளம் உச்ச வேகத்தில் ஓடியது. அப்படி இருந்தும் வேகம் காணாது என்ற கணிப்பில் கோபம் அப்புக்குட்டியின் மூக்கு நுனியில் வந்தது. 'மீன் செவ்வல் தவறிவிடுமோ' என்ற ஆத்திரத்தில் அவன் வாயிலிருந்து தூஷண வாழத்தைகள் சிலதும் வெளிப்பட்டன.

"ஊண்டி வலியுங்கோடா பு.. மக்களே" என்று சத்தமிட்டபடி துள்ளித் துள்ளி வேகமாய் சைகை போட்டான் அப்புக்குட்டி.

அப்புக்குட்டி கண்டற் பட்டைச் சாயம் தோய்த்த தடித்த நூல் கயிற்றில் அரைஞாண்கொடி கட்டியிருந்தான். கோவணத்தின் முன்பக்க வால் பகுதியை தூக்கி மடித்து அரைஞாண்கொடியில் தொப்புளுக்குக் கீழ் செருகியிருந்தான். அந்தப் பச்சைநிறக் கோவணம் அவனது சிவந்த உடலுடன் சேர்ந்திருக்கும் அழகால் 'கொக்குப்பட்டமென' அவன் காட்சியளித்தான். கடற்கரையில் மண் அழைந்து விளையாடிய சின்னஞ்சிறு பிள்ளைகள் அப்புக்குட்டியுடன் சேர்ந்து தாங்களும் துள்ளிக் குதித்தனர். இன்றைக்கு அதிகமாக மீன் பிடிபடப்போகுது என்ற மகிழ்ச்சி அவர்கள் முகங்களிலும் கூடர்விட்டது.

வேகமாய் ஓடிவந்த வள்ளம் கடற்கரை ஈர மண்ணில் ஏறித் தரித்து நின்றது. அதிலிருந்து தொழிலாளர் எழுவர் தொப்பென்று நிலத்தில் குதித்தனர். சம்மாட்டியார் வள்ளத்தில் மீண்டும் பாய்ந்து ஏறினார். மரக்கோல் என்ற நீளமான கம்பால் கடலடி மண்ணில் ஊன்றி ஊன்றி வள்ளத்தை அவர் செலுத்தினார். ஐம்பது மீற்றர் உயரத்தில் நங்கூரம் போட்டு வள்ளத்தைக் கட்டினார். அதிலிருந்து குதித்து கை கால்களை அடித்து நீந்தியபடி கரையில் சேர்ந்தார்.

மீன் செவ்வல் இப்போது 'ப' வடிவில் வலைக்குள் அடைபட்டுவிட்டது. மூன்று, மூன்று தொழிலாளர் ஒவ்வொரு பக்கமும் கடலில் குதித்தனர். "ஓஹாய் ஓஹாய்" என்று சத்தமிட்டபடி கடல்நீரை கைகளால் அடித்தடித்து வேகமாய் தெளித்தனர். மீன்கள் அரிந்து வெளியேறாதவாறு அவற்றைத் தடுத்து மறிக்கும் நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

வலை வளைக்கும் முறையாவது: வலையின் ஒரு பக்க நுனியை கரையில் நிற்கும் தொழிலாளிகள் பிடித்துக்கொள்வர். ஏற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலையுடன் செலுத்தப்படும் வள்ளம் 'அரைவட்ட நீள்வடிவில்' ஒரு குடாவாக கடலில் வலையைப் போட்டுக்கொண்டு மீண்டும் கரைக்கு வரும். அதன்பின் இரு பக்கமும் நின்று வலையைக் கரைநோக்கி தொழிலாளிகள் இழுப்பர். வலையை முற்றாகக் கரைக்கு இழுத்தெடுப்பதற்கு ஏறத்தாழ இரண்டு மணித்தியாலம் அளவில் எடுக்கும். கடலில் வலையை வளைத்துப்போடும் தூரத்தைப் பொறுத்து இந்த நேர அளவுகள் மாறுபடும்.

இரண்டு பக்கமும் சேர்த்து ஏறத்தாழ முப்பது தொழிலாளிகள் வலையை மெதுமெதுவாய் கரையை நோக்கி இழுத்தனர். தற்காலிகமாகக் கூலிக்கு இழுக்க வரும் முதியோரும் பொடியன்களும் அதில் சேர்ந்திருந்தனர். வலை, கரையை அண்மிக்க அண்மிக்க இழுப்பதற்கு அது மிகவும் கடினமாய் இருந்தது. "மீன் நல்லாய் அம்மிப்போச்சுது. தூர் மடிக்குள் மீன் நிறைஞ்சுபோட்டுது" என்று தொழிலாளர் தமக்குள் கதைத்துக் கொண்டனர்.

வலை அங்குலம் அங்குலமாகக் கரைநோக்கி ஊர்ந்து வந்தது. தூர்மடியில் மீன் நிறைந்துவிட்டது என்ற மகிழ்ச்சியில் ஏலையா... ஏலையா... என்று தமது முழுப் பலத்தையும் சேர்த்து வலையை இழுத்துக் கொண்டிருந்தனர். வலையைக் கட்டி இழுக்கும் இடுப்புக் கயிறாகிய 'உறிக்கயிறு' அவர்களின் நாரிக்குள் நசிந்து புகுந்து காணப்பட்டது. தொழிலாளரின் உடல்களிலிருந்து சேலை முறுக்கிப் பிழிவதுபோல் வியர்வை ஒழுகிக் கொண்டிருந்தது.

"எடேய்! புள்ளு விழுகுதடா" என்று சில தொழிலாளிகள் சத்தமிட்டனர்.

தூர்மடியில் மீன் நிறைந்துவிட்டதால் அது கடலின் மேல்நீர் மட்டத்தில் மிதந்து வந்து கொண்டிருந்தது. அதிலிருந்து சிறிய மீன்கள் அரிந்து வெளியேறிக் கொண்டிருந்தன. சிறகுகளை ஒடுக்கித் தலைகீழாகக் கீழ்நோக்கிப் பறந்துவரும் கடல் புள் இனங்கள் அவற்றைக் கொத்தி தமது சொண்டில் எடுத்துக்கொண்டு மீண்டும் வானில் எழுந்தன. நீலக் கடல்மீது வெள்ளை நிறப் புள் பறவைக் கூட்டம் இவ்வாறு அடிக்கடி விழுந்தெழும்பிப் பறப்பதைப் பார்க்கும்போது போர் விமானங்கள் குத்தென வந்து குண்டு போட்டுவிட்டு மீண்டும் மேல் நோக்கிக் கிளம்புவதுபோல் புலப்பட்டது. மீன் செவ்வலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறித்து அடைத்து வலை இழுக்கும் இத்தகைய அரிய நிகழ்வின் போதுதான் இத்தகைய சிறப்பான காட்சிகளைக் காண முடியும்.

தூர்மடி இப்போது ஐம்பது மீற்றர் தூரத்தில் கடலில் வந்து கொண்டிருந்தது. அறக்கோளா, கலிங்கன் முரல் போன்ற பெரிய மீன் இனங்கள் கரை நோக்கி ஓடி வருவதும் கரையில் மனிதரைக் கண்டதும் மீண்டும் தூர்மடிப் பக்கம் நோக்கி ஓடுவதுமாக அவதிப் பட்டுக்கொண்டு திரிந்தன. தாங்கள் ஏதோ ஒரு பொறியில் அகப்பட்டுவிட்டமை அவைக்குப் புரிந்துவிட்டது போலும்.

"எடேய்! நெய்த்தலி வெடில் அடிக்குதடா"

"ஏலையா... ஏலையா..."

"எடேய்! தூர்மடி மிதந்திட்டுதடா"

"ஏலையா... ஏலையா..."

"எடேய்! ஊண்டி இழுங்கோடா"

"ஏலையா... ஏலையா..." என்று கதையும் அம்பாவுமாகத் தொழிலாளிகள் வலையை இழுத்துக் கொண்டிருந்தனர்.

தொழிலாளர் எல்லோரின் மனங்களிலும் அளவிட முடியாத மகிழ்ச்சி பொங்கி வழிந்தது. அவர்கள் கடுகதியில் விரைந்து துள்ளிக் குதித்து ஓடி... ஓடி வேகமாய் வலையை இழுத்துக் கொண்டிருந்தனர். நெய்த்தலி மீன்கூட்டம் தூர் மடியில் இப்போது நிறைந்துவிட்டது. தூர்மடி கடலின் மேல்நீர் மட்டத்தில் மிதந்துகொண்டு வந்தது. கடல் 'புள்' இனத்திற்கு அன்று மிகுந்த குதூகலக் கொண்டாட்டம். அவைகள் தலை குத்தத் தாழ்ந்து பறந்து தூர் மடியில் தமது சொண்டால் மீனைக் கொத்தி எடுத்துக்கொண்டு மீண்டும் வானத்தில் எழும்பி விமானம்போல் ஒரு வட்டமடித்தபடி இரையை விழுங்கின. பின்னர் மீண்டும் தாழப் பறந்து அதேபோல் மீனை உண்டு தமது வயிற்றைச் சிறிய பானைபோல் நிரப்பிக் கொண்டிருந்தன.

தூர்மடி இப்போது கரைக்கு மிக அண்மையில் வந்து விட்டது. செல்லையாச் சம்மாட்டியார் தொண்டை கிழியக் குரல் எழுப்பியபடி தனது தொழிலாளிகள் செய்யவேண்டிய வேலைகளை அதிகாரத் தொனியில் அவரவருக்குக் கட்டளையிடத் தொடங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எடேய் பொடியள் ஓடிப்போய் பந்தல் வாடிக்குள்ள கிடக்கிற காய்ந்த தூர்மடியள் எல்லாத்தையும் எடுத்துக்கொண்டு வாங்கோடா. மீன் சோர்க்கவேணும்''. உடனடியாக நான்கு பொடியன்கள் கால் கிளப்பி வாடிநோக்கி ஓடினர்.

தூர்மடி தண்ணீரின் உயர் மட்டத்தில் மிதந்து வரும்போதே மீன் தொகுதி தூர்மடியில் நிறைந்துவிட்டமையை அப்புக்குட்டி புரிந்துகொண்டான். அப்போதே காய்ந்த தூர்மடிகள் எடுத்து வருவதற்கென எவருக்கும் தெரியாமல் மூன்று பொடியன்களை வாடிக்கு அவன் அனுப்பி வைத்திருந்தான். அவர்கள் ஆளுக்கு ஒரு தூர்மடியால் தமது உடலை வெங்கிடாந்திப் பாம்புபோல் சுற்றிக்கொண்டு தலை மட்டும் தெரியக்கூடியதாக ஓட்டமும் நடையுமாய் கடற்கரையை நோக்கி விரைந்து வந்தனர்.

தொழிலாளிகள் இப்போது, மீன் நிறைந்த பெரிய தாய்த் தூர்மடியிலிருந்து காய்ந்த சிறிய தூர்மடிக்குள் நெய்த்தலியை மீட்டு மீட்டு எடுத்து அவற்றைக் கரைக்கு இழுத்து எடுத்தனர். அவற்றைக் கடற்கரை மண் புட்டியில் வரிசையாக ஒன்றுக்குப் பக்கத்தில் ஒன்றாக, ஆனால் ஒன்றில் ஒன்று முட்டாதவாறு நிலத்தில் கொட்டினர். மீன் மீட்டு எடுக்கின்ற அம்பாவைப் பாடிக்கொண்டே மன மகிழ்ச்சியில் ஓடி ஓடி அவர்கள் விரைந்து தொழிற்பட்டனர்.

செல்லையாச் சம்மாட்டியார் அங்குமிங்கும் ஓடியாடி அவரவர் செய்யவேண்டிய கடமைகளைச் சொல்லியபடி உரத்த குரலில் ஆணையிட்டார். "சம்மாட்டி கடிக்கிறாற்ரா. கெதியாய்ச் சோருங்கோடா" என்று மண்டாடி முருகேசர் தனது வாயாடாமல் பல்லைக் கடித்து உறுமியபடி கூறினார்.

செல்லையாச் சம்மாட்டிக்கு 'கடியன் நாய்' என்ற ஒரு பட்டப்பெயரும் உண்டு. உரத்த சத்தத்தில் தொழிலாளரை அவர் அடிக்கடி சினந்து பேசுவதால் அப்பெயர் அவருக்குப் புழக்கத்தில் வந்தது. கடைசியாய் இழுத்த தூர்மடியுடன் சேர்த்து அன்று நாற்பது மடி நெய்த்தோலி மீன் பிடிபட்டிருந்தது. கடற்கரைப் புட்டியில் ஏறத்தாழ எழுநூறு மீற்றர் நீளத்தில் தொட்டம் தொட்டமாக மீன் குவியல்கள் பரந்து கிடந்தன. பின்னேரம் ஐந்து மணியளவில் கடலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளைத்த வலை, மீன்மடிகள் எல்லாம் மீட்டு எடுத்து முடியும்போது இரவு எட்டு மணிக்கும் மேலாகிவிட்டது.

ஊரிலுள்ள வயதுபோன கிழவிகள் முதியவர் எல்லோரும் வந்து சேர்ந்து மீன் குவியலைச் சூழ்ந்து கொண்டனர். அவர்கள் மீன் கூடைகளில் நெய்த்தலியை அள்ளி அள்ளி நிரப்பினர். அவற்றை இரண்டு இரண்டு கூடைகளாகப் பலமாக தடியில் கொளுவி, அவற்றை முன்னும் பின்னுமாக இரண்டு இரண்டு தொழிலாளர்கள் தமது தோள்களில் வைத்துக்கொண்டு தெற்குப்பக்கமாகக் காவிச் சென்றனர். தெற்கேயுள்ள கடற்கரையை அண்மித்த தொடுவாய் வெளியானது வெள்ளை மண் நிலம்கொண்டது. அவற்றின்மீது நெய்த்தலி மீனைப் பரத்தித் தெளித்துக் காயவிட்டனர்.

"பாலைப்பழம்போல நெத்தலி மச்சான். இந்தக் கருவாடு கொழும்பில பவுண் விலை விக்கும் மச்சான்" என்று சொல்லிச் சொல்லி அப்புக்குட்டி மீனைத் தெளித்துப் பரத்திக் கொண்டிருந்தான். சம்மாட்டி குனிந்து குனிந்து கூடையில் மீனைக் கோலி நிரப்பி தொழிலாளரின் தோளில் சுமத்திக் கொண்டிருந்தார். வேகம் போதாதென்று அடிக்கடி தொழிலாளரைக் கடிந்தார். செல்லையாச் சம்மாட்டியின் குரலுக்குப் பயந்த பொடியன்களும் முதியோர்களும் தடிமடித்து உசாரடைந்தனர். அதனால் அவர்கள் மிக மிக வேகமாக நெய்த்தலியை கூடைக்குள் நிரப்பினர்.

மீன் கூடைகளை ஓட்டமும் நடையுமாகக் காவிக்கொண்டு போவதும் அவற்றை மண்ணில் தெளித்துப் பரத்துவதும் மீண்டும் கடற்கரை நோக்கி ஓடி வருவதுமாகத் தொழிலாளிகள் விரைந்து செயற்பட்டனர். தமது சாரத்தை உரிந்து அவற்றைத் தோளுக்கு வைத்து காவுதடிகள் தோளை நசிக்காதவாறு கூடைகளைக் காவிச் சென்றனர். அவர்களின் இடுப்பில் கண்டற்பட்டை தோய்த்த தடித்த நூலால் செய்யப்பட்ட அரைஞாண்கொடிகள் காணப்பட்டன. அவற்றில் தொங்குகின்ற கோவண வகைகளுக்கும் பலவித வரலாறுகள் உண்டு. கோவணச் சீலையின் 'தரத்தை' வைத்து அவர்களின் வீட்டுச் சீவிய நிலைகளை அறிந்து கொள்ளலாம். தொழிலாளி ஒருவர் தனது மனைவியின் பழைய சேலையைக் கிழித்து இரண்டாக மடித்து அதனால் வாலாக் கோவணம் கட்டியிருந்தார். இன்னொருவர் போன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருசம் மனைவி பனங்கழி பிழிந்து இனிமேல் அது பாவிக்க முடியாது என்று கைவிடப்பட்ட 'பனங்கழித்துண்டால்' கோவணம் கட்டியிருந்தார். கிடாய் சுந்தனும், பிடிப்பிட்டு முத்தனும் மிகவும் அடிநிலைப்பட்ட வறுமைத் தொழிலாளர்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். அவர்களின் குடும்பம் எட்டு ஒன்பது பிள்ளைகளைக் கொண்டவை. கோவணத்துக்கான ஒரு யார் நீளமான புதுத்துணி வாங்குவதற்கு வழியற்ற பரிதாபத்துக்குரிய வறுமை நிலை அவர்களுடையது.

காலை உணவாகப் பழைய கஞ்சி குடிக்கும் மக்களில் அவர்களின் குடும்பங்களும் அடங்கும். அவர்கள் தமது பழைய சாரத்தைக் கிழித்து அதனால் பட்டைக் கோவணமாக - முன்னுக்கு வால் விடாதபடி - கட்டியிருந்தனர்.

இரவு பத்து மணி இருக்கும் கிழக்குக் கடலைப் பிய்த்துத் தலையை ஒருமுறை உதறியபடி தேய்ந்த முகத்தில் சாம்பல் பூசியவாறு வெண்ணிலவு தன் வேலையைத் தொடங்க மெல்லென மேலெழுந்தான். கடலோரம் கோவணம் அணிந்து வெற்றுத் தேகத்துடன் ஓடியாடி வேலை செய்யும் தொழிலாளரின் உடலெங்கும் அப்பியுள்ள மீன்செதில்கள் நிலவு வெளிச்சத்தில் மின்மினிப் பூச்சிபோல் கண்ணைச் சிமிட்டியவண்ணம் போவோர் வருவோர்கள் இன்னார் என அடையாளங் காட்டிக் கொண்டிருந்தன.

"சச்சேலா மச்சான் இந்த மீன் செவ்வல் சறுகியிருந்தால், நாங்கள் எவ்வளவு நட்டப்பட்டிருப்பம் என்ன மச்சான்" என்று தனது வீரப்பழ வாயால் சிரித்தபடி தன் நண்பனிடம் கேட்டான் அப்புக்குட்டி.

"உன்னைப்போல ஒரு கெட்டிக்காறன் இருக்கயுக்க மீன் செவ்வல் எதுகும் தப்பிப் போகுமோடா மச்சான்'' என்று சொத்திவாய்ச் சின்னத்தம்பி ஒரு சொத்திச் சிரிப்புச் சிரித்தவாறு அப்புக்குட்டிக்குப் பதில் சொன்னான். அந்த ஊர்களில் எல்லோரது பெயருக்கும் முன்னால் ஒரு பட்டப் பெயர் எப்படியோ வழக்கத்தில் வந்துவிடுவது மரபு.

செல்லையாச் சம்மாட்டியார் இருட்டுக்குள் மெல்லமாய் வந்து அப்புக்குட்டியின் முதுகில் சுரண்டிச் சைகை போட, அப்புக்குட்டி போய் கொட்டிலுக்குள் சம்மாட்டி ஊற்றி வைத்த ஒரு குவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாராயத்தை ஒரே உறிஞ்சில் குடித்துவிட்டு வந்த உசாரில்தான் இந்தப் பெருமைக் கதையைச் சொத்திவாய் சின்னத்தம்பியிடம் வாய் விட்டான்.

ஏதோ நாற்பது மடி நெய்த்தலியின் வருமானம் முழுவதும் தனக்குத்தான் என்ற எண்ணம் அவனுக்கு இருந்துள்ளது போல. சாராயம் குடலுக்குள் போனதும் குறட்டி((* குறட்டி: யானையைச் செலுத்துவதற்காக யானைப்பாகன் வைத்திருக்கும் தடி. இதன் நுனியில் ஊசி (இரும்பு ஊசி) பொருத்தப்பட்டிருக்கும்))யால் குத்தின யானை மாதிரி அப்புக்குட்டி ஓடி ஓடி மீனைக் காவியபடி தெளித்துக்கொண்டு திரிந்தான்.

இந்தச் சொத்திவாய் சின்னத்தம்பி நல்ல ஒரு பகிடிக்காரன். தொழிலாளிகள் 'அம்பா' சொல்லிக் கரைவலை இழுத்தபடி பின்னோக்கி நகர்ந்து செல்வர். அவர்களுக்கு இடையில் அங்கொன்று இங்கொன்றாய் நின்று, பத்து பன்னிரண்டு வயதுப் பொடியன்களும் வலையை இழுப்பர். அப்போது அவர்களின் இடுப்புக்கு கீழே பின்பக்கமாகச் சொத்திவாய் சின்னத்தம்பி தன் வலது கையின் நடு விரலால் தடவிப் பார்ப்பான். அப்போது யாராவது கோவணம் கட்டாமல் வந்திருப்பதைத் தெரிந்துகொண்டால் அவனுக்கு மிகுந்த கோவம் வந்துவிடும்.

"எடேய் உந்தச் 'சாமானை' ஆட்டிக்கொண்டு இனிமேல் வலையிழுக்க வரக்குடாது தெரியுதோ? நாளைக்குக் கோமணம் கட்டாமல் ஆராவது கடற்கரைக்கு வந்தால் உங்கட கீழானை நுள்ளி கடலுக்குள்ள எறிஞ்சுபோடுவன் தெரியுமோ?'' என்று அந்தப் பொடியன்களை எச்சரிக்கை செய்வான். அந்த மனிதனுக்குப் பயந்த பொடியன்கள் பழைய சீலைத்துண்டை குப்பையிலாவது தேடிக் கண்டுபிடித்து அவற்றால் கோவணம் கட்டிக்கொண்டுதான் வலை இழுக்கப் போவது வழக்கம்.

இன்னொரு பகிடிக்காரப் 'பபூன் சேகரியும்' செல்லையாச் சம்மாட்டியுடன் சம்பளத்துக்குத் தொழில் செய்தான். ஒருமுறை முப்பது மடிக்கு கெழித்தி மீன் அவருக்குப் பிடிபட்டது. அவற்றைக் கருவாடு போடுவதற்காகத் தொழிலாளிகள் எல்லோருமாகத் தென்னைமர நிழலின்கீழிருந்து கெழித்தி மீன்களின் வயிற்றைக் கிழித்து குடல் மீன் முட்டைகளை அகற்றி மீனின் உட்பகுதியை கத்தியால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீறிக்கொண்டு இருந்தனர். மத்தியான உச்சி வெயில் நேரம். எல்லோர் முகங்களிலும் பசிக்களை படர்ந்திருந்தது. அப்போது தென்னை ஓலையிலிருந்து மீன் குடலைத் தின்றுகொண்டிருந்த காகம் ஒன்று பபூன் சேகரியின் முகத்தில் மலத்தைச் சிந்திவிட்டது. அது வெள்ளை நிறத்தில் சேகரியின் வாயோரமாக வழிந்து வந்தது. மீன் இரத்தத்தில் அவனது இரண்டு கைகளும் நனைந்திருந்ததால் காகத்தின் மலத்தைத் தன் கைகளால் துடைக்க முடியவில்லை. செல்லையாச் சம்மாட்டியும் கடுகடுப்புடன் அங்கே காணப்பட்டார். எனவே சேகரி தன் நாக்கை நீட்டி நுனி நாக்கால் மெதுவாகக் காகத்தின் மலத்தை நக்கிக்கொண்டே:

"எனக்கு இண்டைக்குத்தான் தெரியும் காகத்தின் எச்சத்துக்கும் இவ்வளவு ருசி இருக்கெண்டு" என்று மேல்கீழ் உதடுகளை நாக்கால் தடவி ருசி பார்த்துச் சொன்னான்.

களைப்படைந்திருந்த தொழிலாளிகள் எல்லோரும் மீன் கீறிய கத்திகளைக் கை விட்டு மண்ணில் சரிந்து விழுந்து தமது வயிறுகள் குலுங்கக் குலுங்கச் சிரிக்கத் தொடங்கினர். சிலர் அந்நிகழ்வை மீண்டும் மீண்டும் நினைத்து நினைத்து அடிக்கடி சிரித்தபடி தம் வேலையைத் தொடர்ந்தனர். சம்மாட்டியும் அந்தச் சிரிப்புக் கூட்டத்துடன் பங்குகொள்ளத் தவறவில்லை.

தொழிற் களைப்புள்ள நேரங்களில் உடன் தொழிலாளரைச் சிரிக்க வைத்துக் குதூகலப் படுத்துவதில் பபூன் சேகரி மிகவும் கெட்டிக்காரன். கூத்து மேடைகளில் பபூன் வேடத்தில் தோன்றி பார்ப்போரை நன்றாகச் சிரிக்க வைப்பான். கோமாளி நடிகன் சந்திரபாபு போல் நன்கு நடனமாடுவான்.

தொழிலாளர்களின் உடல்களில் ஒட்டியிருந்த நெய்த்தலி மீன் செதில்கள் நிலவு வெளிச்சத்தில் மினு மினுங்கிக் கொண்டிருந்தன. சேகரி பகிடி காட்டுவதற்காகத் தானாகவே கொஞ்ச மீன் செதிலை எடுத்து தனது முகத்தில் அதிகமாக அப்பியபடி திரிந்தான். நிலவில் மினுமினுக்கும் அவனது முகத்தைப் பார்த்தவர்கள் சிரித்துக்கொண்டே அவனை விலத்திச் சென்றனர். சேகரியின் இத்தகைய சிறு சிறு பகிடிகள் மீனைக் காவியபடி போயும் வந்தும் கொண்டிருப்போரின் உடற் களையைச் சிறிது தணித்து ஆறுதற் படுத்தியது. இதுபோன்ற சில மகிழ்ச்சியான நிகழ்வுகளுடன் நாற்றமடிக்கும் நெய்த்தலியும் தெளித்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரத்தி காயப்போட்டு முடியும்போது நேரம் பின்னிரவு இரண்டு மணி என்பதை நிலவுக்குறி சொன்னது.

எல்லோரும் ஓடிப்போய் கடலுக்குள் விழுந்தனர். உடல்களை உப்பு மண்ணால் உரசி உரசிக் கழுவித் தலை தாழ்ந்து முழுகினர். அதன்பின் வாடிக் கிணற்றிலுள்ள நல்ல தண்ணீரிலும் தோய்ந்தனர். முதிய தொழிலாளரும் பொடியன்களும் வாடிச்சோற்றை உண்டபின் பந்தல் வாடிக்குள் உறங்கினர். ஏனைய தொழிலாளிகள் சோற்றுக் கோப்பைகளைக் கைகளில் ஏந்தியவாறு மீன் அள்ள வந்த தமது மனைவி மக்களுடன் சேர்ந்துகொண்டு தங்களின் வீடுகளை நோக்கி நடந்தனர்.

நித்திரை முழிக்கக்கூடிய நான்கு முதிய ஆண்கள் பனங் குற்றியில் நெருப்பைக் கொளுத்தி அந்த வெளிச்சத்தில் நெய்த்தலித் தெளியலை நாய் பூனைகள் தின்னாதவாறு காவல் காத்தனர். செல்லையாச் சம்மாட்டியார் தன் வீட்டுக் கட்டிலில் சாய்ந்தார். மார்பில் இரு கைகளையும் போட்டபடி படுத்திருந்தார். அவரின் மோதிர விரல்கள் அசைந்து அசைந்து பல ஆயிரங்களை எண்ணிக் கணக்குப் பார்க்கும்போதே அவரது கொறட்டைச் சத்தம் வீட்டு முகட்டில் முட்டி மோதியது.

2

செல்லையாச் சம்மாட்டியார் தொழில் நடத்துகின்ற கரைவலை எல்லைக்கு - பாடு - கிழக்குப் பக்கமாக அவரின் வாடியிலிருந்து அரை மைல் தூரம் தள்ளி குழறி வல்லிபுரம் என்ற சம்மாட்டியும் மிகச்சிறப்பாகத் தனது கரைவலையை நடத்திக் கொண்டிருந்தார். பொடியன் வயதிலிருந்து அவர் பலமாக சத்தமிட்டுக் கதைப்பதால் 'குழறிவல்லி' என்ற பட்டப்பெயர் அவருக்குக் கிடைத்தது. 'பாடு' என்பது சம்மாட்டி ஒருவர் கரைவலைத்தொழில் செய்வதற்கென அரசாங்கக் கச்சேரியில் சட்டப்படி உரிமை பெற்ற கடல் எல்லைக் காணியாகும். இதற்குள் கரையோர நிலமும் அதற்குட்பட்ட கடலும் அடங்கும்.

அப்பிரதேசத்தின் செல்வாக்கான சம்மாட்டிமாரில் குழறிவல்லியும் ஒருவர். அண்ணன் தம்பி முறைத்துனர் உறவினர் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர் பஞ்சமின்றித் துரியோதனன் கூட்டம்போல் அவர் தன் தொழிலை நடத்திக் கொண்டிருந்தார்.

அவருக்கு ஒருமுறை ஐம்பது மடி பாரைமீன் பிடிபட்டது. மீனைக் கிழித்து உப்புப் போடும் செயலில் பகல் இரவாகத் தொழிலாளர் ஈடுபட்டிருந்தனர். அப்போது தமது உணவுத் தேவைக்கென மீன் வாங்க வந்த வயோதிபர்கள், குடிமக்கள், கள் இறக்கும் தொழிலாளர், விவசாயிகள் என்போர்க்கு பத்துமாதக் குழந்தை அளவான பாரை மீன் ஒவ்வொன்றை தூக்கித் தூக்கிக் கொடுத்து குழறிவல்லி தானம்செய்து கொண்டிருந்தார். அதிகமாக மீன் பிடிபட்ட மகிழ்ச்சியில் 'கள்' தருவித்துக் கொடுத்து தன் தொழிலாளரை ஊக்கப்படுத்தினார். தானும் மதுவில் மிதந்தார். தொழிலாளர் கடற்கரையில் மீனுடன் போராடும்போது தன் சின்ன வீட்டு ஒழுங்குகளையும் அவர் நிறைவேற்றிக் கொள்வார். பொதுவாக நிலக்கிழார், சம்மாட்டிமார் போன்ற உபரி வளம் கொண்டோர் கூத்தி எனப்படும் வைப்பாட்டியை வைத்திருப்பது ஒரு புதுமையான வழக்கமல்ல. இதில் புறநடையான சில சம்மாட்டிமாரும் அப்பிரதேசத்தில் வாழ்ந்தனர்.

இத்தகைய வழக்கத்தை ஐந்திணை இலக்கியங்களிலும் கண்டு கொள்ளலாம்.

அந்த ஊர்களில் ஏதாவது ஒரு மீன்வகை ஒருவருக்குத் தொகையாகப் பிடிபட்டால் அந்த மீனின் பெயரே அந்தச் சம்மாட்டியின் பெயருக்கு முன்னால் பட்டப்பெயராக அமைந்துவிடுவதும் வழக்கத்தில் இருந்தது. 'கெழித்தி முருகாத்தை' 'நெய்த்தலிக் கணபதி' 'சூவாப்பாரைச் சின்னத்துரை' என்பதுபோல் 'பாரைக்காற குழறிவல்லி' என்று அன்று தொடக்கம் வல்லிபுரம் சம்மாட்டியை மக்கள் சொல்லத் தொடங்கினர்.

பெயர் துலங்கியதுபோல் பணமும் இதுவரை இல்லாதவாறு அவர் கையில் புழங்கத் தொடங்கியது. சோழக நீரோட்டமோ வாடை நீரோட்டமோ கச்சான் கொண்டல் சரிவுகாற்றுக் காலமோ எந்தப் பருவத்திலும் குழறிவல்லிக்கு மீன்பிடிபாடு குறைவின்றி நடைபெற்றது.

அது ஒரு புரட்டாதி மாதம். மெல்லிய கச்சான்காற்று வீசிக்கொண்டு இருந்தது. மனிதரை மட்டுமல்ல மீன் இனத்தையும்

Digitized by Arunachalam Foundation
noolaham.org | aavanaham.org

இத்தகைய தென்றல் காற்று மெல்லெனத் தடவி அவைகளைக் கரை சேர்த்துவிடுவது வழமை. அன்றைய தினத்தில் வெண்நெய்த்தலி, சூவாப்பாரை, கீரைமீன், சாளை, கெழிறு, தொண்டன், காரல், பாரை ஆகிய பல்லின மீன் வகைகள் ஒருமித்து 'கலக்குமீன்' என்ற பெயரில் தொகையாகப் பிடிபட்டன. எல்லாச் சம்மாட்டிமாருக்கும் அன்று நிறையவே மீன் பிடிபட்டது. குழறிவல்லிக்கு கொஞ்சம் கூடுதலாகப் பிடிபட்டது. அதற்குக் காரணம் அவரது மண்டாடி ஆறுமுகத்தின் திறமைதான் என்று அனுபவமுள்ள தொழிலாளர் பலர் சிலாகித்துப் பேசிக்கொண்டனர்.

தென்னிலங்கைச் சிங்கள மீன் வியாபாரிகளுக்கு அன்று உச்சி குளிர்ந்த மகிழ்ச்சி. அவர்கள் ஓடி ஓடி மீன்களைக் கொள்வனவு செய்தனர். ஜீப் வாகனங்களில் அவற்றை ஏற்றிச் சென்றனர். அவற்றுக்குப் பனிக்கட்டி போட்டு பலகைப் பெட்டிகளில் அடைத்துப் பாதுகாப்பாக பதம் கெடாவண்ணம் கொழும்பு குருநாகல் போன்ற தென்னிலங்கை நகரங்களுக்கு லொறிகளில் அனுப்பி வைத்தனர்.

அன்றைய உபரி வருமானத்திலிருந்து குழறி வல்லிக்குப் பணத்திமிர் இன்னும் சிறிது அதிகரித்துக் காணப்பட்டது. வழக்கமாகவே அவர் உலோபித்தனம் இல்லாத ஒரு சம்மாட்டி எனப் பெயர் எடுத்தவர். யாராவது துன்பம் துயரம் என்று கை நீட்டினால் போதும். பணம் ஏனைய பொருட்களை வாரி வழங்குவதற்கு எப்போதும் அவர் பின் நிற்பதில்லை. ஒரு தூர்மடி நிறைந்த மீன் பிடிபட்டால் போதும். தன் தொழிலாளருக்கு கள் சாராயம் வாங்கி அன்பளிப்புச் செய்வார். அவர்களின் சம்பளத்தையும் அப்படியே கொடுப்பார். அவர் வரவு செலவு பார்ப்பதில்லை. வாறகை போறகை தெரியாமல் தலை தெறிக்கச் செலவு செய்வார். அவரின் தோற்றம்: நல்ல சிவப்பு நிறம். நீளமான கை கால்கள். தோளில் சால்வை போட்டுக்கொண்டு கை வீசி நடக்கும் அழகே தனி அழகு. உண்மையில் நல்ல ஆண் அழகன்தான்.

ஒருமுறை கோடைகாலத் தொழில் முடிந்ததும் அந்த ஆண்டுக்கான கணக்கைப் பார்த்து அவரிடம் சிங்கள வியாபாரிகள் பணத்தைக் கொடுத்தனர். ஒரு கையில் 'தாள்' காசுப் பையும் மற்றக் கையில் சில்லறைக் காசுப் பையும் தூக்கியவாறு மதுபோதையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழறிவல்லி தன் வீட்டு முற்றத்தை வந்தடைந்தார். அவரிடம் சம்பளப் பணம் வாங்கவென வந்திருந்த தொழிலாளிகள் அவரின் வளவு முற்றத்தில் இரண்டு மணித்தியாலமாக அவருக்காகக் காத்திருந்தனர்.

அவர்களைக் கண்டதும் குழறிவல்லிச் சம்மாட்டிக்கு பெருமையும் திமிரும் தலைக்கேற அகங்காரமாகச் சிரித்தார். கொண்டுவந்த சில்லறைக் காசுப்பையின் முடிச்சை அவிழ்த்து முற்றத்து மண்ணில் கவிழ்த்துக் கொட்டினார்.

"இந்த வல்லிபுரம் சம்மாட்டியைக் கடவுளாலும் அசைக்க ஏலாது தெரியுமா? என்ர ஏழு தலைமுறைக்கே அழிக்க ஏலாத சொத்துப்பத்து என்ர கையில இருக்குது. இந்தச் சில்லறைக் காசும் ஒரு பணமா?" என்று சொல்லிச் சொல்லி தனது பாதத்தால் கொட்டிய சில்லறைக்காசை முற்றத்து மண்ணுக்குள் உழக்கினார். பார்த்துக்கொண்டிருந்த தொழிலாளிகள் அவரை நோக்கி ஓடிச்சென்றனர்.

"சம்மாட்டியார் உது என்ன வேலை செய்யிறியள். முட்டாள்தனம் செய்யிறியள். பணத்தையும் ஆரும் காலால மிதிப்பினமே?" என்று சொல்லியவாறு இரண்டு தொழிலாளிகள் அவரைப் பிடித்து இழுத்துவந்து வீட்டு விறாந்தையில் இருத்தினர். ஏனைய தொழிலாளரும் சம்மாட்டி ஆச்சியும் சேர்ந்து மண்ணில் புதைந்து கிடந்த சில்லறைகளைப் பொறுக்கி எடுத்து ஒரு பனைஓலைப் பெட்டியினுள் நிரப்பினர்.

குழறிவல்லி பொடியன் பருவத்திலிருந்தே தன் அண்ணன் தம்பிமாரில் மிகுந்த பாசமுடன் வாழ்ந்து வந்தார். அவர்கள்மீது தன் உயிரையே வைத்திருந்தார். வருமானம் குறைந்த காலத்தில் தனது வீட்டைக் கவனியாது விட்டாலும் தன் சகோதரர்களின் வீட்டுச்சீவிய ஒழுங்குகளை எதுவித குறைவின்றிப் பாதுகாத்து வந்தார்.

அந்த ஊரில் ஐந்தாம் வகுப்புவரையான கல்வி வசதிதான் இருந்தது. உயர் கல்வி கற்பதாயின் வசதி வாய்ப்புள்ளோரின் பிள்ளைகள் யாழ்ப்பாணம் பருத்தித்துறை கோப்பாய் இளவாலை முதலிய பட்டணம் நகரம் நோக்கித்தான் செல்லவேண்டும். குழறி வல்லி தன் தம்பிமார் மூவரையும் கத்தோலிக்கப் பாதிரியாரின் உதவியுடன் பட்டணப்பாடசாலை ஒன்றின் விடுதியில் தங்கவைத்துப் படிப்பித்தார்.

noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு வேண்டிய செலவுகள் முழுவதையும் தானே கொடுத்து வந்தார். கரைவலை வாடிக்கு வேண்டிய இழைக்கயிறு அரிசி மிளகாய் கொறுக்காய் போன்ற சாமான்கள் வாங்கவென மாதத்தில் ஒருமுறையாவது அவர் பட்டணம் செல்வது வழக்கம். அப்போதெல்லாம் தம்பிமாரைப் பார்ப்பதற்குத் தவறாது விடுதிக்குப் போவார். அவர்களின் கைகளில் பணத்தைத் திணித்து "என்ர உடன் பிறப்புகளே நீங்கள் நல்லாய்ச் சாப்பிடுங்கோ. கிழமையில் ஒருக்கால் சினிமா பாருங்கோ. அண்ணதான் படிப்பறிவற்றவன். நீங்களெண்டாலும் நல்லாய்ப் படியுங்கோ. கெட்டிக்காறப் பிள்ளையள் எண்ட பேர் எடுத்து நீங்கள் அரசாங்க உத்தியோகம் பாக்கவேணும். அண்ணை அதைப்பாத்து மனம் பூரிக்கவேணும்." என்று சொல்லி அவர்களின் கன்னங்களில் கொஞ்சியபடி கண் கலங்குவார். புடவைக் கடைக்கு அவர்களை அழைத்துச்சென்று அரைக்காற்சட்டைக்கு நீல நிறத்திலும் மேற்சட்டைக்கு வெள்ளை நிறத்திலும் துணி கிழிப்பித்துத் தையற்காரனிடம் அளவு எடுப்பித்து தைக்கக் கொடுப்பார். பஞ்சபாண்டவரில் உள்ள தருமன்மாதிரி தன் தம்பிமாரில் அளவு கடந்த பாசத்துடன் அவர் வாழ்ந்து வந்தார்.

குழறிவல்லிச் சம்மாட்டியின் பிள்ளைகள் எல்லாம் நண்டும் குஞ்சும் மாதிரி அப்போது சின்னன் சிறிசுகளாய் இருந்தனர். எட்டுப் பிள்ளைகளும் ஒன்றை ஒன்று தூக்கமுடியாத பருவம் கொண்டவர்கள். பெண்டில் செல்லம்மாவும் நல்ல அழகி. தழதழப்பான உடற்கட்டு. சம்மாட்டியின் மிடுக்கான உணர்வுக்கு அவளும் வளைந்து கொடுத்தாள்போலும். வருடத்துக்கு ஒன்றாகப் பார்த்தும் பாராமல் பெற்றுத் தள்ளினாள்.

"நீங்கள் இனிமேலாவது கொஞ்சமெண்டாலும் எங்கட பிள்ளையளுக்கும் மிச்சம் பிடிக்கவேணும். உழைக்கிறது எல்லாத்தையும் உப்புடி உங்கட தம்பிமாருக்குக் கொட்டிக் கொண்டிருந்தால் எங்களுக்கு ஏதாவது கஷ்டம் நஷ்டம் எண்டு வந்திட்டால் நானும் பிள்ளையளும் ஓடிப்போய் உந்தக் கடலுக்குள்ள எல்லோ விழவேணும்." என்று சொல்லிக்கொண்டே இரண்டாம் முறையும் புருசனுக்குச் சோற்றைப் போட்டு குழம்பையும் ஊற்றி மீன்களையும் கோப்பையில் வைத்தாள் செல்லம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எடியேய் செல்லம்- நீ ஒன்றுக்கும் யோசியாதயடி- எனக்கு என்ன துன்பம் வந்தாலும் என்ர தம்பிமார் என்னைத் தூக்கித் தலையில் வைப்பாங்களடி." என்று சொல்லிக்கொண்டே தலையை மிடுக்காக ஆட்டியவாறு மாம்பழச் சுங்கன் மீனை வாயினுள் எடுத்து உருவிச் சாப்பிட்டு மீன்முள்ளை களிமண் பூசிய கடுந்தரையில் போட்டபடி குழறி வல்லி தன் மனைவி செல்லம்மாவுக்குப் போதனை செய்தார்.

அவர் சாப்பிடும்போது தண்ணீர் குடிக்கமாட்டார். பெரிய ஒரு தகரக் குவளைக்குள் கள்ளை ஊற்றிப் பக்கத்தில் வைத்துவிட்டுத்தான் சாப்பிடுவதற்கு குந்துபலகையில் அமர்வார். அன்று அவருக்கு ஏற்கெனவே மூக்கு முட்டிய மதுவெறி. அத்துடன் இந்தக் கள்ளையும் குடித்துக்கொண்டே சாப்பிட்டார். பட்டணம் போய் வந்தால் பக்கத்தில் கள் இருக்காது. கொண்டுவந்த போத்தல்கள் முடியும்வரை சாராயம் நிரப்பிய கண்ணாடிக் குவளைதான் இருக்கும். ஒட்டு மொத்தத்தில் குழறிவல்லி குடி குடித்தனத்தில் குறைவின்றி மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தார்.

மிகவும் பின்தங்கிய இந்த ஊர்களில் ஒருசிலர்தான் பத்தாம் வகுப்புவரை படித்திருந்தனர். அதுவும் ஆண்கள்தான். பெண்கள் முதலாம் மூன்றாம் வகுப்புடன் பள்ளிக்கூடம் செல்வதை நிறுத்திவிடுவர். அதன்பின் வளவிலிருந்து வீட்டு வேலைகளைக் கவனிப்பர். தாய்மாருடன் சேர்ந்து கடற்கரையிலும் தோட்டங்களிலும் கூலி வேலை செய்வர். இதனால் 'படித்தபெண்' என்று அந்த ஊர்களில் அப்போது யாரும் இருந்ததில்லை.

பட்டணத்திற்குப் படிக்கச் செல்லும் ஆண்களும் பத்தாம் வகுப்புடன் அரசாங்கப் பணிகளில் சேர்ந்துவிடுவர். அவர்களைப் பட்டணத்தார் கலியாணத் தரகர்மூலம் எடுத்துவிடுவர். ஒருசிலர் பட்டணத்துப் பெண்களைக் காதலித்தும் திருமணம் செய்தனர். அதன்பின் அவர்கள் உயர்குடியாக்கம் பெற்றுவிடுவர். தாம் பிறந்து வளர்ந்த சமூகத்துடன் பழகுவதைக் குறைத்துக் கொள்வர். காலப்போக்கில் அவர்களும் நகர வாசிகளாகிவிடுவர். எப்போதாவது தாம் பிறந்த ஊர்சென்று தாய்தந்தை நெருங்கிய உறவுகளைப் பார்த்துச் செல்வர். ஏனைய சொந்த பந்தங்களின் தொடர்புகளைப் படிப்படியாகக் காலப்போக்கில் குறைத்துக் கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது அண்ணனின் பணத்தில் படித்து அரசப் பணிகளில் இணைந்த குழறி வல்லியின் தம்பிமாரையும் இந்த உயர்குடியாக்கம் என்னும் ஆறு அள்ளிச்சென்றது. காதலித்தும் கலியாணத் தரகர்மூலமும் வேறு வேறு பட்டண நகரங்களில் அவர்கள் திருமணம் செய்து கொண்டனர். அவர்களின் உப்பு இரத்தத்தில் மெல்ல மெல்ல நகரப் பண்பாடு கலக்கத் தொடங்கியது.

"ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது அதில் ஆணும் பெண்ணும் சேராவிட்டால் சுவை இருக்காது" என்பதற்கமைய ஆண் பெண் இருவரும் ஏதோ ஒரு வழியில் உழைத்துத்தான் கிராமங்களில் சீவிப்பர். ஆண் வலை இழுத்தால் பெண் மீன் வியாபாரம் அல்லது புகையிலை மரக்கறி முதலிய வியாபாரம் செய்வாள். அல்லது ஏதாவது கூலி வேலைக்குப் போவாள். தமது வாழ்வுக்கான பொருள் தேடலில் குடும்பத்திலுள்ள ஆண்பெண் இருவரும் பங்கு கொள்வது இவ்வூர்களின் வழக்கமாய் இருந்தது.

பட்டணம் புகுந்த இத்தகைய கிராமப் பின்னணி உள்ள அரசப்பணி ஆண்கள் சிலருக்கு நற்பலனாக அரசப்பணி செய்யும் பெண்கள் வாய்த்தமையால் இருவரின் அரசாங்கச் சம்பளத்திலும் தடங்கலின்றி அவர்கள் சீவிக்கக் கூடியதாய் இருந்தது. ஆனால் பலருக்கு அரசப்பணியற்ற பெண்கள்தான் வாழ்க்கைத் துணையாகக் கிடைத்தனர். எனவே ஒருகைச்சம்பளம் எடுக்கின்ற அரசப்பணி ஆணின் குடும்பத்துக்கு சீவியப்பளு ஏற்பட்டது. இதனால் பட்டணத்தின் வாழ்க்கைச் செலவுக்கு முகம் கொடுக்க முடியாமல் சிலர் திண்டாடினர்.

கிராமத்தில் உருவான அரசப்பணி மாப்பிள்ளைமார் சிலர் கலியாணத் தரகரின் ஆசை வார்த்தைகளுக்கு ஏமாற்றமடைந்தும் உள்ளனர். ஒரு ஏக்கர் வளவுக்குள் ஓடி ஆடி வளர்ந்த கிராமத்தான் பட்டணத்தின் பரப்பு வீட்டுக்குள் கிளிமாதிரி அடைபட்டுக் கிடப்பான். இதனால் சிலர் உளவியல் பாதிப்பும் அடைந்தனர்.

தனிக்குடித்தனம் நடத்தும் வாய்ப்புக் கிடைக்காமை, உழைப்புச் சமன் இன்மை போன்ற முரண்பட்ட பண்பாட்டுக் கூறுகளின் சுழியில், குழறி வல்லியின் தம்பிமாரும் அகப்பட்டுக் கொண்டனர். அவர்கள் தமது இளமைக் காலத்தை வங்கக் கடல் அலைகளுடன் போராடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றவர்கள். இப்பொழுதோ வாழ்வியல் 'இடர்பாடு' என்னும் துன்பத்துடன் போராடிக் கொண்டிருந்தனர்.

அவர்கள் மூவரும் தென் இலங்கையின் வேறு வேறு மாகாணங்களில் அரசப்பணி செய்தமையால் தம்மை வளர்த்த அண்ணரிடமோ ஊரின் உறவுகளிடமோ அடிக்கடி வருவதற்கு இயலவில்லை. அவர்கள் தாம் பிறந்த ஊருக்கு வந்து போகும் மாதங்களின் நீட்சி அதிகரித்தது. ஆண்டுக்கு ஒரு முறை கோயில் திருவிழாவுக்கு வந்து முகத்தைக் காட்டும் அளவுக்கு அவர்களின் பாசப் பிணைப்பில் விரிவுகள் ஏற்பட்டன.

குடும்ப அலகு சமூக அலகு உடைவது, பாசம் நேசம் குலைவது போன்றவற்றால் ஏற்படும் உளவியல் நோய்க்கு மருந்து இல்லை என்பது உண்மைதான். தன் தம்பிமாரின் பிரிவால் குழறி வல்லி இப்போது கூடுதலாகக் குடித்துத் திரிந்தார்.

கால முன்னேற்ற அறிவியற் கண்டுபிடிப்பால் மீன்பிடித் தொழிலில் முன்னேற்றங்கள் முளைவிடத் தொடங்கின. கரைவலையை மட்டும் நம்பியிருந்த சில தொழிலாளிகள் வெள்ளைவலை, சணல்வலை, நூற் சூடைவலை, அறக்கொட்டியான் வலை போன்ற தனி முயற்சிகளில் ஈடுபடத் தொடங்கினர். கரைவலையில் கிடைக்கும் சம்பளத்திலும் பார்க்க அந்தத் தொழில்களில் அதிகமான வருமானம் கிடைப்பதை அவர்கள் கண்டனர். இந்த நவீன மீன்பிடித் தொழிலால் மேலும் மேலும் பலர் கவரப்பட்டனர்.

சிலர் மனைவிமாரின் கழுத்துச் சங்கிலி கை வளையல் முதலிய நகைகளை விற்றுப் புதிய தொழிலுக்கான கருவிகளைப் பெற்று உழைக்கத் தொடங்கினர். எஞ்சியுள்ள கரைவலைத் தொழிலாளருக்கு அதிகரித்த பெறுமதி இப்போது ஏற்படத் தொடங்கியது. எனவே கூடுதலான முற்பணமும் அதிக சம்பளமும் கொடுக்கும் சம்மாட்டிமாரை நாடியே அவர்கள் சென்றுகொண்டு இருந்தனர்.

அது ஒரு ஆடி மாதம். மதியம் பன்னிரண்டு மணி இருக்கும். கரைவலையை உயர்ந்த கடலை நோக்கி வளைத்து குழறிவல்லியின் தொழிலாளிகள் இழுத்துக்கொண்டு இருந்தனர். வலையை இழுப்பதற்கு அன்றையதினம் ஏதோ கடினமாய் இருந்தது. எனவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தமது முழுப்பலத்தையும் சேர்த்து கடற்கரைக்கு வலையை இழுத்து எடுத்தனர். அப்போது வலையின் பெறுமதி மிக்க பகுதியாகிய தூர்மடி என்பது சேற்றில் இறுகித் துண்டிக்கப்பட்டுக் கடலோடு போய்விட்டது. இந்த இழப்பு குழறிவல்லியை மிகவும் பாதித்து விட்டது. அவர் மிகுந்த துக்கத்துடன் தலையில் கையை வைத்துக்கொண்டு கண் கலங்கினார். கடலைப்பார்த்தபடி கடற்கரை மண் புட்டியில் குந்தி இருந்தார்.

இந்நிகழ்வின்பின் அவருக்குத் துன்ப காலம் தொடங்கிவிட்டது. வள்ளம் இரண்டும் காலங்கடந்து பழமை ஆகிவிட்டன. அவற்றின் அடிப்பகுதியால் கடல்நீர் உட்புகுந்தது. நவீன நைலோன் வலைகளை கடலோடிகள் உயர் கடலில் போடுவதால், சிறிய மீன் இனங்கள் கரை நோக்கி வருவதும் குறைந்தது. அதனால் கரைவலை மீன்பிடி என்பது நலிவடைந்தது. குழறிவல்லியின் கை இருப்பும் சிறிது சிறிதாகக் கரையத் தொடங்கியது.

அந்த வருட இறுதியில் கணக்குப் பார்க்கும்போது வருமானம் மிகவும் நட்டத்தில் முடிந்தது. அடிப்பெட்டியைத் தடவி எடுத்து அரிசி மிளகாய்க் கடனையும் தொழிலாளர் சம்பளத்தையும் கொடுத்து முடித்தார். என்னதான் இடர்பாடு என்றாலும் வருடாந்தம் ஆவணியில் நடைபெறும் பரம்பரைக் கோயில் திருவிழாவுக்கு நட்டுவம் நாகசுரம் என்பவற்றைத் தன் செலவில் அமர்த்திக் கொள்வார். பிள்ளையாரின் பெருங்கதைப் பூசையையும் சிறப்பாகச் செய்து முடிப்பார்.

அடுத்த வருடம் கரைவலையை நடத்துவதாயின் தனது தொழிலாளர் எல்லோருக்கும் ஐப்பசியில் முற்பணம் கொடுக்க வேண்டும். எனவே அவர் வழக்கமாகக் கருவாட்டுச் சிப்பம் அனுப்பும் கொழும்பு வியாபாரியிடம் கடன்பெறவெனப் புகையிரதப் பயணம் மேற்கொண்டார்.

"ஏற்கெனவே ரொம்பப் பாக்கி இருக்கு. நாம இதுக்குமேல எப்புடி பணத்தை இழக்கமுடியும் சம்மாட்டி."

என்று சொல்லி கொழும்பு வியாபாரிகள் கையை விரித்து விட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலு ஊர் தள்ளி, தாளையடிக் கிராமத்தில் வாடி போட்டு ஐஸ்மீன் வியாபாரம் செய்யும் 'பஸ்ரியன் சில்வா' என்னும் சிங்கள முதலாளியிடம் குழறிவல்லி கடன்கேட்டுச் சென்றார்.

"நீங்க சம்மாட்டிங் ஏங்கிட்ட நம்பிக்கை வெச்சல்ல. கொழும்புங் குருணாகல் மொதலாளிகிட்டே வியாபாரம் வெச்சிங்க. உப்ப நாங் உங்கலுக்கு கை விரிச்சா, நம்ப பொழப்புக் காத்த மத்தச் சம்மாட்டிங் கலுக்குக் குடுக்க, நாங் பணத்துக்கு எங்கேப் போவேங். அதனால கொஞ்சங் மன்னிச்சுக் குடுங்க சம்மாட்டி"

என்று தன் அரைகுறைத் தமிழில் பஸ்ரியன் சில்வாவும் தட்டிக் கழித்து அனுப்பினார்.

குழறி வல்லியின் தலைக்குள் உலகம் சுழன்றது. பட்ட கடனின் வட்டியும் மாதாந்தம் ஏறிச்சென்றது. கை அறு நிலையில் நின்று இடது கையால் அடர்ந்த தன் தலை மயிரைக் கோதிக்கோதி நீண்ட நேரமாக அவர் யோசித்தார். எதுவித வழியும் அவருக்குத் தோன்றவில்லை. ஒரே ஒரு உதவி இருக்கிறது. என் தம்பிமார் என்னை ஒருபோதும் கை விடமாட்டார்கள் என்று மனத்திடமாக நம்பினார். தான் கஞ்சி ஊற்றிப் படிப்பித்த அன்புத் தம்பிமாருக்குத் தனது துன்ப துயரங்களை விபரமாக எழுதி தனித்தனிக் கடிதங்களை அவர்களுக்கு அனுப்பி வைத்தார்.

தம்பிமார் எடுக்கும் அரசாங்கச் சம்பளம் அவர்களின் சீவியத்தை மட்டுமே சரிக்கட்டக் கூடியதாக இருந்தது. ஒரு தம்பியோ படித்த குடிகாரன். வேலைக்கு அணியும் நீளக் காற்சட்டையும் மேல் அங்கியும்தான் அவனது சொத்து. மனைவியின் அரசாங்கச் சம்பளத்தில் ஒருவாறு அவர்களின் வாழ்க்கை நகர்ந்து.

இன்னொரு தம்பியின் மனைவி சீட்டுப் பிடிப்பவள். அவளின் கையில் கொஞ்சம் ரொக்கம் இருந்தது. அவளுக்குப் பக்கத்தில் இருந்து தன் அண்ணனின் சோகக் கடிதத்தை அவளின் கணவன் வாசித்தான். அப்போது அவள் ஒருதடவை கண்ணால் உருட்டி முழிசினாள். பயமடைந்த அவன் வாய்பேசாமல் எழுந்து சென்று கயிற்றுக் கட்டிலில் குப்புறப் படுத்துக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றத் தம்பியின் மனைவி தன் கணவனின் தொடையில் கிள்ளி ஒருமுறை உரத்துக் கத்தினாள். "நான் பெத்த செல்வங்களை இந்த மலையால உறுட்டிவிடுகிறதோ?

எங்கட பிள்ளையள்ள உடுப்பென்ன படிப்பென்ன.... புத்தகமென்ன?''

என்று ஒருமுறை தொண்டை கிழியச் சத்தம் போட்டு அடங்கினாள்.

தோளில் தம்மைச் சுமந்து வளர்த்துப் படிப்பித்த தங்கள்; அண்ணனுக்கு என்னத்தை எழுதுவது? எப்படி எழுதுவது? என்று மூன்று சகோதரர்களும் தமக்குள் பெருமூச்சு விட்டபடி பேசாமல் இருந்தனர். 'ஏதோ எங்கட அண்ணனை அந்தப் பிள்ளையார்தான் காப்பாற்ற வேணும்' என்று மனதுக்குள் அழுதுகொண்டே மௌனமாக இருந்து விட்டனர்.

மனைவி செல்வம்மா தலைவாசல் படலையிலும் குழறி வல்வி கரைவலை வாடியிலும் இருந்துகொண்டு தபால்காரன் வருகிற தொடுவாய்ப் பக்கமாகத் தம்பிமாரின் கடிதங்களை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். நாட்கள் மாதங்களாகின. வழிமேல் நம்பிக்கை வைத்துப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விட்டனர். ஈற்றில் எஞ்சியது ஏமாற்றம்தான்.

அப்போதும் "எடி செல்லம்..! என்ர தம்பியளுக்கு ஏதோ கயிட்டம்போல இருக்குதடி.. அதுதானடி அவங்கட பதில் ஒன்றையும் காணயில்லை... இதைப்போய் நீ ஒன்றும் பெரிசுபடுத்தி யோசியாமல் பேசாமல் ஆகவேண்டியதைப் பாரடியப்பா'' என்று தன் தம்பிமாரில் குற்றம் குறை காணாதபடி குழறிவல்வி ஒருவாறு சொல்லிச் சமாளித்தார்.

"இருக்கிற வள்ளம் வலையை ஈடு வச்சாவது தொழிலாளியளுக்கு முற்காசு குடுத்து அடுத்த கோடைத் தொழிலை நாங்கள் நடத்துவம். கண்டிப்பாய் நான் காப்புக் கட்டுற பிள்ளையார் என்னைக் கை விடமாட்டார்'' என்று ஆறுதல் கூறி மனைவியின் மனக் கொதிப்பை ஒருவாறு அடக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஒரு ஐம்பது மடிக்கு நெத்தலியோ பாரையோ பட்டுதெண்டால் இந்த வல்லிபுரம் பழைபடி துளிர்த்துவிடுவானடி நீ எங்கட குல தெய்வங்களை நல்லாய்க் கும்பிடம்மா'' என்று பலவித உசார்க் கதைகளை மனைவியின் மனம் சோர்ந்து போகாதவாறு அவர் சொன்னார்.

'பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்' என்ற பழமொழிபோல எப்படித்தான் அவர் முயற்சி எடுத்தாலும் வருமானம் படுபட்சியாய்க் காணப்பட்டது. சிங்கள வியாபாரியிடம் தன் நண்பன் வைரவிச் சம்மாட்டியைப் பொறுப்புக்கு அழைத்து கடன் பத்திரத்தில் முத்திரை ஒட்டி கை எழுத்துப் போட்டு தனது வலை வள்ளத்தை ஈடு வைத்துப் பணம் பெற்றார். கிடைத்த பத்தாயிரத்தில் சிறிய சிறிய தொகையாகத் தொழிலாளருக்கு முற்பணம் கொடுத்தார். அடுத்த வருடக் கோடைத் தொழிலையும் ஒருவாறு குழறிவல்லி நடத்திக்கொண்டு இருந்தார்.

குழறிவல்லி கரைவலை வளைக்கும் கடல் எல்லைக்கு மேற்கே, கடற் கரையிலிருந்து அரை மைல் உயரத்தில் கடலடிநிலத்தில் ஒரு கற்குன்று இயற்கையாக வளர்ந்து உள்ளது. தூண்டில் போட்டு மீன் பிடிப்போர்க்கு அது ஒரு வாய்ப்பான இடமாகத் திகழ்ந்தது. விளைமீன் செம்மீன் இனங்களை அவர்கள் அவ்விடத்தில் அதிகமாகப் பிடிப்பார்கள். ஆனால் நீரோட்டத்துடன் நகர்ந்து செல்கின்ற அறக்கொட்டியான், சூடைவலை, கரைவலை போன்ற இழுவைத் தொழில்களுக்கு அந்தக் கற்குவியல் 'இயமன்' போன்று ஆபத்தானது. தற்செயலாக அதில் வலைகள் விழுந்து விட்டால் அவை தும்பு தும்பாய்க் கிழிந்துவிடும்.

அன்றொருநாள் வடமேற்கிலிருந்து ஒருவித வாடைச்சரிவு காற்று வீசிக்கொண்டிருந்தது. மத்தியான நேரம் முக்கால் மது வெறியில் குழறி வல்லி கடற்கரை நோக்கி வந்தார். வலை வளைக்கும் மண்டாடியை கரையில் நின்று வலை இழுக்கும்படி சொன்னார். தானே வள்ளத்தில் ஏறி சுக்கானைப் பிடித்து வலையை வளைத்து வந்து இறங்கினார். அத்தடவை சின்னட்டி, விளைமீன், ஒட்டி, பயிந்தி போன்ற கலவன் மீன்வகை இரண்டு மடி நிறையப் பிடிபட்டது. சம்மாட்டியும் தொழிலாளரும் குதூகலத்தில் திழைத்தனர். மகிழ்ச்சியில் இன்னும் இரண்டு போத்தல் கள்ளை குழறிவல்லி தன் வயிற்றுக்குள் ஊற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உந்தக் கற்குன்றைச் சுற்றித்தான் கலக்கு மீன் உலாவுதுபோல' என்று நினைத்துக் கொண்டார். அடுத்த தடவையும் தானே சுக்கானைப் பிடித்து அந்தக் கற்குன்றுக்குப் பக்கமாக நூறு மீற்றர் அளவில் எட்டம்கட்டி வலையை வளைத்து வந்து இறங்கினார்.

'இந்தத்தடவை ஒரு பத்து மடி மீன் என்றாலும் பிடிபட்டால் உந்தச் சிங்களவன்ர கடனை ஓரளவுக்குக் கொடுத்திடலாம்' என்ற நினைவுடன் தானும் சேர்ந்து வலையை இழுத்துக் கொண்டிருந்தார். இத்தடவையோ இழுப்பதற்கு வலை மிகக் கடினமாய் இருந்தது. "மடி நிறைய மீன் ஏறி இருக்குதடா. ஊண்டி இழுங்கோடா" என்று வேலுப்பிள்ளைக் கிழவன் தொழிலாளிகள் எல்லோரையும் உசார்ப் படுத்தினான். எல்லோரும் சேர்ந்து வலுக்கொண்டு வலையை இழுத்துக் கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் வலை தரதரவென இலகுவாக வந்து கொண்டிருந்தது. அன்று சோழக நீரோட்டம் சிறிது வேகமாய்க் காணப்பட்டது. அதனால் அந்த நீரோட்டத்துடன் இழுபட்ட கரைவலையின் தூர்மடிப் பகுதி கற்குன்றில் சாய்ந்து தும்பு தும்பாய் கிழிந்து கற்குன்றுடன் சங்கமமாகி விட்டது. குழறிவல்விச் சம்மாட்டியின் சோகமோ அப்போது சொல்லில் அடக்க முடியாத வகையில் காணப்பட்டது.

குழறி வல்லி ஆறடி உயரமுள்ளவர். நிலத்தைப் பார்த்த குனிந்த நடையும், உடுத்த பழைய சாரமும், தலையில் பல நாள் சவர்க்காரம் காணாத துவாயுமாக எந்நேரமும் மிகுந்த யோசனையுடன் அந்த இழப்பின் பின்னர் காணப்பட்டார். அவர் நடக்கும்போது அவரது கை விரல்களோ தமது பாட்டில் அசைந்து மடிந்து நியாய அநியாயங்களைப் பேசிக்கொள்ளும்.

மறுநாள் கடற்கரை மண் புட்டியில் குந்தி இருந்து அவர் கடலையே வெறித்துப்பார்த்துக்கொண்டு இருந்தார். ஆபுகானிஸ்தான் நாட்டுத் திராட்சைப் பழம்போல் அவரது கண்ணீர்த் துளிகள் உப்புமணலில் வீழ்ந்து காய்ந்தன.

ஈட்டுக்கடனோ வட்டியுடன் பெருகுகின்றது. தூர்மடியை கற்பாறை உண்டுவிட்டது. தொழில் செய்வதற்கோ தற்போது தூர்மடி சலவாய் இல்லை. தொழிலாளருக்குச் சம்பளப் பணம் கொடுக்க வேண்டும். அரிசி மிளகாய் மல்லிக்கடன் வாங்குகின்ற கடைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொப்பியில் கடன் நிரம்பிக்கொண்டு வந்தது. வாடியில் இரண்டு நேரமாவது தன் தொழிலாளருக்குச் சோறு போட இயலாத நிலை. யாரைக் கடன் கேட்பது. எவரிடம் கை ஏந்துவது. போர்க்களத்தில் தோல்வியடைந்த இராவணனிலும் பார்க்கப் பல மடங்கு துன்பத்தில் குழறிவல்லி கலங்கி நின்றார்.

அவரது வீட்டின் வாழ்க்கையும் மிக அடிநிலையைத் தொட்டுவிட்டது. மனைவி உடுப்பதற்கு உள்ளது ஒரு புடவைதான். அவள் மாற்றிக் கட்டுவதற்குச் சேலை இல்லை. எட்டுப் பிள்ளைகள். ஆண் பிள்ளையின் சாரத்தை இரண்டாகக் கிழித்து அதை இரண்டு பெண் பிள்ளைகள் உடுத்திருந்தனர். காலை உணவு பழங்கஞ்சிதான். செல்லம்மா பக்கத்து வீடுகளில் அரிசி மிளகாய் கடன் வாங்கி வந்து சமைத்து, மதியம் இரவு இரண்டுக்கும் இடைப்பட்ட நேரத்தில் பிள்ளைகளுக்கு ஒரு நேரம்தான் சோறு கொடுத்தாள். தானும் புருசனும் அடிப்பானைச் சோற்றுக்குள் தண்ணியை ஊற்றி, நாலு உப்புக்கல்லைப் போட்டு கலக்கிக் குடித்து வயிற்றை நிரப்பி ஏப்பம் விட்டு, ஆளையாளின் முகத்தைப் பார்த்து துன்பத்தை மறைத்து சமாளித்து, ஒருவாறு வாழ்க்கையை ஓட்டினர்.

குழறி வல்லியின் நிலை இப்படி இருக்கும்போது அவரின் தொழிலாளிகள் எத்தனை நாட்களுக்கு வறுமையைச் சகித்து நிற்பர்?. அவர்கள் ஒன்று இரண்டாகச் செத்தநாயில் உண்ணி கழர்வதுபோல் தமது உறிக்கயிறு சோற்றுக் கோப்பை என்பனவற்றை எடுத்துக்கொண்டு விலகிச்சென்றனர். வசதிபடைத்த செல்லையாச் சம்மாட்டியுடன் சிலர் சேர்ந்து கொண்டனர். எங்கேயாவது குருவிச்சைச் செடிபோல் ஆகாவிட்டால் அவர்களின் அடுப்பிலும் பூனை படுக்கும் நிலைதானே.

ஒருநாள் விடியப்புற நேரத்தில் இரத்த உறவிலுள்ள சிலரும் குழறிவல்லிக்குப் பெண் கொடுத்த மச்சானுமாக ஏழு தொழிலாளர்கள் வள்ளத்துக்குப் பின்னால் மண்புட்டியில் குந்தியிருந்து சம்மாட்டியின் துன்ப துயரங்களைப் பறைஞ்சனர். அப்போது எல்லோரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தனர்.

"இனி என்ன செய்யுறது நாங்களும் கை விட்டால் அவாது கெதி என்னாகும். பிள்ளைகுட்டிக்காறன். கடன்காரனாய்ப் போனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மாலான மட்டும் தோளைக் குடுப்பம். தின்னுற சோத்துக்காவது இந்த வருசம் உங்கின வாற போற வயது போனதுகளையும் பொடியளையும் சேர்த்து ஒருமாதிரி வலையை வளைச்சுக் குடுப்பம்" என்று தமக்குள் தீர்மானித்தனர்.

'சோற்றுக்கு வலைவளைத்தல்' என்பது, எதுவித சம்பளமோ கூலியோ வாங்காமல் சரீர உதவியாக உழைத்துக் கொடுப்பது. முட்டுப்பட்ட நட்டப்பட்ட சம்மாட்டிமாரைக் கைதூக்கி விடுவது. தொழிலாளருக்குக் கொடுப்பது காலை மதியம் என இருநேரச் சோறுதான். இரவுச்சோறு அவர்களுக்குக் கொடுப்பதில்லை. இந்த 'உழைப்பு உதவியை' அத்தான் மச்சான் அண்ணன் தம்பி மாமன் ஏனைய உற்ற நண்பர்கள் போன்றோர்தான் செய்து கொடுப்பர்.

"சூழறி வல்லியின் கரைவலை சோற்றுக்கு வளைபடுதாம்" என்று ஊரெங்கும் கதை அடிபட்டது. நாலைந்து ஆண்களும் இரண்டொரு வயதுபோன கிழவன்களும் படிக்கப்போற பொடியன்களுமாய்; வலையை இழுத்தனர். ஓரளவு அடிவயிற்றைக் கழுவக்கூடிய தொழில்தான் நடைபெற்றுக்கொண்டு இருந்தது. கடன் அடைக்கும் அளவில் மீன்பிடி நடைபெறவில்லை. பஸ்ரியான் சில்வாவின் 'ஈட்டுக்கடன்' வட்டியுடன் பெருகிக்கொண்டு இருந்தது. ஐப்பசியும் நெருங்கியது. வாடைச்சாரிவு காற்றும் தலை காட்டியது. இன்னும் பதினைந்து நாளில் அந்த வருட வலைவளைப்பும் முடிந்துவிடும். வள்ளம் வலையை மழை படாமல் இழுத்துமூடிக் கட்டவேண்டும். மனைவி மக்களுக்கு மாற்றிக்கட்ட உடுதுணி இல்லை. தன்னை நம்பி அந்தக் கோடை முழுதும் சோற்றுக்காக உழைத்த தமது உறவினர்க்குத் தீபாவளிக்கு ஒரு போத்தல் சாராயம் வாங்கிக் கொடுக்கக்கூட வழி இல்லை. முன்னர்போல் ஒவ்வொரு சாரமும் துவாயும் தீபாவளிக்காக அன்பளிப்புச் செய்வதற்கு வழியில்லை. தனது வசந்தகால நினைவுகளை அவர் மீட்டுப் பார்த்தார். மனம் புழுங்கினார். வேதனையால் துடித்தார். நித்திரை வராமல் புரண்டு புரண்டு படுத்தார். இரவில் எழுந்து குந்தி இருந்தார். பனை ஓலை மூடல் பெட்டிக்குள் சேர்த்துவைத்த குறைச்சுருட்டுத் துண்டுகளை எடுத்துப் பற்றவைத்தார். புகையை உறிஞ்சி உறிஞ்சி நெஞ்சுக்குள் இழுத்தபடி துன்பமான தன் நேரத்தைக் கடத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமாக மீன் பிடிபட்டால் மாத்திரம் அவற்றை ஜீப்வாகனங்கள் வந்து ஏற்றிச் செல்லும். மீன் குறைவாகப் பிடிபட்டால் சிங்கள முதலாளிகளின் கூலித் தொழிலாளர்கள் மீன் கூடைகளைத் தடியில் கொளுவித் தமது தோள்களிற் காவிச்செல்வர். அவற்றைப் பலகைப் பெட்டிகளில் வைத்து பனிக்கட்டி போட்டு கொழும்பு குருநாகல் முதலிய வணிக நகரங்களுக்கு அனுப்பி வைத்து அவர்கள் வியாபாரம் நடத்தினர்.

மீன்கூடை காவிச் செல்வதில் 'கிரிகோசு' எனும் சிங்கள முதியவர் உடற்பலமுள்ள திறமைசாலியாகத் திகழ்ந்தார். அவர் கடற்கரையோரமாக மீனைக் காவிக்கொண்டு நடந்து போகும்போது ஒவ்வொரு வாடிப்பக்கமாகக் கண்ணெறிந்து நோட்டம் விடுவதிலும் மகாவிண்ணன். தனக்குக் கிடைக்கும் தகவல்களைத் தன் முதலாளிக்கு அப்படியே ஒப்படைப்பார். 'பஸ்ரியான்சில்வா' முதலாளியின் நம்பிக்கைக்கு உரியவர் அந்தக் கிருகோசுக் கிழவர்.

ஐப்பசி மாதம் தொடங்கவே தன் முதலாளியிடம் கிரிகோசு முதியவர் சொன்னார்: "குழறிவல்லிச் சம்மாட்டியிடம் நீங்கள் ஒரு சதமும் இனி வாங்க ஏலாது. அவனிடம் உள்ள சொத்து ஆகக்கூட ஒரு ஓட்டை வள்ளமும் ஒரு பீத்தல் வலையும்தான்" என்று.

பஸ்ரியான்சில்வா தனது கணக்குப் பிள்ளையுடன் ஆலோசனை நடத்தினார். 'வல்லியின் வள்ளமும் வலையும் தான் கொடுத்த கடனில் காற்பங்கு பெறுமதிகூட இல்லைத்தான். ஆனால் அதையும் கைவிட்டால் வேறு யாராவது கடன்காரர் வந்து அதை எடுத்துக்கொண்டு போய் விடலாம். எனவே இருக்கிறதை என்றாலும் இப்போதைக்கு நாம் எடுத்துக்கொள்வோம்' என்று இருவருமாக முடிவெடுத்தனர்.

'குழறிவல்லியின் வள்ளம்வலை எல்லாத்தையும் கடன்கொடுத்த சிங்கள முதலாளி வந்து கட்டிக்கொண்டு போகப்போறானாம்' என்று ஊரெல்லாம் கதை அடிபடத் தொடங்கியது.

இன்னும் இரண்டொரு நாளில் பஸ்ரியான்சில்வா வந்து தனது வள்ளம் வலையைக் கொண்டு போய் விடுவான். இனி நான் எப்படி உழைப்பது. எப்படி இந்த எட்டுப் பிள்ளைகளையும் வளர்ப்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி பட்டணக் கடைக்கு அரிசி மிளகாய் வாங்கிய கடன்பணம் கொடுப்பது?. இப்படிப் பலவாறு சிந்தித்துக் கொண்டு தெற்குப்பக்கப் பனங்கூடலில் இருந்து தனது வீடுநோக்கி உசார் அற்ற நிலையில் குழறி வல்லி குனிந்த தலையாக நடந்துகொண்டு வந்தார். வசதியாய் இருந்தபோது அள்ளி அள்ளி மக்களுக்குக் 'கறிமீன்' கொடுப்பார். அவர் ஒருபோதும் கிள்ளிக் கொடுத்ததில்லை. அதை அநுபவித்தோரில் சீவல் தொழிலாளியான மாணிக்கனும் ஒருவர். அந்த நன்றி உள்ளத்துடன் "சம்மாட்டியார் நீங்கள் ஒன்றுக்கும் யோசியாதையுங்கோ. நல்லாய் இருக்கிற காலத்தில காசைத் தாங்கோ. கெட்டுப் போனால் தரவேண்டாம். விடுங்கோ. என்றைக்கும் வாறமாதிரி வந்து நீங்கள் கள்ளைக் குடிச்சுப் போங்கோ. வராமல் விட்டு விடாதையுங்கோ" என்று சொல்லி மாணிக்கன் இரண்டுபோத்தல் கள்ளைக் கொடுக்க அதைக் குடித்தபின்தான் அவர் வீடுநோக்கி வந்து கொண்டிருந்தார்.

மதியம் கடந்து இரண்டு மணிக்கு மேல் ஆகிவிட்டது. பசியும் வயிற்றை விறாண்டியது. அடுப்படிக்குள் நுழைந்த வல்லி குந்து பலகையை இழுத்துப் போட்டார். "என்னப்பா ஏதாவது கிடக்கிறதைப் போடன்" என்று மனைவியைப் பார்த்தார். செல்லம்மாவுக்கு வறுமை துன்பம் கவலை எல்லாம் சேர்ந்து அழுகை ஒன்று பிய்த்துக்கொண்டு வந்தது. ஆனாலும் அது தொண்டைக்குள் நின்றுவிட்டது. அவள் ஒன்றும் பேசாமல் சோற்றைப்போட்டு வெந்தயக் குழம்பையும் வைத்து சொதியையும் ஊற்றி, கவிழ்த்த ஒரு ஓலைப்பெட்டிக்கு மேல் சோற்றுக் கோப்பையை வைத்துக் கணவனுக்குப் பரிமாறினாள்.

சோற்றை அள்ளி வாயினுள் போட்ட குழறிவல்லிக்கு வெந்தயக்குழம்பு வேப்பங்காயாகக் கசந்தது. "கள்ளு வாய்க்கு ஒரு கருவாட்டுத் துண்டுகூட இல்லையோடி?" என்று கேட்டுக்கொண்டே சோற்றுக் கோப்பையை அவளை நோக்கித் தள்ளிவிட்டார். திடீரென எழுந்து நின்றார். செல்லம்மாவின் முகத்திலும் கன்னத்திலும் சடபுட சடபுட என்று நாலைந்து அடி போட்டார்.

"ஐயோ ஐயோ கிடந்தது எல்லாத்தையும் தம்பிமாருக்குக் கொட்டிப்போட்டு அறுவான் துலைவான் என்னைக் கொல்லுறான். என்னைப்பெத்த ஆத்தை என்னைப் பெத்த அப்பு என்ர மூத்தண்ணை என்ர இளையண்ணை நான் இங்க காகிறன். ஏழுபிள்ளை நல்ல

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தங்காள் மாதிரி நான் கிணத்துக்க குதிக்க வேண்டியதுதான். ஐயோ.... ஐயோ.....'' என்று தலையில் அடித்து ஓலமிட்டுக் குழறி அழுதாள் செல்லம்மா.

கண்களில் துயரமும் கண்ணீரும் நிறைந்து நிற்க, துவாய்த்துண்டை ஒருமுறை உதறி மீண்டும் தோளில் போட்டுக்கொண்டு குழறிவல்லி விறுவிறு என்று நடந்து வடக்கு வேலிப்படலையால் வெளியேறினார்.

3

''நெத்தலி மொரு மொரு என்று காய்ஞ்சிட்டுது மச்சான். இந்த வருசம் பொன்காசுதான் மச்சான்'' என்று கதைத்துக்கொண்டே செல்லையாச் சம்மாட்டியின் தொழிலாளிகள் நெய்த்தலிக் கருவாட்டைக் கூட்டிக்கூட்டி மண்ணில் குவித்தனர். கடற்கரை ஓரமாக இடம் போதாமையால் தெற்குத் திசையில் எங்கெங்கெல்லாம் வெள்ளை மணல் உள்ள வெளிவெட்டை நிலம் இருந்ததோ அங்கெல்லாம் நெய்த்தலி மீன், கருவாடாகக் காய்ந்து கொண்டிருந்தது.

அந்த இடங்கள் எல்லாவற்றிலும் தொட்டம் தொட்டமாக ஆண்களும் பெண்களும் கருவாட்டைக் கூட்டிக்கூட்டிச் சிறு சிறு குவியலாகக் குவித்துக் கொண்டு இருந்தனர். வரிசையாகக் குந்தியிருந்து இரண்டு பாதங்களாலும் தாராமாதிரி அரக்கி அரக்கி கருவாட்டைக் கூட்டியவாறு முன்நோக்கி அவர்கள் நகர்ந்து சென்றனர்.

கருவாட்டுக் குவியல்களை இளந்தாரிப் பொடியன்கள் கூடைகளில் அள்ளிச்சென்று நாற்சதுரமாக நிலத்தில் விரித்திருந்த காய்ந்த தார்மடிகளில் கொட்டியபடி திரிந்தனர்.

அந்தக் கருவாட்டுக் குவியல்களைச் சூழ்ந்து வட்டமாகக் குந்தி இருந்து சில தொழிலாளிகள் இனம் இனமாகக் கருவாட்டு வகைகளைத் தெரிவுசெய்து கொண்டிருந்தனர். நெய்த்தலிக்குள் தேறை, காரல், லாகன் போன்ற பெறுமதி குறைந்த சிறிய மீன் வகைகள் கஞ்சிக்குள் பயறுமாதிரிக் கலந்திருப்பது வழக்கம். அவற்றைப் பிரித்து எடுத்தபின் தூய்மையான நெய்த்தலிக் கருவாட்டைச் சிப்பங்களில் அடைத்துத் தலைநகர் கொழும்புக்குச் சம்மாட்டிமார் அனுப்பி வைப்பர். அதன் தேவை கருதி அந்த இடத்திலேயே அன்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லையாச் சம்மாட்டியின் தொழிலாளிகள் காய்ந்த கருவாட்டைத் தெரிவுசெய்து கொண்டிருந்தனர்.

-ஏறத்தாழ 5 அடி 10 அங்குல உயரம், வையிரவரின் நாய்போல கறுத்த உருவம், வெள்ளிச் சங்கிலியில் அரைஞாண்கொடி, அதில் செருகியுள்ள சிவப்புத் துணியில் வெள்ளைப் பூப்போட்ட புதுக் கோவணம், அடர்ந்த கறுத்தத் தலைமயிர், ஒரே தடவையில் பல்லாயிரம் ரூபாய்க்கு நெய்த்தலி பிடிபட்ட மனப்பூரிப்பு, சிறிய தொப்பை வயிறு, அதற்குள் குலுங்கும் பனங்கள், அதனுடன் கலந்து உசார் கொடுக்கும் வடி சாராயம் -

இந்தக் கோலத்துடன் செல்லையாச் சம்மாட்டியார் இங்கும் அங்குமாக வேக நடை போட்டுக்கொண்டே போர்க்களத்துத் தானைத் தளபதிபோல் 'அதைச்செய் இதைச்செய்' என்று அதிகார மிடுக்குடன் தன் தொழிலாளருக்குரிய பணிகளைச் சொல்லியபடி திரிந்தார்.

"சம்மாட்டியார் உண்மையில நல்ல மனிசன். ஆனால் அவற்ர கடிதான் எங்களால தாங்க ஏலாது" என்று அவரின் தொழிலாளிகள் தமக்குள் பேசிக்கொண்டனர். ஊருக்கும் அவர் நல்லவர்தான். ஆனால் நிறைந்த மதுப்பிரியர். கூத்திக்கும் குறைவில்லை. இது இரண்டும்தான் அவரின் பலவீனம். மற்றும்படி கடிநாய்மாதிரி தொழில் நேரங்களில் சத்தமிட்டாலும் தன் தொழிலாளரின் குடும்பங்களுக்குத் துன்ப துயரம் என்று ஏதாவது வந்து விட்டால் அவர் பார்த்துப் பாராமல் பணத்தை விசுக்கி உதவி செய்து அவர்களின் கையைத் தூக்கிவிடும் குணநலம் உடையவர்.

அவருக்கு வெள்ளிதிசை நடைபெறுகிறது என்று ஊரில் பேசிக்கொண்டனர். மீனும் குறைவின்றிப் பிடிபட்டது. அதுபோல் பணமும் பொருளும் பெருகியது.

மாலை நேரம். பொழுது கருக்கலை நெருங்கியது. போர்க்களத்தில் அங்கும் இங்கும் வீழ்ந்து கிடக்கும் யானைகள் போல் நெய்த்தலிக் குவியல்கள் வெட்டைவெளி எங்கும் பரந்து காணப்பட்டன. சேனாதிபதி வெற்றிக்களிப்பில் மிதப்பது போல் செல்லையாச் சம்மாட்டியார் அங்கும் இங்குமாக உலாவித் திரிந்தார். முதியோர், பெண்கள், பொடியன்கள் போன்று பலரின் வேலைத்திறன்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானித்தபடி திரிந்தார். அவரின் வைப்பாட்டி ஒருத்தியும் அங்கே கருவாடு கூட்டும் முயற்சியில் ஈடுபட்டு இருப்பதைக் கடைக் கண்ணால் பார்த்துவிட்ட சம்மாட்டியாரின் கோவணம் ஒருமுறை பொருமி அடங்கியது.

பெரிய ஒரு கருவாட்டு வாடி, கயிற்றுவலை வாடி, பொங்கல் வாடி, ஒரு தட்டுப்பந்தல், அதன்முன்னே மீன் காயப்போடும் வப்பு, இவை எல்லாம் சேர்ந்துதான் செல்லையாச் சம்மாட்டியாரின் 'கரைவலைவாடிவளவு' அமைந்திருந்தது. கருவாட்டு வாடிக்குள்ளே தரையில் காய்ந்த பழைய தூர்மடிகளை விரித்தனர். அதன்மேல் தெரிவுசெய்த தூய்மையான நெய்த்தலிக் கருவாட்டை, அவற்றைத் தோளிற் காவிவந்த தொழிலாளிகள் கொட்டினர். தெற்கே உள்ள வெளிநிலத்தில் கருவாடு கூட்டும் தொழில் தற்போது முடிவடைந்து விட்டது. "கருவாடு கூட்டவந்த எல்லாரும் வரிசையாக வாங்கோ. சம்மாட்டியார் இப்ப உங்களுக்குக் கருவாடு தரப்போறார்" என்று மண்டாடி சங்கரன் சத்தமாகக் கூப்பிட்டான். மாதச் சம்பளத்துக்குத் தொழில் செய்வோரைத் தவிர்த்து, நாட்கூலிக்கு வேலை செய்யவென வந்த ஆண் பெண் முதியோர் பொடியன்கள் எல்லோரும் தாம் கொண்டுவந்த கடகம் குட்டான் கூடை என்பனவற்றுடன் கருவாடு வாங்கவென வரிசையாக நிலத்தில் தயாராக அமைதியுடன் இருந்தனர். அவர்களது உழைப்புக்கான ஊதியம் கருவாடாகக் கொடுக்கப்படுவது வழக்கம்.

குனிந்து நிமிர்ந்து குனிந்து நிமிர்ந்து நெய்த்தலிக் கருவாட்டைத் தனது கையால் அள்ளி அள்ளி செல்லையாச் சம்மாட்டியார் கொடுத்துக் கொண்டிருந்தார். அவர்கள் ஒவ்வொருவராக முன்வந்து அவரிடம் கருவாட்டைப் பெற்றுச் சென்றனர். தனது உறவினர் சிநேகிதிகளின் கடகத்துக்குள்ளே இரண்டு அள்ளு கருவாட்டை அவர் அதிகமாகப் போட்டார். இதை நன்றாக அவதானித்த மூதாட்டி ஒருத்தி தனக்குப் பக்கத்திலிருந்த இன்னொரு மூதாட்டிக்குத் தனது முளங்கையால் இடித்து அந்த பாரபட்சம் காட்டுகின்ற செயற்பாட்டைத் தன் சைகை மொழியால் தெரிவித்தாள். ஏனைய பலருக்கும் சம்மாட்டியாரின் மன்மத விளையாட்டுக்கள் தெரியும். ஆனால் 'நமக்கு எதற்கு ஏன் உந்த வீண்வம்பு' என்று அவர்கள் கண்டும் காணாததுபோலும் நடந்துகொள்வது வழக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சம்பவங்கள் ஒன்றும் சம்மாட்டி ஆச்சிக்குத் தெரியக்கூடாது என்று "நீ போய் இரவுச் சாப்பாட்டைப்பார். மகனுக்கும் பசிவரப்போகுது" என்று சொல்லி சம்மாட்டியார் தனது மனைவியை பின்னேரம் ஐந்து மணியளவிலேயே தங்கள் வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

சிறிது நேரம் களைப்பு ஆறும் நோக்கில் சில தொழிலாளிகள் தமது வல்லுவத்தை எடுத்து வெற்றிலை பாக்குப் போடுவதற்குத் தயாராவதை செல்லையாச் சம்மாட்டி கண்டுவிட்டார்.

"டேய் என்னடா உங்க செய்யிறியள். கெதியாய்க் கொண்டுபோய் கருவாட்டைக் கொட்டுங்கோடா" என்று சத்தமிட்டு பெரிய ஒரு சுடி சுடித்தார். சிவபெருமானுக்கு நடு முதுகில் விழுந்த அடி உலகிலுள்ள எல்லா உயிர் இனங்களுக்கும் விழுந்ததாம். அதுபோல் சம்மாட்டியார் எவருடனாவது சத்தமிட்டுக் கத்தினால் அங்கிருக்கும் எல்லாச் சனங்களும் ஒருமுறை நடுங்கி ஒடுங்குவர். அத்தகைய அதிகாரம் பணபலம் நிலஉடைமை கொண்ட சம்மாட்டியாக அப்பகுதியில் அவர் விளங்கினார். அவரின் நடவடிக்கையில் ஊர்ச்சனங்கள் வாய்மூடி மௌனம் காத்துக் கொள்வர்.

அந்தப் பிரதேசத்தில் வாழ்கின்ற சிங்காரவேலரின் மக்களுடன் யாரும் சண்டைக்குப் போக மாட்டார்கள். எவராவது அவர்களுடன் வீண்தனமாய் கொளுவினால் அவர்கள் விடமாட்டார்கள். அவர்களிடம் கல்வியும் இல்லை. செல்வமும் இல்லை. அவர்கள் ஐவரும் செய்வது கூலித்தொழில்தான். அத்தான் மச்சான் மற்றும் 'கட்டுச்சொத்தில்' வந்தவர்களையும் சேர்த்தால் அவர்களிடமும் தொழிலாளர் வல்லமை இருந்தது. அவர்களின் கையில் 'முதல்' இருக்குமாயின் ஒரு கரைவலையே நடத்தலாம். ஆனால் பணம் நிலம் என்னும் வாய்ப்புக்கள் அவர்களிடம் இல்லை. எனவே அங்கும் இங்குமாக சில சம்மாட்டிமாரின் கரைவலைகளை அவர்கள் ஐவரும் சம்பளத்துக்குக் கட்டி இழுத்தனர்.

ஐவரில் மூத்தவன் சுப்பையாவும் அவனது இரண்டு தம்பிமாரும் செல்லையாச் சம்மாட்டியின் கரைவலையில் சம்பளத்துக்குத் தொழில் செய்தனர். சுப்பையா மிகுந்த பலசாலி. குணமோ தருமர் மாதிரி. தம்பிமார் பிடிக்கும் சண்டைகளைச் சமாதானம் செய்து ஊருக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல நிலையைப் பேணிக்காப்பது அவனது கடமைகளில் ஒன்று. 'பேயன்' என்று சொல்ல இயலாது. ஆனால் சேர்ந்தவருக்கு உயிரையும் கொடுக்கும் நன்றி உள்ளம் கொண்டவன். நல்ல ஒரு விசுவாசி. போட்டி என்று யாராவது தூண்டிவிட்டால் விடவே மாட்டான். இயலுமானதைச் செய்து காட்டக்கூடிய நெஞ்சுரம் கொண்டவன் சுப்பையா.

தெரிந்தெடுத்த நெய்த்தலிக் கருவாட்டை நாற்சதுரமாகத் தரையில் விரித்துள்ள தூர்மடிக்குள் போட்டு வண்ணாரின் சீலைப் பொட்டணிபோல் பெரிய முடிச்சாகக் கட்டுவர். பொட்டணிக்குக் கீழே நீளமான பலம்கொண்ட இரண்டு தடியை வைப்பர். முன்னுக்கு இருவர் பின்னுக்கு இருவராக அந்தக் 'கருவாட்டுப் பொட்டணியை' நான்கு தொழிலாளிகள் தமது தோளில் வைத்துக் காவிச்செல்வர். அந்தச் சுமை மிக மிகப் பாரமாக இருக்கும்.

அத்தகைய நால்வரில் ஒருவராகச் சுப்பையாவும் கருவாட்டுப் பொட்டணியைக் காவுகின்ற தொழிலைச் செய்து கொண்டிருந்தான். அப்போது அந்த நால்வருக்குள்ளும் ஒருவித போட்டிப் பேச்சுத் தொடங்கியது.

"பின்னுக்கு இருவரும் முன்னுக்குத் தனியனாக ஒருவருமாக, இந்தக் கருவாட்டுப் பொட்டணியைக் காவிச்செல்ல யாராலும் முடியுமோ?" என்று குறும்புக்கார இளையதம்பி அந்தப் போட்டியைத் தொடக்கி வைத்தான்.

"சரி பார்க்கலாம்" என்று சிலர் ஒத்துக்கொண்டனர்.

கருவாட்டுப் பொட்டணியின் அடியில் வைக்கப்பட்டுள்ள நீளமான அந்த இரண்டு தடிகளின் முன்புறத்தின் குறுக்கே, அந்த இரண்டு தடிகளையும் தொடுத்து, இன்னொரு சிறிய தடியை வைத்து வரிந்து கட்டினர். பொட்டணியின் பின் பக்கம் நீண்டுள்ள இரண்டு தடிகளையும் பிடித்துத் தனித்தனியாக இருவர் தூக்கும்போது, சம நேரத்தில், முன்னுக்கு ஒருவர் மட்டும் தனியனாகத் தூக்கி, குறுக்கே வைத்துக்கட்டிய அந்தத் தடியில் தன் தோளை வைத்து, பொட்டணி ஆடாமல் அசையாமல் ஏறத்தாழ அரை மைல் தூரத்துக்கு மூவருமாகக் காவிச் செல்லவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டி தயாரானது. முன்பக்கத்தைத் தனியத் தூக்கித் தமது தோளில் வைப்பதற்கு சில தொழிலாளிகள் முயற்சி செய்தனர். ஆனால் எவராலும் அந்தப் பலம்கொண்ட முயற்சியை நிறைவேற்ற முடியவில்லை. அவர்கள் எல்லோரும் அடைந்தது தோல்விதான்.

"எடேய் சுப்பையா என்னடா நீ பாத்துக்கொண்டு நிக்கிறாய். உன்னாலும் இது முடியாதோடா" என்று கண்டிப்புடன்கூடிய உசார் ஒன்றைக் கொடுத்தார் செல்லையாச் சம்மாட்டி.

சுப்பையா தனது சாரத்தை முக்கோணமாக மடித்து இடுப்பில் கட்டினான். தலைப்பாகையைக் கழற்றி தோளில் வைத்தான். பின்னுக்குள்ள இருவரும் தூக்கும் அதே நேரத்தில் "இந்தாபிடி ஒப்பலே....." என்று சொல்லியபடி பலமாகப் பிடித்து ஒரே மூச்சில் பொட்டணியைத் தூக்கித் தன் தோளில் தடியை வைத்தான் சுப்பையா. " சபாஷ் சபாஷ் " என்று அங்கு கூடியிருந்த எல்லோரும் கைதட்டி ஆரவாரம் செய்தனர். மூவர் கொண்ட அந்தக் குழுவினர் தமது உடல்களிலிருந்து வியர்வை அருவியாய் ஒழுக ஒழுக அரைமைல் தூரத்திலுள்ள வாடியை நோக்கி கருவாட்டுப் பொட்டணியைக் காவிக்கொண்டு விரைந்து நடந்தனர். ஏனைய தொழிலாளரும் கருவாடு கூட்ட வந்தோரும் அக்காட்சியை வியப்புடன் வாயைத் திறந்தபடி பார்த்துக்கொண்டு இருந்தனர். சபாபதி என்பவன்: "எங்கட சுப்பையா அத்தான் உண்மையிலேயே ஒரு பலசாலிதான்" என்று வியப்புரை வழங்கினான். மண்டாடி சங்கரன்: "சிங்காரவேலு மாமாவின்ர மகன் என்பதை எங்கட சுப்பையா மச்சான் காட்டிப்போட்டான்" என்ற புகழுரையை எழுப்பினான். 'சுப்பையாவின் தந்தை சிங்காரவேலர் தனது இளமைக்காலத்தில் ஒருமுறை சண்டை பிடிக்கும்போது உயிர்ப் பூவரசமரம் ஒன்றை வேருடன் பிடுங்கி அதனால் எதிரிகளை அடித்து விரட்டினாராம். அத்தகைய உடற்பலம்கொண்ட பரம்பரைதான் சிங்காரவேலர் குடும்பம்' என்று அவர்களின் 'சேர்வை' வரலாறு பற்றி ஊர் மக்கள் பெருமையாகப் பேசிக்கொள்வர்.

வாரத்தில் திங்கள் தொடக்கம் சனிக்கிழமை வரை கரைவலைத்தொழில் நடைபெறும். ஞாயிறு என்பது ஓய்வு நாள். அன்று ஏதாவது மீன்செவ்வல் கண்ணில் பட்டால் ஒழிய கடலில் மக்கள் தொழில் செய்யமாட்டார்கள். ஞாயிறு அன்று அந்தக்கிழமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதும் சேர்ந்த கருவாட்டை சிப்பமாய் கட்டி கொழும்பு குருநாகல் முதலிய தென்னிலங்கை நகரங்களுக்கு அனுப்பி வைப்பர். அந்த ஞாயிறும் செல்லையாச் சம்மாட்டியின் வாடியில் தடல்புடலாகக் கருவாட்டுச் சிப்பம் கட்டுகின்ற தொழில் நடைபெற்றுக்கொண்டு இருந்தது.

கருவாட்டுச்சிப்பம் கட்டும் முறையானது: உரல் வடிவமுள்ள பனை ஓலையால் இழைக்கப்பட்ட உமலின் வாய்ப் பக்கத்தைத் திறந்து அதன் அடிப்பக்கத்தை நிலத்தில் நிறுத்தி வைப்பர். அதற்குள் ஒருவர் நெய்த்தலிக் கருவாட்டை அள்ளி அள்ளிப் போடுவர். இன்னொருவர் வாடியின் உட்பக்கக் கூரையின் கம்பை தனது இரண்டு கைகளாலும் பிடித்தபடி அந்த உமலுக்குள் பாதம் பதித்து நிற்பார். கருவாட்டை அள்ளி உமலுக்குள் போடப் போட, உமலுக்குள் நிற்பவர் தனது பாதத்தால் அமுக்கி அமுக்கி கருவாட்டை மிதிப்பார். இத்தகைய உத்தி முறையில்தான் அதிக நிறைகொண்ட கருவாட்டை உமலுக்குள் போட முடியும். ஈற்றில் சிப்பங்களைக் கயிற்றால் வரிந்துகட்டி விற்பனைக்கு அனுப்புவர்.

தொழிலாளிகள் சிப்பங்களைக் கட்டிக் கட்டி நிலத்தில் உருட்டி விட்டனர். வாடிக்கணக்கன் வேலுப்பிள்ளை குனிந்து குனிந்து பச்சை நிற மையினால் சிப்பங்களில் முகவரி குறித்துக்கொண்டு திரிந்தான். கொழும்புக்கணக்கன் கணபதி எடை எண்ணிக்கைகளை இரண்டு குறிப்பேடுகளில் பதிந்துகொண்டு இருந்தான். வழக்கமாக ஒரே லொறியில்தான் கொழும்பு குருநாகல் ஆகிய இரு நகரங்களுக்கும் கருவாடு மீன்பெட்டிகள் என்பன அனுப்பி வைக்கப்படும். இந்தத்தடவை அதிக மீன் பிடிபட்டதால் கொழும்புக்குத் தனியாக ஒரு லொறியிலும் குருநாகலுக்கு இன்னொரு லொறியிலும் சிப்பங்கள் ஏற்றப்பட்டன. அதனால்தான் தனித்தனிப் பதிவேடுகளில் கணக்கன் கணபதி விபரங்களைப் பதிந்துகொண்டு இருந்தான்.

கருவாட்டுச் சிப்பம் கட்டுகின்ற நாள். அத்துடன் நிறைய மீன்பட்ட மகிழ்ச்சி. எனவே பனங்கள் தருவித்து தன் தொழிலாளர் எல்லோருக்கும் ஒவ்வொரு போத்தல் பனங்கள் சம்மாட்டியார் அன்பளிப்புச் செய்தார். அந்த உசாரில் வேலையும் சுறுசுறுப்பாய் நடைபெற்றது. தொழில் அலுப்புத் தெரியாதவாறு பபூன் சேகரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி பகிடிக் கதை சொல்லிக் கொண்டிருந்தான். பொழுது படும் நேரத்தில் சிப்பம் கட்டும் வேலை எல்லாம் முடிவுற்றது. வாடகைக்கு அமர்த்தப்பட்ட பஸ்ரியான் சில்வாவின் லொறிகளில் அரிக்கன் லாம்பு வெளிச்சத்தில் சிப்பங்கள் ஏற்றப்பட்டன. இரவு பத்து மணியளவில் சிப்பங்களால் நிரப்பப்பட்ட லொறி ஒன்று கொழும்புக்கும் இன்னொரு லொறி குருநாகலுக்குமாக உறுமிக்கொண்டு புறப்பட்டன. லொறிச் சாரதிகளின் வயிற்றுக்குள் பனங்கள்ளும் வாடிச்சோறும் கலந்திருந்து உசாரைக் கொடுத்தன.

4

இன்று நேற்றல்ல, மூன்றாவது பிள்ளை பிறந்த காலந்தொட்டே குழறி வல்லிக்கும் மனைவி செல்லம்மாவுக்கும் ஏதாவது காரணங்களால் அடிக்கடி சண்டை வருவதுண்டு. சிலவேளைகளில் அவர் கோபத்துடன் வீட்டைவிட்டு வெளிக்கிட்டுப் போய்விடுவார். "ராத்திரி வாடியில் படுத்துக் கிடந்தனான் செல்லம்" என்று சொல்லிக்கொண்டே அடுத்தநாள் காலையில் வீட்டுக்கு வருவார். அவர் படுத்த சின்னவீடு அவருக்குத்தான் தெரியும். சில வேளைகளில் கொழும்புக்குப் போறேன் என்று சொல்லிப் புறப்பட்டுச் சென்று பட்டணப்பக்கம் எங்காவது தங்கி நின்று தன் கோபம் ஆறியபின் மீண்டும் வீட்டுக்கு வருவார்.

இந்தத் தடவையும் மனைவியுடன் கோபித்துக்கொண்டு சென்றவர், மறு நாளாகியும் வீடு வந்து சேரவில்லை. விசாரித்து அறிந்ததில் தன் கரைவலை வாடிப்பக்கமும் அவர் போகவில்லை. பட்டண நகரப் பக்கம் எங்காவது சென்றிருக்கலாம் என்றால் பயண உடுப்புக்கள் ஒன்றும் வீட்டிலிருந்து அவர் எடுத்துச் செல்லவில்லை. முதல்நாள் சண்டை பிடித்து வெளியேறிய அதே நேரம் கடந்து, மறுநாள் பின்நேரம் ஆறு மணியாகியும் விட்டது. மனைவி செல்லம்மா 'ஊருக்குள்ளும் கடற்கரைப் பக்கமும் யாரையாவது விசாரித்துப் பார்ப்பம்' என்று யோசித்தவாறு கிழிந்து அழுக்கேறிய தன் புடவையை இழுத்து இடுப்பில் செருகியபடி யோசனையும் நடையுமாய் ஊரின் மத்தியில் செல்லும் ஒழுங்கை வழியால் விரைந்து சென்று கொண்டிருந்தாள். கணவனின் நெருங்கிய உறவினரின் வீடுகள், கள்ளுக்கொட்டில்கள், கரைவலை வாடிகள் என்று பல இடங்களிலும் தேடிப்பார்த்து அலைந்ததின் 'சிலவேளை உவர் தனது உத்தியோகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பிமாரிடம் பட்டணம் போய்விட்டாராக்கும்' என்று மனதுக்குள் நினைத்தபடி கவலையான முகத்துடன் தன் வீடு திரும்பினாள். மத்தியானச் சமையலில் எஞ்சி இருந்ததில் கவளச் சோறு பிரட்டி பிள்ளைகளுக்குக் கொடுத்தாள். தானும் அடிப்பானைத் தண்ணியை வாயில் ஊற்றிக்கொண்டு "பிள்ளையாரே உந்த மனிசன் எங்க போச்சுதோ நான் அறியேன். நீதான் அவரைக் காப்பாற்றவேணும்" என்று நெடுமூச்சு விட்டபடி, இரவுப் படுக்கைக்குத் தலை சாய்த்தாள்.

மூன்றாம் நாளாகியும் குழறிவல்லி வீடு திரும்பவில்லை. அன்று காலை வலைவாடிக்கு அருகால் பள்ளி சென்ற பிள்ளைகள் "ஏதோ செத்த மணம்போல நாறுது" என்று தமக்குள் பேசிக்கொண்டனர். அக்கம்பக்கம் போய்வரும் சிலருக்கும் ஆடு மாடு செத்து நாள் கடந்தமாதிரி ஒருவித துர்நாற்றம் வீசத்தொடங்கியது. தெற்கே அமைந்துள்ள வாடிப்பக்கம் ஏதோ ஒரு கெட்ட மணம் அடிக்குதாம் என்பதை குழறிவல்லியின் தொழிலாளரும் கேள்வியுற்றனர்.

"உதுக்குள்ள ஏதோ ஆடுமாடு செத்துக்கிடக்குதுபோல" என்று கதைத்தபடி அண்ணாச்சாமியும் சிலோன் சிவகுருவும் அந்த வாடிப்படலையைத் திறந்தனர். படலை உட்பக்கமாய் கட்டப்பட்டிருந்தது. வலை பின்னும் வில்லுக்கத்தியால் அண்ணாச்சாமி படலையின் ஆடுகாலை அறுத்து வாசல் படலையைத் தூக்கி எறியவும், "ஐயோடா அத்தான் எங்கட சம்மட்டியார் தூங்குறாரடா" என்று கத்திக்கொண்டே சிவகுரு ஓடிப்போய் தொங்கிக்கொண்டிருந்த குழறிவல்லியின் இடுப்புக்குக் கீழே இரு கைகளாலும் கட்டிப்பிடித்து அவரின் உடலை உயர்த்திப் பிடித்தான். அண்ணாச்சாமி குரங்குபோல் உட்கூரைக் கம்புகளைப்பிடித்து கிடுகிடு என்று முகடுவரை விரைவாக ஏறினான். வில்லுக்கத்தியால் குழறிவல்லி தொங்கும் துவாயை அறுத்தான். இருவருமாக மிகுந்த இடர்பட்டு பனைமரம்போன்ற வல்லியின் செத்த உடலை கிடுகுத் துண்டின்மேல் நடு வாடிக்குள் கிடத்தினர்.

அதைத்தொடர்ந்து ஓலமும் ஒப்பாரியும் ஊரெல்லாம் கேட்கத் தொடங்கின. இறப்புச்செய்தி அறிந்து ஓடி வரும் பெண்கள், நடையின்மீதே ஒப்பாரி வைத்து மார்பில் அடித்து அடித்து அழுதபடி குழறிவல்லியின் வளவு நோக்கி வந்து கொண்டிருந்தனர். அவரின் உற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்கள் சிலர் மண்ணில் உருண்டு கதறி அழுதனர். ஒருபோதும் அழாத கல் நெஞ்சம் கொண்டவரே அன்று வாய்விட்டு விம்மி விம்மி அழுதனர். கந்தல் துணியும் கரிபடிந்த முகமும் சீவாத தலையும் களிமண் தரையில் படுத்த உடல்களில் வெண்சாம்பலுமாக, ''ஐயா ஐயா'' என்று அவரின் பிள்ளைகள் மூக்குநீர் வழிய கதறி அழுதனர். மனைவி செல்லம்மா கூக்குரல் எழுப்புவதும் அறிவு கெட்ட நிலையில் கீழே விழுவதும் சூழ்ந்திருப்போர் அவளின் முகத்தில் தண்ணீர் தெளிப்பதுவும், வீட்டின் ஒரு மூலைக்குள் அவளைக் கிடத்தி வேப்பிலை அடிப்பதுவுமாக, எங்கு பார்த்தாலும் ஒரே அல்லோல கல்லோலமாகக் காணப்பட்டது. தாழமுடியாத சோகப் படிமங்கள் எல்லோரின் முகங்களிலும் தொற்றிக்கொண்டன. பலர் ஆளுக்காள் ஆறுதல் சொல்ல முடியாமல் மௌன வாசிப்பில் தலையைத் தொங்கப்போட்டபடி குரங்குகள்போல் குந்தி இருந்தனர். குழறிவல்லியின் தாயார் நினைவிழந்து அறிவுகெட்டு நீண்டநேரமாய் மூச்சின்றிக் கிடந்தார். அவளை மருத்துவ மனைக்குச் சிலர் கொண்டோடினர்.

மிகுந்த சோகத்துடன் வல்லியின் மூத்த அண்ணனும் பெண்கொடுத்த மச்சானும் இருவருமாக ஓடியாடி செத்தவீட்டு ஒழுங்குகளைக் கவனித்தபடி திரிந்தனர். வல்லியின் ஒரு தம்பி மலைநாட்டிலும் மற்றைய இரண்டு தம்பிமார் கொழும்பிலும் அரசப்பணி செய்தனர். அவர்களுக்குத் தந்தி அனுப்புவதற்கென தொழிலாளி ஒருவரை அனுப்பி வைத்தனர். மூன்று மைல்களுக்கு அப்பால் உள்ள தாளையடி என்ற ஊரில்தான் தபாற் கந்தோர் இருந்தது. மிதி வண்டிலும் ஊரில் அரிது. எனவே தபாற்கந்தோர் நோக்கி ஓட்டமும் நடையுமாய் அத்தொழிலாளி ஓடினான்.

''ஐயோ எனக்குத் தெரியாமல் போச்சுது. நான் உதால ஆடுகளைச் சாய்ச்சுவரயுக்க ஏதோ ஒரு அலறல் சத்தம் கேட்டுது. ஆடுகள்தான் கத்துதுகள் எண்டு நான் நினைச்சன். நேரமும் கருக்கலாய் போச்சுது. என்ர ஆடுகளை படப்புக்க விட்டு, அதுகளுக்கு குழை போட்டு நானும் வீடு போய்ச்சேர நேரம் இரவு எட்டுமணியாப் போச்சு'' என்று தன் மனத்துயரை வடிவேலு என்பவன் தெரிவித்தான். அவன் குழறிவல்லி வளவிலிருந்து இரண்டு காணி வளவு தள்ளி வாழுகின்ற ஓர் அயலவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது வளவின் முற்றத்தில் போடப்பட்ட தட்டிப் பந்தலுக்குள் நெடுவாழைமரமென நிமிர்ந்த நிலையில் குழறிவல்லிச் சம்மாட்டி கண் மூடிக்கிடந்தார். அவரைச்சூழ்ந்து எங்கும் ஒப்பாரிக் குரல்கள்தான் ஒலித்துக் கொண்டிருந்தன.

நடந்த சம்பவம் இதுதான்: குழறிவல்லியின் வளவின் வடக்கு வேலியிலிருந்து இருபது மீற்றர் தூரத்தில் அவரின் வலைவாடி ஒன்று இருந்தது. அதற்குள் மாரி காலத்தில் தனது கரைவலை சாளைவலைகளை மழைபடாமல் வைத்து, யாரும் உட்புகாதவாறு படலையை இறுக்கிக் கட்டிவிடுவார். வாசலில் மண்ணைப் பரத்தி அதில் தன் பாத அடையாளத்தைப் பதித்து விடுவார். யாராவது களவுக்கு அல்லது வேறு ஏதாவது தேவைக்கென வாடிக்குள் புகுந்திருந்தால், மண்ணிலுள்ள பாதப்பதிவைப் பார்த்து, வந்து சென்றவர் யார்? என்பதை அடையாளம் கண்டுகொள்ள முடியும். இவ்வழக்கமானது பாதுகாப்பு முறையின் ஒரு மரபாக மணல் நிலமுள்ள ஊர்களில் இன்றும் நடைமுறையில் இருப்பதைக் கண்டு கொள்ளலாம்.

கோடை என்பதால் அந்த வலைவாடி வெறுமனே இருந்தது. மனைவி செல்லம்மாவை அடித்தபின் கோபத்துடன் வெளியேறிய குழறிவல்லி அதிகதூரம் செல்லவில்லை. விறுக்கென்று அந்த வாடிக்குள் நுழைந்தார். யாருக்கும் தெரியாமல் உட்பக்கமாக படலையை இழுத்துச் சாத்திக் கட்டினார். மண்ணில் குந்தி இருந்து பலவாறு நீண்ட நேரமாக யோசித்தார். செய்த நன்மை தீமைகள் பாவ புண்ணியங்கள் எல்லாம் நிழற்படம்போல் நினைவுத் திரையில் ஓடிச்சென்றன. தான் வளர்த்துப் படிப்பித்த தம்பிமார் மூவரும் கண்களில் அடிக்கடி வந்து போயினர். மனைவி செல்லம்மாவும் தமது எட்டுப் பிள்ளைகளும் அவரின் அறிவை நிறைத்து நின்றன. கண்கள் இரண்டும் குளமாகி கண்ணீர் கொட்டத் தொடங்கின. அவர் புகைத்தபின் மண்ணில் பதித்திருந்த குறைச்சுருட்டுத் துண்டுகளை அந்தக் கண்ணீர்த்துளிகள் நனைத்தன. அவரின் யோசனைகள் பலவாறு தொடர் வண்டிபோல நகர்ந்தன.

பிற்பகல் இரண்டு மணியளவில் வாடிக்குள் புகுந்தவர் பின்னேரம் ஆறு மணியளவில் ஒரு முடிவுக்கு வந்தவராக தனது துவாய்த்துண்டை வாடியின் முகட்டு வளையில் கட்டினார். கண்டல் பட்டை இடிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரல் ஒன்றைக் கண்டார். அதை மிக இலகுவாக இடதுகையால் தூக்கி வந்து நிலத்தில் கவிழ்த்து வைத்தார். துவாயின் மறு நுனியை வளையமாக்கி முடிச்சுப்போட்டு அதை தன் கழுத்தில் கொளுவி மெதுவாக இறுக்கினார். தனது பழைய சாரத்தை இறுக்கமாக உடுத்து அது அவிழாமல் கோவணம்போல் கொடுக்குக் கட்டினார். கடன் தொல்லைகளில் இருந்தும் ஏனைய உலகத் துன்பங்களில் இருந்தும் இன்னும் சில நிமிடங்களில், தான் விடைப்பெறப்போவதை நினைக்கும் போது ஒருவகையில் ஆறுதலடைந்தார். உரலின்மேல் ஏறி நின்றார். துவாய் வளையத்தை கழுத்தில் இறுக்கினார். இரண்டு கால்களாலும் உரலை உதைத்து சரித்து விழுத்தினார். மூச்சுக்குழல் நெரிய நெரிய, விழிகள் பிதுங்கப் பிதுங்க, தனது இறுதிப் பயணத்தின்போது குழறிவல்லிச் சம்மாட்டி அலறினார்.

அப்போதுதான் அயல்வீட்டு வடிவேலுவின் ஆடுகள் மேய்ச்சல் முடிந்து வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தன. அந்த ஆட்டுக்கூட்டம் வாடியைக் கடந்து செல்லும்போது சம்மாட்டியின் அலறல் சத்தமும் ஓய்ந்து விட்டது. அவரின் அரிய ஆவியும் காற்றுடன் கலந்து விட்டது.

விதானை காவல்துறை நீதிபதி மரணவிசாரணை அதிகாரி சவம் கிழிக்கும் பறையன் எல்லோரும் வந்து சேர்ந்தனர். உடலைக் கீறிக்கிழித்து விசாரணை செய்து தமது கடமைகளை அவர்கள் நிறைவேற்றினர். 'தற்கொலை' என்று மரணச்சான்றிதழ் கொடுத்துவிட்டுச் சென்றனர். இத்தகைய சிற்றூர்களில் இறந்த உடல்களைப் பாதுகாத்து வைப்பதற்கு ஏற்ற வசதியில்லை. உள் உறுப்புக்கள் நீக்கப்பட்ட குழறிவல்லியின் உடலை சவப்பெட்டியில் வைத்து பனிக்கட்டி போட்டு பாதுகாப்பாக வீட்டிலேயே வைத்திருந்தனர். ஏற்கெனவே மூன்று நாட்களுடன் இன்று நான்காவது நாளாகியும் விட்டது. சவம் ஊதிப்பெருக்கத் தொடங்கியது. காலையும் மதியமும் 'பளை' புகையிரத நிலையத்துக்கு ஆட்கள் போவதும் வருவதுமாக அவரின் தம்பிமாரை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். ஐந்தாம் நாளில் இரண்டு தம்பிமாரும், ஆறாம் நாள் மலையகத்தில் பணி செய்யும் மூன்றாவது தம்பியும் வந்து சேர்ந்தனர். அவர்கள் கதறி அழுவதைப் பார்த்து அந்த ஊரே திரண்டு அழுதது. சவக்கிரிகை நிறைவுற்றது. இரவு ஏழுமணிபோல் சவம் சுடலைநோக்கி எடுத்துச் செல்லப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு பேர் காவவேண்டிய பாடையை அன்று ஆறுபேர் தோள்கொடுத்துச் சுமந்து சென்றனர். பனிக்கட்டியில் ஊறிய உடல் ஊதிப் பொருமி கனதியாய் இருந்தது. சவத்திலிருந்து ஊனம் வடிந்துகொண்டிருந்தது. பாடையைத் தூக்குவதற்கு சிலர் மனமின்றிப் பின் நின்றனர். உற்ற நண்பர் சிலர் தமது உடலெங்கும் ஊனம் வழிந்தோட எதுவித வெறுப்புமின்றி சவத்தைக் காவிச் சென்றனர். சவத்தின் மணத்தை சகிக்க முடியாத சிலர் பாடையிலிருந்து சிறிய தூரம் பின் தள்ளியே ஊர்வலத்தில் சென்றனர்.

இரவு எட்டு மணியளவில், அந்த ஊரில் மிகவும் பிரபலமாய் வாழ்ந்துவந்த குழறிவல்லிச் சம்மாட்டியின் உடலை, விறகுமேடையின் தீச்சுவாலைகள் மிகவும் விரைவாகத் தின்று கொண்டிருந்தன.

5

செல்லையாச் சம்மாட்டிக்கு வெள்ளி திசை ஒளிவிட்டுக் கொடுத்தது. தினமும் குறைவின்றி மீன் பிடி நடைபெற்றது. ஞாயிறுகளில் கருவாட்டு லொறிகள் கொழும்புக்கும் குருநாகலுக்கும் ஓடிக்கொண்டிருந்தன. இடைப்பட்ட நாட்களில் ஐஸ்மீன்பெட்டிகள் மீன் லொறியில் அனுப்பி வைக்கப்பட்டன.

நட்டமடைந்த சம்மாட்டிமாரின் தொழிலாளர்கள் ஒன்று இரண்டாக அவரிடம் வந்து சேர்ந்தவண்ணம் இருந்தனர்.

அவரின் வலையில் சுக்கான் பிடித்து வலை வளைப்பவர் முருகேசு மண்டாடி என்பவர். அடுத்த நிலையில் உள்ளவர் முருகுப்பிள்ளை மண்டாடி. இருவரும் முதிய அனுபவம்மிக்க நல்ல தொழிலாளிகள். சிறந்த வழிகாட்டிகள். அவர்களிடம்தான் செல்லையாச் சம்மாட்டியார் ஆலோசனை கேட்பார். மண்டாடி என்பவர் சம்மாட்டிக்கு அடுத்த நிலையில் உள்ளவர். தலைமைதாங்கி தொழிலை நடத்துபவர். CAPTAIN OF THE TEAM.

கரைவலைத் தொழில் ஒன்றுக்கு தோராயமாக இருபது தொழிலாளர் அளவில் தேவை. தற்போது செல்லையாச் சம்மாட்டியின் தொழிலாளர் தொகை மேலும் அதிகரித்தது.

"மெய்யே முருகுப்பிள்ளை அண்ணை, ஆட்கள் தொகை வரவரக் கூடுது. இன்னும் ஒரு கரைவலை தொடங்கலாமெண்டு நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசிக்கிறன். நீங்கள் என்ன அபிப்பிராயம் சொல்லுறியள்?'' என்று கிழிந்த தூர்மடியைப் பின்னிக்கொண்டிருந்த முருகுப்பிள்ளைக்கு அருகில் நின்றவாறு வினவினார் சம்மாட்டி. முருகேசு மண்டாடி என்பவர் செல்லையாச் சம்மாட்டிக்கு மாமன் முறையானவர். அந்த மரியாதைக்காக அவருடன் சம்மாட்டியார் முகம் ஒட்டிக் கதைப்பதில்லை. எனவே முருகேசு மாமனுக்கும் கேட்கும்படியாக, முருகுப்பிள்ளைக்கு அருகில் நின்று செல்லையாச் சம்மாட்டியார் ஆலோசனை கேட்டார்.

"ஓமோம். அது நல்லதுதான். வருமானமும் கூடுதலாய் வரும். ஒண்டுக்கும் யோசியாமல் நாங்கள் இன்னொரு கரைவலையைப் போடுவம்" என்று ஒரே நேரத்தில் முருகுப்பிள்ளையும் முருகேசுவும் வாய் மலர்ந்தருளினர்.

மறுநாள் பச்சிலைப்பள்ளிப் பிரதேச ஆட்சிக் கந்தோருக்கு செல்லையாச் சம்மாட்டி சென்றார். கரைவலைக்குரிய இன்னொரு கரைப்பகுதி நிலத்துக்குரிய அனுமதி பெற்றுக்கொண்டு வந்தார். அந்த இடத்தில் புதிய வாடி ஒன்றும் அமைக்கப்பட்டது. அன்றிலிருந்து நாற்பதுக்கும் அதிகமான தொழிலாளருடன், இரண்டு கரைவலைகளை செல்லையாச் சம்மாட்டி இயக்கி வந்தார்.

அவரது இரண்டு கரைவலை வாடிக்கும் இடைப்பட்ட தூரம் ஏறத்தாழ அரை மைல் இருக்கும். பகல் நேரத்தில் இரண்டு கரைவலைகளையும் தொழிலாளர் இழுத்துக்கொண்டு இருக்கும்போது வெள்ளி அரைஞாண்கொடியில் செருகிய புதுத்துணிக் கோவணத்துடன் கடற்கரை ஓரமாக தனது இரண்டு கரைவலைக்கும் சம்மாட்டியார் நடந்து திரிவார். கிழக்கேயுள்ள வலையில் பிடிபட்ட மீன் ஒழுங்குகளைச் செய்தபின் ஒரு போத்தல் 'கள்' குடிப்பார். அதன்பின் மேற்கேயுள்ள வலையில் கிடைத்த மீன் பயன்பாட்டைக் கவனிப்பதற்குச் செல்வார். இவ்வாறாக மாதாந்தம் அவரின் வருமானம் அதிகரிக்க அதிகரிக்க அவரும் மகிழ்ச்சிக் கடலில் மிதந்தார்.

செல்லையாச் சம்மாட்டியின் இரண்டு வளவுக்குள்ளும் கல் வீடுகள் கட்டப்பட்டு இருந்தன. கடற்கரைக்குப் பக்கத்தில் ஒரு வளவும் அதிலிருந்து இருநூறு மீற்றர் ஊரின் உட்புறமாக தெற்குத் திசையில் இன்னொரு வளவும் அமைந்திருந்தன. தெற்கே உள்ள வளவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுவளவு என்று சொல்வர். பட்டணத்து மேசன்மாரை வரவழைத்து கடற்கரை வளவுக்குள் அழகான வீடுகள் நான்கு கட்டியிருந்தார். காட்டு வளவுக்குள் ஒரு வீடும் இன்னொரு சிறு கொட்டிலும் சில பனை தென்னைகளும் காணப்பட்டன. அந்தக் கொட்டிலுக்குள் காலை மாலைகளில் சீவல்கார மாணிக்கன் போத்தல்களில் 'கள்' வைத்திருப்பார். சம்மாட்டியார் அடிக்கடி அங்கு சென்று ஒவ்வொரு போத்தலாகக் குடிப்பார். அந்த உசாரில் வந்து தன் தொழிலாளருடன் சத்தமிட்டுத் திரிவார்.

இவ்வாறான உயர்ச்சியிலும் எவராலும் சகிக்க முடியாத குறைபாடு ஒன்று சம்மாட்டியாரின் குடும்பத்தில் நிகழ்ந்து கொண்டிருந்தது. அவருக்குப் பிறக்கும் குழந்தைகள் அவர்களின் பதினாறு வயதின் முன்பின்னாக, ஏதோ ஒரு நோயினால் கவரப்பட்டு மரணத்தைத் தழுவினர். சில வருடங்களுக்கு முன்பும் நன்கு ஓடியாடி விளையாடித் திரிந்த அவரின் ஒன்பது வயது ஆண்பிள்ளை இளம்பிள்ளை வாத நோயினால் தாக்கப்பட்டு ஒரு காலும் கையும் செயலற்று சாய்வுக்கதிரையில் அவன் வாழ்நாள் கழிந்து கொண்டிருந்தது. இப்போது சம்மாட்டிக்கென்று இருப்பது அந்த ஒரேயொரு மகன்தான். இவ்வளவு வசதியுள்ள மனிதனுக்கு குழந்தை அமைவில் மட்டும் ஏன் கடவுள் கருணை காட்டவில்லை என்பது மிகுந்த மனவேதனைதான்..!

செல்லையாச் சம்மாட்டியார் இருபது வயது இளைஞனாக இருக்கும்போதே பணக்காரச் சண்டியனாக அப்பகுதியில் ஓர் அதிகாரிபோல் செயற்பட்டு வந்தார். அவரைக் கண்டதும் சாதி குறைந்தோர் வழிவிட்டு ஒதுங்கிச் செல்வர். சாதாரண தொழிலாளர் தமது தோளில் இருக்கும் சால்வையை எடுத்து அவரை விலத்தி நடப்பர். அவர் ஊருக்குள் செய்யும் கூத்தி விளையாட்டுகள் பற்றித் தெரிந்தாலும் தெரியாதமாதிரி அவற்றை மறைத்து பயத்துடன் மக்கள் வாழ்ந்து வந்தனர்.

அவர் இந்த ஊரிலிருந்து கிழக்கே, நான்கு ஊருக்கு அப்பாலுள்ள ஊரில்தான் பிறந்தவர். தன் தந்தையை சிறிய வயதில் தான் பிறந்த ஊரிலேயே இழந்தவர். அதன்பின் தாயாருடனும் தமது சொத்துக்களுடனும் வந்து இவ்வூரில் குடியேறி, கரைவலையைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கினார். இந்த ஊரிலுள்ள நில உடைமையாளரின் மகளைத் திருமணம் முடித்து பேரும் புகழுடனும் வாழ்ந்து வருகின்றார்.

இவ்வூரில் யாருக்கும் தலைவணங்காத சிவலிங்கன் என்ற இளைஞன் தன் மனைவியுடன் வாழ்ந்து வந்தான். ஒரு பெண்விடயமாக இவனுக்கும் செல்லையாச் சம்மாட்டிக்கும் நாளும் பொழுதும் பகைமை உணர்வு வளர்ந்து வந்தது. ஒருநாள் அது எல்லைமீறி வெடித்தபோது சிவலிங்கன் சம்மாட்டியை அவதூறாகப் பேசிவிட்டான்.

"எடுபட்டு வந்தவனே, உமக்கு நான் பிறந்த இந்த மண்ணில் ஒரு நாட்டாண்மையோ? சண்டித்தனமோ? மிச்சம் கவனமாய் இரும். இல்லையேல் உன்ர பல்லை உடைத்து உன்ர கையில் தருவேன்". என்பதுபோன்ற சுடுவார்த்தைகளில் தூஷணம் கலந்து பேசினான். இது சம்மாட்டிக்கும் அவரின் நெருங்கிய அன்புக்குரிய கூலிகள் சிலருக்கும் சகிக்க முடியாத கோபமாய் மாறியது. ஒரு நாள் மூக்கு முட்டிய மது வெறியில் சிவலிங்கன் தள்ளாடியவாறு சம்மாட்டியின் வாடிக்கு நேரே கடற்கரையால் சென்று கொண்டிருந்தான். அப்போது செல்லையாச் சம்மாட்டியும் அவரின் அடியாட்களும் ஓடிப்போய் அவனை இழுத்துவந்தனர். அவனை அடி அடியென்று அடித்து மிதி மிதியென்று மிதித்தனர். உடுத்திருந்த சாரம் கழன்று உடல் முழுவதும் மண் ஒட்டியபடி சிவலிங்கன் மூச்சடங்கிய நிலையில் கோவணத்துடன் கிடந்தான்.

"டேய் இவன் உண்மையில் ஒரு மனிசனில்லை. இவன் ஒரு மாடு. இவனைக் கொண்டுபோய் மாட்டுத்தொழுவத்தில் கட்டிப்போடுங்கோடா" என்று சிங்கம்போல் நின்று உச்சக் கோபத்தில் சம்மாட்டியார் சத்தமிட்டார். மயக்கம் தெளிந்த சிவலிங்கனின் வாயும் குறைந்தபாடில்லை. அவன் தன் வாய்க்கு வந்தபடி தூஷண வார்த்தைகளால் கொட்டித் தீர்த்தான். அவன் சத்திக்கொண்டு கிடக்கும்போது சண்டியன்கள் இருவர் அவனது கால்கள் இரண்டிலும் பற்றிப்பிடித்து, மண்ணில் தரதரவென்று வேகமாய் இழுத்துச்சென்று மாட்டுக்கொட்டில் கப்புடன் கை கால்களை ஒன்று சேர்த்து இறுக்கமாக வரிந்து கட்டினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எடியேய் இந்த மாட்டுக்கு கொஞ்சம் வைக்கோல் போடடி" என்று தன் மனைவிக்கு செல்லையாச் சம்மாட்டி உறுக்கிச் சொன்னார்.

"சண்டித்தனம் காட்டுற உனக்கு இதுதான் தீன். இந்தா இதை நல்லாத் தின்" என்று கோபத்துடன் சொல்லிக்கொண்டே சம்மாட்டி ஆச்சி சிறிது வைக்கோல் கொண்டுவந்து சிவலிங்கனின் முகத்திற்கு நேரே போட்டாள்.

புதினம் பார்த்துக்கொண்டு நின்ற தனது மகனைக் கண்டார் சம்மாட்டி "எடேய் நீ ஓடிப்போய் ஒரு வாளி தண்ணி கொண்டுவந்து இந்த மாட்டுக்கு வையடா" என்று சத்தமிட்டார். அவரின் எட்டுவயது மகன் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்துக் கொண்டுவந்து மாட்டுக்குத் தவிடு கரைத்து வைக்கும் வாளிக்குள் தண்ணீரை ஊற்றினான். "ம் குடி. இந்தா நீ நல்லாக்குடி" என்று சொல்லியவாறு சிரித்தபடி சிறிது விலகி நின்று சிவலிங்கனை சம்மாட்டியின் மகன் வேடிக்கை பார்த்தான்.

"எடேய் சிவலிங்கா நீ வைக்கோலைத் திண்டு நல்லாய் தண்ணியையும் குடியடா. உதுதாண்டா உனக்குத் தீன். உப்புடியே கிடந்து நீ சாவடா. இனி நீ சிவலிங்கம் இல்லையடா. நீ ஒரு சவலிங்கமடா. பாப்பமடா பாப்பம். என்னை மீறி ஆர் வந்து உன்ரை கட்டுக்களை இங்க அவிழ்க்கிறாங்கள் என்று". மது வெறியில் சிவந்த கண்ணுடன் தன் வலது கையின் ஆட்காட்டி விரலை ஆட்டியவாறு உரத்துப் பேசிக்கொண்டே தனது இடது காலால் சிவலிங்கனுக்கு ஒரு உதை உதைத்தார் சம்மாட்டி. அதன்பின் மனைவி மகனுடன் தன் வீட்டுக்குள் நுழைந்தார். அவரால் நியமிக்கப்பட்ட இரு சண்டியன்கள் இரண்டு பொல்லுக் கொட்டனுடன் மாட்டுக் கொட்டிலுக்குப் பக்கத்தில் நின்று எதிரிகள் யாரும் நெருங்காதவாறு காவல் காத்தனர். அவர்களுக்கு 'கள்' வாங்கிவருவதற்கு ஒரு பொடியன் ஓடிச்சென்றான்.

சிங்காரவேலரும் நாலு ஊர் கடந்து, இவ்வூரில் வந்து கலியாணம் முடித்தவர்தான். அவர் ஒரு கூலித் தொழிலாளி. ஆனால் நல்ல பலசாலி. சண்டியன். யாரும் அவருடன் சண்டைக்கு முன்னிற்கப் பயப்படுவர். "பிற ஊரிலிருந்து வந்த இவனுக்கு இவ்வளவு சண்டித்தனமோ? இவ்வளவு திமிரோ? என்று இரண்டு மந்திரவாதிகள் ஒன்றுசேர்ந்து சூனியம் செய்து சிங்காரவேலரை ஐம்பத்தைந்து வயதுமட்டில் சாக்காட்டிப் போட்டாங்கள்" என்று ஊர் மக்கள் பரவலாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிக்கொண்டனர். ஆனால் தன்னைப்போல் பலம்கொண்ட ஐந்து ஆண்பிள்ளைகளைப் பெற்றுவிட்டுத்தான் சிங்காரவேலர் இறந்தார்.

அவர் மனைவி பொன்னாச்சி என்பவள் வாய் திறந்து சத்தம் போட்டால் ஒரு மைலுக்கு அப்பாலும் குரல் கேட்கும். அப்பெண்ணுக்கும் ஊர் மக்கள் மிகுந்த பயம்தான். தன் கணவன் இறந்தாலும் யாரும் தம்மை நெருங்காதவாறு, பொன்னாச்சியும் பிள்ளைகளும் நெஞ்சுரத்துடன் எவருக்கும் தலை வணங்காமல் வாழ்ந்துவந்தனர்.

அன்றைய காலையில் ஆனையிறவுச் சந்தைக்கு மீன் வியாபாரத்துக்குச் சென்றிருந்த பொன்னாச்சி பொழுதுபடும் நேரம் தன் வீடு நோக்கி வந்துகொண்டிருந்தாள். சுட்டுண்டு கிடக்கும் சிவலிங்கம் பொன்னாச்சியின் மச்சான் முறையானவன். தனது மைத்துனன் சிவலிங்கனுக்கு நேர்ந்த சம்பவத்தை நடுவழியில் வரும்போதே பொன்னாச்சி கேள்விப்பட்டாள். கடுங்கோவத்துடன் விரைந்தோடிவந்து கறிப்பெட்டியைச் சுழற்றி தனது வளவின் முற்றத்தில் வீசி எறிந்தாள். இரைந்து சுத்திக்கொண்டே செல்லையாச் சம்மாட்டியின் வீடு நோக்கி ஓட்டமும் நடையுமாய்ச் சென்றாள். ஏற்கெனவே மௌனமாக இருந்த பக்கத்து வளவுகளின் நடுவயதுப் பெண்களும் பொன்னாச்சியைக் கண்டு உசாரடைந்தனர். அவளைத் தொடர்ந்து அவர்களும் ஓட்டமும் நடையுமாய் விரைந்தனர். பொன்னாச்சி மனிசி வருவாள் என்று செல்லையாச் சம்மாட்டியின் வீட்டில் யாரும் எதிர்பார்க்கவில்லை. மனிசியின் உடலில் யாராவது தொட்டால்போதும். 'பஞ்சபாண்டவர்' போன்ற அவளின் மகன்மார் தாயைத் தொட்டவரின் உச்சியைக் கிழித்து விடுவார்கள். பொன்னாச்சியின் இரைச்சலைக் கேட்டதும் காவலுக்கு நின்ற சண்டியன்கள் பொல்லுக் கொட்டன்களைக் கீழே போட்டுவிட்டு ஓடிச்சென்று தலை மறைந்தனர். மது வெறி குறைந்த நிலையிலிருந்த செல்லையாச் சம்மாட்டியும் தனது தெற்கு வளவுக்குள் விரைந்து சென்று பதுங்கி இருந்தார். பொன்னாச்சி மனிசி என்றால் அவருக்கும் கீழ்க்குலை நடுங்குகின்ற பயம்தான்.

"எடேய் வாறவங்கள் வாங்கோடா பேய்ப் பு.. மக்களே இது மனிசர் செய்யுற ஒரு செயலோடா" என்று பொன்னாச்சி மனிசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாஷணத்தால் இரைந்துகொண்டே சிவலிங்கனின் கைகால் கட்டுக்களை வேகமாக அவிழ்த்தாள். பகல் பதினொரு மணியளவில் அவனைக் கட்டிப் போட்டார்கள். இப்போதோ முன் இரவு ஏழுமணி ஆகிறது. சிவலிங்கனின் உடலெங்கும் மாட்டு உண்ணிகள் கடித்துக் கொண்டிருந்தன. அவன் வாயால் வீணி வடிந்து கொண்டிருந்தது. அவன் கிடக்கும் நிலையைக் கண்ட பெண்கள் கண்ணீர்விட்டுக் கதறி அழுதபடியே அவனது உடலில் இரத்தம் குடித்துக் கொண்டிருந்த உண்ணிகளை ஒவ்வொன்றாகப் பிடுங்கி எடுத்தனர். சிவலிங்கனின் இரத்தம் குடித்த உண்ணிகள் புளியங் கொட்டைபோல் ஊதிப்பெருத்திருந்தன.

சிவலிங்கனை அவனது மச்சாள் பொன்னாச்சியும் பிற பெண்களும் தமது கைகளில் தாங்கிப் பிடித்தவாறு அழைத்துச்சென்று அவனது வீட்டில் விட்டனர். அதன் பின்புதான் செல்லையாச் சம்மாட்டிக்குப் பயந்து பூனைபோல் பதுங்கி இருந்த சிவலிங்கனின் ஏனைய உறவுகள் எல்லாம் சிவலிங்கனின் வீட்டு முற்றத்தில் ஒன்றுகூடி துக்கம் கொண்டாடத் தொடங்கினர்.

இந்த நிகழ்வின் பின்புதான் செல்லையாச் சம்மாட்டியின் மகனை அவனின் ஒன்பதாவது வயதில் இளம்பிள்ளை வாத நோய் தாக்கியது. அவனுக்குப் பின்னர் பிறந்த இரண்டு குழந்தைகள் ஒன்றன்பின் ஒன்றாகச் சில வருடங்களுக்குள் இறந்தனர். கைகால் வழங்காத அந்த மகன்தான் சம்மாட்டியின் குடும்ப வாரிசாக தற்போது வாழ்ந்து வருகிறார். காணி நிலம் பணம் பொருள் இயந்திர வாகன வசதி என்பன சம்மாட்டி குடும்பத்தாரின் மன வேதனையை ஒருவாறு சமாளித்துக் காத்தன.

வயல்வேலைக்கு ஒரு உழவு இயந்திரம், பட்டணம் சென்று வர ஒரு CAR, வாடகைக்கு ஓடி உழைக்கவென ஒரு VAN என்பன செல்லையாச் சம்மாட்டியின் சில அசையும் சொத்துக்களாகும். அவற்றின் ஓட்டுனர்களுக்கும் மாதச்சம்பளம் வழங்கினார். கரைவலை வாடியிலேயே உணவும் தங்குமிட வசதியும் அமைத்துக் கொடுத்திருந்தார். அவரின் இரண்டு கரைவலையிலும் மீன்பிடி குறைவின்றி நடைபெற்றது. வடக்கே கரைவலை வள்ளம் வளவு வீடு என்றும், தெற்கே தோட்டம் துரவு வயல் நிலம் என்றும் அவ்வூரிலே ஒரு பெரு முதலாளியாக அவர் திகழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லையாச் சம்மாட்டியின் கைகால் வழங்காத அந்த மகன் சினிமாப்படம் பார்க்க விரும்பும்போது ஒருவகைத் தயாரிப்புடன் அவனை பட்டணம் கூட்டிச்சென்று அழைத்துவர ஒரு குழுவே அவரிடம் செயற்பட்டது. நடக்க இயலாத தன் மகனுக்கு இரண்டு சாய்வு இருக்கைகள் செய்வித்தார். வீட்டில் அமர்வதற்கு அவற்றில் ஒன்றை மகன் பாவிப்பான். பயண நாளில் மற்றையதில் அவனை இருத்தி ஒரு சிவிகைபோல் முன்பின்னாக இரு தொழிலாளிகள் காவிச்செல்வர். கோயில் திருவிழாக் காலங்களில் ஜமீன் பிள்ளையென சம்மாட்டியின் மகன் உடுத்தப்படுவான். அவனது விரல்களில் கல் பதித்த மோதிரம், ஒரு கையின் மணிக்கட்டில் தங்கக் கைச்சங்கிலி, மறு கையில் தங்கப்பட்டியுடன் இணைந்த ஜப்பான் மணிக்கூடு, கழுத்தில் நீளமான ஒரு தங்கச்சங்கிலி என்பன அணிந்து ஒரு குழந்தைபோல் அவனைத் தூக்கி இருத்தி, இருவர் அவனைக் காவிச் செல்வர்.

செல்லையாச் சம்மாட்டியின் வீட்டுக்கும் ஊர் எல்லையைக் குறிகும் களிமண் தெருவுக்கும் இடைப்பட்ட தூரம் தோராயமாக இருநூறு மீற்றர் இருக்கும். சம்மாட்டியின் மகனது பட்டண நகரப் பயணங்களின்போது அவனைத் தூக்கி வாகனத்தில் ஏற்றி; இறக்கி உதவிசெய்வதற்கு இரு தொழிலாளிகள் தேவை. அவர்களுக்கும் சினிமா பார்ப்பதற்கு அனுமதிச் சீட்டும் கடைச் சாப்பாடும் இலவசமாகக் கிடைக்கும். அந்த வாய்ப்புக்காக 'சம்மாட்டி மகன் சினிமாவுக்குப் போகப்போறார்' என்றதும் யாராவது இரண்டு தொழிலாளிகள் நான்முந்தி நீ முந்தி என்று போட்டி போட்டு நிற்பர். ஆயினும் தனது மகனில் அதிகம் அன்புகாட்டுகின்ற உறவுமுறைத் தொழிலாளரையே சம்மாட்டி ஆச்சி அப்பணியில் அமர்த்திக் கொள்வார்.

சம்மாட்டியார் பெண் விடயத்தில் மிகவும் பலவீனமானவர். அவரின் மனைவி இறந்துபோன தமது பிள்ளைகள் பற்றியும், இருக்கின்ற ஊனமுற்ற தன் மகன் பற்றியும் எந்நேரமும் யோசனையுடன் இருப்பார். இதனால் மனைவியுடைய தாம்பத்தியப் பங்களிப்பில் அவருக்குக் குறைபாடும் இருந்தது.

செல்லையாச் சம்மாட்டியின் வலையில் பிற மாவட்டத் தொழிலாளி ஒருவர் வேலைசெய்து வந்தார். அத்தொழிலாளியின் இளம் மனைவி சம்மாட்டி வீட்டில் பணிப்பெண்ணாக வேலை பார்த்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பெண்ணுடன் சம்மாட்டி உறவு வைக்க முற்பட்டார். இதை அறிந்த அத்தொழிலாளி, யாருக்கும் தெரியாமல் இரவோடிரவாக தன் மனைவியுடன் வேறிடம் சென்றுவிட்டார்.

இவ்வூர்களில் மக்கள் வாழ்கின்ற வளவுகளுக்குள் பூசையம்மன் வழிபாடு நடைபெறுவது வழக்கம். சம்மாட்டி வளவின் மேற்குப் பக்க வீட்டிலும் பூசை அம்மன் வழிபாடு ஒன்று நடைபெற்று வந்தது. அந்த வீட்டுக்குள்ளே சம்மாட்டியார் தமது இரகசிய சேமிப்பை ஒழித்து வைப்பார். அவ்வீட்டுக்கு முதிரைப் பலகையில் பலமான கதவும் போட்டிருந்தார். சாதாரண மக்கள் மூன்று அல்லது நாலு கொத்து அரிசியில் மோதகம் வைத்து, சீனவெடி கொளுத்தி பூசை அம்மனுக்கு மடைப்பூசை செய்வர். சம்மாட்டியார் பத்துக் கொத்தரிசியில் தனது பூசை அம்மனுக்கு மோதகப்பூசை செய்வார். பூசையின்போது ஒலிபெருக்கி பறைமேளம் பெற்றோமாக்ஸ் வெளிச்சம் முதலியன அமர்த்துவார்.

செல்லையாச் சம்மாட்டியும் மனைவியும் தங்களுக்குப் பிள்ளைச் செல்வம் வேண்டும் இருக்கிற மகனுக்கு கைகால் சுகப்பட வேண்டும் என்று நேர்த்தி வைத்து தெய்வங்களுக்கு மனநிறைவுடன் செலவளித்து வந்தனர். கதிர்காமக் கந்தன், சந்நிதி முருகன், நயினை அம்மன் முதலிய கோயில்களுக்கு மகனுடன் தலயாத்திரை சென்றும் வந்தனர்.

இரண்டு கரைவலை வாடியிலும் தொழிலாளருக்குச் சமையல் நடைபெறும். அதே நேரம் அவர் வீட்டிலும் நிறைவான சமையல் தயாராகும். வீடுகள், குழி மலசலகூடங்கள், கிணறுகள் என்பன அமைக்கும் வேலை, தச்சு வேலை, வள்ளம் திருத்தும் வேலை போன்ற பலதரப்பட்ட முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும். அத்தகைய தொழிலாளிகளுக்கு கள்ளும் உணவும் கூலியும் கொடுக்க வேண்டும். மாணிக்கன் கள்ளைச் சீவி பானையில் நிரப்பினான்.

சம்மாட்டி ஆச்சி தனது மகனைத் தூக்கிநிறுத்தி மலசலத்திற்கு விட்டு, குளிப்பாட்டி எண்ணெய் தடவி சோறு ஊட்டி, அவனுடன் அதிகமான நேரத்தைச் செலவிட்டார். இதனால் இரண்டொருவர் பணிப்பெண்களாக சம்மாட்டியின் வீட்டுச் சமையலில் கடமை செய்தனர். தனது இடுப்பில் செருகி வைத்திருக்கும் திறப்பால் களஞ்சிய அறையைத் திறந்து சமையலுக்குரிய சாமான்களை சம்மாட்டி ஆச்சி எடுத்துக் கொடுப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மாட்டி ஆச்சிக்கு உதவி செய்யவென தூரத்து உறவுப்பெண் ஒருத்தியை வரவழைத்தனர். இருபத்திரண்டு வயது இளம் அழகி. பெயர் பாய்க்கியம். நாட்கள் நகர்ந்தன. பாய்க்கியம் ஓடியாடி சுறுசுறுப்புடன் வேலை செய்து வந்தாள். தெற்கேயுள்ள காட்டுவளவுக் கொட்டிலுக்குள் நெல் தானியம் மிளகாய் மூடைகள் என்பன குறைவின்றி எந்நாளும் இருக்கும். தேவைக்கேற்ப பாய்க்கியம் ஓடிச்சென்று அவற்றிலிருந்து எடுத்து வருவாள். சம்மாட்டி ஆச்சி சில பசுமாடுகளும் வளர்த்து வந்தாள். மாலைக்கருக்கலில் அவை மேய்ச்சலால் வரும்போது காட்டுவளவின் மாட்டுக் கொட்டிலுக்குள் அவற்றைக்கட்டி தீன் போட்டு தண்ணி வைப்பதுவும் பாய்க்கியத்தின் நாளாந்தக் கடமைகளில் ஒன்று.

காட்டுவளவினுள் தனது தொழிலாளரின் உதவியுடன் சில தென்னம் பிள்ளைகளையும் சம்மாட்டி நாட்டியிருந்தார். அவற்றுக்கும் காலை மாலைகளில் பாய்க்கியம் தண்ணீர் ஊற்றவேண்டும். இவ்வாறாக கடற்கரை வளவு காட்டு வளவு இரண்டினுள்ளும் தனது கடமையின் நிமித்தம் பாய்க்கியம் சுதந்திரமாக நடமாடினாள்.

கரைவலையை மேற்பார்வை செய்கின்ற வெயில்சூட்டு நேரத்தில் சம்மாட்டியார் ஓடி வந்து தனது காட்டு வளவுக்குள் கள் குடித்து, அரை மணி அல்லது ஒரு மணி நேரமாக இளைப்பாறிவிட்டு மீண்டும் கடற்கரை செல்வது வழக்கம். அப்படியான சூழலில் சிலவேளை பாய்க்கியத்தை நேருக்குநேர் சந்தித்துக் கொள்வார். அப்பொழுது அவளின் பிறந்த வீட்டுத் துன்ப துயரங்களைக் கேட்டு அறிவார். அவர் நெஞ்சில் இரக்கமும் அதேநேரம் ஆசையும் முளைவிடத் தொடங்கியது. சம்மாட்டி ஆச்சிக்குத் தெரியாமல் சிறிய தொகை பணமும் அவளுக்கு வழங்கி வந்தார். அவர்களின் இத்தகைய ஊடாட்டம் காலப்போக்கில் இறுகிய அன்பாக வளர்ந்தது. ஈற்றில் உடல் உறவில் கலந்தது. மத்தியானம் அல்லது மாலைக்கருக்கல் போன்ற வாய்ப்பான நேரங்களில் அனுபவித்தனர்.

6

சிங்காரவேலரின் ஐந்து மகன்மாரும் நல்ல பலசாலிகள். கடின உழைப்பாளிகள். அவர்களை அடிபிடி சண்டையிலும் எவராலும் வெல்ல முடியாது. அவர்கள் இருவரும் சம்பளத்துக்குத் தொழில் செய்து

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வந்தனர். அவர்களில் மூவர் செல்லையாச் சம்மாட்டியின் கரைவலையை கட்டி இழுத்தனர். மற்றைய இருவரும் கத்தோலிக்கச் சம்மாட்டி ஒருவரின் கரைவலையை வளைத்தனர். அவர்களது தங்கையின் கணவன், ஒன்றுவிட்ட அண்ணன் தம்பிமார், உறவினர் என்று ஒரு கரைவலை நடத்தக்கூடிய தொழிலாளர் கூட்டம் அவர்களிடம் இருந்தது. ஆனால் எவரிடமும் சம்மாட்டி ஆகக்கூடிய பணவசதி இருக்கவில்லை.

அவரவர் மனைவிமார் கைகளிலுள்ள தங்கக் காப்புகளும் ஒருசில தங்க நகைகளும்தான் இருக்கும் சொத்துக்கள். மாலைநேரங்களில் தமது தாயார் வீட்டு முற்றத்தில் அவர்கள் ஒன்று கூடுவது வழக்கம். அப்படி ஒரு பின்னேரம் கூடியிருந்தனர். தாயார் தேயிலையும் மல்லியும் கலந்த தேநீரை மக்களுக்கு பரிமாறினார். தேநீரைக் குடித்துக்கொண்டே தம்பி ஒருவன் மூத்த அண்ணன் சுப்பையாவின் முகத்தைப் பார்த்தான்.

"அண்ணை, நாங்களும் ஒரு கரைவலை போடுவமோ? ஏன் அண்ணை நாங்கள் காலங்காலமாய் கூலிகளாய்த்தான் இருக்கவேணுமோ? ஏன் நாங்களும் ஒரு சம்மாட்டியாக வரக்கூடாதோ அண்ணை?" என்று சில வினாக்களை அடுக்காகத் தொடுத்தான்.

"எடேய், எங்களுக்கேன்ரா உந்தத் தொல்லை. நாளும் பொழுதும்போல நாங்கள் எவற்றையேனும் கரைவலையைக் கூலிக்குக் கட்டி இழுப்பமடா. எங்களட்ட காசுபணம் காணிபூமி குவிஞ்சோடா கிடக்குது" என்று சுப்பையா தனது தம்பியின் விருப்பத்துக்கு மறுத்துரைத்தான்.

மண்ணில் சரிந்து படுத்திருந்த இன்னொரு தம்பி விறுக்கென்று எழுந்து குந்தி இருந்துகொண்டு:

"அண்ணை நேற்று எங்கட சின்னண்ணையின்ர நெஞ்சிலை பிடிச்சு, உவன் செல்லையாச் சம்மாட்டி தள்ளிப்போட்டான். எனக்குச் சரியான ஆத்திரம் வந்தது. அவன்ர மூஞ்சையைத் திருப்பி இருப்பன்..... கோவத்தை ஒருமாதிரி அடக்கிக்கொண்டு வந்திட்டன். உவன் பாக்கும்படியாக நாங்கள் கட்டாயம் ஒரு கரைவலை போடத்தானண்ணை வேணும்" என்றொரு அணிந்துரையை எடுத்து விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது சரியடா தம்பி... உவ்வளவு தொகை பணத்துக்கு எங்கயடா நாங்கள் போறது?" என்று மூத்தண்ணன் அரைமனத்துடன் கேட்டான்.

"ஏனண்ணை, நாங்கள் எல்லாரும் ஒவ்வொரு நகையாப்போட்டு, அதை அடகு வைச்சுப் பணம் எடுத்து, அந்தக் காசில கரைவலையைத் தொடங்கலாம் தானே" என்று பஞ்சபாண்டவரில் நகுலன் இடத்தை வகித்த இன்னொரு தம்பி எடுத்துவிட்டான் தன்னுடைய தங்க மூளையை.

"ஓமோம், அது நல்ல யோசனைதான்" என்றான் இன்னொரு தம்பி.

"அது சோக்கான யோசனைதான்" என்றான் மூன்றாவது தம்பி.

"அப்படிச் செய்வம். அப்படியே செய்வம்" என்று நான்கு தம்பிமாரும் ஒருமித்த குரலில் ஆமோதித்தனர். இப்படி அவர்கள் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே...

"ஓமோம் நானும் ஒரு சோடி காப்புத் தாறன்" என்று அவர்களின் தங்கை புருசன் கண்ணப்பனும் தனது பங்களிப்பை ஒத்துக்கொண்டான்.

மூத்த அண்ணன் சுப்பையா தருமர் போன்ற குணமுடையவன். சிறிது நேரம் யோசித்தபடியே இருந்தான். உண்மையிலேயே அவன் தருமர்தான். தம்பிமார் யாருடனும் சண்டை பிடித்துவிட்டு தங்கள் வீடு வருவார்கள். அடி வாங்கிய ஆட்களின் வீடுகள் தேடிச்சென்று அவர்களிடம் மன்னிப்புக் கேட்டு கோப தாபங்களை சமாதானப்படுத்துவது அண்ணன் சுப்பையாவின் தொழில்களில் ஒன்று. அவனும் தன் தம்பிமாருக்கு சிறிது பயந்துதான் வாழ்ந்து வந்தான்.

நீட்டி இருந்த கால்களை மடித்து, அதைத் தன் கைகளால் வளைத்து பத்து விரல்களையும் கோர்த்துப் பிடித்துக்கொண்டு வானத்தைப் பார்த்தவாறு, கண் இமைகளை வேகமாக வெட்டி வெட்டிக்கொண்டு சுப்பையா ஆழமாக யோசித்தான். ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாக.....

"அது சரியடா தம்பிமாரே கரைவலைக்கு ஆரடா சம்மாட்டி?"

"வேறை ஆரண்ணை. நீ எங்களுக்கெல்லாம் மூத்தண்ணை. நீயே சம்மாட்டியாய் இரண்ணை. நாங்கள் உனக்கு எல்லா விதத்திலையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியாய் இருக்கிறம்" என்று சகாதேவன் போன்ற தம்பி சொல்லவும், "அது ஞாயம்தான்" என்று மற்றைய எல்லோரும் ஏகோபித்த குரலில் கூறவும், தாயார் முற்றத்தின் அன்றைய தேநீர்ச்சபை நிறைவுற்றது.

செல்லையாச் சம்மாட்டியின் கரைவலையில் சுப்பையா மாடாக உழைத்தான். சம்மாட்டிக்கு நல்ல விசுவாசியானவன். படிப்புக் குறைந்தவன். கணக்கு வழக்கு அவ்வளவு தெரியாது. சம்மாட்டியின் நெருங்கிய உறவினர் இருவர் கணக்கன் பதவியில் இருந்தனர். சம்மாட்டியும் கணக்கன்மாரும் ஐப்பசித் தொழில் முடிவில் தொழிலாளரின் சம்பளத்தைக் கணிப்பிடுவர். அப்போது சுப்பையாவிலும் தொழில் திறமை குறைந்த சிலருக்கு, ஐந்து பத்து ரூபா அதிக சம்பளம் போட்டனர். சுப்பையாவின் கூட்டாளிகள் சிலரும் கணக்குப் பார்ப்பில் 'கூட இருந்து குழி பறித்தனர்'. இதுபற்றி நினைக்கும்போது சுப்பையாவின் மனம் மிகுந்த கவலையில் வேகும். இந்நிகழ்வுகளை யோசித்தபின்பு சுப்பையாவும் ஒரு முடிவுக்கு வந்தான்.

'தானும் தம்பிமாரும் சேர்ந்து கரைவலை ஒன்றை அடுத்த கோடையில் நடத்தப்போகின்றோம்' என்ற விடயத்தை செல்லையாச் சம்மாட்டிக்கு சுப்பையா தயவாக எடுத்துச் சொன்னான்.

"எட சுப்பையா, கரைவலை முதலாளி என்பது இலேசுப்பட்ட காரியமல்ல. நட்டம் வரும் நயம் வரும். நீ தற்செயலாய் கடனாளியானால், உன்னட்ட சொத்துச்சுகம் ஏதும் இருக்குதோ? காணிபூமி ஈடு வைக்கிலும் உன்னட்ட ஒரு துண்டு நிலம் கூட இல்லையே. பேசாமல் உந்த விசர் வேலையை விட்டுட்டு, என்ர கரைவலையைக் கட்டி இழு தம்பி. உனக்கு ஐஞ்சோ பத்தோ நான் சம்பளம் கூட்டிப்போட்டுத் தாறன்" என்று சம்மாட்டியார் புத்திமதி கூறினார்.

"எனக்கும் மனமில்லைத்தான் சம்மாட்டியார். ஆனால் தம்பிமார்தான் ஒத்தைக்காலில் நிக்கிறாங்கள். எப்புடியோ நாங்கள் காவடியைத் தூக்கித் தோளில் வைச்சுப்போட்டம். இனி ஆடித்தானே தீரவேணும்" என்று சுப்பையா தனது முடிவைச் சொன்னான்.

"சரி, ஏதோ நாண்டுகொண்டு நிக்கிறியள். நினைச்சமாதிரிச் செய்து முடியுங்கோ. எல்லாம் உங்கட தலை எழுத்துப்படிதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கும்" என்று கடலைப் பார்த்தபடி தன் தலையை கைகளால் தடவிக்கொண்டே, சுப்பையாவுக்கு செல்லையாச் சம்மாட்டி அனுமதி கொடுத்தார்.

" அது சரி சம்மாட்டியார் நீங்கள்தான் கொழும்பில நல்ல ஒரு வியாபாரியை எனக்கு ஒழுங்கு செய்து தர வேணும். எனக்கு கொழும்பும் தெரியாது".

"சரி, சரி, நான் கொழும்பு போகையுக்க நீயும் வாவன். என்ர கருவாட்டு வியாபாரியட்ட கதைச்சு ஒழுங்கு பண்ணி விடுறன்" என்று சம்மாட்டி சொல்லவும் சுப்பையா இரவுச் சோற்றுக்கோப்பையை கையில் ஏந்திக்கொண்டு தனது வீடு நோக்கிக் கிளம்பினான்.

சுப்பையாவும் தம்பிமாரும் காப்புச் சங்கிலிகளை அடகு வைத்து பணத்தைப் பெற்றனர். கரைவலை சாளைவலை போன்ற மீன்பிடி உபகரணங்களை விலைக்கு வாங்கினர். வள்ளங்கள் இரண்டை வாடகைக்கு எடுத்தனர்.

செல்லையாச் சம்மாட்டியின் இரண்டு கரைவலை வாடியும் கிழக்கும் மேற்குமாக அரை மைல் தூர இடைவெளியில் அமைந்திருந்தன. அவற்றின் நடுவில் உள்ள 'கரைவலைப்பாட்டில்' வாடி அமைத்து சிங்காரவேலரின் மக்கள் நல்ல நாள் பார்த்து தங்கள் தொழிலைத் தொடங்கினர்.

முதலாவது ஆண்டில் அவர்களுக்கு நிறையவே மீன்பிடி நடைபெற்றது. அதனால் மேலும் சில தொழிலாளரைச் சேர்த்து, அடுத்த ஆண்டு மிகச் சிறப்பாகத் தொழிலை நடத்தினர். மீன் வியாபாரி பஸ்ரியான் சில்வாவுக்கு, பிடிபடுவதில் அரைவாசியை விற்றனர். மிகுதியை செல்லையாச் சம்மாட்டி ஒழுங்கு படுத்திய கொழும்பு முதலாளிக்கு அனுப்பி வைத்தனர்.

மூன்றாவது ஆண்டிலும் சுப்பையாவின் கரைவலை நல்ல வளர்ச்சி கண்டது. அடிக்கடி அவர்களுக்கு தொகையாக மீன் பிடிபட்டது.

கூலிகளாக இருந்த சிங்காரவேலர் குடும்பத்தில் பணக்காரப் பரம்பரை ஒன்று முளைப்பதை விரும்பாத சிலரும் ஊருக்குள் இருந்தனர். குறிப்பாக செல்லையாச் சம்மாட்டி போன்றவரின் ஒட்டுண்ணி சிலருக்கு தம்மைப்போன்ற கூலியாள் ஒருவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மாட்டியாகத் திரிவது அவர்களின் வயிற்றில் எரிச்சலைக் கிளப்பியது.

கிழக்கே உள்ள தனது கரைவலையின் மீன் ஒழுங்குகளைப் பார்த்தபின், மேற்கே இருக்கும் தன் இரண்டாவது கரைவலைக்கு செல்லையாச் சம்மாட்டி கடற்கரையால் நடந்து செல்வது வழக்கம். அவரின் இரண்டு கரைவலைக்கும் இடையில் நடைபெறும் சிங்காரவேலர் மக்களின் கரைவலையைக் கடந்துதான், அவர் அங்கும் இங்குமாகப் போய் வரவேண்டும்.

சில வேளைகளில் அவரின் இரண்டு கரைவலையிலும் மீன் பிடி குறைந்திருக்கும். அப்போது சிங்காரவேலர் மக்களின் கரைவலையில் 'கலக்குமீன்' நிறையப் பிடிபட்டிருக்கும். இத்தகைய நிகழ்வுகளால் சிறிது சிறிதாக செல்லையாச் சம்மாட்டியின் மனதிலும் பொறாமை வளரத் தொடங்கியது. 'உவங்கள் என்னைவிடமிஞ்சிவிடுவாங்களோ?' என்று அவர் யோசிப்பதுமுண்டு. இந்த விடயத்தில் ஒத்து ஊதும் சிலரும் அவருடன் இருந்தனர்.

ஊரிலுள்ள வேறு சிலருக்கும் சுப்பையாவின் வளர்ச்சியில் விருப்பக் குறைவு இருந்தது. அவரின் உறவுக்குள்ளும் மனக்கசப்பு தொடங்கியது. கரைவலை தொடங்கும் போது இருந்த தம்பிமாரின் மனநிலை வேறு. தற்போது அவர்களின் நிலை வேறாகக் காணப்பட்டது. அண்ணனின் வளர்ச்சி கண்டு அவர்களும் பொறாமைப்பட்டனர். தம்பி ஒருவனைத் தவிர, ஏனைய மூவரும் எவ்வாறு அண்ணனிடம் சுருட்டலாம் என்ற மனப்பாங்கில் நடக்கத் தொடங்கினர். சுப்பையாவின் தம்பி ஒருவன் செல்வக்குமார் என்பவன் வாடிக் கணக்கனாகச் செயற்பட்டான். மாதாந்தம் கணக்கில் 'வெட்டிக்கொத்தி' அண்ணனுக்குத் தெரியாமல் சிறிது சிறிதாக கருவறுக்கத் தொடங்கினான். கூரையும் களிமண் சுவருமாய் இருந்த அவனது வீடு கடகடவென கல்வீடும் ஓடுமாக மாறியது. மனைவி மக்களின் கழுத்தில் பவுண் அணிநகை மின்னியது. அத்தோடு தனது சம்பளத்தையும் ஒழுங்காக அவன் பெற்றுக்கொள்வான்.

இன்னொரு தம்பி யாருக்கும் தெரியாமல் இரவோடு இரவாக சாக்குகளில் கருவாட்டை எடுத்துச்சென்று தனது மனைவியின் தாய்மூலம் சந்தையில் விற்றுப் பணமாக்கினான். உப்பு மூடையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுத்தேவைக்கென அண்ணனுக்குத் தெரியாமல் எடுத்துச் செல்வான். அவற்றை கணக்கில் போட்டு சமாளித்து எழுதும்படி கணக்கனை எச்சரிப்பான். இவ்வாறாக ஊருக்குள்ளும் உறவுக்குள்ளும் சுப்பையாவின் முன்னேற்றத்துக்கு சில இடர்பாடுகள் முளைக்கத் தொடங்கின.

ஐம்பது வயதைக் கடந்துள்ள செல்லையாச் சம்மாட்டிக்கு இருபத்திரண்டு வயது இளம்பெண் பாய்க்கியம் இன்பத்தை தேனாகச் சொரிந்தாள். அவரின் ஆசையை அவள் திறம்பட நிறைவேற்றினாள். வறுமைப்பட்ட குடும்பத்தில் பிறந்தவள்தான் பாய்க்கியம். இருப்பினும் எடுப்பான தோற்றம். வண்டுபோல் சுழலும் கண்கள்.

பனங்கள், பணப்புழக்கம், தனிமைச் சூழல் போன்ற வாய்ப்புகளால் சம்மாட்டியும் அவள்மீது தேனியானார்.

ஒரு நாள் அதிகாலையில் சம்மாட்டியின் மகனுக்கு காய்ச்சல் காணப்பட்டது. ஊரிலுள்ள ஆயுர்வேத மருந்தாலும் ஆங்கில மருந்தாலும் காய்ச்சலைக் கட்டுப்படுத்த முடியவில்லை. யாழ்ப்பாணம் பெரிய மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றனர். ஒருவாரமளவில் அங்கு தங்கியிருந்து ஊசிபோட்டு நல்ல மருந்தும் கொடுக்க வேண்டும் என்று மருத்துவர் சொன்னதால், மனைவி செல்லாச்சி தன் மகனுடன் மருத்துவ மனையில் தங்கினார். சம்மாட்டியார் இரண்டு நாளுக்கு ஒரு முறை ஊரிலிருந்து யாழ்ப்பாணம் சென்று மகனைப் பார்த்து வருவார்.

அந்நாட்களில் எதுவித இடையூறுமின்றி சம்மாட்டி பாய்க்கியம் உறவு தொடர்ந்தது. சம்மாட்டி ஆச்சி மருத்துவ மனையிலிருந்து மகனை வீட்டுக்கு கொண்டு வருவதற்கு முதல் நாள் பின்னேரம், காட்டு வளவுக்குள் பாய்க்கியம் தென்னம் பிள்ளைகளுக்கு தண்ணீர் ஊற்றிக்கொண்டு திரிந்தாள். மேய்ச்சலால் வந்துகொண்டிருந்த மாடுகளுக்கு இரவுத்தீனாக பிண்ணாக்கும் குழையும் போட்டாள். வாளிகளில் நீரை நிரப்பி அவைகளைக் குடிக்க விட்டாள்.

கடற்கரைத்தொழில் முடித்து வந்த சம்மாட்டியார் காட்டு வளவுக் கிணற்றில் நன்கு நீராடினார். குளித்து முடித்து ஈரம் துடைத்தார். தனது கோவணத்தைப் பிழிந்து உதறி உலர்வதற்காக வேலியில் விரித்தார். மாலைக் கருக்கல் ஒளியில் பாய்க்கியம் இன்னும் மஞ்சள் நிறமாய் மிளிர்ந்தாள். சம்மாட்டியாரின் உடலில் மின்சாரம் பாய்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுவளவிலுள்ள எல்லாவித வேலைகளும் முடியவும் நன்றாக இருட்டிவிட்டது. மாணிக்கன் வைத்த பனங்கள் இரைந்து கொண்டிருந்தது. ஒரு போத்தலை சம்மாட்டியார் உறிஞ்சிக் குடித்தார். பாய்க்கியத்தை அணைத்தபடி கொட்டிலுக்குள் நுழைந்தார்.

ஆதாமும் ஏவாளுமாகிய இருவரின் உடல்களிலும் மின்கதிர்கள் பாய்ந்தன.

சம்மாட்டியாரின் இடுப்பிலுள்ள அரைஞாண் கயிற்றில் கொளுவப்பட்டிருக்கும் திறப்புக்கோர்வை கிலிங்கிக் கொண்டிருந்தது.

"சம்மாட்டியார்"

"என்னடி"

"உந்தத் திறப்பெல்லாம் என்னத்துக்குச் சம்மாட்டியார்?"

"அதுகள் இரும்புப்பெட்டிச் சாவியளடி"

"அப்ப நானும்.... அந்தப் பெட்டியைத் திறந்து ஒருக்கால் பாக்கலாமோ சம்மாட்டியார்?"

"அடியேய்..... உனக்கில்லாமலும் இந்த உலகத்தில, ஒரு இரும்புப்பெட்டியோடி".

பாய்க்கியத்தை அணைத்தபடி சம்மாட்டியார் படுத்தார். உடற்களையும் மதுமயக்கமும் ஒன்றுசேர, அவர்களை ஆழ்ந்த உறக்கம் அணைத்துக்கொண்டது.

பாய்க்கியம் திடுக்கிட்டு விழித்தாள். உடைகளைச் சரிசெய்துகொண்டாள். நேரம் இரவு பத்துமணியைக் கடந்துவிட்டது. சம்மாட்டியின் கறுத்த உடலில் வெள்ளி அரைஞாண்கொடி மினுங்கிக் கொண்டிருந்தது. அதில் கட்டியிருந்த திறப்புக் கோர்வை உடலோடு ஒட்டிக்கிடந்தது. பாய்க்கியத்தின் மூளை வேகமாய் வேலை செய்தது. சம்மாட்டியார் கொறட்டை விட்டு தூங்கிக்கொண்டிருந்தார். மெதுவாக திறப்புக் கோர்வையைக் களற்றி கையில் எடுத்தாள். பக்கத்தில் இருந்த சாரத்தால் அவரைப் போர்த்தி மூடினாள். அவரின் கொறட்டை ஒலி வரிசை தொடர்ந்தும் கேட்டுக் கொண்டிருந்தது.

செல்லையாச் சம்மாட்டிக்கும் மனைவிக்குமிடையில் நடைபெறும் உரையாடல்களில் இருந்து அவர்கள் பணம் அணிநகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய பெறுமதியான பொருட்கள் வைக்கும் மறைவிடம்பற்றி பாய்க்கியம் முன்னமே அறிந்து வைத்திருந்தாள். எனவே அவள் அகலக்கால் வைத்து வேகமாக நடந்து கடற்கரை வளவைச் சென்றடைந்தாள். பூசைஅம்மன் வீட்டுத் திறப்பும் அவளிடமே இருந்தது. பூசைவீட்டைத் திறந்தாள். அதன் ஒரு மூலைக்குள் மறைவான இடத்தில் சிறிய ஒரு இரும்புப்பெட்டி இருந்தது. திறப்புக் கோர்வையின் ஒவ்வொரு திறப்பாலும் அதை திறப்பதற்கு முயற்சித்தாள். மூன்றாவது திறப்பு பொருந்திக்கொண்டது. இரும்புப் பெட்டியும் திறந்தது.

தீக்குச்சியைத் தேய்த்தாள். வெளிச்சத்தில் அது அணையும்வரை திறந்திருந்த இரும்புப் பெட்டியை ஆசையுடன் பார்த்தபடி நின்றாள். அதற்குள் அடுக்கடுக்காய் பெண்களுக்கான தங்க நகைகளும், ஆண்களுக்கான கழுத்துச்சங்கிலிகள் மோதிரங்கள் கைச்சங்கிலிகளும், தங்கக்காசுகளும், சிறிய சிறிய பவுண்துண்டுகளும் வேறு பல பெறுமதி மிக்க பொருட்களும் நிரம்பி இருந்தன. பாய்க்கியம் தனது சேலையின் முந்தானையை விரித்தாள். போதிய அளவில் தன் கைகளால் அள்ளி அள்ளி அதனுள் போட்டாள். முந்தானையை அப்படியே ஒரு முடிச்சாகக் கட்டினாள். மிச்சம்மிகுதியுடன் இரும்புப் பெட்டியை பூட்டினாள். திறப்புக் கோர்வையை இரும்புப் பெட்டியின்மேல் வைத்தாள். பூசைஅம்மன் வீட்டுக் கதவையும் பூட்டினாள்.

நேரம் நள்ளிரவை நெருங்கிக்கொண்டு இருந்தது. களவுக்கு வந்த ஓடுகாலி நாய்களை சம்மாட்டியின் காவல் நாய்கள் உறுமிக் குரைத்தபடி கலைத்துச் சென்றன. தூரத்தில் அவற்றை விட்டபின் மீண்டும் வந்து சுருண்டு படுத்துக் கொண்டன. வேறு சில நாய்கள் ஊளையிடும் சத்தம் வெகு தூரத்தில் கேட்டுக்கொண்டு இருந்தது.

சம்மாட்டியின் கடற்கரை வளவின் மேற்கு வேலியுடன் இணைந்து, அவரின் கரைவலைவாடி ஒன்று இருந்தது. பாய்க்கியம் மெதுவாக அந்த வேலியால் எட்டிப்பார்த்தாள். அவளுக்குப் பழக்கமான அந்த நாய்கள் இரண்டும் வாலை ஆட்டிக்கொண்டு சிணுங்கின. சில நிமிடங்களில் மீண்டும் அவை படுத்துக்கொண்டன. பாய்க்கியத்துக்கு அந்த நாய்கள்தான் இப்போது இடையூறாக இருந்தன. என்ன செய்யலாம்.....? என்று யோசித்துக்கொண்டு நிற்கும்போது, கருவாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணத்துக்கு கள்ள நாய்கள் சில மீண்டும் வாடி நோக்கி ஓடி வந்தன. அவற்றை அந்தக் காவல் நாய்கள் இரண்டும் மீண்டும் துரத்திச் சென்றன.

இதுதான் வாய்ப்பான நேரம் என்று பாய்க்கியம் உணர்ந்தாள். ஏற்கெனவே சிறிய பனையோலை மூடலுக்குள் நகைகளைப்போட்டு, அதை எடுத்துச் செல்வதற்கு வசதியாக கைப்பை ஒன்றுக்குள் மறைத்து வைத்திருந்தாள். அதையும் தூக்கிக்கொண்டு நேரே கடற்கரைக்கு நடந்தாள். கடற்கரை ஓரமாக அலைகள் கரையில் அடித்து மீண்டும் கடலுக்குள் திரும்பும் ஈரமான மண் நிலத்தில் மேற்கு நோக்கி விரைவாக நடந்து கொண்டிருந்தாள். அவளின் பாதப் பதிவுகளை கடல் அலைகள் அழித்துச் சென்றன. அரைமைல் தூரம் நடந்ததும் ஒரு குறுக்குத் தெருவால் நேரே தெற்கு நோக்கி தன் நடையின் வேகத்தை அதிகரித்தாள். அரசாங்கப் பேரூந்து ஓடும் வீதிக்கு அருகாமையில் ஓர் ஆல மரத்தடியில் வந்து மறைந்திருந்தாள். ஒணான் உடும்பு போன்ற ஊர்வனவுகள் சரசரக்கும்போது அங்கும் இங்குமாக பரக்கப் பரக்கப் பார்த்தவாறு பாய்க்கியம் குந்தி இருந்தாள். நேரம் ஓடிக்கொண்டிருந்தது. கிழக்கே பார்த்தாள். விடி வெள்ளி சுடர் ஒளியை வீசியபடி மேலே வந்து கொண்டிருந்தது.

அந்நேரம் கிழக்கிலிருந்து மேற்குநோக்கி இரைச்சலுடன் வெளிச்சம் இரண்டு வருவது தெரிந்தது. கையை மேலும் கீழுமாக அசைத்து அதை மறித்தாள். பட்டணம் நோக்கிச் செல்கின்ற முதலாவது அரச பேரூந்து வாகனம் ஐந்து மணிக்குப் புறப்பட்டு வருகின்றது என்பதைப் புரிந்து கொண்டாள். மன மகிழ்ச்சியுடன் அதில் ஏறி அமர்ந்தாள். காலை எட்டு மணியளவில் பட்டணம் போய்ச் சேர்ந்தாள். எதுவித தடங்கலுமின்றி பயணம் நிறைவேறியதால் ஒருவித ஆறுதல் பெருமூச்சை விட்டுக்கொண்டாள். எடுத்து வந்த நகைகளில் இரண்டை தன்வசம் வைத்துக்கொண்டு மிகுதியை தமது வளவின் மூலைக்குள் நிலத்தில் புதைத்து வைத்தாள். தாய்தந்தையை இழந்து வாழும் பாய்க்கியம் செல்லையாச் சம்மாட்டியின் வீட்டு வேலையை விட்டு வந்தமைக்கான சில பொய்க் காரணங்களை தன் உறவினர்க்குச் சொல்லிச் சமாளித்தாள்.

தூக்க மயக்கம் தெளிவடைந்து வயிற்றில் தாகம் தாண்டியபோது செல்லையாச் சம்மாட்டியார் திடுக்கிட்டு எழுந்தார். முதல்நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருக்கல்நேர இன்ப அநுபவம் இன்னும் அவரைவிட்டு நீங்கவில்லை. ஆனால் பக்கத்தில் படுத்திருந்த பாய்க்கியத்தைக் காணவில்லை. 'அவள் கடற்கரை வளவில் காவலுக்குப் போய்ப் படுத்திருப்பாள்' என்று அவர் நினைக்கும்போது இரண்டாம் சாமக்கோழி கூவிக்கொண்டிருந்தது. அட, நேரம் விடியப் புறமாய்ப் போய்ச்சுது! என்று ஆச்சரியப் பட்டார். சாரத்தை எடுத்து உதறி உடுத்தார். வேலியில் காயப்போட்ட கோவணத்தை எடுத்து இறுக்கமாகக் கட்டிக்கொண்டார். துவாயால் உடலைப் போர்த்திக்கொண்டு விறுவிறு என்று கரைவலை வள்ளத்தடிக்கு கடற்கரை நோக்கி நடந்தார். 'பொழுது காலிக்கமுன்னம் முதலாவது தடவை வலை வளைத்து இழுத்து எடுக்கவேணும்' என்ற எண்ணத்தோடு வேகமாய் நடந்தார். 'முதலில் பிடிபடும் மீனை சந்தை வியாபாரிக்கு விற்கலாம். அப்பணத்தில் வாடிக்குத் தேவையான சில்லறைச் சாமான்களை வாங்கலாம். கொழும்புக்கு அனுப்புவது மாதம் ஒருமுறை தொகையாகக் கையில் வந்து சேரும்' என்ற வழமையான நினைவுகளுடன் நடையை இன்னும் விரைவுபடுத்தினார்.

''மகனுக்கு நெருப்புக்காய்ச்சல் குறைந்துவிட்டது. இனி நீங்கள் வீட்டுக்கு கொண்டுபோகலாம்'' என்று சம்மாட்டி ஆச்சியிடம் மருத்துவர் சொன்னார். மகனை வருத்தம் பார்க்க வந்தவர்கள் மூலம் இத்தகவலை கணவனுக்கு செல்லாச்சி சொல்லி அனுப்பினாள். சம்மாட்டியின் 'வான்' மறுநாள் காலையில் யாழ்ப்பாணம் பெரிய மருத்துவமனை வந்து சேர்ந்தது. மதியம் கடந்து இரண்டு மணிபோல் எல்லோருமாக ஊர் வந்து சேர்ந்தனர்.

மருத்துவ மனையில் ஒரு வாரமாக இருந்தமையால், மருந்து மணம் போகவேணும் என்று நறுமணச் சவர்க்காரம் தேய்த்து தன் மகனை நன்கு குளிப்பாட்டினார். 'யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி' எவ்வளவோ நோயாளிகள் செத்துப்புழங்கிற இடம். தொற்று நோய்கள் இருக்கும். துடக்கும் கழியவேணும் என்று சீயாக்காய் வெந்தயம் தேசிக்காய் கலந்த அரப்பை தலையில் தேய்த்து செல்லாச்சி தானும் நீராடினார். ஒரு கிழமையாய் கோயிலுக்குப் போகாமையால் மனிசிக்கு ஏதோ ஒன்றை இழந்ததுபோல் இருந்தது. தோய்ந்து உலர்ந்து தூய உடை உடைத்து பூசை அம்மனைக் கும்பிடுவதற்கு பூசைவீட்டைத் திறந்து உள்ளே புகுந்தார். கண்களை மூடியவாறு ஆசைதீர நெடுநேரமாய் மனம்விட்டுக் கும்பிட்டார். மணிமாலையைத் தொடர்போல் அவளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களால் கண்ணீர் ஒடியது. கண்களைத் துடைத்தார். நெற்றிநிறைய விபூதியை அள்ளிப் பூசிக்கொண்டார்.

'பூசைஅம்மன் கதவைப் பூட்டுவோம்' என்று நினைத்தவருக்கு ஒரு கிழமைக்குமேல் இரும்புப் பெட்டியைப் பார்க்கவில்லை, என்ற ஞாபகம் வந்தது. எனவே ஒருமுறை அதைப் பார்ப்பம் என்று தென்கிழக்கு மூலைக்குள் எட்டிப் பார்த்தார். கணவனின் திறப்புக்கோர்வை பெட்டியின்மேல் இருப்பதைக் கண்டார். சில நிமிடம் நின்று யோசித்தார். 'உவர் ஏதோ எடுத்துப்போட்டு திறப்பை அரையில்கொளுவ மறந்துட்டார்போல' என்று மனதுக்குள் நினைத்தார். இரும்புப்பெட்டியின் பூட்டைப் பார்த்தார். பூட்டு சரிவரப் பூட்டப்பட்டு இருந்தது. திறப்புக்கோர்வையை எடுத்து தனது புடைவைத் தொங்கலில் முடிந்தார். பூசைவீட்டைப் பூட்டினார்.

அன்று சுச்சான் சரிவுகாற்று மெதுவாக வீசிக்கொண்டிருந்தது. கடல் நீரும் மெல்லிய கலக்கு நிறத்தில் காணப்பட்டது. கரைவலைகளுக்கு நிறையவே மீன் பிடிபட்டது. சிங்காரவேலரின் மக்களுக்கும் ஒவ்வொரு தடவையும் நிறையவே மீன் பிடிபட்டது. செல்லையாச் சம்மாட்டியின் இரண்டு கரைவலையிலும் நெய்த்தோலி கீரைமீன் முதலியன கலந்து தொகையாகப் பிடிபட்டது. அதனால் நாள் முழுவதும் அங்கும் இங்குமென சம்மாட்டியார் மகிழ்ச்சியுடன் ஓடித்திரிந்தார்.

'வீட்டிலுள்ள தன் மாமியுடன் பாய்க்கியம் வீட்டு வேலைகள் செய்து கொண்டிருப்பாள்' என்று சம்மாட்டி நினைத்துக் கொண்டார்.

மருத்துவ மனையால் வந்தபோது செல்லாச்சியும் பாய்க்கியத்தைப் பார்க்கவில்லை. எனவே தன் தாயிடம் அவளைப்பற்றி விசாரித்தார்.

"எணேய் அம்மா எங்கயணை உவள் பாய்க்கியம்?"

"எடி மோனை பொழுது விடிஞ்சதில இருந்து நானும் அவளைக் காணயில்லையடி. மருமோனும் இன்னும் இந்த வீட்டுப்பக்கம் வரயில்லை. காட்டு வளவுக்குள்ள அவளுக்கு ஏதோ சரியான வேலை குடுத்திருக்கிறார் போல இருக்கு. பனைமரம் தறித்து வெட்டிச்சீவிய சிராய் எல்லாம் பொறுக்கி எடுத்து காட்டு வளவை நல்லாய்த் துப்புரவு செய்ய வேணுமெண்டு மருமோன் நெற்று கதைச்சவர் மோன"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லாச்சி கரைவலைப் பொடியன் ஒருவனைக் கூப்பிட்டார். ''காட்டு வளவுக்குள்ள பாய்க்கியம் நிற்பாள். அவளைக் கூட்டிக்கொண்டு ஓடி வா'' என்று சொல்லி அவனை அனுப்பி வைத்தார்.

"சம்மாட்டியாச்சி, காட்டு வளவெல்லாம் நான் தேடிப்பார்த்தனான். பாய்க்கியம் அக்காவைக் காணயில்லை" என்று தேடிப்போன பொடியன் வந்து சொன்னான். அப்போதும் சம்மாட்டி ஆச்சிக்கு எதுவித சந்தேகமும் பாய்க்கியத்தில் வரவில்லை. 'உவர் சில வேளை அவளை எங்காவது கடைப்பக்கம் ஏதாவது சிறு சாமான் வாங்கிவர அனுப்பியிருப்பார்' என்று நினைத்துக்கொண்டார்.

"டேய் நீ போய் சம்மாட்டியாரை ஒருக்கால் கூட்டிவாடா. ஆசுப்பத்திரியால கொண்டந்த மோனையும் ஒருக்கால் அவர் பாத்திட்டுப் போகட்டும்" என்று அரை மைல் தூரத்தில் இருந்த இரண்டாவது கரைவலை வாடிக்கு, அதே பொடியனை செல்லாச்சி அனுப்பி வைத்தார்.

செய்தி கிடைத்ததும் சம்மாட்டியார் கடற்கரை ஓரமாக வீடுநோக்கி வந்துகொண்டிருந்தார். தரையில் அடித்து மீளும் கடல் அலைகள் அவரின் பாதங்களை நனைத்துச் சென்றன. அவரின் கை விரல்கள் அப்படி இப்படி அசைந்து கொண்டிருந்தன. அவருக்கு ஒரு பழக்கம் இருந்தது. நடக்கும் போதே தனது வரவு செலவுகளைக் கை விரல்களால் எண்ணி கணக்குப் பார்த்துக் கொள்வார்.

வளவுப் படலையைத் திறக்கும்போது அவரையும் அறியாமல் தன் மகன்மீதுள்ள பாசம் பொங்கி எழுந்தது. மகனைப் பார்க்கும் ஆவலில் எட்டிக் கால்வைத்து நடந்து வந்து வளவு முற்றத்தில் நின்றார்.

"இஞ்சாருங்கோ, உங்கட திறப்புக் கோர்வையை ஏன் இரும்புப் பெட்டிக்கு மேல வச்சனீங்கள்?

திடுக்கிட்ட சம்மாட்டி தனது அரைஞாண்கொடியைத் தடவிப் பார்த்தார்.

அதுசரி உவள் பாய்க்கியத்தை எங்க அனுப்பினியள்?"

என்ற இரண்டாம் வினாவையும் கணவனைப் பார்த்துக் கேட்டாள் செல்லாச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது முகத்தில் தோன்றிய மாற்றத்தை, மனைவிக்குத் தெரியாமல் ஒருவாறு சரிசெய்து கொண்டார் சம்மாட்டி.

"அது என்ர மோதிரங்களைக் கழட்டி இரும்புப் பெட்டிக்குள்ள வைச்சிட்டு திறப்புக் கோர்வையை, பெட்டிக்குமேல மறதியீனமாய் வைச்சிட்டன்போல. நான் ஆசுப்பத்திரிக்கு வரயுக்க மோதிரம் ரண்டு போட்டு வந்தனானெல்லோ? அதுசரி எங்க அந்தத் திறப்புக் கோர்வை. அதை இஞ்ச தா" என்று கேட்டு, திறப்புக் கோர்வையை வாங்கி தன் அரைஞாண்கொடியில் மீண்டும் கொளுவிக்கொண்டார்.

"மருமோனைக் கேளடி உவள் பாய்க்கியத்தை மருமோன் எங்காவது அனுப்பினவரோ எண்டு''. சம்மாட்டிக்கும் கேட்கும்படியாக செல்லாச்சியின் தாயார், இந்த வினாவை தன் மகளைப் பார்த்துக் கேட்டார்.

"எனக்குத் தெரியாது. நான் அவளை ஒருடமும் அனுப்பயில்லை. அவளைப்பற்றி மாமியைத்தான் நீ கேள்" என்று மனைவியைப் பார்த்து செல்லையாச் சம்மாட்டி சொல்லிக்கொண்டே மனதில் சிறு சந்தேகம் தோன்றியதால், பூசையம்மன் வீட்டை நோக்கி நடந்தார். பூசைவீட்டைத் திறந்தார். இரும்புப் பெட்டியையும் திறந்தார். பார்த்தார்.

திடுக்கிட்டார்..... ஏங்கினார்..... நெடுமூச்செறிந்தார்.... இரண்டு கைகளாலும் தலையில் அடித்தார் என்ன செய்வதென்று தெரியாமல் தன் தலைமயிரைப் பிடித்தபடி எவ்வளவு நேரமாக அப்படியே யோசித்துக்கொண்டு நின்றார் என்பது அவருக்கே தெரியாது.....

கூலிக்காரனுக்கு மகனாகப் பிறந்து கூலிவேலை செய்து வளர்ந்தவன்தான் சிங்காரவேலரின் மகன் சுப்பையா. அதனால்போலும் சம்மாட்டி என்ற தலைக்கனம் இல்லாமல் தொழிலாளருடனும் ஊருக்குள்ளும் சாதாரண அடிநிலை மனிதன்போல் வாழ்ந்து வந்தான். இன்னும் அவனுக்குப் பெருமை சேர்ப்பதுபோல் அவனது கொடைப் பண்பும் அமைந்திருந்தது. தனது கரைவலையை இழுக்க வருவோர்க்கு அவர்களின் மனம் மகிழும்படி மீனை அள்ளி அள்ளிக் கொடுப்பான். தொகையாக மீன் பிடிபட்டால் தன் கைநிறைய அள்ளி அள்ளி வயோதிபர்கள் பொடியன்களது குட்டான்கள் நிறையும்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியுடன் கொடுப்பான். "எங்கட சுப்பையா மருமோன், மீன் நல்லாய்க் குடுக்குறாராம்" என்று சொல்லிக்கொண்டே தூரத்து ஊர்களின் முதியோர்கள் பலரும் வந்து சுப்பையாவின் வலையை இழுத்து கூலியாக மீன் பெற்றுச் செல்வர். "எட தம்பிமாரே நான் இல்லாத நேரத்திலயும் கறிமீனுக்கு வாற குடிமக்கள், சீவல்காறர், கமக்காறருக்கு அவர்களின்ர மனம் கோணாதபடி கறிமீன் குடுத்து அவர்களை அனுப்பவேணும் தெரியுமோ?'' என்று தனது தம்பிமாருக்கும் சுப்பையா சொல்லி வைத்திருந்தான்.

அவர்களும் 'எங்கட சுப்பையா' என்ற உரிமையுடன் எதுவித கூச்சமுமின்றி வந்து கறிமீன் வாங்கிச் செல்வர். தமது உணவுத் தேவைக்கென மீன் வாங்க வருவோரிடம் பணம் வாங்கும் நடைமுறை அவ்வூர்களில் இல்லை. இப்படியாக நல்லதொரு பேர் புகழுடன் சுப்பையா வளர்ச்சியடைவான் என்று செல்லையாச் சம்மாட்டி எதிர்பார்க்கவில்லை. 'இரண்டொரு வருசத்தில் அவர்களின் கதை முடிந்துவிடும். திரும்பவும் தன்னிடம் வந்து கூலிக்கு கை கட்டி நிற்பார்கள்' என நினைத்த அவருக்கு சுப்பையாவின் வளர்ச்சி எரிச்சலைக் கிளப்பியது.

காசுபணம், நிலபுலம், கார், வான், உழவு இயந்திரம், இரண்டு கரைவலை என்று கொடிகட்டிப்பறந்த செல்லையாச் சம்மாட்டிக்கு அவ்வூர்க் கிராம ஆட்சிமன்றில் ஓர் தெரிநிலை உறுப்பினராகவும் தான் வரவேணும் என்ற ஆசையும் தோன்றியது. தலையைத் தொங்கப்போட்டபடி இதுபற்றிய யோசனையில் பந்தல் வாடிக்குள் தென்னம் ஈர்க்கினால் மண்ணில் கீறிக் கீறிக்கொண்டு இடது கையால் தன் தாடையைத் தாங்கியவாறு அவர் அமர்ந்திருந்தார். அந்த வட்டாரத்தில் வள்ளக்காற் ராமுவை எதிர்த்து தேர்தலில் நின்று அவரால் வெற்றிபெற முடியாது. ராமு பொதுசனங்களிடம் மிகவும் செல்வாக்கான இளைஞனாகத் திகழ்ந்தான். அதுதான் செல்லையாச் சம்மாட்டியின் யோசனைக்கு முக்கிய காரணமாயிருந்தது.

"அத்தான்" என்ற குரல் கேட்ட சம்மாட்டி தன் தலையை நிமிர்த்திப் பார்த்தார்.

சம்மாட்டியின் ஒன்று விட்ட மச்சான். கொழும்புக் கணக்கன். அவரின் அந்தரங்க ஆலோசகன். ஆபத்துக்குப் பொருத்தமான புத்திமதி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கூறுபவன். பெயர் கணபதி. தன் ஒற்றைக்கண்ணைக் கூசியவாறு வந்து நின்றான். புதிதாகத் தோன்றிய தேர்தல் ஆசையால் இரண்டு கிழமையாய் செல்லையாச் சம்மாட்டியார் யோசனையுடன் திரிவது அவனுக்கு நன்கு தெரியும். புகைத்துவந்த சுருட்டு எரிந்து முடிகிறது என்பதை உணர்ந்த கணபதி, அதை மண்ணில் போட்டுத் தன் பாதத்தால் புதைத்தான்.

"அத்தான் நீ ஒன்றுக்கும் கவலைப்படாதையும். நானும் நீயுமாக ராமுவின்ர மாமனையும் கூட்டிக்கொண்டுபோய், ராமுவின்ர வீட்டில நேரடியாகக் கேட்டால் நிச்சயம் அவன் உங்களுக்கு விட்டுத் தருவான்" என்று தன் திறமையான யோசனை ஒன்றை கணக்கன் கணபதி சொல்லவும் சம்மாட்டியின் மனம் குளிர்ந்தது. மறுநாள் இரவு ஏழு மணிபோல் நால்வருமாக ராமுவின் வடக்குப் படலையைத் திறந்தனர். "தம்பி ராமு..." என்று சம்மாட்டி குரல் கொடுத்தார். இதை எதிர்பார்த்திராத ராமுவும் மனைவியும் "வாங்கோ வாங்கோ" என்று வடக்கு வீட்டின் விறாந்தைக்குள் ஓலைப்பாயை உதறி விரித்துப் போட்டு, அவர்களை வரவேற்று அதில் அமர வைத்தனர்.

"தம்பி! இருபது வருசத்துக்குப்பிறகு இன்றைக்குத்தான் உங்கட வீட்டு முற்றம் நான் மிதிக்கிறன். குஞ்சிக்கு இந்த விசயத்தில மறுப்புச் சொல்லிப்போடாதையும். இந்த வருசம் வி. சி. லெச்சனில நான் நிக்கப்போறன். எனக்காக நீ ஒருக்கால் தயவுசெய்து இதை எனக்கு விட்டுத்தா" என்று சம்மாட்டி, ராமுவை கெஞ்சுவதுபோல் கேட்டார்.

செல்லையாச் சம்மாட்டியின் மனைவியின் உறவு வழியால் ராமு, அவருக்கு மகன் முறையானவன். 'குஞ்சிக்கு' என்று முறைசொல்லி அவர் கேட்டதும் நீண்டகாலப் பகைமை நீங்கி, நெஞ்சுருகி, மௌனமாக சிறிது நேரம் வீட்டின் மேல் முகட்டைப் பார்த்தபடி, தனது பெரிய கண்ணால் உருட்டி முழிசி முழிசி, இமைகளை வெட்டி வெட்டி சிறிது நேரமாக ராமு யோசித்தான். அதன்பின் தெளிவான ஒரு முடிவுக்கு வந்தவனாக "அது சரி குஞ்சி, இந்தமுறை நான் உங்களுக்காக விட்டுத்தாறன். அடுத்த லெச்சனுக்கு எப்படியும் நான் கட்டாயம் கேக்கவேணும், அப்ப நீங்கள் எனக்கு விட்டுத் தரவேணும்" என்று சொன்னான்.

"கண்டிப்பாய் இந்த ஒரு தடவை நீ விட்டுத்தா மோனே. அங்கால நீயோ, ஆரோ எவரெண்டாலும் லெச்சன் கேளுங்கோ மோனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுக்குப்பிறகு நான் வி. சி. கந்தோர்ப் பக்கம்கூட தலைவைச்சே படுக்கமாட்டன் மோனே'' என்று விரலை விரித்து அந்த வலக்கையால் பாயில் அடித்து, சத்தியம் பண்ணிச் சொன்னார் சம்மாட்டி.

எதுவித போட்டியுமின்றி அந்தப் பத்தாம் வட்டாரத்துக்கு, செல்லையாச் சம்மாட்டியார் வி.சி.மெம்பர் ஆனார். -Member of Village Council -. அவரும் சேர்ந்து கையை உயர்த்தியதால் இந்தத் தடவையும் முன்னர் இருந்தவரே - Chairman - கிராமசபைத் தலைவராகத் தெரிவானார்.

கிராமசபைத் தலைவரின் சிநேகிதம் சம்மாட்டிக்கு மேலும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. சம்மாட்டியிடம் பணம் இருந்தது. அவரிடம் செல்வாக்கு இருந்தது. எனவே அவர்கள் இருவரின் அநுபவிப்புக்கும் குறைவில்லை.

வெள்ளை வேட்டி, அரைக்கை நைசனல், தோளில் சால்வை அணிந்து இரண்டு கை விரல்களிலும் கல்லும் பவுணுமாக மோதிரங்கள் போட்டு, செல்லையாச் சம்மாட்டியார் நடந்து வரும்போது எதிரில் வருவோர் யாராக இருந்தாலும் அவருக்கு ஒதுங்கி வழிவிடுவர். சிலர் மரியாதைக்காக விலத்தினர். பலர் பயத்தில் ஒதுங்கினர். தோழில் போட்டிருக்கும் சால்வையை அவர்கள் தம் கையில் எடுத்துக் கொள்வர். அடிநிலைச் சாதியினர் தம் சால்வையை இடுப்பில் கட்டிக்கொள்வர்.

செல்லையாச் சம்மாட்டியிடம் தொழிலாளர்கள் முற்பணம் கேட்கும்போது, சில எச்சரிக்கை வார்த்தைகள் சொல்லித்தான் அவர்களுக்குப் பணம் கொடுப்பார். பெரும்பாலான தொழிலாளர்கள் எக்காலமும் சம்மாட்டிக்கு கடனாளிகளாகவே இருந்தனர். அதனால் அவருக்கு தொழிலாளர் பஞ்சம் எப்போதும் ஏற்பட்டதில்லை.

கடனில் மூழ்கி கரைவலையைக் கைவிட்ட சம்மாட்டிமாரின் தொழிலாளிகள் சிலரும் அவருடன் வந்து இணைந்து கொண்டனர். 'பெருமரத்துப் பல்லிக்குச் சேதாரம் இல்லை' என்பதுபோல் 'செல்லையாச் சம்மாட்டியுடன்' தொழிலுக்கு நிற்பதை பலர் பெருமையாகக் கருதிக்கொண்டனர்.

கிராமசபைத் தேர்தலில் ராமு விட்டுக்கொடுத்த நிகழ்வு, சம்மாட்டியின் நெஞ்சை நன்றாக உருக்கியது. ராமுவின் தகப்பனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிராக, தன் மனச்சாட்சிக்கு விரோதமாக இருபது வருடங்களுக்கு முன், தான் தவறாக நடந்துகொண்டதை இப்போது நினைத்தார். அறம் நீதிஞாயம் என்பன அவரின் இதயத்தைக் குடைந்தன. இருபது வருடங்களுக்கு முன்பு ஒருநாள்.....

உடன் பிறந்த அக்கா தங்கைகளை திருமணம் செய்த உறவில், ராமுவின் தகப்பன் வீரகத்தியும், கதிரேசு என்பவரும் சகலன் முறையான இணைப்பைக் கொண்டவர்கள். மீன்கூடு விடுதல் வீச்சுவலை வீசுதல் போன்ற தனித்தொழில்களை வீரகத்தி செய்துவந்தார். நாட்கூலிக்காக செல்லையாச் சம்மாட்டியின் கரைவலையையும் அவர் இழுத்து வந்தார்.

கத்தோலிக்கச் சம்மாட்டி ஒருவரின் கரைவலையை சம்பளத்துக்கு இழுத்து வந்த கதிரேசுவுக்கு, தானும் ஒரு சம்மாட்டி ஆகவேணும் என்ற ஆசை தொட்டது. அதனால் அயலூரிலுள்ள ஒரு சம்மாட்டி நண்பனிடம் குறைந்த விலைக்கு கரைவலை ஒன்றை வாங்கினார். வள்ளம் ஒன்றையும் மாதாந்த வாடைக்குப் பிடித்தார். சில தொழிலாளர்களை மாதச் சம்பளத்துக்குச் சேர்த்தார். பள்ளிக்கூடம் போகாத சில பொடியன்களையும் சில முதியவர்களையும் அணைத்து தனது கரைவலையை கதிரேசு நடத்திக் கொண்டிருந்தார். பொடியன் வயதிலுள்ள வீரகத்தியின் மகன் ராமு, சித்தப்பன் முறையான கதிரேசுவின் வலையில் கூலிக்குத் தொழிலில் சேர்ந்தான். கதிரேசுவோ கொடுக்கல் வாங்கலில் சிறிது கஞ்சத்தனம் உள்ளவர். நான்கு மாதங்கள் கடந்தும், ராமுவின் சம்பளப்பணம் அவனிடம் கொடுபடவில்லை. வீரகத்தி, தன்மகன் ராமு மூலமாகவும் நேரிடையாகவும் சம்பளப் பணத்தை கதிரேசுவிடம் பல தடவை கேட்டுப்பார்த்தார். ஆனால் பணமோ கைக்கு வந்து சேர்ந்த பாடாயில்லை.

கரைவலை விடுமுறை நாளான ஒரு ஞாயிறு அன்று வீரகத்தி, கதிரேசுவின் வாடிக்குச் சென்றார். அங்கு தங்கி இருக்கும் தன் மகன் ராமுவைப் பார்த்து "இனிமேல் நீ இங்கு தொழில் செய்யவேண்டாம். வா மோன வீட்டை போவோம்" என்று கேட்கவும், "அப்பு அது சரியில்லை. குஞ்சியின் தொழிலுக்கு ஆட்கள் குறைவு. நானும் போனால் அவர் தொழிலை ஆர் நடத்துறது. அவர் பாவம். நான் வரமாட்டன்" என்று தனது பக்க நியாயத்தை ராமு தன் தந்தைக்குச் சொன்னான். வீரகத்திக்கு மூக்கு நுனியில் கோபம் வந்தது. பக்கத்திலிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னம்பாளை ஒன்றை எடுத்து தன் மகனின் முதுகில் அடிபோட்டார். ராமு குழறக்குழற, அவனது கையில் பிடித்து இழுத்துக்கொண்டே தனது வீடுபோய்ச் சேர்ந்தார்.

கள்ளுக் கொட்டிலில் ஆறுதலாக உட்கார்ந்து மூக்குமுட்ட பனங்கள் குடித்து முடித்த கதிரேசுச் சம்மாட்டி, தன் வாடி நோக்கித் தள்ளாடியபடி நடந்து வந்தார். நிகழ்ந்த சம்பவத்தை பொங்கலாண்டி மூலம் அறிந்து கொண்டார். கள்ளு வெறியுடன் இந்த சுடு செய்தியும்சேர, அவரின் கண்கள் மேலும் சிவப்படைந்தன. கோபம் தலை உச்சிக்கு ஏறியது. இரண்டு முள நீளமான பனம்திரட்டுக் கொட்டன் ஒன்றை கையில் எடுத்துக்கொண்டார். ஏறத்தாழ ஐநூறு மீற்றர் அளவு தூரத்திலுள்ள வீரசுத்தியின் வீடு நோக்கி கோப நடை போட்டார். உச்சி மத்தியான நேரம். மண் புட்டியால் நடந்தால் உள்ளங்காலில் சுடும் என்று கடற்கரை ஓரமாக ஈரமண்ணில் நடந்து சென்றார்.

ஞாயிற்றுக்கிழமை என்பது ஓய்வான நாள். இருந்தாலும் வீரசுத்தியின் கைகால்கள் சும்மாய் இருக்காது. அவர் எப்போதும் ஏதாவது ஒரு வேலை செய்துகொண்டே இருப்பார். அதுக்கு வாய்ப்பாக அவரின் வளவிலுள்ள தெற்குப்புற வேலியுடன் இணைத்து, பெரிய ஒரு 'படப்பு' அமைத்திருந்தார். மேய்ச்சலால் வரும் அவரின் முப்பது மாடுகளையும் அந்த மாட்டுப்பட்டிக்குள் இரவில் அடைத்து வைப்பார்.

நாளாந்தம் காலையில் மாட்டுச்சாணம் அள்ளி எருப்பட்டிக்குள் கொட்டினாலும் ஞாயிறுகளில்தான் மாட்டுப்பட்டி கூட்டிப்பெருக்கி தூய்மைப் படுத்தப்படும். அவரின் மனைவி அன்று சந்தைக்குச் சென்றிருந்தாள். வீரசுத்தி மாட்டுப்பட்டியை தூய்மைப் படுத்தினார். காயப்போட்ட கருவாடுகளை மறுபக்கம் புரட்டிக் காயவைத்தார். காலையில் வாங்கி வைத்த பனங்கள் இரண்டு போத்தலும் இரைந்து கொண்டிருந்தன. தலைநிறைய நல்லெண்ணை தேய்த்தார். மூத்த மகள் 'அரப்பு' நீரை குசினிக்குள் இருந்து சூடாக்கிக்கொண்டு இருந்தாள். ஒவ்வொரு ஞாயிறும் நல்லெண்ணை தேய்த்து அரப்பு வைத்து குளிர்ந்த பழைய கிணற்று நீரில் நன்றாக நீராடுவது வீரசுத்தியின் வழக்கம். அதன்பின் தலைமயிர் காயும்வரை வளவின் முற்றத்துத் தென்னைமர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிழலில் இருந்துகொண்டு இரண்டு போத்தல் கள்ளையும் குடிப்பார். சிறிய ஆறுதலின் பின் ஓடியல் பிட்டும் சோறும் கறியும் உண்டதும் கடற்காற்றில் தென்னைமர நிழலில் உறங்குவார். பின்னேரம் ஐந்து மணியளவில் தூக்கத்தால் எழும்புவார்.

அன்றும் மாட்டுப்பட்டி வேலை முடித்துக்கொண்டு வளவுக்குள் இருந்த வப்புக்குள் கருவாட்டை பரட்டிப் புரட்டி போட்டுக்கொண்டிருந்தார். நேரம் மதியம் தாண்டி ஒரு மணியைக் கடந்து சென்றது.

அப்போது "டேய் வீரகத்தி.... வெளியால வாடா.... பு..மோனே... உன்ர உச்சியை ரண்டாய் கிழிக்கிறன் பாரடா'' என்று கதிரேசுவின் கரகரத்த குரல் உரத்துக் கேட்டது.

வீரகத்தி நிமிர்ந்து பார்த்தார். சகலன் கதிரேசு வெறியுடன் வருவதைக் கண்டார்.

"எட தம்பி, ஏன்ரா என்ன விசயம் ஏன் சத்தம் போடுறாய். அப்புடி நான் செய்த தவறென்ன?" என்று தயவாகத்தான் வீரகத்தி கேட்டார்.

"ஏன்ரா பிள்ளை ராமுவை இழுத்து வந்தநீ?''

"என்ர பிள்ளையை நான் இழுத்து வந்தனான். இனிமேல் உன்னோட அவனை தொழிலுக்கு விட எனக்கு விருப்பமில்லை. நீ பேசாமல் போ தம்பி" என்று வேலிக்கு உள்ளால் நின்று வீரகத்தி சாந்தமாகச் சொல்லவும்;

எவரும் எதிர்பார்க்காத கணப்பொழுதில், கதிரேசு வேலியால் அதிவேகமாய் எட்டி வீரகத்தியின் தலையில் கொட்டனால் ஓங்கி அடித்தான். வீரகத்தி ஐயோ என்று கத்திக்கொண்டு இரண்டுகைகளாலும் தலையைப் பொத்திப் பிடித்தபடி மண்ணில் சாய்ந்தான். கதிரேசு வேலியைக் கடந்து உள்ளே பாய்ந்தான். வீரகத்தியின் காலைப்பிடித்து தொர தொர என்று வளவுக்கு வெளியால் அவனை இழுத்துவந்தான். தனது கோபம் தீரும்வரை கொட்டனால் உருட்டி உருட்டி அடித்தான். தனது ஆத்திரமும் வெறியும் அடங்கும்வரை தொடர்ந்து அடித்தான். வீரகத்தி மூச்சுப்பேச்சற்று இரத்த வெள்ளத்தில் மிதந்தான். கதிரேசு என்றால் பெரும்பான்மையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்ச்சனங்கள் பயப்படுவர். வீரகத்தியின் வளவுக்குப் பக்கத்திலுள்ள செல்லையாச் சம்மாட்டியின் தொழிலாளரும் ஓடிவந்து விலக்குப் பிடிக்காமல் பயத்துடன் மறைந்து நின்றனர். செல்லையாச் சம்மாட்டியும் சண்டையைப் பார்த்துக்கொண்டே எட்டத்தில் நின்றார்.

இரத்தம் தோய்ந்த கொட்டனைத் தோளில் வைத்துக்கொண்டு கதிரேசு தனது வாடிநோக்கி விரைந்தான். இச்சம்பவத்தை அறிந்த வீரகத்தியின் தம்பி கணேசன் ஓடிவந்து தனது அண்ணனைத் தூக்கி ஜீப்பில் ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் பெரிய மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றான். அங்கே, தன் இரத்தத்தை கொடுத்து உடன்பிறந்த அண்ணன் உயிரை அவன் மீட்டான்.

இச்சண்டைபற்றி விதானையிடம் முறைப்பாடு பதியப்பட்டு பருத்தித்துறையில் காவல்துறைக்கும் அறிவிக்கப்பட்டது. ஒரு மாதத்தில் வீரகத்தி சுகமடைந்து வீடு வந்தான். ஒருவருடமாக பருத்தித்துறை நீதிமன்றில் வழக்கு நடைபெற்றது. வழக்காளி வீரகத்தி. எதிரி கதிரேசு. கண்கண்ட சாட்சி செல்லையாச் சம்மாட்டி. பதிந்த முறைப்பாட்டின்படி விளக்கம் அளிப்பதற்கென விதானையும் நீதிவானால் விசாரிக்கப்பட்டார்.

செல்லையாச் சம்மாட்டியார் எதிரியான கதிரேசுவுக்குச் சார்பாகச் சாட்சி சொன்னார். விதானைக்கும் தனது பணத்தில் அள்ளி விசுக்கினார். அந்தப் பகுதிக்குள் செல்லையாச் சம்மாட்டியார் செல்வாக்கான மனிதர். எனவே விதானையாலும் நடுநிலையைக் காக்க முடியவில்லை. அவரும் கதிரேசுவுக்குச் சாதகமாய் நடந்துகொண்டார். விசாரணை முடிவில் கொட்டனால் அடித்த கதிரேசுச் சம்மாட்டி குற்றம் அற்றவராகக் காணப்பட்டார். அந்த வெற்றிக்களிப்பில் விதானையும் செல்லையாச் சம்மாட்டியும் கதிரேசுவும் சேர்ந்து மது அருந்தி மகிழ்ச்சி வெறி போட்டனர். வெற்றியைக் கொண்டாடி வீடுவந்து சேர்ந்தனர். அடியும் வாங்கி வழக்கில் தோல்வியையும் தழுவிய வீரகத்திக்கும் அவன் தம்பி கணேசனுக்கும் அவமானம் நெஞ்சை எரித்துப் பிளந்தது; கோபம் குமுறிக் கொப்பளித்தது.

ஊருக்குத் தெற்கே 'வீரக்கழி ஆறு' என்றழைக்கப்படும் நன்நீர்ப்பரப்பு ஒன்று கிழக்கு மேற்காய் நீண்டுசெல்கின்றது. இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றைக்கடந்து தெற்கே சென்றால், ஈஞ்சு பனை நாவல் மரஞ்செடிகள் கலந்த அடர்ந்த காட்டுநிலம் உண்டு. வீரக்கழி ஆற்றங்கரை ஓரமாக அங்கங்கே தாழை கண்டல் மரங்களும் காணப்படும். அந்த ஆற்றின் தெற்கு நிலத்தில் 'திரியாய்' அம்மன் கோயில் ஒன்று அமைந்துள்ளது. அந்தக் கோயிலின் வடக்கு தெற்குத் திசைகளிலுள்ள ஊர்களில் வாழுகின்ற மக்களும், பருத்தித்துறை புலோலி கரவெட்டி போன்ற இடங்களிலிருந்து வரும் மக்களும் வருடாந்தம் வைகாசி மாதத்தில் நடைபெறும் அந்த அம்மன் பொங்கலில் கலந்துகொள்வர். ஒரு பகலும் அன்று இரவு முழுவதும் காவடி பாற்செம்பு, அன்னதானம் தண்ணீர்ப்பந்தல், களியாட்ட நிகழ்வுகள் முதலியன நடைபெறும். அங்கு பெருந்திரளான மக்கள் குழுமியிருப்பர். அன்றைய தினம் ஊரெல்லாம் வெறிச்சோடி இருக்கும். அம்மக்களுக்கு இக்கொண்டாட்டம், பூம்புகாரில் நடைபெறும் இந்திர விழாவுக்கு ஒப்பானது. கட்டப்பொம்மன் வரலாற்றில் பாளையங்கோட்டை மக்கள் திருச்செந்தூர் முருகனின் விழாவில் ஒன்று கூடுவதுபோல், இங்கும் வருடம் ஒருமுறை எல்லா ஊர் மக்களும் ஒன்று கூடுவர். விடியப்புறம் ஐந்து மணியளவில் நடைபெறும் வழிவெட்டுப் பூசையுடன் அன்றைய அம்மன் பொங்கல் நிறைவுபெறும்.

அந்த வருடப் பொங்கலன்று நடுச்சாமம் கடந்து திரியாய் அம்மன் கோயிலில் இருந்து வடகிழக்குப் பக்கமாக ஊர்மனைக்குள் தீச்சுவாலைகள் கொழுந்துவிட்டு எரிவதைக் களியாட்டத்தில் நின்ற பலர் பார்த்தனர். 'ஊருக்குள்ள ஏதோ எரியுது' என்று தமக்குள் பலவாறு யோசித்தனர். பகல்பொங்கல் முடித்து ஊர் திரும்பிய சில முதியோர், வீடுகளில் தங்கியிருப்பது வழக்கம். 'அவர்கள்தான் தமது வளவுகளில் குவிந்திருக்கும் குப்பைகளைக் கொளுத்தி அழிக்கிறார்கள் போல' என்றும் சிலர் பேசிக்கொண்டனர். சிறிது நேரத்தில் அத்தீச்சுவாலைகள் தணிந்து விட்டன.

விடியப்புற வழிவெட்டுப் பூசை முடிந்ததும் கூட்டம் கூட்டமாய் தமது ஊர்கள் நோக்கி மக்கள் நடந்து சென்றனர். சிலர் இரட்டைமாட்டு வண்டில்களில் பயணித்தனர். ஊருக்குள் சென்ற மக்களுக்கு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது.

செல்லையாச் சம்மாட்டியின் வள்ளம் ஒன்றும் கரைவலை ஒன்றும் வாடி ஒன்றும்; கதிரேசுச் சம்மாட்டியின் கரைவலையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடியும் வளவிலுள்ள நான்கு வீடுகளும்; விதானையின் வீடுகள் முழுவதும், எரிந்து... சாம்பல் குவியல்களாகக் காட்சியளித்தன.

திரியாய் அம்மனில் மக்கள் கூடியிருந்தபோது, நீதிமன்ற வழக்கில் தோல்வியுற்ற வீரகத்தியும் தம்பி கணேசனும் மறைவிடம் ஒன்றில் பதுங்கி இருந்தனர். அந்த ஊர் நிலம் வெண்மணல் படிமம் கொண்டது. அதில் நடந்து செல்வோரின் பாதப்பதிவைப் பார்த்து 'இது இன்னாருடையது' என்று சொல்லக்கூடிய 'அடிபார்க்கும்' திறமையாளர்கள் அந்த ஊர்களில் வாழ்ந்தனர். ஊர் மக்கள் சப்பாத்து, செருப்பு என்பன அணிவதில்லை. வீரகத்தியும் கணேசனும் சிலைத்துண்டால் தமது பாதங்களைச் சுற்றிக் கட்டினர். கணேசன் மீன் வியாபாரம் செய்வதற்கென பழைய ஒரு ஜீப்வாகனம் அண்மையில்தான் வாங்கியிருந்தான். அவனிடம் பெற்றோல் எரிபொருள் இருந்தது. அண்ணன் தீப்பெட்டியையும் தம்பி பெற்றோல் தகரத்தையும் கையில் எடுத்துக்கொண்டனர். முதலில் செல்லையாச் சம்மாட்டியின் வலை வள்ளம் வாடிக்குத் தீ வைத்தனர். அதன்பின் விரைந்தோடி அரை மைல் தூரத்திலுள்ள கதிரேசுவின் வலை வள்ளம் வீடுகளுக்குத் தீ மூட்டினர். ஊரின் தெற்கே தென்னந் தோட்டக் களிமண் நிலத்தில் விதானையின் வீடு இருந்தது. எனவே ஊடு காட்டுக்குள்ளால் ஓட்டமும் நடையுமாய் ஓடிச்சென்று விதானையின் வீடுகளையும் கொளுத்தினர்.

இந்த ஒழுங்குகளைச் செய்து முடித்துவிட்ட கணேசன், தனக்கு ஒன்றும் தெரியாததுபோல் இரவு மூன்று மணியளவில் சனக்கூட்டத்தோடு உட்கார்ந்து திரியாய் அம்மனின் முற்றத்தில் காவடி ஆட்டம் பார்த்துக்கொண்டு இருந்தான்.

ஊரிலிருந்து நேர் தெற்கே மூன்று மைல் தூரத்திலுள்ள இயக்கச்சி ஊரின் முச்சந்தி ஊடாக, தென்னிலங்கை போகும் கண்டி வீதி செல்கிறது. ஏற்கெனவே அண்ணன் தம்பி இருவரும் பேசித் திட்டமிட்டபடி யாழ்ப்பாணத்திலிருந்து திரிகோணமலை செல்லும் அதிகாலை முதல் பஸ்ஸில், இயக்கச்சியில் நின்ற வீரகத்தி ஏறிச் சென்றார்.

செல்லையாச் சம்மாட்டி, கதிரேசு, விதானை மூவரும் வீரகத்திக்கு எதிராக பருத்தித்துறை நீதி மன்றில் வழக்குப்பதிவு செய்தனர். நீதிபதியின் ஆணைப் பத்திரத்துடன் வீரகத்தியை கைது செய்வதற்காக இலங்கை முழுவதும் காவல்துறையினர் தேடி அலைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'குற்றவாளி காவல்துறையில் பிடிபடாமல் பத்து வருடம் தலைமறைவாக வாழ்ந்தால் 'அக்குற்றம்' நீதிமன்றில் தானாகவே தள்ளுபடியாகும்' என்னும் நிபந்தனை, இலங்கைச் சட்டத்திலிருந்தது. பத்து வருடங்கள் காவல்துறையில் பிடிபடாமல் ஒழித்து வாழ்ந்த வீரகத்தி, பதினோராவது வருடம் தன் மனைவி பிள்ளைகளைக் காண்பதற்காக தனது ஊருக்குள் கால் மிதித்தார். அப்போது எவராலும் அவரை ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர்மீதுள்ள நீதிமன்ற வழக்கு செல்லுபடி அற்றதாகிவிட்டது. "இனிமேல் வீரகத்தியுடன் ஒருவரும் சண்டைக்குப் போகக்கூடாது. அவன் வீடுவாசலைக் கொளுத்திப்போடுவான்" என்று ஊர்ச் சனங்கள் எல்லாம் பயத்தில் பேசாமல் இருந்தனர்.

அந்த வீரகத்தியின் இளந்தாரி மகன்தான் இந்த ராமு. அந்தக்காலத்து நீதிமன்ற வழக்கிலிருந்து கோபித்திருந்த பக்கத்து வீட்டுச் செல்லையாச் சம்மாட்டியார் ஏறத்தாழ இருபது வருடம் கழித்து அன்றுதான், அதுவும் ராமுவிடம் பெரிய ஒரு உதவி கேட்டு, வீரகத்தி வாழ்ந்த வீட்டு முற்றத்தில் கால் பதித்தார்.

7

கூலித்தொழிலாளியாக வாழ்ந்தபோதே சுப்பையா கடின உழைப்புடன் ஓடியாடி எல்லாவித வேலைகளையும் செய்வான். கோடையில் கரைவலை, மாரியில் சிறுகடல் வீச்சு, தை மாசியில் அரிவிவெட்டு, பங்குனியில் சிறுதோட்டப் பயிர்ச்செய்கை, உப்பு விளையும் காலத்தில் உப்பு அள்ளுதல், அந்த உப்புச்சாக்கை தலையில் சுமந்துகொண்டு வீடு வருதல், இவ்வாறு பன்னிரண்டு மாதமும் ஏதுவித ஓய்வின்றி அவன் உழைப்பில் ஈடுபடுவான். சுப்பையாவின் மனைவி கமலாம்பிகையும் உசாரான ஒரு பெண். அவள் வளர்த்த ஆடுகள் பல்கிப் பெருகின. நெல்லை விலைக்கு வாங்கி அதை அவித்து காயப்போட்டு உரலில் குற்றி அரிசியாக்கி, அந்த அரிசியை தலையில் சுமந்து சென்று சந்தையில் விற்று வருவாள்.

கிடாய் ஆடுகளை சோனகருக்கு விற்று அப்பணத்தில் தன் பெண் பிள்ளைக்கு தங்கநகை வாங்கி வைத்தாள். ஆண் பிள்ளைகளைப் படிப்பித்து அரசாங்கப் பணியில் அமரவைக்கவேண்டும் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்துக்கொள்வாள். சுப்பையா உழைத்து வந்தாலும் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவது மனைவி கமலாம்பிகைதான். தமது களிமண் வீட்டை அழித்து அதில் கல்வீடு ஒன்றும் அவர்கள் கட்டி எழுப்பி இருந்தனர்.

இவ்வாறு அவர்கள் முன்னேறிய காலத்தில்தான் மனைவி கமலாம்பிகையின் சொல்லை மறுத்து தம்பிமாரின் சொல் கேட்டு, சுப்பையா கரைவலையைத் தொடங்கினான்.

"இஞ்சாருங்கோ, நாங்கள் நகைநட்டுத் தேடி நல்லாய் இருக்கிறம் எண்டு உங்கட தம்பிமாற்ர மனதுக்க கொஞ்சம் பொறாமை கிடக்குது. உவங்களின்ர ஏவலுக்கு நீங்கள் எடுவடாதையுங்கோ. உங்களுக்கு கணக்கு வழக்கும் ஒடாது. உந்த எண்ணத்தை இப்ப கைவிடுங்கோ" என்று கமலாம்பிகை இடித்துரைத்தாள்.

"எடியேய் என்ர தம்பிமாரை அப்புடிச் சொல்லுறியோடி நீ. அவங்கள் ஒருக்காலும் எனக்குத் துரோகம் செய்யமாட்டாங்களடி. நீ இருந்து பாரடி'' என்று சுப்பையா மறுத்துரைத்தான்.

"அப்புடியெண்டால், இப்புடிச் செய்யுங்கோ. எங்கட ஆம்புளப்பிள்ளையில ஒண்டெண்டாலும் வளர்ந்து கணக்கு எழுதுற பருவம் வரயுக்க, கரைவலையைப் போடுங்கோ. அப்ப ஆரும் உங்களை பேய்க்காட்ட மாட்டாங்கள்" என்று உவப்பான சில புத்திமதிகளை மனைவி கூறினாள்.

இவை ஒன்றும் கேளாமல் 'கெடுகுடி சொற்கேளாது' என்றமாதிரி, தன் தம்பிமாரின் ஏவலுக்கு எடுபட்டு அவர்களை நம்பி, சுப்பையா கரைவலைச் சம்மாட்டி ஆகினான்.

கரைவலை தொடங்கும்போது சுப்பையா மனைவி கமலாம்பிகையின் உறவினர் சிலரும் அவருடன் தொழிலில் சேர்ந்தனர். முதல் நாளன்று அதிகாலை கரைவலை வளைப்பதற்கு சிங்காரவேலரின் மக்கள் ஆயத்தம் செய்தனர்.

"அண்ணை, ஆர அண்ணை நாங்கள் மண்டாடியாய் வைப்பம்" என்று சுப்பையாவின் தம்பி சின்னையா கேட்டான்.

"வயதுக்கு மூத்தவர், நல்ல அனுபவமுள்ளவர், எங்கட இராசண்ணையை மண்டாடியாய் வைப்பம் தம்பிமாரே" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பையா சொல்லவும்; அங்கு குழுமியிருந்த எல்லோரும் சேர்ந்து "ஓமோம் ஓமோம், அது நல்லது, அது நல்லது" என்று ஆமோதித்தனர். இராசு, சுப்பையாவுக்கு 'சகலன்' முறையானவர். சுப்பையா மனைவியின் அக்காள் கணவன். எனவே இராசு என்பவர் அன்றே மண்டாடி ஆக்கப்பட்டார்.

இராசு மண்டாடி கடல் நோக்கமறிந்து வலை வளைப்பார். அவரின் திறமையால் சுப்பையாவுக்கு ஏராளமாக மீன் பிடிபட்டது. சுப்பையாச் சம்மாட்டியின் பெயரும் சமூகத்தில் பரவலாகப் பேசப்பட்டது. இராசு மண்டாடி அதிகாலை தொடங்கி பொழுது படுமட்டும் தொழிலை நடத்துவார். எப்படியாவது தனது தம்பி முறையான சுப்பையாவை நல்ல நிலைக்குக் கொண்டுவரவேணும் என்ற ஆசை அவரின் நித்திரையிலும் நினைவாக இருந்தது.

கமலாம்பிகையும் சும்மாய் இருக்கவில்லை. சம்மாட்டி ஆச்சி என்ற தலைக்கனம் இல்லாமல் கிழமைக்கொருமுறை சந்தை சென்று வருவாள். சனிக்கிழமைகளில் கிளிநொச்சிச் சந்தையில் கரைவலை வாடிக்கு தேவைப்படும் மிளகாய் கொறுக்காய் சரக்குச் சாமான்களை வாங்கிவந்து போடுவாள். கணவன் சுப்பையாவின் வலது கையாக அவள் செயற்பட்டாள்.

கூலியாய் வேலை செய்த சுப்பையா, சம்மாட்டியாக உயர்வதைப் பார்க்கச் செல்லையாச் சம்மாட்டியின் அடிவயிற்றில் பொறாமை வளர்ந்தது. எப்படியாவது அவனது தொழிலைக் குலைத்து, பழையபடி கூலியாள் ஆக்கவேண்டும் என்று திட்டம் தீட்டினார். அந்த ஊரில் ஒரு மந்திரவாதி இருந்தான். அவன் பேய் ஓட்டுதல் விஷம் இறக்குதல் போன்ற நல்ல சேவைகள் செய்வான். பெல்லி சூனியம் குடும்பம் பிரித்தல் போன்ற தீமைகளும் செய்வான். துரியோதனனுக்கு வாய்த்த சகுனிமாதிரி அந்த மந்திரவாதி செல்லையாச் சம்மாட்டிக்கு மாமன் முறையானவன். ஒரு பின்னேரக் கருக்கலில் செல்லையாச் சம்மாட்டி மந்திரவாதியின் வீடு செல்லும்போது ஒரு போத்தல் சாராயத்தை தன் துவாய்ப் போர்வைக்குள் மறைத்து எடுத்துச் சென்றார். மாமனின் முற்றத்தில் இருந்து அவருக்கும் ஊற்றிக் கொடுத்து தானும் ஒரு குவளை உறிஞ்சியபடி இருவரும் உரையாடலைத் தொடங்கினர். தன் மனதில் இருக்கும் வேதனையை மாமனிடம் எடுத்துக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் சீவியத்துக்கு துன்பப்படும் வேளைகளில், ஐந்து பத்து ரூபா தந்து உதவும் மருமகனின் முகத்தைப் பார்த்து யோசித்து யோசித்து மந்திரவாதி கதைத்தார்.

"சரி மருமோன்! நீங்கள் ஒன்றுக்கும் யோசியாதையுங்கோ. எல்லாத்துக்கும் நான் இருக்கிறன்" என்று சொன்னார்.

"அப்ப, என்ன செய்வம் மாமா? பெல்லி வைச்சு ஒருதனை எண்டாலும் முடிப்பமோ மாமா? என்று சம்மாட்டி கேட்டார்

மந்திரவாதிக்கு சுப்பையாவும் தூரத்து உறவுதான். அந்த இரக்கம் அவர் நெஞ்சில் இருந்தது.

"இல்லை இல்லை, அதெல்லாம் வேண்டாம் மருமோன். இந்தாங்கோ இதில எழுதின சாமான்களை வாங்கிப்போட்டு எனக்கு மறுமழி விடுங்கோ. நான் வந்து ஆகவேண்டியதைப் பாக்கிறன்" என்று கூறி, வாங்கவேண்டிய சாமான் விபரங்களை ஒரு கடதாசித்துண்டில் பென்சிலால் எழுதிக் கொடுத்தார்.

"சரி மாமா, நான் போட்டு வாறன்"

"ஓம் மருமோன் ஒன்றுக்கும் யோசியாதையுங்கோ எல்லாம் வெல்லுவம்" என்று சொல்லி சம்மாட்டியை மந்திரவாதி வழியனுப்பி வைத்தார். மிகுதிச் சாராயப் போத்தலும் கண்ணாடிக் குவளையும் முற்றத்து மண்ணில் பதித்தபடி இருந்தன.

இச்சந்திப்பு நடைபெற்று ஒரு கிழமை கடந்திருக்கும் ஒரு திங்கட்கிழமை காலை, குங்குமம் பூசப்பட்ட தேசிக்காய் ஒன்றை மண்டாடி இராசு வள்ளத்தின் அணியத்தின் உள்ளிருந்து எடுத்து எல்லோருக்கும் காட்டியபடி சொன்னார்:

" எட தம்பிமாரே, ஆரோ பேய் செய்து போட்டாங்கள்போல கிடக்கடா"

"அதுதானே வள்ளத்துக்குள்ள தேசிக்காய் வரவேண்டிய அவசியமில்லையே"

"ஆர் அறிவார்! எல்லாத்தையும் அந்த மன்டலாய்ப் பிள்ளையார் கேட்டுக் கொள்ளட்டும்" என்று பெருமூச்சு விட்டபடி நிலத்தைப் பார்த்துக்கொண்டு சுப்பையா யோசிக்கத் தொடங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இராசண்ணை! உன்ர தலையை அந்தத் தேசிக்காயால மூன்றுமுறை சுற்றிப்போட்டு எச்சிலைத் துப்பி கடலுக்க எறியண்ணை" என்று சுப்பையாவின் தம்பி சின்னையா சொல்லவும், மண்டாடி இராசு அதேமாதிரிச் செய்து தேசிக்காயை கடலில் எறிந்தபின் "சரி எழும்புங்கோ வள்ளம் தள்ளுவம்" என்று தொழிலை ஆரம்பித்தார். அன்று பொழுதுபடுமட்டும் வலைவளைப்பு நடைபெற்றது. ஆனால் மீன்பிடி மிகவும் குறைந்திருந்தது. முடிவில் மண்புட்டியில் வலையைக் காயப்போட்டனர். இரவுச் சோற்றுக் கோப்பைகளை கைகளில் ஏந்தியவாறு தமது வீடு நோக்கிச் சென்றனர்.

அடுத்த வாரம் புதன்கிழமை ஒரு காலை நேரம். சுப்பையாச் சம்மாட்டி வெள்ளை வேட்டி மேற்சட்டை அணிந்து தலைப்பாகை கட்டிக்கொண்டு தனது வளவிலிருந்து புறப்பட்டு கடற்கரை வந்தார். 'வாடிக்குத் தேவையான அரிசி சாமான் வாங்குவதற்கு தான் பட்டணம் போவதாகவும் பின்னேரம் ஆறுமணிவரை வலையை வளைத்து தொழிலை நடத்தும்படியும்' மண்டாடி இராசுவிடம் கூறினார்.

"ஓம் தம்பி! நீ சுகமாய் போட்டு வா. ஒன்றுக்கும் யோசியாத" என்று ஆதரவுகூறி மண்டாடி இராசு அவரை அனுப்பி வைத்தார்.

அன்று முற்பகல் பத்து மணி அளவில் இரண்டு தடவை கரைவலையை வளைத்து இழுத்தனர். ஆயிரம் ரூபாய்க்கு கொஞ்சம் அதிகமாக மீன் பிடிபட்டது. மூன்றாம் முறையும் கடலில் வலையை வளைத்து வந்து இறங்கினர். அப்போது சுப்பையாவின் கணக்கன்தம்பி செல்வக்குமார் மண்டாடி இராசுவிடம் சென்றான்.

"இராசண்ணை! கள்ளுக்கு ஒரு ஆளை அனுப்பண்ணை" என்று கேட்டான்.

"எடேய் தம்பிமாரே! போய் வலையை இழுங்கோடா. அவன் கொண்ணன் கடன்காறன். அவன்ர கடன் எல்லாத்தையும் அழிக்கவேணும். நாங்கள்தான் செலவைக் குறைக்க வேணும். இன்றைக்கு 'கள்' வேண்டாம்" என்று மண்டாடி இராசு மறுத்துக் கூறினார்.

கணக்கன் செல்வக்குமார் வலை இழுத்துக் கொண்டிருந்த தனது இளைய அண்ணன் சரவணனிடம் சென்று மண்டாடி இராசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியதைச் சொன்னான். வெயில் களைக்கு சரவணனுக்கும் வாய் காய்ந்திருந்தது. மண்டாடி இராசுமீது அவனுக்குக் கடுங் கோபம் வந்தது.

"டேய்! உவன் ஆரடா எங்களுக்குக் கட்டளை போட? அவன் நற்குணத்தை நீ கள்ளுக்கு அனுப்படா. 'சம்மாட்டி வந்து காசு தருவார்' எண்டு கள்ளுக்காறனுக்குச் சொல்லி ஐம்பது போத்தல் 'கள்' வாங்கிவரச் சொல்லடா" என்று தனது தம்பி கணக்கனுக்கு, சரவணன் உசார் கொடுத்தான்.

நற்குணத்தை கள் வாங்கிவர அனுப்பி வைத்தனர். கள்ளும் வந்து சேர்ந்தது. எல்லோரும் மகிழ்ச்சியாகக் குடித்தனர். மண்டாடி இராசு குடிக்கவில்லை. அவருக்கு மனதளவில் கோபம். 'சம்மாட்டி வரட்டும்' என்று மௌனமாக இருந்து தன் பணியைச் செய்தார். ஏனைய தொழிலாளர் எல்லோருக்கும் நல்ல மது வெறி. சம்மாட்டியின் அந்தத் தம்பிமார் இருவரும் மூக்கு முட்டிய மது வெறியில் காணப்பட்டனர். நேரம் பிற்பகல் நான்கு மணியிருக்கும்.

"இன்றைக்கு வலை வளைத்தது போதும். இதோட நிறுத்துவம். வலையைக் காயப்போடுவம்" என்று சரவணன் சொன்னான்.

"அண்ணை சொல்லுறது சரிதான்'' என்று சம்மாட்டியின் இன்னொரு தம்பி வேலுச்சாமியும் ஆமாம் போட்டான்.

ஏனைய தொழிலாளிகள் இவர்களையும் மண்டாடி இராசுவின் முகத்தையும் மாறிமாறிப் பார்த்தபடி என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து நின்றனர்.

"எட தம்பிமாரே! மீனும் கடலுமாய்க் கிடக்குது. அவன் உங்கட அண்ணன் கடன்காறன். 'மீனும் தேனும் கண்ட அண்டுதானே'. இன்னும் இரண்டு தடவை என்றாலும் வலையை வளைப்பம்" என்று பணிவான குரலில் சொன்னார் மண்டாடி இராசு.

"ஓய்! நீர் ஆர் எமக்கு ஓடர் போட" என்று சரவணன் உறுமினான்.

"நாங்கள் சொல்லுறதை நீர் செய்ய வேண்டியதுதானே'' என்று கணக்கன் செல்வகுமார் செருமினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லைத் தம்பிமாரே. அவன் சம்மாட்டி சொன்னமாதிரி பின்னேரம் ஆறுமணிமட்டும் நான் வலையை வளைப்பன். உங்ளுக்கு விருப்பம் இல்லாட்டில் நீங்கள் வீட்டுக்குப் போங்கோ. நான் மிச்சப் பேரை வைச்சு எப்புடியாவது வலை வளைப்பன்" என்று தன் தலையை நிமிர்த்தி, மண்டாடி இராசு அதிகாரத்துடன் சொன்னார்.

"என்னடா பு.மோனே கனக்கக் கதைக்கிறாய்" என்று சரவணன் கத்திக்கொண்டே இராசு மண்டாடியை நோக்கி ஓடினான். செல்வக்குமாரும் தன் அண்ணனைப் பின் தொடர்ந்து ஓடினான்.

'உவங்கள் அடிக்கப்போறாங்கள் போல' என்று நினைத்த மண்டாடி இராசு வாடிப்பக்கம் நோக்கி விரைந்தார். அவர்கள் இருவரும் மண்டாடியைத் துரத்திக் கலைத்தனர். மண்டாடி ஓடினார். அவர்கள் துரத்தினர். மண்டாடி ஒழுங்கை ஒன்றுக்குள் புகுந்தார். நேரே ஓடினார். ஒழுங்கை முடிவில் வேலி அடைப்பு ஒன்று இருந்தது. அதை ஏறிக் கடப்பதற்கு அவர் முயன்றபோது.....

'சடார்' என்றொரு அடி அவரின் பின் முதுகில் விழுந்தது.

திரும்பிப் பார்த்தார். சரவணனும் செல்வக்குமாரும் ஆளுக்கொரு தென்னம் மட்டையை கையில் பற்றிப் பிடித்திருந்தனர். கண்கள் கோபத்தில் சிவந்திருந்தன.

'படீர்' என்று அவரின் தோளில் இன்னொரு அடி விழுந்தது. அடுத்த அடியை சரவணன் ஓங்கினான். அந்த அடி அவரின் தலையை நோக்கி வந்தது. தனது இரண்டு கைகளையும் தன் தலைக்குக் கவசமாக மண்டாடி இராசு வைத்துக்கொண்டார். அவர் நல்ல பலசாலி. இறுகிய உடற்கட்டுள்ளவர். 'சள்... சள்... சள்... சள்;...' என்று கட்டாடிமார் சீலை வெளுப்பதுபோல் அண்ணனும் தம்பியும் ஓங்கி ஓங்கி அவர்மீது அடி போட்டனர். ஏனைய தொழிலாளர் பயத்தில் பார்த்துக்கொண்டு எட்டத்தில் நின்றனர். அடியின் உச்சத்தில் மூச்சடங்கிச் சாய்ந்து மண்ணில் விழுந்தார் மண்டாடி இராசு.

தென்னம் மட்டைகளைச் சுழற்றி இருவரும் குப்பையில் எறிந்தனர். நேரே கடற்கரைக்குச் சென்றனர்.

இச்செய்தியை அறிந்த மண்டாடியின் மனைவியும் அவளின் தாயாரும் சம்பவம் நடந்த இடம் நோக்கி ஓடிச்சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கைக்குள் வாழை மரம்போல் நீண்டு கிடந்த கணவனின் முகத்துக்குத் தண்ணீர் தெளித்து எழுப்பினர். கைத்தாங்கலாக அவரைத் தூக்கி தமது வீட்டுக்கு அழைத்துச் சென்றனர். அவரைப் பார்க்க வந்த உறவுக்காரர் 'விதானைக்கும் பொலிசுக்கும் அறிவிக்கவேணும்' என்று அடம்பிடித்தனர்.

"வேண்டாம் - வேண்டாம் -" என்று தன் வலது கையை அசைத்து, சைகை மொழியால் மண்டாடி இராசு பதில் சொன்னார். அவரால் வாய் பேச முடியவில்லை. தலை, முதுகு, விலா முதலிய பகுதிகளிலிருந்து இரத்தம் கசிந்தது. சில சிராய்ப்புக் காயங்களும் காணப்பட்டன.

"துலைவாங்கள். அடைவாங்கள். இந்த மனிசனுக்கோ இப்புடி அடிச்சாங்கள். அவர் கதைக்கிறதே மற்றவைக்கு கேட்காது" என்று மண்டாடியின் மாமியார் புலம்பி அழுதாள்.

"அவருக்கும் நாலு ஆம்புளைச் சகோதரம் இருந்தால் உவங்கள் உப்புடிச் செய்வாங்களோ?" என்று மனைவி முத்தம்மாள் கலங்கி அழுதாள்.

"இஞ்ச பாருங்கோ மனிசருக்கு அடிச்ச மாதிரியோ அடிச்சிருக்கிறாங்கள். பாம்புக்கு அடிச்சமாதிரியெல்லோ நெகிட்டுப்போட்டாங்கள்".

"பாவம் அவர் கிடந்து ஆமை மாதிரிக் கண்ணீர் விடுகிறார்" என்று மூக்கைச் சீறி முந்தானையால் துடைத்துக் கொண்டு, பார்க்க வாற சனங்களுக்குச் சொல்லிச் சொல்லி மண்டாடி இராசுவின் மனைவியும் அவளின் தாய்க்கிழவியும் அழுதுகொண்டிருந்தனர்.

முற்றத்தில் பாய் விரித்து அதில் வேப்பங்குழை பரத்தி அதன்மேல் மண்டாடி இராசுவை வளத்தி இருந்தனர். ஊர்ப்பரியாரி சிவகுரு பக்கத்திலிருந்து சிறிய செருக்குச் சிரட்டைக்குள் ஆயுர்வேதக் குளிசைகளை உரசி உரசி இஞ்சிச் சாற்றில் கரைத்துக் கொண்டிருந்தார்.

"இராசண்ணை 'ஆ' எண்டு ஒருக்கால் வாயைத் திற அண்ணை" என்று சொல்லியபடி அவரின் வாய்க்குள் சிவகுரு மருந்தை ஊற்றினார். 'மடக்' என்று இராசு மருந்தை விழுங்கினார். உடற் காயங்களுக்கும் பரியாரியார் கழிம்பு தடவினார். 'கண்டல்' காயங்களுக்கு இராசுவின் மனைவி சுடுதண்ணி ஒத்தடம் கொடுத்தாள். இரவு பத்துமணியாகியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவு முற்றத்தில் கூடியிருந்த சனங்கள் கலையவில்லை. ஒருசிலர் வந்து துக்கம் விசாரித்துச் சென்றனர். அரிக்கன் லாம்பு ஒன்று முற்றத்தின் நடுவில் எரிந்துகொண்டிருந்தது. பலமாக வீசிய சோழகக் காற்றால் 'பொக் பொக்' என்று அணைவதற்கு லாம்பு போராடிக் கொண்டிருந்தது. மாமிக் கிழவி ஒரு கடகப் பெட்டியை கொண்டுவந்து லாம்பு அணையாதவாறு காற்றடிக்கும் திசையில் ஒதுக்குச் சாத்தி வைத்தார்.

வாடிச்சாமான்கள் வாங்கப் பட்டணம் சென்ற சுப்பையாச்சம்மாட்டி திரும்பிவரும் வழியிலேயே எல்லாவற்றையும் அறிந்து கொண்டார். தன் வாடிக்குப் போகாமல் மண்டாடி இராசுவின் வீடு நோக்கிச் சென்றார். நான்கு தம்பிகளின் அண்ணனான சுப்பையா தருமர்போன்ற பொறுமைசாலி. யாருடனும் சண்டைக்குப் போகமாட்டார். தனது இராசண்ணர் படுத்துக் கிடக்கும் கோலத்தைக் கண்டதும் வாய்விட்டு அழுதார். மண்டாடியும் சுப்பையாவைப் பார்த்துவிட்டு விம்மி அழுதார்.

சுப்பையாவும் தம்பிமாருக்குப் பயந்துதான் வாழ்ந்தார். தான் ஏதாவது கதைத்தால் தம்பிமார் தனக்கும் அடிப்பாங்கள் என்பது அவருக்கு நன்கு தெரியும். இராசண்ணர்மீது சுப்பையா மிகுந்த பாசம் வைத்திருந்தார். கலியாணம் பேசி தனது சொந்த மைத்துனிக்கு சுப்பையாவை திருமணம் செய்து வைத்ததும் அவர்தான். முற்றத்தில் இருந்து பழைய நிகழ்வுகளை நினைத்து சுப்பையா கண்கலங்கி அழுதார். அவரின் தாடையும்சொண்டும் துடித்தன. கண்ணீர்த் துளிகள் நெஞ்சில் விழுந்தன. வானத்தைப் பார்த்து கண் இமைகளை வெட்டுவதும், தலை குனிந்து மண்ணில் விரலால் கீறிக் கீறி யோசிப்பதுமாக நீண்டநேரம் மண்டாடி இராசுவுக்குப் பக்கத்தில் இருந்தார். நேரம் இரவு ஒன்பது மணி கடந்து சென்றது.

மண்டாடி இராசுவை அடித்துக் கலைத்த பின்பு சுப்பையாவின் தம்பிமார் நால்வரும் தமக்குள் ஓர் தீர்மானம் எடுத்துக் கொண்டனர். தாம் செய்த பிழையை தமது அண்ணன்முன் எப்படியாவது சமாளிக்கவேண்டும் என நினைத்தனர். பின்னேரம் ஐந்து மணியளவில் ஒருதடவை கரைவலையை வளைப்பதற்கு முடிவெடுத்தனர். ஈரமான வலையை வள்ளத்தில் ஏற்றினர். வள்ளத்தைக் கடலில் இறக்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது தம்பி சின்னையா சுக்கான் பிடித்து வலையை வளைத்தான். அதன்பின் எல்லோருமாய் கரைவலையை இழுக்கும்போது வலை அசைந்து வருவதற்கு மிகவும் கடினமாய் இருந்தது. 'தூர்மடி நிறைய மீன் புகுந்துவிட்டது' என்ற மகிழ்ச்சியில் வலையை அவர்கள் வேகமாய் இழுத்தனர். தூர்மடி, தும்பு தும்பாய் கிழிந்தபடி. கரையேறியது. மதுவெறி, கோபம், கவலை, அனைத்தும் ஒன்றுசேர தொழிலாளிகள் எல்லோரும் திகைத்து நின்றனர்.

"டேய்! வலையைக் காயப்போடுங்கோடா" என்று சின்னையா கத்தினான்.

தொழிலாளிகள் ஓடி ஓடிக் கிழிந்த வலையை மண் புட்டியில் காயப்போட்டனர்.

"டேய்! பொடியா!... பொங்கலாண்டியை கெதியாய் சமைக்கச் சொல்லடா" என்று சரவணன் உரத்துச் சொன்னான். ஒரு பொடியன் பொங்கல் வாடிப்பக்கம் கால் கிளப்பி ஓடினான்.

பின்னேரம் ஆறு மணியளவில் சோற்றுக் கோப்பைகளைக் கைகளில் ஏந்தியவாறு எல்லோரும் தங்களின் வீடுகள் நோக்கிச் சென்றனர்.

நடந்த சம்பவம்:

சம்மாட்டி சுப்பையாவின் மூத்த தம்பியான சின்னையாவுக்கு சுக்கான் பிடித்து வலை வளைத்துப் பழக்கமில்லை. கடல் நிலத்தில் சேறுள்ள இடத்தில் தூர்மடியை இறக்கிவிட்டான். வலையை இழுக்கும்போது சேறு கோலியதால் தூர்மடி கிழிந்துபோயிற்று.

எல்லாவித இழப்புகளையும் நினைத்து நினைத்து சுப்பையா கண்ணீர் விட்டார். தொழில் செய்வதற்கு அவரிடம் இன்னொரு கரைவலை இருந்தமையால் மனதில் சிறிது ஆறுதல் அடைந்தார்.

மறுநாள் விடியப்புறம் ஐந்து மணிக்கே சுப்பையா கடற்கரைக்கு வந்தார். அவரின் தொழிலாளர் ஒவ்வொருவராக வந்து சேரும்போது காலை ஆறு மணி ஆகிவிட்டது. வள்ளத்தை கடலில் இறக்கி சுக்கான் பிடித்து சுப்பையாதான் வலையை வளைத்தார். அன்று முழு நாளும் தொழில் நடைபெற்றது. தனது தம்பிமாருடன் சுப்பையா கதைபேச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கவில்லை. மௌனம் சாதித்தார். ஏனையோருடன் இரண்டொரு சொற்கள் மட்டும் பேசினார். அன்று இரண்டாயிரம் ரூபாய் அளவில் மீன் பிடிபட்டது. பொழுது பட்டதும் தொழிலாளர் எல்லோரும் கலைந்து தமது வீடுகள் சென்றனர்.

மறுநாள் பொழுதுபட்ட இருட்டில் அரிக்கன்லாம்பு வெளிச்சத்தில் கணக்கன் செல்வக்குமார் அவசரமாய் ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். சுப்பையா பள்ளிப் படிப்புக் குறைந்தவர். அனுபவப் படிப்புடன் வாழ்ந்து வந்தார். தனது விரல்களை மடித்து மடித்து மனக்கணக்குப் பாப்பார். தனது கணக்கன் தம்பி இருக்குமிடம் சென்றார். "தம்பி இந்தக்கிழமை சந்தைக்காரப் பெண்டுகளுக்கு மீன் வித்த கணக்கு எவ்வளவெண்டு சொல்லு தம்பி?'' என்று கேட்டுக்கொண்டே அவனுக்கு முன்னே அமர்ந்தார். தன் மனதில் கணித்திருந்ததில் அரைவாசித் தொகையை மட்டும் கணக்கன் சொன்னான். "என்னடா தம்பி உன்ர கதை. உவ்வளவு மீன் பட்டும் உதோடா வந்த வருமானம்?'' என்று தன் குரலை சிறிது உயர்த்தி மன வேதனையுடன் தம்பியைப் பார்த்துக் கேட்டார் சுப்பையா.

"நீ என்னை கணக்குக் கேட்கிறியோ? அப்ப, என்னில நீ ஐமிச்சப்படுறாய் என்ன? அப்ப, நீயும் ஒரு மூத்தண்ணையோ?" என்று கேட்டுக்கொண்டே தமையனின் முகத்தில் 'பஞர்-பஞர்' என்று அடி போட்டான் கணக்கன் செல்வக்குமார்.

"என்னடா மோட்டு வேலை செய்யுறாய்" என்று சொல்லிக்கொண்டே பொங்கலாண்டி பொன்னையன் ஓடிவந்து கணக்கனின் கையைப் பிடித்து அடியை நிற்பாட்டினான்.

"சுப்பையாச் சம்மாட்டி 'கூ....' என்று அழத் தொடங்கினார். அவரின் உள்மூக்கு உடைந்து 'கதகத' என்று இரத்தம் சிந்தி வயிற்றில் விழுந்து உருண்டு தொப்புள் சுழிக்குள் நிரம்பி வழிந்து உடுத்திருந்த சாரத்தில் சிந்தியது. கணக்கன், கணக்குப் பெட்டிக்குள்ளிருந்த மிகுதிக் காசையும் எடுத்து தன் இடுப்பின் சாரத்தில் செருகிக்கொண்டு, இராச்சோற்றுக் கோப்பையை கையில் ஏந்தியபடி வேகமாய் தன் வீடு நோக்கி நடந்தான்.

இரண்டு நாளாக வாடிப்பக்கம் வராத கணக்கன் மூன்றாம் நாள் வந்து சேர்ந்தான். மண்டாடி இராசுவுக்கும் சம்மாட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பையாவுக்கும் தம்பிமார் அடிபோட்ட சம்பவம் ஊருக்குள் பரவலாகப் பேசப்பட்டது. சிலர் கேலியாகச் சிரித்தனர். செல்லையாச் சம்மாட்டி மன மகிழ்ச்சி அடைந்தார்.

தற்போது சுப்பையாவின் கரைவலைக்கு மண்டாடி இல்லை. எனவே சுப்பையாதான் சுக்கான் பிடித்து தன் கரைவலையை வளைத்தார். தம்பிமார் எவருக்கும் மண்டாடிப் பதவியை அவர் கொடுக்கவில்லை. இதனால் தம்பிமாரின் நெஞ்சுக்குள் கோபம் தணலாய் எரிந்தது.

அன்றைய தினம் நாலாம் தடவை வலையை வளைத்து உச்சி வெயில் சூட்டுக்குள் வலையை இழுத்துக் கொண்டிருந்தனர். சுப்பையாவின் இரண்டாவது தம்பி மணியன் தெற்குப்பக்கமாக ஓடிச்சென்று இரண்டு போத்தல் பனங்கள் குடித்தபின் ஆறுதலாக வந்து கொண்டிருந்தான்.

" ஆட்கள் குறைஞ்ச நேரம். ஏன்ரா தம்பி வலையை இடையில விட்டுட்டு கள்ளுக்குப் போனனீ?'' என்று சுப்பையா கேட்டார்.

"நான் அப்புடித்தான் செய்வன். என்னில விருப்பமில்லாட்டில் நான் தந்த ஒரு சோடி பவுண் காப்பை, இப்ப தா. நான் இப்பவே வீட்டை போறன்" என்று உச்சி வெயிலுக்குள் நின்றபடி கேட்டான் மணியன்.

"உதெல்லாம் இப்ப கதைக்கிற நேரமோடா தம்பி. வாடா வந்து வலையை இழடா'' என்று சுப்பையா தயவாக கேட்டார்.

"உனக்கொரு சம்மாட்டித் திமிரோ? இப்ப என்ர காப்பைத்தா, நான் வீட்டை போறன்'' என்று சொல்லிக்கொண்டே ஓடிப்போய், தமையன் சுப்பையாவைக் கட்டிப்பிடித்து விழுத்தினான் மணியன். தமையனின் முகத்தில் கைகளால் குத்தினான்".

சுப்பையாவுக்கு நேரே இளைய தம்பி சின்னையன் தனது அண்ணனில் மிகுந்த இரக்கமும் மரியாதையும் உள்ளவன். அவன் ஓடிவந்து தென்னங் குரும்பட்டை ஒன்றை எடுத்து அண்ணனுக்கு அடித்துக் கொண்டிருக்கும் தம்பியான மணியனின் முகத்தில் இரண்டு குத்து விட்டான்.

''ஐயோ'' என்று தன் முகத்தைப் பொத்தியபடி மணியன் நிலத்தில் சரியவும், சுப்பையா எழுந்து உசாரடைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ ஒடு இனிமேல் என்ர வலையில நீ நிக்கவேண்டாம் நீ ஒடு..." என்று கோபத்துடன் உரத்துப் பேசி மணியனை சுப்பையா துரத்திவிட்டான். அதன்பின் மூன்று தம்பிகள் சில தொழிலாளருடன் தன் கரைவலையை சுப்பையா இயக்கிக் கொண்டிருந்தான். அடுத்த வருடம் தொழிலாளர் தட்டுப்பாடு ஏற்பட்டது. கடனும் சிறிது சிறிதாகப் பெருகியது. ஆறாங்கால் பெண் குழந்தையும் சுப்பையாவுக்குப் பிறந்தது.

தந்தையின் பலவித துன்ப துயரங்களை சுப்பையாவின் ஆண் பிள்ளைகள் இரண்டும் கண்டு அனுபவித்தனர். மூத்த மகனின் கல்வி ஐந்தாம் வகுப்புடன் நிறுத்தப்பட்டது. அதன்பின் தகப்பனின் கரைவலையில் சேர்ந்து தந்தைக்கு உதவியாக வெயிலுக்குள் வலையை கட்டி அவன் இழுத்தான்.

இரண்டாவது மகன் சிவசம்பு பாடசாலை சென்று வந்தான். அத்துடன் காலையும் மாலையும் தகப்பனின் வலையை கட்டி இழுத்தான். அடுத்த சில வருடங்களில் கடன் துன்பம் குடும்பச்சுமை என்பன சுப்பையாவுக்கு மேலும் அதிகரித்தன.

"உன்ர மோன் சிவசம்புக்கு என்ன படிப்பு? கரைவலைக்கு ஆட்கள் காணாது. அவனையும் படிப்பால நிப்பாட்டண்ணை" என்று தம்பிமார் சுப்பையாவை தூண்டி விட்டனர்.

"உன்ர இளைய மோனையும் வலை இழுக்க விடடா. படிச்ச படிப்புப் போதுமடா" என்று சுப்பையாவின் தாயாரும் அவனை ஏவினாள். சுப்பையாவுக்கும் சிறிது மனம் மாறியது. இதுபற்றி தன் மனைவி கமலாம்பிகையுடன் ஆறுதலாக அவர் கதைத்தார்.

"என்ர உயிரைக் குடுத்தாவது என்ர பிள்ளை சிவசம்புவ நான் படிப்பிக்கப்போறன். உங்கள் ஒருதருக்கும் அதால ஒரு நட்டமுமில்லை. அவன்ர படிப்பை நீங்கள் ஒருத்தரும் குழப்பாதையுங்கோ" என்று கமலாம்பிகை உறுதியாகச் சொல்லி முடித்தாள்.

இதுசம்பந்தமாக அவர்கள் இருவரும் அடிக்கடி வாதிட்டனர். சில வேளைகளில் சுப்பையா மனைவிக்கு அடி உதை போடுவான். காலால் மிதிப்பான்.

'தாயின் சொற்படி சிவசம்பு படிக்கிறான்' என்ற கோபம் சுப்பையாவின் தம்பிமாருக்கும் மனதுக்குள் இருந்தது. சுப்பையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாத நேரம் பார்த்து ஒரு நாள் ஓட ஓட துரத்தித் துரத்தி சிவசம்புவின் முதுகில் சித்தப்பன் சரவணன் அடி போட்டான். ''கொப்பன்ர வலை இழுக்க ஆக்களில்லை. உனக்கொரு படிப்போடா.....'' என்று கேட்டுக் கேட்டு, ஓங்கி ஓங்கி அடித்தான்.

சித்தப்பன்மார் செய்யும் துன்பங்களைச் சகித்தவாறு சுப்பையாவின் மூத்த மகன் வாரித்தம்பி தந்தைக்கு உதவியாய் நின்று தொழிலைக் கவனித்தான். இளைய மகன் சிவசம்பு தாயாருக்கு உற்ற துணையாய் இருந்து உடன் பிறந்த சகோதரர்களைக் கவனித்தபடி ஒவ்வொரு வகுப்பாய் படிப்பில் உயர்ந்து சென்றான்.

அடுத்து வந்த வருடங்களில் சுப்பையாவுக்கு மீன்பிடி குறையத் தொடங்கியது. 'சுப்பையா வலைக்கு யாரோ சூனியம் செய்து போட்டாங்கள்போல' என்ற இரகசியப் பேச்சு ஊருக்குள் அடிபடத் தொடங்கியது. கொடுக்கல் வாங்கல் பேச்சால் சகோதரர்களின் ஒற்றுமையும் குலைவுற்றது. கடனும் பெருகியது. சுப்பையா ஏழாவது பிள்ளைக்கும் தந்தையானார். கிழமையில் இரண்டு மூன்று தடவை என்றாலும் மனைவி கமலாம்பிகைக்கு அடி உதை விழுந்தது. "கடன் தொல்லையால சுப்பையா பெண்டிலைப் போட்டு அடிச்சுக் கொல்லுறான்" என்று சனங்கள் கதைக்கத் தொடங்கினர். தாயின் துயரமான நிலை, தந்தையின் முட்டாள் புத்தி, சித்தப்பன்மாரின் கொடுமைகள் முதலிய இடர்களை அனுபவித்த சிவசம்பு மன வேதனையால் மிகவும் துடித்தான்.

தொடரும் அடி உதைகளைத் தாங்க இயலாத கமலாம்பிகை ஒருமுறை கணவனுடன் கோபித்துக்கொண்டு பிள்ளைகளுடன் சென்று தன் தாயாருடன் வசித்து வந்தாள். சுப்பையாவும் மூத்த மகன் வாரித்தம்பியும் கரைவலை வாடியில் தங்கினர். இளைய மகன் சிவசம்பு தாய் சகோதரர்களுடன் தன் ஆத்தை வீட்டில் வசித்தான். இதனால் சுப்பையாச் சம்மாட்டியின் குடும்பம் இரண்டுபட்ட நிலையில் வாழ்ந்து வந்தது. கமலாம்பிகையின் உடல் தற்காலிகமாக அடி உதைகளாலும் தப்பிப் பிழைத்தது. அந்த நிலையிலும் இளைய மகன் சிவசம்புவை கமலாம்பிகை தொடர்ந்தும் படிப்பித்தாள். எவரின் எத்துப் புத்திகளையும் அவள் கேட்கவில்லை "படிப்பை நிறுத்தி உன்ர இளைய மகனை உழைக்க விடன்" என்று சிலர் சொல்லியும் அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன்பாடவில்லை. காலையில் பழைய கஞ்சி, மதியம் பனம் பழம், இரவு ஒருநேரச்சோறு உண்ணும் வசதிதான் அப்போது அவர்களுக்குக் கிடைத்தது.

8

ஆங்கிலேய ஆட்சியின் எச்ச சொச்சங்களாக சுதந்திரத்திற்கு முன்பும் பின்பும் இலங்கையின் சில மாகாணங்களில் பல கல்லூரிகளில் வெள்ளைக்காரக் கத்தோலிக்கச் சுவாமிகள் ஆசிரியப்பணி செய்தனர். தாறு பாய்ச்சி வேட்டி உடுத்து தலைப்பாகை அணிந்த ஆசிரியர் சிலரும் தென் இந்தியாவிலிருந்து வந்து கற்றுக் கொடுத்தனர்.

தான் பிறந்து வளர்ந்த ஊரில் மட்டுமல்ல, அவன் படித்த கல்லூரியிலும் ஆனந்தன் சிறந்த ஆண் அழகனாகத் திகழ்ந்தான். யாழ்ப்பாணத்தில் அவன் கற்ற கத்தோலிக்கக் கலவன் கல்லூரியில் வெள்ளைக்கார ஆசிரியர்களும் கற்பித்தனர். ஆங்கில மொழியிலேயே பாடங்கள் எல்லாம் நடைபெற்றன. தமிழ்மொழி ஒன்று மட்டும் தமிழ்ப்பாடமாக கற்றுக் கொடுக்கப்பட்டது. தூரத்து வாழ்விட மாணவர்கள் தங்கியிருந்து படிப்பதற்கு வாய்ப்பாக அக்கல்லூரியில் விடுதி வசதிகள் அமைக்கப்பட்டு இருந்தன. ஆண்களுக்குத் தனியாகவும் அதிலிருந்து சிறிய தூரத்தில் பெண்கள் விடுதியும் அமைந்திருந்தன.

ஆனந்தன் படிப்பிலும் திறமைசாலி. விளையாட்டிலும் கெட்டிக்காரன். விசேடமாக அவன் 'கரபந்து' திறமையாக விளையாடுவான். யாழ்மாவட்ட கரபந்தாட்டக் குழுவில் விளையாடுவதற்குத் தகுதியும் பெற்றிருந்தான். அந்த விளையாட்டுக்குழு தென்னிலங்கை கரபந்தாட்ட சுற்றுப் போட்டிகளில் கலந்துகொள்வது வழக்கம். படிப்பில் ஆனந்தன் முதல் மாணவனாக எல்லாப் பாடங்களிலும் முன்னணியில் திகழ்ந்தான். அவன் அணியும் அரைக் காற்சட்டை மேலங்கி என்பன எப்போதும் மடிப்புக் குலையாது அழகாக இருக்கும். புதிது புதிதாக உடுப்புகள் அணிந்துகொள்வான். ஆனந்தன் சம்மாட்டி வைரமுத்துவின் ஒரே ஆண் மகன்.

வைரமுத்துச் சம்மாட்டி மூன்று வள்ளங்கள் வைத்திருந்தார். அவரின் இரண்டு வள்ளங்கள் தொழிலில் ஈடுபடும்போது மூன்றாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளத்தில் 'சாளைவலை' ஏற்றி மழை படாமல் மூடிக்கட்டி பாதுகாப்பாக வைத்திருப்பார். அந்த மூன்றாவது வள்ளம் தென்னைமர நிழலுக்குள் கடலோர மணற்புட்டியில் செல்லையாச் சம்மாட்டியின் வாடிக்கு மிக அண்மையில் இருந்தது.

ஆனிமாதம். மதிய நேரம். சம்மாட்டிகள் எல்லோரின் வலைகளும் அங்கொன்று இங்கொன்றாகக் கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்தன. செல்லையாச் சம்மாட்டியின் கரைவலைகள் இரண்டையும் கடலுக்குள் வளைத்துப் போட்டு இழுத்துக் கொண்டிருந்தனர். அன்றைய தினம் வெயில் கொஞ்சம் கூடுதலாகக் கொளுத்திக் கொண்டிருந்தது.

மீன் செவ்வல் பார்க்கும் அப்புக்குட்டியும் கரைவலையை இழுத்துக் கொண்டிருந்தான். அவனின் கழுகுக்கண்கள் உயர்ந்த கடலின்மீது பாரைமீன்கள் சில துள்ளி விழுவதைக் கண்டுவிட்டன. ஆழிப் புள் இனங்கள் அங்கே செங்குத்தாக விழுந்து எழும்பியவாறு பறந்து திரிந்தன. திடீரென அந்த இடத்தில் ஏறத்தாழ இரண்டு ஏக்கர் பரப்பளவில் பாரைமீன்கள் தொகையாகத் துள்ளிக் குதிக்கத் தொடங்கின.

"எடேய் பாரை கொதிக்குதடா. சம்மாட்டியார் பாரை கொதிக்குது" என்று அப்புக்குட்டி தன் கையால் காண்பித்தான். செல்லையாச் சம்மாட்டியார் 'சூடுபட்ட பன்றிமாதிரி' அங்கும் இங்குமாக ஓடித்திரிந்தார். மீன்செவ்வலோ மெல்ல மெல்ல கரைநோக்கி வந்துகொண்டிருந்தது.

அவரின் வெற்று வள்ளங்கள் இரண்டும் கடலில் நங்கூரம் போட்டு நின்றன. மற்றைய இரண்டு வள்ளங்களில் கரைவலைகள் இருந்தன. பாரைமீன் பிடிப்பதற்கு பலமான நூலால் பின்னப்பட்ட 'சாளைவலை' தேவை. அவரிடம் சாளைவலை இருந்தும் வள்ளத்தினுள் ஏற்றப்பட்ட நிலையில் தற்போது அந்தவகை வலை இல்லை.

என்ன செய்வதென்று தெரியாமல் அங்கும் இங்குமென ஓடித்திரிந்த சம்மாட்டியின் கண்களில் சாளைவலை ஏற்றி வைத்துள்ள வைரமுத்துச் சம்மாட்டியின் வள்ளம் தெரிந்தது. வைரமுத்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லையாச் சம்மாட்டிக்கு ஒருவகையில் மாமன் உறவு முறையானவர். "எடேய் பெடியள் எடேய் அப்புக்குட்டி வைரமுத்து மாமாவின்ர வள்ளத்தை தள்ளி வளைப்பமோடா?'' என்று சம்மாட்டியார் தன் தொழிலாளரைப் பார்த்துக் கேட்டார். அவர்களும் ஒரே குரலில் ''ஓமோம் சம்மாட்டியார்'' என்று ஒத்துக்கொண்டனர். உடனே வைரமுத்துச் சம்மாட்டியின் 'சாளைவலை வள்ளத்தை' கடலில் இறக்கி பாரைமீன் செவ்வலை மூடி வளைத்தனர். வலையின் மத்தியில் பாரைமீன்கள் துள்ளிக் குதித்தன. மெது மெதுவாக சாளைவலையை கரைக்கு இழுத்தெடுத்தனர்.

இருபது மடியில், இரண்டு முளநீளமான 'பாரைமீன்களை' மீட்டு எடுத்தனர். கடற்கரை மணலில் அங்கங்கே மீன்கள் குவிக்கப்பட்டிருந்தன. நேரம் பிற்பகல் மூன்று மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. முதல்நாள் கொழும்பு சென்ற பஸ்ரியான் சில்வாவின் லொறி பனிக்கட்டி இல்லாமல் ஊர் வந்து சேர்ந்தது.

"இனி என்ன செய்யுறது. கொழும்புக்கு மீனைப் பதப்படுத்தி அனுப்புறதுக்கு ஐஸ் வசதி இல்லை. எல்லாத்தையும் கீறிக்கிழிச்சு உப்புப் போட்டுக் கருவாடாக்குவம்" என்று இரண்டு கைகளையும் இடுப்பில் வைத்தபடி செல்லையாச் சம்மாட்டியார் தனது தொழிலாளருக்குச் சொல்லிக்கொண்டு நிற்கவும்.....

"டேய் பு.. மக்களே..... ஆரடா என்ர வள்ளம்வலையை எடுக்கச் சொன்னது?'' என்ற வைரமுத்தரின் உரத்த குரல், தெற்கேயுள்ள பனங்கூடலுக்குள் கேட்டது.

அரிசி மிளகாய் வாடிச்சாமான்கள் வாங்கவென பருத்தித்துறை சென்ற வைரமுத்தர் அரைப்போத்தல் சாராயத்தை வயிற்றுக்குள் போட்டுக்கொண்டு வீடு வந்து சேர்ந்தார். சீவல்காரத் தறுமன் வைரமுத்தர் வீட்டில் வைத்த கள் இரண்டு போத்தலையும் சாராயத்துக்குமேல் தனது வீட்டிலிருந்து குடித்துக்கொண்டிருந்தார். அப்போது களைக்க இளைக்க ஓடிவந்த அவரது தொழிலாளியான முதலியான் "சம்மாட்டியார் எங்கட சாளைவலையை செல்லையாச் சம்மாட்டியார் தள்ளி வளைச்சு நிறைய பாரைமீன் பட்டுக் கிடக்குது" என்று நடந்த சம்பவத்தை விபரித்துச் சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடி வெறியுடன் சேர்ந்து வைரமுத்தரின் இதயத்தில் ஆசையும் கலந்தது. குரல் எடுத்துச் சத்தம் போட்டபடி கடற்கரையை நோக்கி வேகமாகச் சென்றார். அவர் உடுத்திருந்த சாரத்தின் இடுப்பில் ஒரு கத்திப்பிடி மினுங்கிக் கொண்டிருந்தது.

செல்லையாச் சம்மாட்டியின் தொழிலாளிகள் கோவணத்துடன் இருந்து மீன்களின் வயிற்றைக் கீறி குடல் சினைகளை அகற்றிக் கொண்டிருந்தனர்.

"ஒரு பு.. மக்களும் என்ர மீனிலை தொடப்படாது" என்ற அதிகாரக் குரலுடன் வைரமுத்துச் சம்மாட்டியார் விரைந்து வந்தார். அவரை எதிர்முகம்கொண்டு நான்கு கவடு எட்டி நடந்து சென்ற செல்லையாச் சம்மாட்டி, அவருக்குப் பக்கத்தில் போய் நின்றார்.

"மாமா, என்ர வள்ளங்கள்ள 'சாளைவலை' ஏற்றி இருக்கயில்லை. அதுதான் மாமா உங்கட வலையை எடுத்து நான் வளைச்சனான். நீங்கள் எப்புடியோ என்ர மாமாதானே. அதால நீங்கள் ஒண்டும் பேசமாட்டியள் எண்டு எனக்கு நல்லாய்த் தெரியும் மாமா. தேவையெண்டால் எப்ப எண்டாலும் மீன் செவ்வல் வாற நாளையில என்ர சாளைவலையை எடுத்து ஒருநாளைக்கல்ல, இரண்டு மூண்டு நாளெண்டாலும் நீங்கள் வளையுங்கோ மாமா" என்று செல்லையாச் சம்மாட்டி தயவாகக் கூறினார்.

"பொத்தடா வாயை பு..... மோனே. மாமனும் மண்ணாங் கட்டியும்" என்ற தூஷணச் சொற்களுடன், வைரமுத்தர் பலவாறு உரத்துப் பேசத் தொடங்கினார்.

ஒருபோதும் நிமிர்ந்து கதைக்காத மாமன் இப்படி முகத்தில் அடித்தமாதிரிப் பேசியதும் செல்லையாச் சம்மாட்டி ஒருமுறை திடுக்கிட்டார். சில வினாடி விறைத்தபடி யோசித்து நின்றார்.

"அப்ப மாமா நாங்கள் அரைவாசி அரைவாசியாக பட்ட மீனை எடுப்பம். உங்கட வலை வள்ளத்துக்கு அரைவாசி. என்ர தொழிலாளருக்கு அரைவாசி. சரியோ மாமா? இது ஞாயம்தானே மாமா?" என்று சமாதானம் கூறினார் செல்லையா.

"எடேய் ஒருத்தரும் என்னோட நீதி ஞாயம் பேசப்படாது. இது என்ர வலை. என்ர மீன். இந்த இடத்தைவிட்டு எல்லாரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழும்புங்கோடா பு.. மக்களே" என்று கத்திக்கொண்டே தனது இடுப்பில் செருகி இருந்த கிறீஸ் கத்தியை உருவி எடுத்துத் கொண்டு தொழிலாளிகளைக் குத்துவதற்கு வைரமுத்தர் தயாரானார். தொழிலாளிகள் எல்லோரும் மரணபயத்தில் திடீரென எழும்பினர். 'பிச்சை வேண்டாம் நாயைப்பிடி' என்ற மனநிலையில் தங்கள் வாடியை நோக்கி, கால்கிளப்பி ஓடினர்.

"வைரமுத்து மாமா, நீங்கள் ஒருதரையும் கிறீசால குத்தவேண்டாம். எல்லா மீனையும் நீங்களே எடுங்கோ. எல்லாத்தையும் உந்த ஐந்தாண்பனைப் பிள்ளையார் கேட்டுக் கொள்ளட்டும்." என்று சொல்லி ஆழமான ஒரு பெருமூச்சை விட்டார் செல்லையா. ஈரமண் அப்பியிருந்த தன் தொடையையும் கோவணம் கட்டிய பின்பக்கத்தையும் தட்டித் துடைத்துக்கொண்டு தனது வாடிநோக்கி நிலத்தைப் பார்த்தபடி துக்கத்துடன் நடந்தார். அப்புக்குட்டி கடைக்கண்ணால் அவரைப் பார்த்தான். செல்லையாச் சம்மாட்டியின் கண்கள் சிவந்து கலங்கியிருந்தன.

வைரமுத்தர் தன் தலைப்பாகையைக் கழற்றி தனது வாடிப்பக்கம் நோக்கி, தொழிலாளரை இவ்விடம் வருமாறு சைகை காட்டி உலாவினார்.

"டேய் முதலி, நீ போய் கீறுகத்தியளைக் கொண்டு வாடா" என்று முதலியான் என்னும் தனது கையாளான தொழிலாளிக்கு வேலை சொன்னார்.

முதலியான் ஒரு வெற்றுக் கூடையில் ஏறத்தாழ முப்பது கீறுகத்திகளை வைத்து கூடையைத் தலையில் சுமந்தபடி ஓடி வந்தான்.

"அடேய் கோயிலான் எல்லாருக்கும் கள் சுமந்துவாடா" என்று ஆணையிட்டார்.

கோயிலான் என்னும் தொழிலாளி மண் பானையைத் தூக்கிக்கொண்டு, பனங்கள் வாங்கிவர விரைந்தான்.

கீறிக்கிழித்து உப்பிட்டு நன்றாகக் காய்ந்த ஒரு லொறி பாரைக் கருவாட்டுச் சிப்பங்களை, அந்த ஞாயிறு இரவு கொழும்புக்கு லொறிமூலம் வைரமுத்தர் அனுப்பி வைத்தார். வைரமுத்துச் சம்மாட்டியின் பணப்பெட்டியும் மகிழ்ந்தது. இந்நிகழ்விலிருந்து 'கிறீஸ்வைரமுத்தர்' என்ற பட்டப்பெயரும் அவருக்கு வழங்கலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறுக்கி எடுத்த தசைக்கட்டும் எடுப்பான தோற்றமும் உதய சூரியனின் நிறமும் கொண்ட அவள், இடை ஒடிய நடந்து செல்லும்போது இரட்டைப் பின்னல் அவளது பின் தொடைவரை நீண்டிருக்கும். அக்கல்லூரியில் அவளை மிஞ்சிய அழகியே இல்லை. ஆனந்தன் படிக்கும் அதே கல்லூரியில் 'பெண்கள் விடுதியில்' தங்கியிருந்து படித்துக் கொண்டிருந்தாள். பிற மாகாணத்தைச் சேர்ந்தவள். பெயர் மாலா.

அவள் எதற்காக ஆனந்தனைக் காதலித்தாள் என்று இறுதிவரை யாருக்கும் சொல்லவேயில்லை. ஆனால் ஆனந்தனை உயிருக்குயிராய் மாலா நேசித்தாள். அவனது அழகிலா? படிப்புத் திறனிலா? விளையாட்டில் அவன் பெற்றுக் குவிக்கும் புகழிலா?. இவற்றில், அவளின் இதயத்தில் குடிக்கொண்டது எது? அது அவளுக்குத்தான் தெரியும்.

ஆனால் ஆனந்தனோ அவளைக் காதலித்ததாகத் தெரியவில்லை. அவன் தன் படிப்பிலும் விளையாட்டிலும் மட்டும் கண்ணும் கருத்துமாயிருந்தான். சிலவேளையில் காதலைப்பற்றிய புரிதலே அவனுக்கு இல்லாமலும் இருந்திருக்கலாம்.

மாலாவோ அவனை விடுவதாய் இல்லை. அவனது நண்பர்கள் மூலம் தன் விருப்பைத் தூதுவிட்டாள். பயனில்லை. தன் தோழிமாருக்கு தனது வேதனைபற்றிக் கூறி அவர்கள்மூலம் முயற்சி செய்து பார்த்தாள். ஆனந்தனின் பதில் மறுப்புத்தான். பல இரவுகள் மாலா நித்திரையின்றிக் கிடந்தாள். சில நாட்கள் வகுப்புக்குத் தோற்றாமல் விடுதியிலே தங்கி இருந்தாள். ஆனந்தனின் மறுப்பு, மாலாவின் இதயத்தில் இறுகிய மதிப்பாக உயர்ந்து சென்றது.

ஒரு நாள், மாலா கடைத் தொடரிலிருந்து விடுதி நோக்கி வந்து கொண்டிருந்தாள். ஆனந்தன் எதிரே வருவதைக் கண்டாள். உடனே அவள் தெருவோரம் நிற்கும் புளியமரத்தின் நிழலுக்குள் ஒதுங்கி நின்றாள்.

"மிஸ்டர் ஆனந்தன் இங்க கொஞ்சம் வர்ரீங்களா?"

"என்ன மாலா? என்ன விசயம்?" என்று அவன் சர்வ சாதாரணமாக அவள் நிற்கும் இடம் சென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இஞ்சாரப்பா, நான் உம்மிலை ஆசைவச்சு இப்ப ரண்டு வருசத்துக்கு மேலாகுது. நான் எத்தினை தடவை உமக்கு கடிதம் எழுதியிருக்கிறன். எத்தினை முறை உம்மிடம் செய்தி அனுப்பியிருக்கிறன். நீர் ஏன் இப்புடி நடந்துகொள்ளுறாய்? நீ ஏன் என்னை வெறுக்கிறாய்?'' என்று, கிடைத்த அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு என்னும் ஆணாதிக்க இலக்கணக் கூறுகளை எடுத்தெறிந்து தன் இதயத்தில் உள்ளதைக் கொட்டித் தீர்த்தாள் மாலா.

"காதலும் கத்தரிக்காயும். நாங்கள் இங்க வந்தது படிக்க. படிச்சு முடிய அவரவர் ஊருக்குப் போகவேண்டியதுதானே. போய், படிச்சதுக்குத்தக்க ஏதாவது நல்ல உத்தியோகம் பாக்கவேண்டியதுதானே. அதை விட்டுட்டு காதல் என்ன காதல்? மண்ணாங்கட்டிக் காதல். சும்மா போம் போம்" என்று அவளின் பதிலுக்காக காத்திருக்காமலே, தான் தங்கும் விடுதி நோக்கி ஆனந்தன் வேகமாய் நடந்து சென்றான். இச்சந்திப்பை அக்கணத்திலேயே ஆனந்தன் மறந்து விட்டான். அவன் இதை பெரிய ஒரு விடயப்பொருளாக எடுத்துக் கொள்ளவில்லை. அடுத்த மாதம் தொடங்கவுள்ள இறுதித் தேர்வுதான் அவன் நினைவில் நின்றது.

மாலாவின் கண்களில் பொங்கிய கண்ணீர் வெள்ளம் மீண்டும் அவளின் இதயத்துக்குள் புகுந்தது. சிறிது நேரம் அந்த இடத்திலேயே மௌனமாய் நின்றபடி யோசித்தாள். அதன்பின் அவளுக்கே தெரியாமல் அவளது கால்கள் அவள் தங்குகின்ற விடுதி வந்து சேர்ந்தன. இரவு சாப்பிட உணவு மண்டபத்துக்குப் போகாமல் கட்டிலின்மீது சுருண்டு படுத்துக் கிடந்தாள். தோழிகள் கேட்ட வினாக்களுக்கு எதுவித பதிலும் அவள் கூறவில்லை.

மாலா மெல்லிய உடலமைப்பைக் கொண்டவள். இப்போது நாளுக்கு நாள் மேலும் மெலிந்துகொண்டே போனாள். படிப்பதுமில்லை. எழுத்துப்பணிகளை ஆசிரியர்களுக்குக் கொடுப்பதுமில்லை. அவளின் காதல் செய்தி அந்தக் கல்லூரி முழுவதும் காட்டுத்தீபோல் பரவியது. ஆனால் ஆனந்தன் ஏனோ ! அதில் அக்கறையின்றித் திரிந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது உற்ற நண்பன் சின்னத்தம்பி "டேய் மச்சான், உந்த அழகுப் பதுமையை ஆரும் வேண்டாமெண்டு சொல்லுவாங்களோடா எங்களுக்குக் கிடைக்காத ஒரு சொத்து உனக்குக் கிடைச்சிருக்கடா. அவள்தானே சொல்லுறாள் ' நீ ஓம் எண்டால் போதும். தான் படிப்பை முடித்து முதலில் உத்தியோகம் எடுப்பன். அதன்பிறகு தன்ர அம்மா அப்பாக்கள் ஒழுங்கு முறையாக வந்து உன்ர அம்மா ஐயாவிடம் மாப்பிளை கேட்டு, சீதன ஆதனம் தந்து, அதுக்குப் பிறகுதான் கலியாணம் செய்வமெண்டு'. டேய் மச்சான் இப்ப அவள் உன்னைக் கேட்டவளோடா 'வா செய்வம் எண்டு'. இப்படி பண்பாகவும் பச்சையாகவும் நண்பன் இடித்துரைத்தும் ஆனந்தனின் மனம் சிறிதும் சலனப்படவில்லை.

அவன் தனிப்பிள்ளையாய் வளர்ந்தமையால், தாய் தந்தை மட்டும்தான் உலகம் என்று இருந்தான்போலும்.

மாலா இறுதி முயற்சியாக, தான் மிகவும் நெருங்கிப் பழகும் அன்புக்குரிய 'சீதா' ரீச்சரின் கையைப் பற்றிக்கொண்டு, அழுதழுது தன் மனக்கிடக்கையை விளக்கினாள். ஒரு பெண்ணின் உள்ளம் இன்னொரு பெண்ணுக்குத்தான் யதார்த்தமாகப் புரியும் என்பர். மாலாவின் கண்ணீர் ரீச்சரின் கையில் சிந்தும் போது ரீச்சருக்கே விம்மலும் அழுகையும் வந்தது. இருவரும் சில வினாடிகள் அழுதனர். கண்ணீரைத் துடைத்தனர்.

சிறிது நேர மௌனத்தின் பின் ''சரி நீர் ஹொஸ்ரலுக்குப் போம். நான் நாளைக்கு ஆனந்தனிடம் பேசி எப்படியாவது ஒரு நல்ல முடிவுக்காக, கடும் முயற்சி எடுக்கிறன்'' என்று ஒரு ஆறுதல் வார்த்தையை ரீச்சர் கூறினார்.

"ரீச்சர் என்னைக் கை விட்டு விடாதேயுங்கோ... உங்களாலும் முடியாட்டி ?'' கண்களில் வழிந்த நீரை இரு கைகளாலும் துடைத்துக் கொண்டே நிலத்தைப் பார்த்தவாறு விடுதிநோக்கி மெது மெதுவாக பாதங்களை வைத்தபடி மாலா சென்று கொண்டிருந்தாள்.

மறுநாள், சீதா ரீச்சர் ஆனந்தனை தனிமையில் அழைத்து நீண்ட நேரமாய் எவ்வளவோ புத்திமதிகளைச் சொன்னார். வாழ்வியல் அசைவுகள்பற்றி விளக்கமாக விபரித்தார். ஆனால் அவன் திடமாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுத்து நின்றான். 'ரீச்சர்' என்ற நிலையிலிருந்து இறங்கி, அவனைக் கெஞ்சிக் கேட்டார்.

"தம்பி, நான் உமது அக்கா மாதிரிக் கேக்கிறன். நீர் இப்ப ஓம் எண்ணும். அது போதும். கலியாணம் காட்சிக்கு இன்னும் ஐஞ்சு பத்து வருசம் இருக்குது. நீர் இப்ப சம்மதிச்சால் மாலா மகிழ்வாள். உசாரடைவாள். தொடர்ந்து படிப்பாள். பரீட்சை பாஸ் பண்ணுவாள். அது உங்கள் இருவரின் வருங்கால வாழ்க்கைக்கு எவ்வளவோ நல்லாய் இருக்கும்" என்றவாறு சிறந்த அறிவுரைகளைக் கூறினார்.

ஆனந்தனின் மனமோ சிறிதும் மாறுகின்ற நோக்கமாயில்லை. ஒரு கட்டத்தில் 'இவனுக்கு ஏதாவது உளவியல் நோயோ? அல்லது இவனுக்கு கீழான் இல்லையோ?' என்ற மாதிரியும் ரீச்சர் நினைத்துப் பார்த்தார். இறுதியில் சீதா ரீச்சரின் முயற்சியும் கைகூடவில்லை. 'எப்படி நான் மாலா முகத்தில் நாளை முழிப்பது?' என்ற மனவேதனை ஒருபக்கமாக ரீச்சரின் மனதை வாட்டியது.

ஆனந்தனின் கடும்பிடியை மாலாவின் நெருங்கிய சினேகிதி மூலமாக மாலாவுக்கு ரீச்சர் சொல்லி அனுப்பினார். மறுநாள் வெள்ளிக்கிழமை. கல்லூரிக்கு ரீச்சர் லீவு போட்டார். தன் மனதை ஆறுதல் படுத்தும் நோக்கில் மூன்று நாளாக சீதா ரீச்சர் தன் வீட்டிலேயே தங்கி இருந்தார்.

சீதா ரீச்சரின் முயற்சியும் தோல்வியுற்றதால் மாலாவின் இதயம் எரிநட்சத்திரமாக வெடித்துச் சிதறியது. வெள்ளி சனி ஞாயிறு என்று தொடர்ச்சியாக ஊண் உறக்கமின்றி ஆழ்ந்த கவலையில் படுத்துக் கிடந்தாள். விடுதிக் காப்பாளப் பெண்ணும் சக மாணவிகளும் எவ்வளவோ ஆறுதல் வார்த்தைகளைக் கூறினர். ஆனால்..... மாலா செத்த பிணம்போலானாள். எதுவும் அவள் காதில் ஏறவில்லை.

திங்கட்கிழமையும் மாலா வகுப்புக்குப் போகவில்லை. 'மாலாவுக்கு கடுங்காய்ச்சல்' என்று கல்லூரி எங்கும் றொக்கற் வேகத்தில் செய்தி பரவியது. ஆங்கில மருத்துவரை அழைத்தனர். பரிசோதனை செய்தார். நேரம் தவறாது மருந்து கொடுக்கப்பட்டது. மறுநாளும் மருத்துவர் வந்தார். ஊசி போட்டுச் சென்றார்.

புதன்கிழமை ஆகியும் காய்ச்சல் விடவில்லை. தினமும் கூடிக்கொண்டே போயிற்று. மாலாவின் வீட்டுக்கு தந்தி பறந்தது. பிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டத்தில் இருந்து பதறியடித்து ஓடிவந்த தந்தை, தன் மகளை வீட்டுக்கு அழைத்துச் சென்றார். ஆயுர்வேதம் தொடக்கம் அலோபதிவரை எல்லாவகை மருத்துவ முறைகளும் செய்யப்பட்டன. கோயில்களுக்கு நேர்த்திகள் வைத்தனர். மாலாவுடன் சேர்ந்து 'துரோபதைஅம்மன்' முன்னிலையில் தீ மிதிப்பதாக தாயார் வேண்டிக்கொண்டார். மந்திர தந்திர வேப்பிலை அடிகள் பலவும் நடந்தேறின. ஆனால் காய்ச்சல் இன்னும் குறைந்தபாடில்லை. "சன்னி தலைக்கு ஏறிப்போச்சுது" என்று சொல்லி மருத்துவர்கள் கைவிரித்தனர்.

மாலா 'விழிகள் மேலே செருகியபடி' நெடும் படுக்கையாகக் கிடந்தாள்.....

எட்டாம் நாள் திங்கட்கிழமை, உதயப்பொழுதில் "ஆனந்தன்" என்று நீலம் படர்ந்த அவளின் காய்ந்த உதடுகள் முணுமுணுத்தன. அதைத் தொடர்ந்து விக்கல் எடுக்கும் சத்தம் சில தடவைகள் கேட்டன. அவ்வளவுதான்.....

மாலா இவ்வுலகைவிட்டு மறைந்தாள். பெற்றோர் உறவினரின் அழுகைப்பேரொலியில் காற்றும் அன்று கண்ணீர் விட்டது.

கல்லூரி ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், ஊர் உறவுகளென அந்த ஊர் இதுவரை காணாத பெருந்திரளான மக்கள் மாலாவின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். பலர் கதறி அழுதனர். பலர் தொடர்கண்ணீர் வடித்தனர். அன்றைய சோகத் திரட்சியானது பொதுவாக எல்லோரின் இதயங்களையும் உலுப்பி எடுத்தது. நண்பர்கள் எவ்வளவோ தெண்டித்தும் ஆனந்தன் 'சாவீட்டுக்கு' செல்லவில்லை. விடுதியிலேயே அவன் தங்கி இருந்தான்.

நாட்கள் பல நகர்ந்தன.....

அந்த வருடம் எஸ்.எஸ்.சி. இறுதித்தேர்வு தொடங்கியது. மாணவர்கள் எல்லோரும் நித்திரை முழித்து ஊன்றிப் படித்தனர். தேர்வும் சிறப்பாக நிறைவுற்றது. விடுதி மாணவர்கள் மூட்டை முடிச்சுகளுடன் தமது வீடுகளுக்குச் சென்றனர்.

சில மாதங்கள் கடந்தன.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பரீட்சைப் பெறுபேறு வெளியாகிவிட்டது' என்ற தகவல் அறிந்து விரைந்து சென்ற மாணவர் கூட்டம் கல்லூரியை மொய்த்துக் கொண்டது. அந்தக் காலத்தில் பத்தாம் வகுப்பு வெற்றி பெறுவது என்பது தற்போதைய பட்டப்படிப்புக்கு நிகரானது. பெரும்பாலான மாணவர்கள் தேர்வில் வெற்றி பெற்றனர். ஆனால் ஆனந்தன் Fail. இரண்டு பாடம் மட்டும்தான் Pass. கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்லூரியின் ஊழியர்கள் எல்லோரும் ஆனந்தனின் இந்தச் செய்தியால் அதிர்ச்சியடைந்தனர். அதை எவராலும் நம்பவே முடியவில்லை. வழமையாக வகுப்பில் பதினைந்து இருபதாவது தரத்தில் காணப்பட்ட மாணவர்கள்கூட அந்த அரசாங்க இறுதித் தேர்வில் வெற்றி பெற்றிருந்தனர்.

ஆனந்தன் அடர்த்தியான தன் தலைமயிரில் விரல்களைக் கோலி வைத்தபடி யோசித்துக்கொண்டே கல்லூரி முற்றத்தின் வேப்பமர நிழலில் அமர்ந்திருந்தான். அவனது கண்கள் கலங்கவில்லை. முகம் வாடவில்லை. 'திகைப்பூண்டில்' மிதித்த அதிர்ச்சியில் வானத்தை அடிக்கடி விழித்துப் பார்த்துக்கொண்டு இருந்தான்.....

பரீட்சையில் தேறிய மாணவர்களில் உயர்தர வகுப்பைத் தொடர்ந்து படிக்க வாய்ப்பற்றோர் அரசப்பணிகளுக்கு விண்ணப்பித்தனர். எழுது வினைஞர், காவல்துறையினர், நில அளவையாளர், தபால் அதிபர், கட்டிட ஓவசியர், ஆசிரியர் முதலிய பணிகளில் பலர் இணைந்தனர்.

வைரமுத்துச் சம்மாட்டியின் ஒரே மகன் ஆனந்தன் வசதியுள்ளவன். தன்னுடன் படித்து வேலை செய்யும் நண்பர்களுடன் தலைநகர் கொழும்பில் தங்கியிருந்தான். ஒவ்வொரு ஆண்டும் இடங்களை மாற்றி மாற்றி, பத்தாம் வகுப்புத் தேர்வை எழுதினான். நான்கு முறை எழுதியும் தேர்வில் அவனால் வெற்றிபெற முடியவில்லை. இறுதியில் முயற்சியைக் கைவிட்டான். தனது நண்பர்களுடன் தென் இலங்கையில் தங்கியிருந்தான். உல்லாசமாகக் காலம் கழிந்தது. விடுமுறை நாட்களில் தன்னுடைய ஊர் நண்பர்களுடன் சேர்ந்து ஆனந்தனும் தனது வீடு வந்து போவான்.

ஆண்டுகள் சில நகர்ந்தன. அப்போது 'ஆனந்தனுக்கு ஓராசாம். விசராக்கிப்போட்டுதாம்' என்று அவன் பிறந்து வளர்ந்த ஊரில் செய்தி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பரவியது. அச்செய்தி உண்மையெனப் பேசப்பட்டபோது ஒரு நாள், விசர் முற்றிய நிலையில் நண்பர்கள் அவனை புகையிரதத்தில் அழைத்துவந்து பெற்றோரிடம் ஒப்படைத்தனர்.

ஆனந்தன் திடீரெனச் சிரிப்பான். சத்தமாக ஏதோ கதைப்பான். இரவு நேரத்தில் எங்காவது ஓடுவான். காடுகளில் படுத்திருப்பான். அவனின் பாத அடியைப் பார்த்து பின்தொடர்ந்து தேடிச்சென்று, பெற்றோர் அவனை வீட்டுக்கு இழுத்து வருவார்கள். மந்திரவாதியிடம் காண்பித்தனர். யாழ்ப்பாணம் கொழும்பு நகரங்களுக்கு அழைத்துச்சென்று மருத்துவம் செய்வித்தனர். நாளும் பொழுதும் வைரமுத்துச் சம்மாட்டியாரின் பணமெல்லாம் கரைந்தது. அசையாச் சொத்துக்களை விற்றார். எப்படியும் தன் மகனை மீட்டு எடுக்க வேண்டுமென்று அவர் நாயாக அலைந்தார்.

சில ஆண்டுகளின் பின் ஆனந்தனின் வருத்தம் சிறிது குறைந்தது. அப்போது அவனுக்கு 'அரை விசர்' என்று ஊரில் பேசிக்கொண்டனர். இப்போது காட்டுப்பக்கம் அவன் ஓடி ஒழிவதில்லை.

காலை உணவு உண்டதும் வெள்ளை வேட்டி வெள்ளை மேற்சட்டை அணிந்து கொள்வான். இரண்டு மைல் தூரத்திலுள்ள அவனின் அத்தான் முறையான செல்லையாச் சம்மாட்டியின் வீட்டுக்கு, கடற்கரையால் நடந்து செல்வான். அங்கு சென்று வானொலி கேட்பது ஆனந்தனின் நாளாந்தத் தொழில். அப்பகுதியில் ஒருசில சம்மாட்டிமாரின் வீடுகளில் மாத்திரம் 'பிலிப்ஸ்' வானொலிப் பெட்டிகள் அப்போது இருந்தன.

காலையில் கடற்கரையால் நடந்து சென்றால், மதியம் ஒரு மணியளவில் அதே கடற்கரை வழியால் தமது வீடு வந்து உணவு உட்கொள்வான். பின்னர் மூன்று மணியளவில் மீண்டும் அங்கு சென்று வானொலி கேட்பான். மாலைக் கருக்கலில் தன் தாய் வீடு திரும்பிவிடுவான்.

ஆனந்தனின் இந்த நாளாந்த நடையைப் பார்த்த கரைவலைத் தொழிலாளிகள் இரக்கப்பட்டு தமக்குள் பலவாறு பேசிக்கொள்வர்.

"உந்தப் பிள்ளையின்ர வடிவுக்கும் படிப்புக்கும் கடவுள் ஏன்தானோ உந்தக் கெதியைக் குடுத்தான்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொடியன் கனக்கப் படிச்சுப்போட்டானாம் மச்சான். அதுதானாம் மூளையில அடிசுப்போட்டுதாம்"

"இல்லையடாப்பா ஆரோ மருந்து போட்டுட்டாங்களாம்"

"ஏதோ, பொம்பிள விசயத்தில சிநேகிதன் ஒருதன் மருந்து போட்டுட்டான் எண்டமாதிரியும், கதை அடிபடுகுது மச்சான்".

'அவல் போட்ட பல்லில்லாத முதியோரின் வாய்மாதிரி' தமது வாய்க்கு வந்தபடி ஊர் மக்கள் பலவாறு பேசிக்கொண்டனர். ஆனந்தன் யாருடனும் பேசமாட்டான். ஏதோ ஒன்றை நினைத்து அடிக்கடி சிரிப்பான். நடந்து செல்லும்போது திடீரென நின்று கடலைப் பார்த்து ஏதோ கதை சொல்லி வாய்விட்டுச் சிரிப்பான். மீண்டும் நடந்து செல்வான்.

இவ்வாறாகப் பத்து ஆண்டுகள் கடந்தன. ஒருநாள்.....

'குத்தடி' எனப்படும் சிறிய ஒரு கட்டு மரத்தில், கண்டற்பட்டைச் சாயம் தோய்த்த பாயைப் பொருத்திக்கொண்டு காற்றுத் தள்ளிய திசையில் உயர்கடல் நோக்கி தனியொருவனாக முதுமையை எட்டிப் பிடிக்கும் வைரமுத்தர் தொழிலுக்குப் போய்க் கொண்டிருந்தார். தூண்டில் போட்டு மீன் பிடிப்பதுதான் அவரின் தற்போதைய தொழில். தன் உயிர்போன்ற பிள்ளை ஆனந்தனின் நிலையால் தாங்கொணாத துயரம் நெஞ்சைப்பிளக்க, குந்தி இருந்தபடி அவர் கட்டுமரத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார்.

தென்னைமர நிழலில் கடற்கரை மணற்புட்டியில் சாய்ந்து படுத்திருந்த இராமர் என்னும் முதியவர், தனக்குப் பக்கத்தில் அமர்ந்து இருப்போர்க்கு அந்தக் கட்டுமரத்தைச் சுட்டிக்காண்பித்து: "உந்தக் 'கிறீஸ் வைரமுத்தன்' இளமையில ஆடாத ஆட்டமோ குதிக்காத குதியோ துள்ளாத துள்ளலோ " என்று, வைரமுத்தரின் வரலாற்றை அவர்களுக்கு விளக்கமாக ஒரு உபகதைபோல் சொல்லிக் கொண்டிருந்தார்.

அசையும் சொத்துக்கள் அசையாச் சொத்துக்கள் முழுவதையும் விற்றுக் கிடைத்த பணத்தில் வைரமுத்தர் தன் மகன் ஆனந்தனின் மருத்துவச் செலவுகளை ஈடுசெய்தார். அவர் தூண்டிலில் பிடித்துவரும் மீனை 'சம்மாட்டி ஆச்சியென' மதிப்பும் மரியாதையுடனும் ஊருக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்துவந்த அவரின் மனைவி, தன் தலையில் சுமந்து சென்று சந்தையில் விற்று வருவார். அன்றாட உணவுத் தேவையுடன் அவர்களின் காலம் கழிந்தது. இறுதிவரை இதுவே அவர்களின் வாழ்க்கையாக நிறைவுற்றது.

9

சுப்பையாச் சம்மாட்டியும் மூத்த மகன் வாரித்தம்பியும் தமது கரைவலை வாடியிலேயே தங்கியிருந்து வாழ்ந்தனர். மனைவி கமலாம்பிகையும் ஏனைய பிள்ளைகளும் அவளின் தாய் வீட்டில் வாழ்ந்து வந்தனர். சுப்பையாவின் வாழ்க்கை ஏறத்தாழ விவாகரத்துப் போன்ற நிலையில் இருந்தது. கடன் தொல்லைகள், தம்பிமாரின் தொல்லைகள், தொழிலாளிகள் தன்னைவிட்டு விலகிச் செல்லுதல் போன்ற சிக்கல்களால் இன்னும் சுப்பையாவின் கவலை அதிகரித்தது. மீன்பிடியும் குறைவடைந்து சென்றது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையின் விடியப்புறத்தில் நான்கு மணிக்கே ஐந்தாண்பனைப் பிள்ளையார் கோயில் சென்று தோய்ந்து முழுகி கோயிலைச் சுற்றிக் கும்பிட்டு அதன்பின்பு வந்து கடலில் வள்ளம் தள்ளுவதுதான் சுப்பையாவின் வழக்கமாய் இருந்தது. அந்தப் பிள்ளையார் கோயில் திருவிழாவுக்கு 'வருடாவருடம் மேளம் பிடிப்பேன்' என்ற நேர்த்தியையும் அவர் ஒழுங்காக நிறைவேற்றி வந்தார்.

இராவணனின் போர்க்களத்து நிலையை 'கடன்பட்டார் நெஞ்சம்போல' என்று கம்பர் வர்ணிப்பார். அதுபோல் கடன்கள் ஏற ஏற சுப்பையாவின் மனம் பட்ட வேதனைபற்றிச் சொல்வதற்கோ வார்த்தை இல்லை. தன் மனைவியின் சொல் கேளாதது, தம்பிமாரின் தூண்டுதலால் கரைவலையைத் தொடங்கியது, தம்பிமார் தன்னை நட்டாற்றில் கை விட்டது முதலிய தவறுகளையும் துன்பங்களையும் இப்போது மீட்டி யோசித்தார். அடிமனம் கலங்கினார். கவலைப்பட்டு இனி என்ன பயன்? யாராவது கொடையாகத் தரப்போகிறார்களா? அவர்பட்ட கடனை எப்படியாவது அவர்தானே கொடுத்து முடிக்கவேண்டும். எனவே சுப்பையா கடுமையாக உழைத்தார். அவர் நல்ல பலசாலி. மூவரின் தொழிலை, தான் ஒருவனாக ஓடியாடிச் செய்தார். எல்லோரும் தூங்கும்போது இரவு நேரத்தில் அரிக்கன்லாம்பு வெளிச்சத்தில் புது வலையைப் பின்னுவார். கிழிந்த வலையைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரிசெய்வார். எப்படியாவது இந்தக் கடனிலிருந்து மீளவேணும் என்னும் மன உறுதியுடன் அவர் தொடர்ந்து செயற்பட்டார்.

சுப்பையாவின் வலையில் அவரின் முதலாவது தம்பி சின்னையா என்பவன் மீன் செவ்வல் பார்ப்பதில் திறமை கொண்டவன். அன்றைய தினம் ஒரு சனிக்கிழமை. சூரியன் உச்சி சாய்ந்த நேரம். சின்னையாவின் கண்களில் கடலில் சிவப்பாக ஏதோ தெரிந்தது. உடனே எல்லோரையும் உசாரடையச் செய்தான்.

"ஏதோ ஒரு மீன்சாதி கரையை நோக்கி வருகுது. ஆனால் உது நெத்தலியில்லை" என்று சொன்னான் சின்னையா. மெல்லிய சோழகக் காற்றும் வீசிக்கொண்டிருந்தது. வள்ளத்தைத் தள்ளி வேகமாக அந்த மீன் செவ்வலை மூடி வளைத்தனர். வலை கரையை அண்மிக்கும்போது எல்லோரின் முகத்திலும் மகிழ்ச்சி தெரிந்தது. ஒன்று இரண்டு என்று எண்ணி எண்ணி மடிமாற்றி இழுத்தனர். ஈற்றில், இருபத்தைந்து மடி நகரைமீன் (Red mullet) தொட்டம் தொட்டமாகக் கடற்கரை மண் புட்டியில் குவிந்து கிடந்தன.

நகரைமீன் என்பது பனிக்கட்டியில் பதனிட்டு அனுப்புவதற்கு உவப்பானதல்ல. எனவே கருவாடு ஆக்குவதற்காக அவற்றின் செதில்களை அகற்றி மீன்களின் வயிற்றைக் கீறிக்கிழித்து குடலை அகற்றினர். பொடியன்கள் அவற்றைக் கூடையில் அள்ளி எடுத்து கடல் நீரில் கழுவினர். அதன்பின் உப்புப்போட்டு கடற்கரை மண் புட்டியில் கிடங்கு வெட்டி, அதற்குள் உப்புமீனைக் கொட்டி மூடினர். இந்த உத்தியில் மீனில் நன்றாக உப்பு ஊறிப்பிடிக்கும். அத்தோடு பாதுகாப்புங் கூடியது. நாய் பூனைகளால் இரவில் அவற்றைக் களவாட முடியாது.

பொழுது சாய்ந்தநேரம். ஐந்துமணி இருக்கும். முப்பது போத்தல் கள்ளை தலையில் சுமந்தபடி நற்குணம் வந்து சேர்ந்தான். பபூன்சேகரி 'கள்' ஊறிய மண் பானையை இறக்கிப் பாதுகாப்பாக மண்ணில் வைத்தான். சின்னையா ஒரு பெரிய தகரப் பேணியில் கள்ளை அளந்து அளந்து எடுத்துக் கொடுக்கவும், சந்திரன் என்னும் பொடியன் ஒழுங்கு முறைப்படி ஒவ்வொரு தொழிலாளரின் கையிலும் கள்ளை வழங்கினான்.

நேரம் முன்னிரவு கடந்தும் மீன் வெட்டும் தொழில் தொடர்ந்தது. இருபத்தைந்து மடி மீனையும் வெட்டிக்கழுவி உப்பிட்டு மண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடங்கில்போட்டு மூடி, தொழிலாளிகள் எல்லோரும் குளித்து முடிய 'ஆறாம்மின்' நட்சத்திரங்கள் மேற்கு வானில் சரிந்தபடி நின்றன. நிமிர்ந்து பார்த்து "சாமம் இரண்டு மணி இருக்கும்போல" என்று முதிய தொழிலாளி தம்பிஐயர் சொல்லவும், ஏனைய தொழிலாளிகள் எல்லோரும் தமது வீடுகள் நோக்கிச் சென்றனர். மனைவியை இழந்த தம்பிஐயரும் பொடியன்களும் சோழகக்காற்று தமது முகத்தில் மண்ணை வாரி இறைக்காதபடி, கிடுகுத்தட்டி ஒதுக்கில் படுத்துக்கொண்டு நித்திரைக்குத் தயாராகினர். அரிக்கன்லாம்பைக் கொளுத்தி, மரக்கம்பு ஒன்றை நிலத்தில் நாட்டி அதன் நுனியில் லாம்பைக் கட்டி, மீன்கிடங்கை நாய் பூனைகள் கிண்டாதவாறு எச்சரிக்கை வெளிச்சம் நிறுத்தினர்.

'நகரை' என்பது கொழுப்பு அதிகமாக உள்ள ஒருவகை மீன் இனம். அதன் குடல்களை கூடையில் அள்ளி அள்ளி, பொடியன்கள் கடலில் கொட்டிவிட்டனர். அதன் கொழுப்பு நீரின்மேல் மிதந்து விசாலித்து நிலவு வெளிச்சத்தில் கடலின் மேற்பரப்பு கண்ணாடிபோல் பளபளத்தது. தமது இரைப்பை நிறைய மீன்குடலைத் தின்ற நாய்கள், பலூன்போல் வயிறுகள் வீங்கியபடி பல்லை இளித்துக் கடலைப் பார்த்து ரசித்துக்கொண்டு நின்றன. அங்கும் இங்குமாக அலைந்து நிலத்தை முகர்ந்து திரிந்தன. சில நாய்கள் குந்தி இருந்துகொண்டு கடலை நோக்கி ஊழையிட்டன. மீன்குடல் மீன்தலைகளை வயிறு புடைக்கத் தின்ற நாயொன்று 'கக்... கக்...' என்று கக்கியபடி சத்தி எடுத்தது.

"நாயள் கடலைப் பார்த்து ஊழையிடுகுதுகள். மீன்வகை இன்னும் கூடுதலாகப் படப்போகுதுபோல" என்று சொல்லிக் கொண்டே மண்ணைக் கையால் குவித்து அதன் மேல் துவாய்த்துண்டை விரித்து அதைத் தலையணையாகப் பாவித்து, சாரத்தால் உடலைப் போர்த்தியபடி தம்பிஐயர் நித்திரைக்குச் சரிந்தார். பொடியன்கள் பகலில் நடைபெற்ற சில பகிடிச் சம்பவங்களைப் பறைஞ்சுகொண்டே கொறட்டைவிடத் தொடங்கினர்.

கடன்பட்ட மூளைக்கு உறக்கம் குறைவுதானே. சம்மாட்டி சுப்பையா நேரத்துடன் எழுந்து கடற்கரைக்கு வந்தார். பொழுது காலித்து நேரம் ஆறுமணியளவில் இருக்கும். மீன் கிடங்குகளுக்கு காவலுக்குப் படுத்தோர் இன்னும் ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பிஜயரின் கோவணம் விலகியிருந்தது. மூச்சை இழுத்து இழுத்து அவர் கொறட்டை விடும்போது உப்புமண் ஒட்டியிருந்த அவரின் விதைகள் மூச்சுக்கேற்ப மேலும் கீழும் அசைந்து கொண்டிருந்தன.

சுப்பையா கடலோரத் தென்னையில் சாய்ந்து இருந்துகொண்டு கடல் நோக்கம் பார்த்தார். உயர்ந்த கடலில் ஒருவித மீன்கலக்கு தெரிந்தது. 'எப்படியும் மதியத்துக்குப் பிறகு உந்தக் கலக்குத்தண்ணி கரைக்கு வந்துவிடும்' என்று மனதுக்குள் யோசிக்கும்போது நேரம் ஏழு மணியைக் கடந்தது.

தொழிலாளிகள் ஒவ்வொருவராக தமது வீடுகளிலிருந்து கடற்கரை வந்து சேர்ந்தனர். வாடியில் காலைச்சொதியுடன் சோறு உண்டனர். அதன்பின் மீன் கிடங்கை மண்வெட்டியால் வழித்து மண்ணை எடுத்தனர். கிடங்கிலிருந்த மீன்களை சிலர் கூடையில் போடப்போட, சிலர் கடல் நீரில் மீன்கூடையை குலுக்கிக் குலுக்கி கழுவினர். ஏனையோர் கயிற்றுப் படங்கில் உப்புமீனை பரத்தி வெயிலில் காயவிட்டனர்.

சுட்டெரிக்கும் வெயில் காலம். மாலை ஐந்து மணியளவில் உப்புமீன் நன்றாக முறுகிக் காய்ந்திருந்தது. மறுநாள் நகரைக் கருவாட்டுச் சிப்பங்களைக் கட்டினர். அவற்றை இரண்டு லொறிகளில் கொழும்புக்கு அனுப்பி வைத்தனர்.

முறிந்து உடைந்து நொருங்கி விற்பனைக்குப் பயன்படாத கருவாட்டுத் தொகுதி ஏறத்தாழ இருநூறு இறாத்தல் மட்டில் எஞ்சி இருந்தது. நகரைக் கருவாட்டிலுள்ள கொழுப்பு தனிரக ருசி கொண்டது. நகரைக் கருவாட்டைக் கோதுமை மாவு ஓடியல் மாவு என்வனவற்றில் கலந்து வெங்காயம் மிளகாய் கீரை முதலியன சேர்த்து 'கருவாட்டுப்பிட்டு' எனும் சுவைமிகு உணவைத் தயாரிப்பர்.

''சுப்பையாச் சம்மாட்டி போற வாற சனங்களுக்கு எல்லாம் உதிர்ந்த நகரைக்கருவாட்டை சும்மா குடுக்கிறானாம்'' என்று பறைஞ்சபடி ஆண் பெண் முதியோர் பலர் அவரது வாடியை நோக்கி விரைவாகச் சென்றனர்.

"இந்தாருங்கோ, கொண்டுபோய் புட்டு அவிச்சு நல்லாத் தின்னுங்கோ" என்று சொல்லிச் சொல்லி எவரின் முகமும் வாடாதபடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரைக் கருவாட்டை அள்ளி அள்ளி சுப்பையா கொடுத்து அனுப்பினார். இச்செய்தியை கமக்காரர், குடிமக்கள், சீவல்காரர் என்போரும் அறிந்து ஒன்று இரண்டாக வந்துகொண்டு இருந்தனர். அவர்களுக்கும் சிரித்த முகத்துடன் சுப்பையா அள்ளிக் கொடுத்து அனுப்பி வைத்தார்.

அவ்வூர்களின் தெற்கே வயல் தோட்டம் தென்னை பனைகளுக்கு வாய்ப்பான களிமண்நிலம் உண்டு. அங்கே வளவு வீடுகள் அமைத்து அடர்த்தியற்ற குடிகளாக விவசாய மக்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களின் உணவுத் தேவைக்கான மீனை கடலோர மக்கள் ஒரு கொடையாகவே வழங்கி வந்தனர். அவர்களுக்கு மாத்திரமல்ல, யாராவது "கறிமீன் தாருங்கள்" என்று கேட்டு வந்தால் அவர்களுக்கும் இலவசமாக மீன் கொடுத்து அனுப்புவது அப்பகுதிக் கடற்கரை மக்களின் பண்பாகும்.

உதிர்ந்த நகரைக் கருவாட்டை வழங்கியதில் சுப்பையாவுக்கு மனநிறைவு. ஆனால் மனைவி மக்களைப் பிரிந்து வாழ்வதால் மன வேதனையுடன் அவர் காணப்பட்டார். எனவே இரண்டு போத்தல் இராக்கள் குடிப்பம் என்று நினைத்தபடி கள்ளுக்கொட்டில் நோக்கி தெற்குப் பக்கமாக நடந்தார் சுப்பையா.

நாட்கள் பல நகர்ந்தன

ஒருநாள் பனைவட்டை பார்த்தபடி கண் இமைகளை வேகமாய் வெட்டி வெட்டி யோசித்தவாறு பனை நிழலில் தனிமையில் இருந்தார் சுப்பையா. அவருக்குக் கிட்டவாக அரக்கிப்போய் பக்கத்தில் இருந்து, தனது அடித் தொடையில் ஒட்டியிருந்த மண்ணை கையால் தட்டியபடி முதியவர் தம்பிஐயா கதைக்கும்போது அவரின் வெற்றிலை வாய் தாளம்போட்டது.

"எட சுப்பையா உப்புடி எத்தனை நாளைக்கடா தனிய இருக்கப் போறாய். உன்ர மனிசியோட ஒற்றுமைப்பட்டு வாழடா தம்பி. இனிமேல் உன்ர தம்பிமாற்ர சொல்லைக் கேளாதையடா தம்பி. அவங்கள் தங்கட மனிசிமாரோட நிம்மதியாய் இருந்துகொண்டு உன்னைப் பேய்க் காட்டுறாங்களடா தம்பி. நான் உன்ர மனிசியோடையும் அவளின்ர தாயோடையும் ஒருக்கால் கதைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவோடா தம்பி" என்று விசுவாசமான அன்புடன் கேட்டார் தம்பிஐயா.

சுப்பையா சில வினாடிகள் தலை குனிந்து யோசித்துக் கொண்டிருந்தார்.

"உம் சொல்லு கனக்க யோசியாத. நீ என்ன, உன்ர தம்பிமாருக்கு பயப்புடுறியோ?"

என்று கேட்டவாறு ஒரு கிள்ளுப் புகையிலையைத் திருகி எடுத்து வாயை 'ஆ' எனத்திறந்து தனது கொடுப்புக்குள் திணித்தார் தம்பிஐயா.

சுப்பையா 'ஓம்' என்று சைகை மொழியில், தன் தலையை மட்டும் சில தடவை ஆட்டினார். மனைவியை நினைக்கும்போது அவருக்கும் சிறிது ஆவலாய் இருந்தது.

"சின்னமாமி எணோய்..... நான் தம்பிஐயாவணை'' என்று வளவுப்படலையில் நின்று சுப்பையாவின் மாமியை கூப்பிட்டார் தம்பிஐயா.

"ஆர் உது.. மருமோனே வாங்கோ.. வாங்கோ'' என்று சின்னன் மாமி, தம்பிஐயரை வரவேற்றார். செருக்குச் சிரட்டையில் சுடச்சுடத் தேநீர் கொடுத்தார். வெற்றிலைத் தட்டத்தை கொண்டுவந்து வைத்தார். மண் முற்றத்தில் இருந்தபடி இருவரும் கதையைத் தொடங்கினர்.

சுப்பையாவின் மாமி சின்னன் ஆச்சி, தூரத்து உறவில் தம்பிஐயாவுக்கும் மாமி முறைதான்.

எனவே பலதையும் பாசஉணர்வுடன் இருவரும் பேசிக்கொண்டனர்.

"ஏழெட்டைப் பெத்துப்போட்டு இனியும் ஒரு கோவமோ? இந்த வயதிலயும் ஒரு புறிவிடையோ?" என்று தான் வந்த நோக்கத்தை தம்பிஐயா ஆரம்பித்தார்.

"அதுதானே மருமோன். எண்டாலும் உவர் ஒரு இயமப்பிறவி. என்ர கடைக்குட்டியைப் போட்டு காலால மிதிச்சவராம். மோட்டடி அடிக்கிறவராம். அவளை ஒருக்கால்பார். பாவம். இந்த வயசில எலும்பும் தோலுமாய்க் கிடக்கிறாள். அதுபோதாதெண்டு உடம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினவெடுக்க, வருசத்துக்கொரு பிள்ளையும் வேற'' என்று மனம் சலித்தபடி பேசினார் சின்னன் மாமி.

"ம்... இனி என்ன செய்யுறது மருமோன். நீங்களும் என்ர முற்றம் தேடி வந்திட்டியள். இனி நீங்கள்தான் மருமோன் எல்லாத்துக்கும் பொறுப்பு" என்று மாமியும் தம்பிஐயா மருமகனும் ஒரு தீர்மானத்துக்கு வந்தனர்.

சுப்பையாச் சம்மாட்டி மனைவியுடன் உறவானார். தன் மனைவி மக்களை மாமியார் வீட்டிலிருந்து அழைத்துவந்து தனது வளவில் குடியிருத்தினார். தனது இரண்டாவது மகன் சிவசம்புவைப் பார்த்தார்.

"மோன, இனி நீ பிறத்தியாற்ர வலையை இழுக்கப் போகாத. ஐயாவின்ர வலையை இழு. உன்ர சித்தப்பாமார் மோடன்கள். அவங்கள் ஏதும் கதைச்சால் நீ ஒண்டும் நிமிர்ந்து பேசாத. தெரியுதோ..? என்று சொல்லவும், மகனும் ஓம் ஓம் என்று தலையை ஆட்டினான்.

சிவசம்புவுக்கு இப்போது தகப்பனின் வாடியில் சாப்பாடு. பள்ளிக்கூடம் முடிந்ததும் அவன் ஓடோடி வாடிக்கு வருவான். பொங்கலாண்டி பிரான்சிஸ் மாமா அன்பாக சோறு போட்டு குழம்பு ஊற்றிக் கொடுப்பார். மீன் நண்டு விருப்பத்துக்கு வைப்பார் இரண்டாம்முறை சோறு போட்டுச் சொதி ஊற்றி ஊசிக்கணவாய் கொடுப்பார். சிவசம்பு வயிறு நிறைய உண்பான். சொதியை உறிஞ்சி உறிஞ்சிக் குடிப்பான். அந்த உசாரில் தகப்பனின் கரைவலையை இழுக்கக் கடற்கரைக்கு ஓடுவான்.

சுப்பையாவின் தம்பிமாரில் ஒருவன் வேலுச்சாமி மோட்டுக்குணம் கொண்டவன். அதிகம் கோபப்படுபவன். நெஞ்சுக்குள் கோபம் வைத்து பழியைத் தீர்க்கும் போக்குடையவன். அன்று ஒரு வெள்ளிக்கிழமை. "இன்றைக்கு எல்லாரும் நேரத்துக்குப் போகலாம்" என்று பள்ளிக்கூடத் தலைமை வாத்தி சொன்னார். மத்தியானச் சுடுமணலில் ஓட்டமும் நடையுமாய் மாணவர்கள் வீடு நோக்கி விரைந்தனர்.

சிவசம்பு தன் வீடு செல்லவில்லை. நேரே தந்தையின் கரைவலை வாடிக்கு வந்தான். வயிறுநிறைய உண்டான். கரைவலையை கட்டி இழுத்தான். நேரம் மூன்று மணி இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென அவன் முதுகில் படீர் என்றொரு அடி விழுந்தது. துடித்துப்போன சிவசம்பு திரும்பிப் பார்க்கும்போது அடுத்த முறை அடிப்பதற்கு வேலுச்சாமி கையை உயர்த்தினான். சடுதியாக வலையைக் கைவிட்டு நொடிப்பொழுதில் தெற்குத் திசையை நோக்கிச் சிவசம்பு ஓட்டம் பிடித்தான். வேலுச்சாமி துரத்தித் துரத்தி அவன் முதுகில் அடி போட்டுக் கலைத்தான்.

"உன்ர கொம்மாவின்ர சொல் கேட்டு அந்நியன்ர வலை இழுத்தனியோட்டா உனக்கொரு படிப்போடா நீ படிச்சு என்னடா கிழிக்கப் போறாய்?"

என்று கேட்டுக் கேட்டு, சித்தப்பன் அடித்தான். "ஐயோ... என்ர அம்மா.." என்று கத்திக்கொண்டே குதிக்கால் குண்டியில் படும்படியாக சிவசம்பு கால்கிளப்பி ஓட்டம்பிடித்தான்.

இருநூறு மீற்றர் தூரமளவில் கலைத்த பின் மூச்செறிந்து நின்ற வேலுச்சாமி:

"டேய்! நீ படிச்சு என்ன பெரிய அரசாங்க ஏஜெண்டாகப் போறியோடா? இந்தப்பக்கம் இனிமேல் நீ தலைவச்சும் படுக்கக் கூடாதடா உமக்கு கொப்பன்ர வலை எண்ட திமிரோடா? கொப்பன் வரட்டும். அவருக்கும் இண்டைக்கு இருக்கு"

என்று பேசியபடி திரும்பிவந்து கரைவலையை இழுத்தான். மத்தியானம் குடித்த கள் இன்னும் அவன் வாயில் மணத்தது.

வயிறுநிறைய மதியம் உண்டு ஏப்பம் விட்டு அப்பாடா... என்று எழுந்து, கைகழுவி ஒரு சுருட்டை இதமாகப் புகைத்து, சோழகக்காற்று உடலைத் தழுவ தென்னைமர நிழலில் குழல் ஊதும் புகையிரதம்போல் கொறட்டைவிட்டபடி சுப்பையா உறங்கிக் கிடந்தார். மத்தியான வெயில் நேரங்களில் சில வேளையில் இப்படிக் களைப்பு ஆறுவது சுப்பையாவின் வழக்கம்.

சிவசம்பு அழுதபடி சுடு வெயிலில் ஓடிவந்து வளவுப் படலையைத் திறக்கும்போது நீத்துப்பெட்டி பின்னிக்கொண்டிருந்த கமலாம்பிகை பதறியடித்து எழுந்தாள். "என்ன மோன.. என்ன? என்ன நடந்தது?" என்று விசாரிக்கவும், அவன் ஓடிவந்து தாயைக் கட்டி அணைத்து விம்மி விம்மி அழுதான். கண்ணீரும் மூக்குநீரும் வழிந்து

noolaham.org | aavanaham.org

தாயின் புடவையில் சிந்தியது. தாயார் மகனின் முதுகைத் தடவும்போது அவனது முதுகில் வரி வரியாகத் தடிப்புகள் காணப்பட்டன. கமலாம்பிகை அவசரமாக கணவனை எழுப்பினாள்.

சுப்பையா ஆறுதலாக எழுந்து காலை மடக்கி இருந்துகொண்டு மகன் சொல்லும் விபரங்களை அமைதியாகக் கேட்டார்.

"உன்ர தம்பிமார்தான் எனக்கும் என்ர பிள்ளையளுக்கும் இயமனாக வந்து பிறந்து இருக்கிறாங்கள். நான் எத்தினை தடவை சொன்னனான். உவங்கட ஏவல் புத்திக்கு எடுபட வேண்டாமெண்டு. நாங்கள் எப்பவும் கூலியாய் இருந்துட்டுப் போவமெண்டு. எங்களுக்கு உந்தச் சம்மாட்டிப் பதவி வேண்டாம் எண்டு எத்தினை தடவை படிச்சுப் படிச்சுச் சொன்னனான். உன்ர செவியில கொஞ்சமாவது ஏறிச்சுதோ?" என்று ஆத்திரம் கோபம் அழுகை எல்லாம் ஒன்று சேர்த்து கிழிகிழியென்று தன் கோபம் அடங்கும்வரை கமலாம்பிகை கணவனைத் திட்டித் தீர்த்தாள்.

"யேய் கோபப்படாதையடி. எல்லாத்துக்கும் நான் இருக்கிறனடி. நான் என்னடி செய்ய? என்ர தம்பிமார் படியாத மோடன்கள். பொறுமையாய் இருந்துதான் நாங்கள் காரியம் செய்யவேணுமடி. பொறுத்தார் பூமி ஆள்வார். நீ சுடுவலாய் துள்ளாதையடி" என்று சுப்பையாச் சம்மாட்டி தன் மனைவியைக் கடிந்தான்.

"நீ ஒவ்வொரு தடவையும் உப்புடித்தான் சொல்லிக்கொண்டிருப்பாய். தம்பிமார் எண்டால் உனக்கென்ன வயித்தால போகுதோ? அப்புடியும் ஒரு பயமோ? அவங்கட மூஞ்சையை ஒருக்காலெண்டாலும் உனக்கு உடைக்கத் தெரியாதோ?" என்று கோபமாய் இரைந்தாள் கமலாம்பிகை.

"எடியேய் கத்தாதையடி. பாப்பமடி பாப்பம். எத்தினை நாளைக்குத்தான் உவங்கட ஆட்டம் என்று நான் பாத்துப்போடுறன்" என்று சுப்பையா மனைவியை ஆறுதல் படுத்தவும்,

"உப்புடித்தான் பாப்பம் பாப்பம் எண்டு சொல்லுவாய்; பிறகு படுப்பம் படுப்பம் எண்டு கிடந்திடுவாய்" என்று கடுஞ்சொற்களால் இரைந்தாள் கமலாம்பிகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்பின்பு ஒரு கிழமை கடந்தது. ஒருநாள் கருக்கல் நேரத்தில் வாடியால் வந்த சுப்பையா முற்றத்து மண்ணில் இருந்து "இஞ்சாரப்பா தேத்தண்ணி ஏதாவது கொண்டு வாவன்" என்று மனைவியை அழைத்தார்.

"ஓமோம் உங்கட செருமல் சத்தம் கேட்டு நான் தேத்தண்ணி போட்டுக்கொண்டு இருக்கிறன்" என்று சொல்லிய சில நிமிடங்களின் பின்பு கொடுத்த தேநீரை சுப்பையா உறிஞ்சிக் குடித்தார். கணவனுக்குப் பக்கத்தில் மண்ணுக்குள் பாதம் புதைய கமலாம்பிகை குந்தி இருந்தாள். இவ்வளவு காலமும் அவருடன் வாழ்ந்த அவளுக்கு அவரின் முகக்குறிப்பு தெரியாதா என்ன? 'உவர் ஏதோ சொல்ல நினைக்கிறார்' என்று மனதுக்குள் தீர்மானித்தாள்.

"இஞ்சபார் கமலம், கரைவலைக்கு ஆட்கள் போதாது. எங்கட இளையவன் சிவசம்பு படிச்சது போதும். படிப்பை விட்டுட்டு வாடியில இருந்து கொழும்புக் கணக்கை எழுதி. வலையையும் இழுக்கட்டும். தமையனுக்கும் கை உதவியாய் இருக்கும். என்ர ஆத்தை போற நேரமெல்லாம் சுத்துறா. 'அவன் மூத்தவன் வாரித்தம்பி கயிட்டப்பட உவனுக்கென்ன சொகுசான படிப்பு' என்று தம்பிமாரும் என்னை ஏசுறாங்கள். பேசாமல் அவன்ர படிப்பை இதோட நிப்பாட்டுவம்" என்று தலை குனிந்தபடி சொல்லிமுடித்த சுப்பையா, கமலாம்பிகையின் முகத்தை உற்றுப் பார்த்தார்.

"துலைவானே, துலைஞ்சுபோவானே இதுதானோ உங்கட கோத்தையின்ர முத்தத்தில கூட்டங்கூடிக் கதைச்சு எல்லாருமாகச் சேர்ந்தெடுத்த முடிவு. என்ர உயிர்போனாலும் சிவசம்புவின்ர படிப்பை நான் நிப்பாட்ட மாட்டன். நான் கறிப்பெட்டி சுமந்தாவது என்ர பிள்ளையைப் படிப்பிப்பன். நீ எங்களைக் கை விட்டாலும் எனக்குக் கவலையில்லை" என்று நீண்ட ஒரு பிரசங்கத்தைப் பொழிந்தாள் கமலாம்பிகை. தன் பக்கம் நியாயம் இல்லை என்று தெரிந்தால் சுப்பையா வாயடங்கி மௌனம் சாதிப்பது வழக்கம். 'இதில இருந்தால் சிலவேளை உவளுக்கு கை நீட்டவேண்டி வரும்' என்று நினைத்துக்கொண்டு துவாயை எடுத்து உதறி தோளில் போட்டபடி ஒரு போத்தல் பின்னேரக் கள் குடிப்பம் என்று வல்லியின் கள்ளுக் கொட்டில் பக்கமாக நடந்தார் சம்மாட்டி சுப்பையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10

அப்பிரதேசத்தில் செல்லையாச் சம்மாட்டி வசதி கூடிய முதலாளியென்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். இரண்டு கரைவலையுடன் இப்போது ஆழ்கடல் மீன்பிடிக்கான இயந்திர வள்ளங்கள் இரண்டையும் அவர் கொள்வனவு செய்திருந்தார். கரைவலையில் மீன்பிடி குறைந்தால் ஆழ்கடல் மீன்பிடி அவ்வருமானத்தை ஈடுசெய்யும். சில வேளையில் இரண்டிலும் மீன் பிடி தொகையாக நடைபெறும். அந்நாட்களில் தொழில் முடித்து பின்னிரவில் வீடு செல்லும் தொழிலாளிகள் மறுபடியும் விடியப்புறம் ஐந்து மணிக்கே கடற்கரை வந்து சேரவேண்டும். இல்லையேல் அன்று முழுவதும் குடிவெறியில் செல்லையாச் சம்மாட்டியார் சத்தமிட்டுத் திரிவார். குறித்த நேரத்தில் உணவும் அவர்களுக்குக் கொடுக்கமாட்டார்.

அவரிடம் பணம் இருந்தது. நிலம் இருந்தது. வயிற்றுப்பசி என்பது அவருக்குத் தெரியாது. உடற்பசிக்கும் குறைவில்லை. ஆனால் பிள்ளைச்செல்வமென கைகால் வழங்காத அந்த ஆண்மகன் ஒருவன்தான் இருந்தான். அப்பிள்ளையால் எக்காலத்திலும் அவருக்கு எந்தவித பயனும் கிடைக்கப் போவதில்லை. அவரின் சொத்துக்களைக் கையாளும் நிலையில் அப்பிள்ளையின் அறிவுநிலை இல்லை. சம்மாட்டியும் மனைவியும் எவ்வளவோ முயற்சி செய்தனர். ஆண்டுகள் பல கழிந்தன. இனிமேல் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கையும் நாளுக்கு நாள் தேய்வடைந்தது.

உலகின் சில நாடுகளில் பல கணவன் பல மனைவி முறைகள் வழக்கில் இருப்பதை சமூக மானிடவியல் ஆய்வுகள் கூறுகின்றன. தேசவழமைச் சட்டம் மதச் சட்டம் முதலிய அதிகாரங்களின் கீழும் அத்தகைய வாழ்க்கை முறைகள் நடைபெறுவதை அறியலாம். சில சமூகத்தின் அதிகாரப் படிநிலைகள் மூலமும் இத்தகைய வாழ்வியல் தன்மைகள் இயங்குவதைக் காணலாம்.

செல்லையாச் சம்மாட்டிக்குப் பக்கத்து ஊரிலுள்ள ஒருவர் கொஞ்சம் நிலபுல சொத்துள்ளவர். தனது மனைவியை அடக்கி ஆள்பவர். ஆண் ஆதிக்கம் கூடியவர். அவர் தேசவழமைப்படி மணம் முடித்து இரண்டாவது மனைவியையும் வைத்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரைப் பார்க்கும்போது செல்லையாச் சம்மாட்டிக்கும் மனதில் ஒரு ஆசை கிளம்பும். அவரிலும் பார்க்க அதிக சொத்துக்கு அதிபதியான தன்னால் இன்னொன்றை வைத்துக்கொள்ள முடியவில்லையே என்றொரு ஏக்கமும் மனதில் எழும். ஆனால் அப்படிச் செய்வதற்கு அவரால் முடியவில்லை. காரணம், அவர் அந்த ஊரில் பிறந்தவரில்லை. உடன்பிறப்புகள் இல்லாத தனி மனிதன். அவரின் இரத்த உறவு என்று சொல்வதற்கு அவ்வூரில் யாருமில்லை.

அந்த ஊரிலுள்ள சொந்தங்கள் எல்லாம் பெரும்பாலும் மனைவி வழியாக வந்தவையே. மனைவி செல்லாச்சியும் நல்ல அழகானவள்தான். ஆனால் சரியான வாய்க்காரி. அவளுக்கும் அவர் பயந்துதான் வாழ்ந்தார். இன்னொரு திருமணம் முடித்தால் அவளின் உறவுச் சண்டியன்கள் தனது 'சாமானை' வெட்டிவிடுவாங்கள் என்ற பயமும் அவருக்கு இருந்தது. அதனால் இந்திரன் பூனை வடிவம் எடுத்த வகையில்தான் தன் அவதியைத் தணித்துக் கொண்டார்.

காலப்போக்கில் ஊனமுற்ற தன் மகனோடு செல்லாச்சி துன்பப்பட்டாள். அதனால் தெய்வபக்தியில் அவள் அதிகமாக நாட்டங்கொண்டாள். கணவனுடன் எந்தநாளும் சண்டை பிடிப்பதோ? என்றும் மனம் சலித்துக் கொண்டாள். அவரை அவர் போக்கில் விட்டுவிட்டாள். கண்டும் காணாதமாதிரியும் நடந்துகொண்டாள். தன்னுடைய லீலைகள் தன் மனைவிக்குத் தெரியாதென்று சம்மாட்டி நினைத்தார். கடல் நீரில் வந்த பணத்தில் ஒரு பகுதியை செல்லையாச் சம்மாட்டியார் இப்படியான தண்ணிகளில் செலவு செய்தார்.

பிள்ளைவரம் வேண்டி கதிர்காமக் கந்தன் தொடக்கம் நயினாதீவு அம்மன்வரை அவரும் மனைவியும் ஏறாத கோயிலில்லை ஆடாத தீர்த்தமில்லை. ஆனால் இன்னொரு பிள்ளை பிறக்கின்ற வாய்ப்போ தெரியவில்லை. அந்த ஆண்டின் வைகாசித் திருவிழாவையும் ஐந்தாண்பனைப் பிள்ளையாருக்கு சிறப்பாகச் செய்தார். மறுநாள் தன் பந்தல் வாடிக்குள் முகட்டைப் பார்த்தபடி மிகுந்த யோசனையில் ஆழ்ந்திருந்தார். மந்திர தந்திரங்களில் நம்பிக்கையுள்ள 'பொன்னையன்' என்ற தொழிலாளி அவரின் பக்கத்தில் வந்திருந்து அவர் நிலையைப் பார்த்து பெருமூச்சு விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சம்மாட்டியார் உங்களுக்கு ஏதோ தோஷம் இருக்குது போல. நல்ல ஒரு மந்திரவாதி மூலமாக இருக்கிற தோஷத்தை நீக்கி 'கழிப்புக் கழிச்சால்' சில வேளையில உங்களுக்குக் குழந்தை பிறந்தாலும் பிறக்கும்... முற்காலத்தில அப்புடிச்செய்து சனங்களுக்குக் குழந்தை பிறந்ததெண்டு என்ர அப்பு ஆத்தையள் கதைச்சது சின்னனில என்ர காதில விழுந்தது. உவன் வேதக்காற மரியான் எண்டவன் மந்திர வேலையில விண்ணனாம் அவனை ஒருக்கால் கூட்டிவந்து கழிப்புக் கழிச்சுப் பாத்தால் என்ன?" என்று விட்டு விட்டுக் கதைத்து, தன் பேச்சை முடித்தான் பொன்னையன். சம்மாட்டியின் பதிலுக்காக அவரின் முகத்தைப் பார்த்தபடியே இரண்டு பாக்குப் பிளகை வாயில்போட்டு மொடுக் மொடுக் என்று கடித்து வெற்றிலைக் காம்பை கிள்ளி எறிந்தான். வெற்றிலையை இரண்டாகப் பிய்த்து ஒரு பாதியில் மேலும் கீழுமாக சுண்ணாம்பைத் தடவிக்கொண்டு இருந்தான்.

செல்லையாச் சம்மாட்டியார் இருந்த மனநிலையில் எத்தனை இலட்சம் அழிந்தாலும் 'பிள்ளைச் செல்வம்' அவருக்குத் தேவையாய் இருந்தது. எனவே நன்கு நின்று நிதானித்து யோசித்தார். காற்றை ஒருமுறை நன்றாக உள் இழுத்து ஒரு பெருமூச்சு விட்டபடி "ம் இனி அதையும் ஒருக்கால் செய்து பாப்பமே. நீயடாப்பா, அவன் கணக்கன் கணபதிக்கு விசயத்தைச் சொல்லி ஆகவேண்டிய ஒழுங்கைப் பார்" என்று பொன்னையனுக்கு அனுமதி கொடுத்தார் செல்லையாச் சம்மாட்டி. அதன்பின்பு எழுந்து தெற்குக் காணி நோக்கி நடந்தார். கவலை தீர்க்கும் பனங்கள் இரண்டு போத்தல்களும் நுரை கக்கியபடி அடிப்பனையில் சாய்ந்திருந்தன.

கணக்கன் கணபதி இன்னொரு தொழிலாளி மூலமாக மந்திரவாதிக்குச் செய்தி அனுப்பினான். குடிக்கப் பணமின்றி வயிறு காய்ந்திருந்த மந்திரவாதி மரியானுக்கு இச்செய்தியானது காதில் தேனாய் இனித்தது.

"வாற வெள்ளிக்கிழமை பின்னேரம் வந்து, கருக்கல் நேரத்தில சம்மாட்டி ஆச்சியின்ர கை பிடிச்சுப் பாக்கிறன் என்று சொல்லு தம்பி" என்று மந்திரவாதி பதில்கூறி அனுப்பினான்.

மந்திரவாதி ஐந்து மைல் தூரத்தை நடந்து கடந்து வெள்ளி மாலை ஆறு மணியளவில் செல்லையாச் சம்மாட்டியின் வீடு வந்து சேர்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணற்றில் கால்முகம் கழுவி வாய் அலம்பி பூசை அம்மன் முன்னே வளவு முற்றத்தில் கால்மடித்துச் சப்பாணிகோலி அமர்ந்தான்.

"சம்மாட்டி ஆச்சியை ஒருக்காக் கூட்டி வாங்கோ" என்று குரல் கொடுத்தான்.

தோய்ந்து உலர்ந்து தூயவெண் சேலை உடுத்து, மந்திவாதிக்கு முன்னே செல்லாச்சி வந்து அமர்ந்தாள்.

மரியான் மந்திரத்தை ஓதினான். விபூதியை எடுத்து மந்திரம் உச்சரித்தபடி சம்மாட்டி ஆச்சியின் தலையில் சிறிது சிறிதாக விபூதி தூவினான். அவளின் நெற்றியில் பெரிய ஒரு விபூதித் திலகமிட்டான். கை மணிக்கட்டைப் பிடித்து நாடித்துடிப்பை அவதானித்தான். அதன்பின் அவளை எழுந்து வீட்டுக்குள் போகச்சொன்னான். சம்மாட்டியையும் கணக்கன் கணபதியையும் மறைவான ஒரு இடத்திற்கு அழைத்துச் சென்றான்.

"நான் சொல்ல நீங்கள் பயந்து போடாதையுங்கோ சம்மாட்டி ஆச்சிக்கு ஆரோ ஊத்தைக்காளியில செய்வினை செய்திருக்கிறாங்கள். 'ஊத்தைக்காளி' ஆச்சியின்ர கர்ப்பப் பையில குடியிருந்து, கருவை தங்கவிடாமல் குத்திக் குத்தி விழுத்துறாள். இதுதான் உண்மையான சங்கதி வெளியால இதை ஆருக்கும் சொல்லிப் போடாதையுங்கோ" என்று மெதுவான குரலில் இருவரின் காதோரமாக மந்திரவாதி சொல்லி முடித்தான்.

சம்மாட்டியும் கணக்கனும் ஒருவர் முகத்தை ஒருவர் பரக்கப்பரக்க ஆச்சரியமும் ஏக்கமும் கலந்த பார்வையில் பார்த்தபடி பேச்சற்று யோசித்து சிறிது நேரம் மௌனமாய் நின்றனர்.

"அப்ப மரியான் இதுக்கு பரிஹாரம் ஏதும் இல்லையோ?" என்று கணக்கன் கணபதிதான் முதலில் வாயைத்திறந்தான்.

"அதுக்கு முப்பது நாள் கும்பம் வைச்சு பூசை செய்து மடை கழிக்கவேணும். ஊத்தைக்காளியை ஊருக்குள்ள மீண்டும் திரும்பாதபடி செய்ய வேணும். அதுக்குப்பிறகு சம்மாட்டி ஆச்சிக்குக் கண்டிப்பாய் குழந்தை தங்கும்" என்று நம்பிக்கை ஊட்டும் வகையில் மந்திரவாதி சொல்லி முடித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுக்கென்ன, என்ன செலவு வந்தாலும் அதைச்செய்து முடிப்பம்" என்று கைகளில் ஒட்டியிருந்த மண்ணைத் தன் தொடையில் தட்டியவாறு உடன்பட்டார் சம்மாட்டி.

ஒரு பென்சில் பேப்பர் தருவித்து தேவைப்படும் சாமான்களை எழுதி ஒரு பட்டியல் தயாரித்து கணக்கன் கணபதியிடம் கொடுத்தான் மந்திரவாதி.

"இதுகள் எல்லாத்தையும் வாங்கி வையுங்கோ. வாற புதன்கிழமை வளர்பிறை பக்கம். அப்ப கும்பம் வைப்பம். முப்பதாம் நாள் அமாவாசை இருட்டுக்க கழிப்புக் கழிக்கவேணும்" என்று சொல்லிய மந்திரவாதி கணக்கனைப் பார்த்தான். கணக்கனுக்கு முகக்குறி புரிந்தது. கணக்கன் சம்மாட்டியுடன் கண்ணால் பேசினான். சம்மாட்டி எழுந்து வீட்டுக்குள் சென்றார். சிறிய சூட்கேஸ் பெட்டியைத் திறந்து, ஐம்பது ரூபாய் தாள் ஒன்றும் சில சில்லறையும் எடுத்து வந்தார். கிழக்குப் பக்கம் பார்த்து கும்பிட்டு மந்திரவாதியின் உள்ளங்கையில் வைத்தார். அவனுக்கு உச்சி குளிர்ந்தது. விடைபெற்ற மந்திரவாதி வளவின் வடக்குப் படலையால் வெளியேறினான். வேகமாய் நடந்தான். சாராயம் விற்கும் வீடு நோக்கி அவன் போவது, சம்மாட்டிக்குத் தெரிந்திருக்காது.

சம்மாட்டியின் காட்டு வளவுக்குள் அமைந்திருந்த கொட்டிலுக்குள் கும்பம் வைத்து மடைபரத்தி மந்திரவாதி மரியான் தனது வேலையைத் தொடங்கினான். அவனது குட்டிப் பூசாரியாக 'பபூன்சேகரி' ஓடியாடி உதவி செய்தான். கணக்கன் கணபதியும் சிலபல உதவிகள் செய்தான்.

தினமும் நடுச்சாமம் கடந்து மந்திரப்பூசை நடைபெறும். நீர் நிரப்பிய பெரிய வெள்ளிக் குடத்தின் வாயில் உரித்த தேங்காய் ஒன்று முடியுடன் நிறுத்தி மாவிலை ஐந்து பரத்தி, கும்பம் வைக்கப்பட்டது. அதைச் சூழ்ந்து சிறு சிறு செம்புகளில் பலவித கும்பங்கள் வைக்கப்பட்டன.

நடுவிலுள்ள பெரிய கும்பத்தின் தேங்காய் முடியில், நான்கு அங்குல நீளமுள்ள இரும்பு ஆணித்துண்டு ஒன்று செருகப்பட்டது. அரிசி தேங்காய் காய்கனி புடவை பணம் முதலிய பொருட்களால் மடைபரத்தி தினமும் ஊத்தைக்காளிக்கு பூசை நடைபெறும். "அந்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பத்தில் சில்லறை வை இந்த வாழை இலையில் நூற்றி ஒருரூபா வை; பிள்ளையார் கும்பத்தில் ஒரு நூறும் சில்லறையும் வை..." என்று மந்திரவாதி சொல்லியபடியே இருப்பான். சம்மாட்டியார் தனது வேட்டி நுனியை அவிழ்த்து, பணத்தை எடுத்து எடுத்துச் சேகரியிடம் கொடுப்பார். மந்திரவாதி சொல்லும் இடங்களில் சேகரி ஓடி ஓடி பணத்தை வைத்து வைத்துத் தன் கடமையைத் திறம்பட நிறைவேற்றுவான்.

பூசையின்போது சாம்பிராணிப் 'புகை' கொட்டில் முழுவதும் நிறைந்து பரந்து சாம்பிராணி வாசனை வளவெங்கும் வீசும். மந்திரவாதி கும்பத்தின் முன்னே கால் மடித்து இருந்துகொண்டு மந்திரத்தை உச்சரிப்பான். அவனெதிரில் சம்மாட்டியார் வெள்ளை வேட்டி உடுத்து விபூதிப்பூச்சுடன் சப்பாணிகோலி அமர்ந்திருப்பார். சேகரி உரத்த நாதத்தில் உடுக்கடிப்பான். பூசையின் உச்சக் கட்டத்தில் உரு ஏற ஏற; இருந்த நிலையிலே உடலை வட்டமாய் வளைத்து வளைத்து, தலையைச் சுழற்றிச் சுழற்றியே மந்திரவாதி பேயாட்டம் போடுவான். சம்மாட்டியார் தனது கறுத்த விழிகளால் உருட்டி முழிசியபடி பயத்தில் உடல் உதற பதட்டமாய் பயந்தபடி இருப்பார்.

மந்திரவாதி கையால் சைகை காட்டும்போது, வேண்டிய பொருட்களை சேகரி எடுத்துக் கொடுத்தவாறே நின்றான். திடீரென்று:

"இழுத்து வாடா அந்த ஊத்தைக்காளியை" என்று கத்தினான் மந்திரவாதி மரியான்.

தலை முழுகி குளிர் உதற வெள்ளைநிற ஈரப்புடவையுடன் கிணற்றடியில் நின்ற செல்லாச்சியின் கையைப் பிடித்து அழைத்து வந்து கும்பத்தின் முன்னே மந்திரவாதியின் வலப்புறமாக, கணக்கன் கணபதி அவளை இருத்தினான். உரத்த ஒலியில் உடுக்கடி ஓசை எழுப்பப்பட்டது. மந்திரம் ஒலியுடன் ஓதப்பட்டது. சம்மாட்டி ஆச்சியான செல்லாச்சி அமர்ந்த நிலையில், தன் ஈரக் கூந்தலைச் சுழற்றி சுழற்றி உருக்கொண்டு ஆடினாள். பல்லை நறநறவெனக் கடித்தாள். "ஈ... ஈ... ஈ..." என்று சத்தமிட்டாள். அவளின் ஈரக்கூந்தலின் நீர்த்திவலைகள் ஏனைய நால்வரின் உடல்களிலும் தெறித்து விழுந்தன. மந்திரவாதி தன் வலக்கையை நீட்டி ஆட்காட்டி விரலால் ஏதோ சொல்லவும் செல்லாச்சியின் முகத்துக்கு நேரே சேகரி சாம்பிராணிப் புகையைக் காட்டினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் "ஹக், ஹக், ஹக்,'' என்று மூச்சடக்கி இருமினாள். இதுதான் தருணம் என்று வேப்பம் இலைக் கொப்பால், அவளின் உடலெங்கும் மந்திரவாதி அடிக்கத் தொடங்கினான்.

"ஊத்தைக் காளியே ஓடிப்போ" "ஊத்தைக் காளியே ஓடிப்போ" என்று சொல்லியபடி தனது பலம் கொண்டமட்டும் சில நிமிடங்களாக அவளைத் தொடர்ந்து அடித்தான்.

"போறியோ இல்லையோ" என்று கேட்டுக் கேட்டு அடிக்கும்போது...

பல்லைக் கடித்தபடி "ஈ...ஈ...ஈ..." என்று அவள் உரத்துக் கத்தினாள். மூன்று முழ நீளமான வேப்பங் கொப்பின் இலைகள் முழுவதும் உதிர்ந்துவிட்டன. ஈற்றில் தடிதான் எஞ்சியது. தடியாலும் மந்திரவாதி ஓங்கி ஓங்கி அவளை அடித்தான். தனது மனைவி படுகின்ற உடல் மன வேதனையைப்பார்த்த சம்மாட்டியார் மிகவும் பரிதாபப் பட்டார். எப்படியோ 'பேய் விலகி ஓடவேணும்' என்ற பிடிவாதத்தில் பொறுமையுடன் கண் கலங்க அவர் அமர்ந்திருந்தார்.

கற்பூரத் தீ அணைய, சாம்பிராணி முற்றாக எரிந்து முடிய, வேப்பந்தடி முறிந்து சிதறி துண்டு துண்டாகிவிட, பேய் ஓட்டும் பூசையும் தினமும் நிறைவேறும். சம்மாட்டி ஆச்சியோ மயங்கிச் சாய்ந்து நிலத்தில் விழுந்து கிடப்பாள். மனதிலுள்ள பலவித துன்பச்சுமையுடன் தன் மனைவியின் பாரத்தையும் தூக்கித் தோளில் போட்டபடி காட்டு வளவு வேலியின் வடக்குப் படலையால் வெளியேறி, தன் கடற்கரை வளவு நோக்கி நடப்பார் செல்லையாச் சம்மாட்டி.

மந்திரவாதி தனது கைப்பைக்குள்ளே தான் சில்லறைப் பணங்களைப் பொறுக்கிப் போடுவான். மடைச் சாமான்களை சாக்கு ஒன்றுக்குள் எடுத்துவைப்பான். சேகரி சுறுசுறுப்பாய் ஓடியாடி உதவி செய்வான். சேகரி வாங்கி வந்து மறைத்து வைத்த சாராயத்தை அவர்கள் இருவரும் கண்ணாடிக் குவளையில் ஊற்றிக் குடிப்பார்கள். ''நாளைக்கு நீ கள்ளு வாங்கிக் குடி'' என்று சொல்லி ஒரு பத்து ரூபா தாளை சேகரியின் கைக்குள் திணிப்பான் மந்திரவாதி. சேகரி பல்லிளித்தபடி அதை வாங்குவான். அதன்பின் இரவோடு இரவாக மந்திரவாதி தன் வீடுபோய்ச் சேர்ந்துவிடுவான். இவ்வாறு இருபத்தொன்பது நாட்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேய் ஓட்டும் மந்திரப்பூசை தினமும் நடைபெற்றது. சம்மாட்டியின் சேமிப்பும் கறையான் அரிப்பாக மாறியது.

செல்லையாச் சம்மாட்டியின் சொத்து கரைவதற்கு இன்னும் சில நிகழ்வுகளும் நடைபெற்றன. சம்மாட்டியார் ஒரு தேன்கூடு. அவருடன் ஒட்டியிருந்த பல தேனீக்கள் அவரை உறிஞ்சிக் குடித்தன. அதில் இயந்திரம் பழுதுபார்க்கும் தொழிலாளிகளின் உருவத்திலும் இருவர் அவருடன் வந்து சேர்ந்தனர்.

தரையிலும் கடலிலும் சம்மாட்டிக்கு உழைத்துக் கொடுக்கும் இயந்திரங்களில் ஏதாவது ஒன்றை, அவரின் கராஜ் கொட்டிலுக்குள் தினமும் மெக்கானிக் இருவர் திருத்தம் செய்து கொண்டிருப்பர். கராஜ் அமைப்பதற்கென ஒரு துண்டு நிலத்தை தெருவோரமாக சம்மாட்டி விலைக்கு வாங்கியிருந்தார். கராஜ் கொட்டிலின் முன்னே நிழல் கொடுத்துக்கொண்டு பழைய வேப்பமரம் ஒன்றும் நின்றது. அத்தெருவால் காலை மாலைகளில் கள் இறக்கும் சீவல்காரர் போய்வருவது வழக்கம். அதனால் மெக்கானிக்மாருக்கு கள்ளுக்குப் பஞ்சமில்லை. மூன்று நேரமும் கரைவலைவாடியில் 'வாடிச்சோறும்' கிடைத்தது. இத்தகைய வாய்ப்புகளை விட்டுவிலக யாருக்குத்தான் மனம் வரும்?. பழுதடைந்த இயந்திரத்தை 'டொங்டொங்' என்று அடித்தபடி ஏதோ செய்தபடி இருப்பார்கள். வெயில் களைப்பு என்று சிறிது நேரம் மாறிமாறி படுத்துத் தூங்குவார்கள். ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் மனைவி மக்களிடம் சென்று வருவார்கள். போகும்போது சம்பளப் பணத்தையும் வாடியில் இலவசமாகக் கிடைக்கும் கருவாட்டையும் கொண்டு செல்வார்கள். கோடையல்ல, மாரி காலத்திலும் மெக்கானிக் ஒருவராவது அந்தக் கொட்டிலுக்குள் ஏதாவது திருத்தம் செய்துகொண்டு இருப்பார்.

ஒவ்வொரு கோடையிலும் ஏதாவது கட்டிட வேலைகள் புனர் நிர்மாணங்கள் போன்றன சம்மாட்டியாரின் வளவுகளுக்குள் நடைபெறும். வடக்கே இருந்த பெரிய வீட்டை உடைத்து அறைகளை அதிகமாக்கும் முயற்சி அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்தது.

"இருக்கிறது ஒரு சொத்திப் பொடியன். உவர் ஏனடி உப்புடி அறையளைக் கூட்டிக் கட்டுவிக்கிறார்?" என்று மகளைக் கேட்பதுபோல் மாமியார் மருமகளுக்குக் கூறினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"அது எனக்குத் தெரியும். என்ர பணம். என்ர விருப்பம். ஒரு வேசையளும் எனக்குக் கதை சொல்லத் தேவை இல்லை" என்று மது வெறியில் நின்ற செல்லையாச் சம்மாட்டி தன் மாமிக்கு எதிர்ப்பதில் கொடுத்தார்.

மீன்தொட்டி கட்டுதல், பூசை வீட்டுக்கு புதிய வகை சாளரம் அமைத்தல், குசினியின் கூரையைப் பிரித்து புகைபோக்கி கட்டுதல், தெற்கு வளவில் பத்து அறையில் பெரிய ஒரு வீட்டுக்கு அத்திவாரம் போடுதல் என்று கட்டிட மேசன்மாருக்கும் வேலை வாய்ப்புகள் தொடர்ந்து கிடைத்தன.

ஊத்தைக்காளியைத் துரத்தும் மந்திர வேலையும் இருபது நாளாகத் தொடர்ந்து நடைபெற்றது. ஏற்கெனவே கொட்டிலுக்குள் மண்பரத்தி அதன்மேல் நவதானியங்கள் தூவி அதன்மீது கும்பம் வைத்து பூசை நடைபெற்றது. பூசையின்போது தெளிக்கப்படும் நீரினால் நவதானியங்கள் நாளுக்கு நாள் வேர்விட்டு வளரத் தொடங்கின. அதுபோல் மந்திரவாதி மரியானின் வீடும் வளமடைந்தது. கல்வீடு ஒன்று கட்டுவதற்கும் அவன் தயாரானான்.

பேயோட்டும் மந்திரப்பூசை நடைபெறுகின்ற அந்த வளவுக்காணியின் சுற்று வட்டாரத்தில் வேறு வளவுகள் ஒன்றும் அமைந்து இருக்கவில்லை பனங்கூடல்கள் பற்றைக்காடுகள் என்பன மட்டும் சூழ்ந்திருந்தன. அதனால் சம்மாட்டியின் காட்டு வளவுக்குள் நடைபெறும் நிகழ்வுகள் வேறு எவருக்கும் தெரியவராது. அந்த இருபது நாட்களிலேயே உதவியாளர்களான கணக்கன் கணபதி, சேகரி இருவரின் உடல்களும் மினுமினுக்கத் தொடங்கின. சேகரியின் சிவந்த வயிற்றில் இப்போது சுருக்கங்கள் இல்லை. இருவரும் புதுச் சாரம் புதுத் துவாய் அணிந்திருந்தனர். பூசைச்சாமான் வாங்கவென பட்டணம் போய் வருவதால் கோடுபோட்ட மேற்சட்டை ஒன்றும் கணக்கன் அணிந்திருந்தான். குறைச்சுருட்டு புகைக்கும் கணக்கனின் வாயில் இப்போது முழுச்சுருட்டு காணப்பட்டது. அவன் மனைவி புதுச்சேலை உடுத்து மகிழ்வுடன் சந்தை போய் வந்து கொண்டிருந்தாள்.

செல்லையாச் சம்மாட்டிக்கு இறைச்சிச் சேவல் வாங்கவென கணக்கன் கணபதி சந்தை சென்று வருவது வழக்கம். அப்போது சில பேட்டுக்கோழிக் குஞ்சுகளை வாங்கிவந்து மனைவியிடம் கொடுப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டை வியாபாரம் செய்வதற்கென அவற்றை அவள் வளர்த்து வந்தாள்.

முப்பதாம் நாளில் அமாவாசையும் வந்தது. அன்றுதான் ஊத்தைக்காளியை முற்றாக ஓட்டிக் கலைக்கும் இறுதித் தினமாகும். பசுமாடு ஒன்று, வளர்ந்து முறுக்கேறிய ஆட்டுக்கடா ஒன்று, கொண்டையில் பூ வளர்ந்த கருஞ்சிவப்புக் கோழிச்சேவல் ஒன்று என்பன கொட்டிலைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்தன. சோறு கறி பலகாரவகை தானியவகை காய்கறிவகை செப்புத்தகடு பணநோட்டு சில்லறைக்காசு ஒரு பவுண்துண்டு புடவைகள் வேட்டிசால்வைகள் என, ஒருவித ஒழுங்கு முறையில் பூசைமடை பரத்தப்பட்டு இருந்தது. நெருங்கிய உறவிலுள்ள சில முதிய ஆண்களும் அன்று கூடுதலாக வந்திருந்தனர். செல்லாச்சியின் தாயாரும் அன்று உடன் இருந்தார்.

நள்ளிரவு. கட்டிய கோவணம். வெற்றுடல். நீராடிய ஈரத்தலையுடன், கும்பத்துக்கு முன்னால் 'சப்பாணிகோலி' அமர்ந்திருந்தான் மந்திரவாதி மரியான்.

உதடுகளை அசைத்தபடி வாயினுள் மந்திரத்தை உச்சரித்தபடி அடிக்கடி கையால் சைகை காட்டியபடி இயங்கினான் மந்திரவாதி. அதன்படி சேகரியும் கணக்கனும் சுறுசுறுப்பாக செயற்பட்டுக் கொண்டிருந்தனர். மந்திரவாதி கும்பம் படையல் என்பனவற்றைச் சூழவும், நான்கு மூலைகளிலும் நிறுத்தப்பட்டுள்ள நான்கு உயரமான குத்து விளக்குகளின் எல்லாத் திரிகளும் எரிந்து கொண்டிருந்தன. சாம்பிராணி எங்கும் புகைந்து கொண்டிருக்க மந்திரத்தை உச்சரித்த வாயால்:

"இழுத்து வாருங்கள் அந்த ஊத்தைக் காளியை" என்று உரக்கக் கத்தினான் மந்திரவாதி.

தலைமுழுகி புதுப்புடவை உடுத்து நின்ற செல்லாச்சியின் கையில் பிடித்து அவளின் தாயார் அழைத்து வந்தார். கும்பத்துக்கு முன்னே கிழக்குத் திசைநோக்கி சப்பாணிகோலி கால்கள் மடித்து மகளை அமரவைத்தார். மந்திரவாதி எதிர்முகம் காட்டி இருந்தபடி படையலையும் செல்லாச்சியையும் சிலதடவை உருட்டி முழிசிப் பார்த்தான். மந்திரத்தை வாயினுள் முணுமுணுத்தபடி கையை நீட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது தேவைப்படும் பூசைப் பொருட்களை எடுத்தெடுத்து ஒவ்வொன்றாகக் கொடுத்தபடி நின்றான் சேகரி.

மந்திரவாதி, செல்லாச்சியின் தலையில் பசுப்பாலை ஊற்றினான். ஏற்கெனவே சொல்லிவைத்தபடி பசு, ஆட்டுக்கிடாய், சேவல் என்பனவற்றின் தலைகளிலும் சேகரி பசுப்பாலை ஊற்றினான். மந்திரவாதி செல்லாச்சிக்குச் செய்கின்ற பூசை முறைபோல, பசு ஆடு சேவல் என்பனவற்றுக்கும் சேகரி செய்து கொண்டிருந்தான்.

தலையில் எண்ணெய் அரப்பு வைக்கப்பட்டது. குங்குமம் கரைத்து வைக்கப்பட்ட சட்டியிலிருந்து நூற்றியொரு எலுமிச்சங்காயை ஒவ்வொன்றாக எடுத்து, செல்லாச்சியின் உச்சியில் வைத்து சிறிய ஒரு கத்தியால் இரண்டு இரண்டு பாதிகளாக மந்திரவாதி நறுக்கிக் கொண்டிருந்தான்.

கும்பத்துக்குப் பக்கத்தில் நின்ற போந்திக்கால் தம்பிமுத்தன் முதலில் மெல்லிய ஓசையில் ஆரம்பித்து, பின்பு உரத்த சத்தத்தில் உடும்புத்தோல் உடுக்கில் நாதம் எழுப்பத் தொடங்கினான். மந்திரவாதி வேப்பிலையால் செல்லாச்சியின் உடலில் மேலும் கீழுமாக மெதுவாகத் தடவித் தடவி, உதறி உதறி அடித்தான். பின்னர் வேகமாக அடிக்கத் தொடங்கினான்.

அப்போது மந்திரவாதியில் பேய்வெறி தோன்றியது. அவனது உடல் உறுப்புகள் பலதும் துடிக்கத் தொடங்கின. செல்லாச்சி "ஆ... ஊ..." என்று சத்தமிட்டு, கண்ணை அகட்டி முழிசி உடலைச் சுழற்றி ஆடினாள். மந்திரவாதி வலக்கையை நீட்டினான். தயாராக நின்ற சேகரி பிரம்பைக் கொடுத்தான்.

"ஊத்தைக் காளியே ஓடிப்போ..."

"ஊத்தைக் காளியே ஓடிப்போ"

என்று சத்தமிட்டபடி தன் பலம்கொண்டமட்டும் மந்திரவாதி செல்லாச்சியை அடித்தான். தன் மகளுக்கு விழுகின்ற அடியைப் பார்த்து மனம் பொறுக்க முடியாத செல்லாச்சியின் தாயார் கொட்டிலுக்கு வெளியே சென்று யோசனையுடன் நின்றார். அந்தக் கொட்டிலுக்குள் நிறைந்து வெளியிலும் சாம்பிராணிப்புகை கசிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தது. நேரம் இரவு ஒரு மணியைத் தாண்டியது. திடீரென எழுந்து நின்ற மந்திரவாதி, கும்பத்தில் செருகிவைத்த ஆணியை இழுத்தெடுத்தான். செல்லாச்சியின் உச்சிக் கூந்தலில் அந்த ஆணியைக் கட்டினான். தனது வலக்கையை நீட்டினான். சேகரி கத்தி ஒன்றைக் கொடுத்தான். ஆணியில் கட்டப்பட்ட உச்சி மயிரை, ஆணியுடன் சேர்த்து நறுக்கென்று அறுத்தெடுத்தான். படையலைச் சுற்றி மூன்று முறை வேகமாக நடந்தான். வெளியில் ஓடிச்சென்று சேவலின் கழுத்தில் பிடித்தான். சேவலைக் கட்டிய கயிற்றை சேகரி அறுத்தான். வலக்கையில் சேவலையும் இடக்கையில் உச்சிமயிருடன் கூடிய இரும்பாணியையும் பற்றிப்பிடித்தபடி, கோவண வெற்றுடல் கோலத்துடன் மந்திரவாதி மரியான் சுடலையை நோக்கி ஓட்டமும் நடையுமாக ஓடிச் சென்றான்.

செல்லையாச் சம்மாட்டி, சேகரி, கணபதி, முதியோர்கள் எல்லோரும் ஒன்றன்பின் ஒன்றாக மந்திரவாதியைத் தொடர்ந்து ஓடினர். காரைப்பற்றைச் செடிகளைக் கடந்தும் வளைந்தும் உடல் நெளிந்தும் ஓடிக்கொண்டிருந்தனர். களைப்படைந்த சிலர் தம்முன்னே செல்வோரை தம்மாலான வேகநடையில் பின் தொடர்ந்தனர். சேகரியும் கணக்கனும் ஓநாய்கள் நாக்கைத் தொங்கவிடுவதுபோல் தமது வாயால் மூச்சை இழுத்திழுத்து, மந்திரவாதியின் முதுகு தெரியக்கூடிய தூரத்தில் அவனைத் தொடர்ந்து ஓடிக்கொண்டிருந்தனர். ஏறத்தாழ ஒன்றரை மைல் தூரம் ஓடியதும் சுடலையை எல்லோரும் அடைந்தனர். அமாவாசை இருட்டில் அடர்ந்த காட்டின் மத்தியில் அமைந்துள்ள சுடலையில், அன்று பகல் தீ மூட்டி எரிக்கப்பட்ட சவம் ஒன்று முற்றாக எரிந்து சாம்பலாகக் காணப்பட்டது. அந்த இடத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நெருப்புத்தணல்கள் எரிந்து கொண்டிருந்தன. கோட்டான் ஆந்தை சுடலைக்குருவி வனப்பறவை முதலியன கத்திக்கொண்டே.... படபடவென சிறகடித்துப் பறந்து சென்றன. தூரத்தில் நரிக்கூட்டம் ஒன்று விட்டுவிட்டு 'ஊ.... ஊ.....' என்று ஊளையிடும் சத்தம் கேட்டது. ஆளை ஆள் அடையாளம் காணமுடியாத கும்மிருட்டு. குடல் கலங்கிய பயத்தில் சேகரி முழிசுவது அருகில் நிற்கும் சம்மாட்டிக்குத் தெரியாது. கணக்கன் கணபதியின் உடலில் தன் உடல் உரசும்படி சேகரி நெருக்கமாக உடல் உதற நின்றான்.

"ஆ..... ஆ..... ஆ....." என்று வானத்தை நிமிர்ந்து பார்த்தபடி மந்திரவாதி திடீரென அலறினான். பக்கத்தில் நின்றோர் தமது உடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுங்கத் திடுக்கிட்டனர். அந்தச் சுடலையின் மத்தியில் இள வயது ஆலமரம் ஒன்றும் நின்றது. மந்திரவாதி அந்த ஆலமரத்தைச் சுற்றி மூன்றுதரம் ஓடி வந்தான். கையில் பிடித்திருந்த சேவலின் தலையைத் திருகி முறித்து வழிந்து வந்த இரத்தத்தை அந்த ஆலமர வேரில் சிந்த விட்டான். சேவலின் உடலையும் தலையையும் அப்படியே ஆலமரத்தடி வேரில் போட்டான். தலையற்ற சேவலின் உடல் சில வினாடிகள் துடி துடித்து அடங்கியது. அந்த ஆலமரத்தில் மூன்றடி உயரத்தில் செல்லாச்சியின் உச்சிமயிருடன் கொண்டுவந்த இரும்பு ஆணியைப் பதித்து தன் இடது கையால் மந்திரவாதி பிடித்துக் கொண்டான். வலதுகையை நீட்டும்போது கணக்கன் கணபதி அவனிடம் சுத்தியல் ஒன்றைக் கொடுத்தான். மந்திரவாதி சுத்தியலை உயர்த்தி அந்த ஆணியில் அடித்து அதை ஆலமரத்தில் பதியவைத்தான். திடீரென சம்மாட்டியின் பக்கம் அலறியபடி திரும்பினான். ஓடிவந்து அவரின் மயிரைப் பிடித்து அவரை ஆலமரத்தின் பக்கமாக இழுத்தான். அதே இரும்பாணியில் அவரின் உச்சிமயிராலும் ஒரு முடிச்சுப் போட்டு இன்னும் ஒருமுறை அந்த ஆணியில் அடித்தான். தலையைக் கொடுத்த ஆடுமாதிரி சம்மாட்டியார் குனிந்தவாறு நின்றார். சேகரியின் கையில் இருந்த பிரம்பை மந்திரவாதி பிடுங்கி எடுத்து "ஊத்தைக் காளியே ஓடிப்போ" என்று சொல்லிச் சொல்லி சம்மாட்டியின் உடலெங்கும் பலதடவை அடி போட்டான். சம்மாட்டியால் அந்த வலியைத் தாங்க முடியவில்லை. குனிந்த தலையுடன் அப்படி இப்படியாக நாம்பன் மாடுமாதிரி தன் உடலை நெழித்துக் கொண்டிருந்தார். திடீரென அவரை அடிப்பதை மந்திரவாதி நிறுத்தினான். தன் வலது கையை நீட்டிக் கணக்கனிடம் கத்தியை வாங்கினான். சம்மாட்டியின் உச்சி மயிரையும் ஒரே வெட்டாக அறுத்துவிட்டான். தனது உயிர் ஒருமுறை அங்கால போய் இங்கால வந்தமாதிரி உணர்ந்தார் சம்மாட்டியார்.

செல்லையாச் சம்மாட்டியினதும் மனைவியினதும் உச்சி மயிர்த் துண்டுகள், சுடலை ஆலமரத்தில் இரும்புத் துண்டுடன் தொங்கிக் கொண்டிருந்தன.

"ஆ..... ஆ....." என்று மீண்டும் அலறியபடி சுடலையைச் சுற்றி மந்திரவாதி ஒருமுறை ஓடிவந்தான். தனது கோவணச்சீலையைக் கழற்றி நிர்வாணத்துடன் ஆலமரத்தைச்சுற்றி மூன்றுமுறை வலம் வந்தான். "ஊத்தைக் காளியே ஓடிப்போ" என்று சொல்லிச் சொல்லி, மூன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடவை கோவணச்சீலையால் அந்த ஆல மரத்தில் அடி போட்டான். திடிரென வடக்கு நோக்கித் திரும்பினான். கோவணச் சீலையைக் கையில் பற்றிப் பிடித்தபடி, வடதிசை நோக்கி வேகமாக ஓடத் தொடங்கினான். ஏனைய எல்லோரும் அவனைப் பின் தொடர்ந்து ஓடினர்.

"எடேய் பின்னுக்குத் திரும்பிப் பாராமல் ஓடுங்கோடா. திரும்பிப் பாத்தால் பேய்பிசாசு எங்களைப் பின் தொடருமடா'' என்று சொல்லியபடி முத்தையா என்ற முதியவர் எல்லோர் பின்னாலும் கடைசியாய் ஓடிக்கொண்டிருந்தார். அவர்கள் சுடலையை நோக்கி வந்த தூரத்தைவிட, தற்போது போகும் தூரம் சிறிது குறைவாகத் தெரிந்தது. காட்டை குறுக்காக ஊடறுத்து மந்திரவாதி ஓடிக்கொண்டிருந்தான். அவர்கள் ஓடிய தூரம் ஏறத்தாழ அரை மைல் மட்டில் இருக்கும். அப்போது முகத்தில் ஜில்..... என்று குளிர்க்காற்று வீசியது. கடற்கரையை அண்மித்துவிட்ட மந்திரவாதி ஓடிப்போய் 'தொமார்' என்று கடலில் விழுந்தான். களைக்க இளைக்க அவனைப் பின் தொடர்ந்தோர் கடற்கரை வெண்மண் புட்டியில் தரித்து நின்றனர். மந்திரவாதி கடலுக்குள் கிடந்தான். பல தடவை மூழ்கி மூழ்கி எழுந்தான்.

சில நிமிடங்களின்பின் கடலிலிருந்து எழுந்து மண் புட்டியில் நிற்பவரை நோக்கி ஆறுதலாக நடந்து வந்தான். கையிலுள்ள சீலையைப் பிழிந்து உதறி விரித்து தனது அரைஞாண்கொடியில் கொளுவி கோவணத்தை இறுக்கமாகக் கட்டிக்கொண்டான். எதுவித நிகழ்வும் நடைபெறாதமாதிரி மந்திரப்பூசை நடைபெற்ற சம்மாட்டியாரின் அந்தக் காட்டு வளவை நோக்கி மந்திரவாதி மௌனமாய் நடந்தான். ஏனையோரும் அவனைப் பின்தொடர்ந்தனர்.

கொட்டிலுக்குள் பரத்தியிருந்த சாமான்களின் முன்னால் வந்து நின்றான். "உவவைக் கூட்டிக்கொண்டு போங்கோ" என்று சொன்னதும், சம்மாட்டி ஆச்சியை அழைத்துக்கொண்டு அவளின் தாயார் தமது கடற்கரை வளவு நோக்கிச் சென்றார். சம்மாட்டி, கணக்கன், சேகரி, முத்தையா ஆகியோரை மந்திரவாதி ஒருமுறை சுற்றுமுற்றும் பார்த்தான்.

"இனிமேல் உந்த 'ஊத்தைக்காளி' இந்தப்பக்கம் தலைவைச்சும் படுக்கமாட்டாள்" என்று செல்லையாச் சம்மாட்டியின் பக்கம் தன் தலையைத் திருப்பி, ஒருமுறை புன்னகைத்தபடி சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று இறுதி நாள் என்பதால் படையல் சாமான்களோ ஏராளம். வெள்ளிக்குடம் வெள்ளிச்சட்டி குத்துவிளக்கு அரிசி தானியம் உடுதுணி முதலியவற்றை சாக்குகளில் போட்டு மாட்டுவண்டியில் சேகரியும் கணக்கனும் ஏற்றினர். தாள் சில்லறைப் பணங்களை பொறுக்கி எடுத்து சிறிய ஒரு பையில் மந்திரவாதி போட்டான். கழுத்தில் கயிறு கட்டப்பட்ட பசுமாடும் ஆட்டுக்கிடாயும் வண்டியில் தொடுக்கப்பட்டன. இரட்டை மாட்டு வண்டியின் பின்னால் அவை நடந்து சென்றன. இருட்டோடு இருட்டாக விடியப்புறம் ஐந்து மணியளவில், ஒரு வண்டில் சாமான் ஆடு மாடு முதலியவற்றுடன் மந்திரவாதி மரியான் பாதுகாப்பாகத் தன் வீடுபோய்ச் சேர்ந்தான்.

11

சிவசம்புவின் கல்வி விடயமாக அவனது தாய் தந்தை இருவருக்கும் இடையில் எந்தாளும் கயிறிழுவைப் போட்டி நடைபெற்று வந்தது. அவனின் சித்தப்பன்மார் மாமிமார் அப்பாச்சி முதலியோர் அவனுக்கெதிராக பலதடவைகள் சதித்திட்டம் தீட்டினர். இவை யாவற்றையும் முறியடித்து தன் தாயார் கமலாம்பிகையின் விடாமுயற்சியால் சிவசம்பு ஆறாவது வகுப்பிலும் வெற்றி பெற்றான். "உவ்வளவும் படிச்சது போதும். உதுக்குமேல படிப்பிச்சால் அவன்ர மூளையில அடிச்சுப் போடும்" என்று சுப்பையாவின் தாயார் பொன்னாச்சி தன் பேரப்பிள்ளையான சிவசம்புவின் படிப்புக்கு அணை போட்டு நின்றாள்.

கமலாம்பிகை எல்லாவித தடைகளையும் தகர்த்தெறிந்தாள். இடைநிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்பில் தன் மகன் சிவசம்புவைச் சேர்த்துவிட்டாள். அந்தப் பள்ளிக்கூடத்திற்கு காட்டு வழியால் இரண்டு மைல் தூரமளவில் நடந்து செல்ல வேண்டும். கிடுகுக் கூரையுள்ள அந்தப் பள்ளிக்கூடத்தில் பத்தாம் வகுப்புவரை கற்றுக் கொடுக்கப்பட்டது. பின்தங்கிய இத்தகைய ஊர்களில் இரண்டு மூன்று மைல் தூர இடைவெளியில், அங்கொன்றும் இங்கொன்றுமாக பாடசாலைகள் அமைந்திருக்கும். கல்விகற்கின்ற இத்தகைய சிறிய இடங்களை பாடசாலைஎன்றும் பள்ளிக்கூடம் என்றும் அவரவர் வாய்க்கு வந்தபடி ஊர்மக்கள் பேசிக்கொள்வது வழக்கமாகக் காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய ஊர்களின் சமூகக் கட்டமைப்பைத் தெரிந்து கொள்வதுவும் அவசியம். ஊரின் தெற்கே நெல்வயல் பயிர்த்தோட்டம் தென்னஞ்சோலைகள் பனங்கூடல் முதலிய இயற்கை வளங்கள் அமைந்திருந்தன. அங்கே கமத்தொழில் செய்கின்ற குழுமத்தினர் குறைந்த எண்ணிக்கையில் வாழ்ந்து வந்தனர். சாதி முறையில் இவர்களை வெள்ளாளர் என்று அழைத்தனர். கடற்கரை ஓரமாக மீன்பிடியை முதன்மையாகவும் வேறு பலவித முயற்சிகளை இணைவாகவும் செய்கின்ற மக்கள் நெருக்கமாகவும் அதிகமாகவும் வாழ்ந்து வந்தனர். இவர்களைக் கரையார் என்று அழைத்தனர். இவ்விரு குழுமத்துக்கும் சீலைவெளுக்கின்ற வண்ணாரும் மயிர்வெட்டுகின்ற அம்பட்டரும் 'குடிமக்கள்' என்று அழைக்கப்பட்டனர். இருந்தபோதும் வெள்ளாளர், கரையார் ஆகிய இரு பகுதிக்கும் வேறு வேறு வண்ணார் அம்பட்டரே குடிமக்களாகச் செயற்பட்டனர். இதைவிட மேற்படியான இரு முதன்மைச் சாதியினரின் கீழ் பனை தென்னைகளில் 'கள்' எடுப்போரும் ஊருக்குள் ஒன்று இரண்டு குடிகளாய் வாழ்ந்து வந்தனர்.

ஊரிலுள்ள சிறிய பெரிய கோயில்களுக்கு அந்தந்தச் சாதியினரே பூசைசெய்து வந்தனர்.

ஊர்ப்பிள்ளைகள் எல்லோரும் சாதிப்பிரிவை பள்ளிக் கூடத்திற்குள் காட்டாமல் அரசாங்கப் பொதுப்பள்ளியில் கல்வி கற்று வந்தனர். ஆனால் அவரவர் மனதுக்குள் தாங்கள் இன்ன சாதிக்காரர் என்ற எண்ணம் மாணவருக்கு இருந்துதான் வந்தது.

கிராமம் என்றாலும் கல்விப்பெறுபேறு விளையாட்டுப் போட்டி போன்றவற்றில் அந்த இடைநிலைப் பள்ளிக்கூடம் ஓரளவு முன்னணியில் திகழ்ந்தது. மூன்று 'இல்லங்கள்' வகுத்து ஆண்டுதோறும் அங்கே விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். ஒரே வகுப்பில் படித்துக்கொண்டிருந்த சிவசம்புவும் பத்மாவதியும் விளையாட்டு முயற்சியில் ஒரே இல்லத்தில் இணைந்திருந்தனர். சில விளையாட்டுப் பயிற்சிகளிலும் அவர்கள் பங்குபற்றினர்.

சிவசம்பு படிப்பில் கெட்டிக்காரன். பத்மாவதி விளையாட்டில் வேங்கை. அவர்கள் இருவரின் மனதிலும் ஒருவித விருப்பம் வளர்ந்து வந்தது. ஆனால் அதை வெளியில் தெரிவிக்க முடியாத நிலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் மனநிலைகள் காணப்பட்டன. ஊரின் தெற்கிலுள்ள சில விவசாய மக்கள் தமது தோட்டக் காவலுக்கென 'அரச அனுதிபெற்ற' துப்பாக்கி வைத்திருந்தனர். மாணவி பத்மாவதி விவசாய குடும்பத்துப் பெண். தமது காதல் உணர்வுகள் சமூதாயத்தில் தெரிய வந்தால் அந்த விவசாயிகள் தன்னை துவக்கால் சுட்டுவிடுவர் என்று சிவசம்புவுக்கு குலை நடுங்கிய மனப்பயம். மாடு கட்டுகின்ற இடிகட்டையால் ஒரே அடியாகத் தன் தலையில் அடித்து, தன் சாதிக்காரர் தன்னைக் கொன்றுவிடுவார்கள் என்று பத்மாவதிக்கும் மிகுந்த மனப்பயம்.

வழமைபோல ஒரு கோடை காலத்தில் பள்ளிக்கூடத்தின் 'இல்லங்கள்' மூன்றுக்கும் இடையிலான விளையாட்டுப் போட்டி நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஒவ்வொரு இல்லத்திற்கும் சோடிக்கப்பட்ட தனிப் பந்தல்கள் அமைத்திருந்தன. சிவசம்பு பத்மாவதி இருவரும் ஒரே இல்லமாதலால், அவர்கள் எதிர்பாராத விதமாக தனிமையில் தமது இல்லப் பந்தலுக்குள் சந்தித்தனர். வேறு மாணவர்கள் எவரும் அப்போது அங்கிருக்கவில்லை. ஏதோ எடுப்பதற்கென பந்தலுக்குள் வந்த பத்மாவதி அங்கு நின்ற சிவசம்புவைக் கண்டுவிட்டாள். சில வினாடிகள் தரித்து நின்றாள். இருவரின் கண்களும் வேகமாகப் பேசிக்கொண்டிருந்தன. இதுதான் வாய்ப்பான சூழல் என நினைத்த பத்மாவதி ஏதோ சொல்வதற்கென வாய் திறக்கவும்.....

"இருநூறு மீற்றர் ஓட்டத்துக்கு 'எனவுன்ஸ்' பண்ணுறாங்கள். நான் போட்டு வாறன்" என்று சொல்லிக்கொண்டே சிவசம்பு விளையாட்டு மைதானம் நோக்கி விரைந்து ஓடினான். இதைத் தவிர அவர்கள் தனியே பேசுவதற்குரிய வாய்ப்பான வேறு சூழல் அதன்பின் இருவருக்கும் கிடைக்கவில்லை. அவர்களின் மிகுந்த மனப்பயம் மேலும் அதிகரிக்கும்படியாக, அடுத்து வந்த சில வாரங்களில் அப்பள்ளிக்கூடத்தில் முக்கிய நிகழ்வு ஒன்றும் நடைபெற்றது:

அந்தப் பள்ளிக்கூட வளவின் முற்றத்தில், தலைமை ஆசிரியரின் வகுப்பறை அமைந்துள்ள சுவரிலிருந்து ஏறத்தாழ பதினைந்து மீற்றர் தூரத்தில் சடைத்து வளர்ந்த பழைய மாமரம் ஒன்று நின்றது. அதன் கீழே குடிநீர்த் தொட்டி ஒன்றும் கட்டப்பட்டு இருந்தது. அந்தத் தொட்டியிலிருந்து மாணவர்கள் தங்கள் கைகளால் நீரை ஏந்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிப்பதற்கு வசதியாக பூட்டித் திறக்கக்கூடிய செப்புக் குழாய் ஒன்றும் தொட்டியின் கீழ்ப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்தது. அவ்வூரில் மின்சார வசதி என்பது இல்லை. எனவே தினமும் காலையில் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்து அந்தத் தொட்டியில் நீர் நிரப்ப வேண்டும். இதை மாணவர்களே தமது 'இல்ல' முறைப்படி செய்வார்கள். தொட்டியில் குடிநீர் குறையும்போது மதியநேரம் மீண்டும் அவர்கள் நிரப்பிவிடுவார்கள். அந்த நீர்த்தொட்டி மாமரத்தின் கீழ் இருப்பதால் எந்நேரமும் தொட்டித் தண்ணீர் குளிர்ச்சியாகவே இருக்கும். அந்த மாமரக் கிளைகளில் வந்தமரும் காகம் குருவிகள் போடுகின்ற மலம் நீர்த்தொட்டிக்குள் விழாதபடி ஒரு தகரத்தட்டால் அந்த நீர்த்தொட்டியை மாணவர்கள் மூடி வைப்பர்.

அந்த நீர்த்தொட்டிக்கு அருகாமையில் மாமர நிழலுக்குள் நின்றுதான், அந்த மனிதர் சத்தம்போட்டுப் பேசிக்கொண்டிருந்தார். ஒரு நாள் மதிய உணவு முடிந்த நேரம். பள்ளிக்கூட மணியடித்து ஓய்ந்தது. வகுப்பறைகளில் பாடங்கள் நடைபெறத் தொடங்கின. அப்போது, பள்ளிக்கூடத்தின் முன்னே வடக்குத் தெற்காக அமைந்துள்ள ஊர் எல்லைத் தெருவில் வேகமாக வந்த சைக்கிள் ஒன்று, பள்ளிக்கூட வளவின் கிழக்குப்பக்க முட்கம்பி வேலியில் சரித்து நிறுத்தப்பட்டது. வெள்ளை நிற வேட்டியும் வெள்ளை நிற அரைக்கை மேற்சட்டையும் அணிந்த ஒருவர் பள்ளிக்கூட வளவுப் பிரதான வாசலின் இரும்புக் கதவைத் திறந்து, தலைமை ஆசிரியரின் வகுப்பறை நோக்கி வேகமாக விரைந்து நடந்து வந்தார். அம்மனிதர் ஏறத்தாழ ஆறடி உயரமுள்ளவர். நன்கு சிவந்த நிறம். தலைமயிரை பின்பக்கமாய் வாரி இழுத்திருந்தார். முன்வாய்ப் பற்கள் சிறிது மிதந்திருந்தன. மத்தியான வெயிலில் சைக்கிள் ஓட்டியதால் அவரின் உடல் வியர்த்திருந்தது. வியர்வையில் நனைந்திருந்த மேற் சட்டைக்குள்ளால், கை இல்லாத 'பெனியன்' தெரிந்தது. செந்தாமரை போல் சிவந்திருந்த அவரின் கண்கள், அவர் குடித்த மதுவின் அளவைத் தெரிவித்தன. வந்த மனிதர் பள்ளிக்கூடச் சுவரோரமாக நின்று "எங்கே பிறின்சிப்பல்?" என்று உரத்த சத்தத்தில் அழைத்தார்.

கரும்பலகையில் எழுதி, தமிழ்ப்பாடம் படிப்பித்துக் கொண்டிருந்த தலைமை வாத்தியார் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார். வந்தவர் பக்கத்தூர் விதானையார் என்பதைப் புரிந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை நோக்கி தலைமை வாத்தியார் விரைந்து வந்தார். விதானையார் சத்தமாகப் பேச்சைத் தொடங்கினார். தலைமை ஆசிரியர் அவரைத் தயவுபண்ணி அழைத்துக்கொண்டு மாமர நிழலுக்குள் சென்றார். கையைக் காலை விரலை ஆட்டியவாறு விதானை தன் விவாதத்தை அங்கே தொடர்ந்தார். பக்கத்துச் சுவரோரம் அமர்ந்திருந்த மாணவர்களுக்கும் அவர்களின் உரையாடல் தெளிவாகக் கேட்டது. கிராமசேவை உத்தியோகத்தரை, பொதுமக்கள் விதானை என்று அழைப்பதுதான் அன்றும் இன்றும் நடைமுறையில் உள்ளது.

இடது கை விரல் இடுக்கில் எரிந்துமுடிந்த நிலையிலிருந்த 'திறீறோசஸ்' சிகரட்டின் அடித்துண்டைக் கீழே போட்டு கோபத்துடன் விதானை அதைத் தன் வலது பாதத்தால் மிதித்தார். இன்னொரு சிகரட்டை எடுத்து அதை சிகரட் பெட்டியில் சில தடவைகள் தட்டியபின் தன் வாயில் வைத்து யானைமார்க் தீப்பெட்டியை உரசி சிகரட்டைப் பற்றவைத்து, புகையை உறிஞ்சி நெஞ்சுக்குள் இழுத்து, தன் முகத்தைத் திருப்பி, புகையை இடது பக்கமாக ஊதினார். தலைமை வாத்தியாரின் முகத்தில் சிகரட்புகை படக்கூடாது என்ற பண்பும் விதானையில் காணப்பட்டது.

"அவனை எனக்குக் காட்டுங்கோ மாஸ்டர்; உங்களுக்கு முன்னால அவனை என்ர காலுக்குள்ள போட்டு இதில உழக்கிறன் மாஸ்டர்" என்று உரத்துக் கத்தினார் விதானை.

"விதானையார், பிளீஸ் பிளீஸ் நீங்களும் பொறுப்புள்ள ஒரு அரச அதிகாரிதானே. நீங்கள் அப்புடி எல்லாம் செய்யக்கூடாதுதானே. என்ன முறைப்பாடாய் இருந்தாலும் நான் நல்லாய் விசாரிச்சு, அதுக்கு ஒரு சரியான தீர்வு காணுவன்தானே. நான்தானே இங்க தலைமை வாத்தி முழுப்பொறுப்பும் என்ரைதானே" என்று தயவாக, மெல்லிய குரலில் சொல்லி முடித்தார் பிறின்சிப்பல்.

விதானைக்கு வெறிக்கோபம் மேலும் அதிகரித்தது. "தலைமை வாத்தியும் மண்ணாங்கட்டியும். உங்கட படிப்பித்தல் திறமையாலதானே அவன் இப்புடிச் செய்திருக்கிறான். அவனுக்கு இண்டைக்கு அடி உதை போட்டுத்தான் நான் இங்கயிருந்து கிளம்புவன்'' என்று சத்தமிட்டபடி வேட்டியைத் தூக்கி மடித்து சண்டிக்கட்டுக் கட்டினார் விதானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஊர்களில் தொலைபேசி வசதி இல்லை. காவல்துறை நிலையத்திற்கும் இருபது மைல் தொலைவிலுள்ள பருத்தித்துறை நகரம் செல்ல வேண்டும். வெள்ளைக்கார ஆட்சிக் காலத்திலுள்ள 'உடையார்' பதவியின் அதிகாரமெல்லாம் சுதந்திரத்தின் பின்னர் விதானையின் கைகளுக்கு மாறியது. எனவே விதானை என்னும் அரசபதவி பல ஊர்களை உள்ளடக்கிய அதிகார வலுக்கொண்டதாகக் காணப்பட்டது. இந்த இயங்குமுறை எல்லாம் தலைமை வாத்திக்கு நன்கு தெரியும்.

"விதானையார், பிளீஸ் பிளீஸ் சத்தம் போடாதையுங்கோ. வகுப்பில பாடம் நடக்குது. வாத்திமார் பிள்ளையள் எல்லாம் இங்க எங்களைப் பாக்கினம்"

"அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. இண்டைக்கு இரண்டில ஒண்டு பாத்துத்தான் நான் இந்த இடத்தைவிட்டுப் போவன்" என்று உரத்துப் பேசிய விதானையின் வாயில் மூன்றாவது சிகரெட்டும் ஏறியது.

"விதானையார் தயவுசெய்து நீங்கள் போங்கோ நான் நல்லாய் விசாரிச்சு கட்டாயம் சரியான நடவடிக்கை எடுக்கிறன்" என்று கூறி, விதானையின் கையைப்பிடித்து அவரைப் பணிவதுபோல் தலைமை வாத்தியார் கெஞ்சி மன்றாடினார்.

"சரி, சரி உங்களுக்காக இப்ப அவனை, இண்டைக்கு விட்டுட்டுப் போறன். ஒரு கிழமைக்குள்ள இதுக்குச் சரியான முடிவு எனக்கு வரவேணும். இல்லாட்டில் உங்களுக்கு மேலாகவும் நான் நடவடிக்கை எடுப்பன்" என்று சொல்லிய விதானை, கடிதம் போன்ற ஒரு கடதாசித் துண்டையும் ஒரு சஞ்சிகைப் புத்தகத்தையும் தலமை வாத்தியாரின் கைக்குள் திணித்துவிட்டு, விறு விறு என்று வேகமாக நடந்துசென்று தனது சைக்கிளில் ஏறி, தன் கோபம் முழுவதையும் சைக்கிளின் மிதி கட்டையில் உதை உதையென்று உதைத்தபடி மறைந்து சென்றார்.

இதற்கு முந்திய சில மாதங்களுக்குள் நடைபெற்ற நிகழ்வானது: அந்த விதானையின் உறவிலுள்ள ஒரு மைத்துனியின் பெயர் நளினி. சுமாரான உயரம். பொதுவான அழகி. அந்தப் பாடசாலையில் பத்தாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தாள். விதானையார் திருமணம் செய்து இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தையானவர். இவர்கள் உயர் சாதியைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தவர்கள். நளினியின் வகுப்பில் நந்தன் என்பவனும் படித்தான். அவன் ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்தவன். அவனுக்கு நளினிமேல் தீராத காதல். அவளிடம் தனது காதலை நந்தன் பலவாறு வெளிப்படுத்தி வந்தான். நளினியோ அசைந்தும் கொடுக்கவில்லை. தன் நண்பர்கள் மூலமாகவும் தூது அனுப்பினான்.

"நான் அவரை விரும்பயில்லை. அதோட நான் வேற சாதி. அவர் வேற சாதி. இதால வீண் பிரச்சினையெல்லாம் ஊருக்குள்ள வரும். நான் அவரை முடிச்சால் என்ர தங்கைமாருக்கு எங்கட சாதிக்காரர் மாப்பிளை தராயினம். தயவுசெய்து உந்த ஆசையை அவரை மறந்திடச் சொல்லுங்கோ" என்று திடமான மறுப்புப் பதிலை, நளினி சொல்லி அனுப்பினாள்.

நந்தனோ கேட்பதாயில்லை. அவளை எப்படியும் வளைத்துப் பிடிக்கவேணுமென்று சந்தர்ப்பம் பார்த்தபடி திரிந்தான். அப்போதுதான் அந்த மாதாந்தச் சஞ்சிகை அவனது கண்ணில் பட்டது. அதில் கேள்வி பதிலுக்கான பகுதி ஒன்றும் இருந்தது. நந்தனின் நரிமூளை வேகமாக வேலை செய்தது. நளினி எழுதிப்போடுவது மாதிரி ஒரு வினா எழுதி அனுப்பினால் என்ன? என்று சில நாட்களாக அவன் யோசித்தான். முடிவும் எடுத்தான்.

கேள்வி: நான் ஒருவரை மனதாரக் காதலிக்கின்றேன். அவரோ என்னை எடுத்தெறிகின்றார். அவரை நான் கைப்பிடிப்பதற்கு ஓர் நல்வழி கூறுவீர்களா?

நளினி

(பாடசாலையின் பெயர்)

நந்தன் விளையாட்டாக இதை எழுதித் தபால் பெட்டியில் போட்டபின், அதைப்பற்றி மறந்தேவிட்டான். மாணவப் பருவம். 'உதுக்கு எங்க பதில் வரப்போகுது' என்ற எண்ணம் அவனுக்கிருந்தது. ஆனால் விபரீதம் நடந்தேறிவிட்டது. கேள்வியும் அதற்கான பதிலும், குறிப்பிட்ட சஞ்சிகையில் வந்துவிட்டது.

நளினியின் அத்தான் முறையான அந்த விதானையார், இந்தச் சஞ்சிகையின் மாதாந்தச் சந்தாதாரர். கேள்வி பதிலை மறுபடி மறுபடி வாசித்துப் பார்த்தார். நளினி படிக்கின்ற அதே பாடசாலையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்தான். கோபத்தில் குப்பென்று அவரின் கண்கள் சிவந்தன. தனது பணிமனையிலிருந்து சையிக்கிளில் விரைவாகத் தன் வீடுபோய்ச் சேர்ந்தார். மறுநாள் காலையில் அவசர அவசரமாகப் புறப்பட்டு பட்டணம் சென்றார். குறிப்பிட்ட சஞ்சிகை வெளியாகும் தலைமைப் பணியகம் அடைந்தார். அங்கு தனது கல்லூரி நண்பன் ஒருவன் வேலை செய்வதால் எல்லாம் இலகுவாக முடிவடைந்தது. நந்தன் அனுப்பிய கடிதத்தின் ஒரு பிரதியுடன் வீடு திரும்பினார். சையிக்கிளில் ஏறி தன் மைத்துனி நளினியின் வீடு சென்றார்.

"நளினி நீர் இந்தச் சஞ்சிகையில கேள்வி பதில் பகுதிக்கு, ஏதாவது எழுதி அனுப்பினீரோ?'

"இல்லை இல்லை அத்தான். நான் எந்தச் சஞ்சிகைக்கோ அல்லது பேப்பருக்கோ எழுதுற பழக்கம், அப்புடி இப்புடி ஒன்றும் இல்லை அத்தான்".

''பொய் சொல்லாதே'' என்று விதானை சிறிது உரத்துச் சத்தமிட்டார். விதானையின் மாமியார் குசினிக்கு வெளியால் ஓடிவந்தார். மருமகன் நிற்கின்ற கோபக்கொதியைப் பார்த்துப் பயந்துபோய், ஓர் ஓரமாய் ஒதுங்கி நின்றார்.

"இல்லை அத்தான் சத்தியமாய் நான் ஒன்றும் எழுதயில்லை'' என்று மணிமாலைபோல் கண்ணீர் ஒழுக தலை குனிந்து நிலத்தைப் பார்த்தபடி பதில் சொல்லி நின்றாள் நளினி. "இது உண்மையாக இருந்தால் பிறகு நீ நடக்கிறதைப் பார்" என்று சொல்லிவிட்டு விதானை சையிக்கிளில் ஏறிச்செல்லும்போது பின்னேரம் ஆறுமணியிருக்கும். அதற்கு மறுநாள்தான், பள்ளிக்கூடம் சென்று துள்ளிக் குதித்துச் சத்தமிட்ட அந்தச் சம்பவம் நடைபெற்றது.

தலைமை ஆசிரியர் சாதுவான ஒரு மனிதர். மிக மிக நல்லவர். அடக்கமான மெதுவான குரலில் பேசுபவர். அவரின் அன்பு கலந்த விசாரணையில் உண்மை எல்லாவற்றையும் ஒழிவுமறைவின்றி நந்தன் கூறி முடித்தான். தான் செய்த அந்தத் தவறை ஒத்துக்கொண்டான். பிறின்சிப்பலிடம் மன்னிப்புக் கேட்டான். எதுவித சிக்கலுமின்றி இருபக்கத்து உறவினரையும் அழைத்து தலைமை வாத்தியார் சாந்தப்படுத்தினார். இந்தக் கதையே பள்ளிக்கூடத்தில் மெல்ல மெல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணைந்து போகும்படி அவர் செய்துவிட்டார். நந்தனும் நளினியை முற்றாக மறந்தான். விதானையும் மனத்திருப்தியின் முழுமையை அடைந்தார்.

இந்தக் கொந்தளிப்பை நேரடியாகப் பார்த்து கேட்டு உணர்ந்த சிவசம்பு பத்மாவதி இருவருக்கும் 'உயிர்ப்பயம்' அவர்களின் வயிற்றை மேலும் கலக்கியது. அவர்களின் மௌனக்காதல் 'மூழ்கிய கப்பல்' ஒன்று கடலடிச் சேற்றில் இறுகியதுபோல் ஆகியது. பத்தாம் வகுப்புத் தேர்வும் நிறைவுபெற்றது. அந்தப் பள்ளிக்கூடத்து வாழ்க்கையும் முடிவடைந்தது. இருவரின் பார்வைகளும் தூரத் தூர விலகிச்சென்றன.

12

நீலக்கருங்கடலில் விபத்து நிகழ்ந்த அந்த இடத்தின் ஆழம் ஏறத்தாழ பத்துப்பாகம் என்று கூறப்படும் அறுபது அடி அளவில் இருக்கும். அந்தளவு ஆழத்துக்கு மூச்சடக்கி சுழி ஓடும் திறமை எல்லாருக்கும் கிடைக்காது. கைலாசர் பரம்பரையில் தோன்றிய கோயிலான் என்பவன் வாட்டசாட்டமான ஓர் இளந்தாரி. மூச்சுக்கொண்டநல்ல பலசாலி. கம்பான் கயிற்றை தன் பல்லால் கடித்து வாயில் கௌவியபடி, வள்ளத்திலிருந்து தலை குத்தாகக் குதித்து ஆமைபோல் வலித்துக்கொண்டு, கடலின் அடிநிலம் நோக்கி நீந்திச் சென்றான். அரிசிச் சாக்கை கம்பானால் சுற்றிக் கட்டுப்போட்டு இறுக்கினான். அந்தக் கம்பானைச் சுண்டி இழுத்து ஆட்டி 'ஆயத்தம்' என்ற தகவலை, கடல்மேல் வள்ளத்தில் நிற்போருக்குத் தெரிவித்தான். வள்ளத்தில் தயார் நிலையில் நின்றோர் அவற்றை இழுத்தெடுத்து ஒவ்வொரு அரிசிச்சாக்காக வள்ளத்திற்குள் அடுக்கினர். மேலே வந்து காற்றை உள் இழுத்து சில நிமிடங்கள் மூச்சு ஆறியதும் தாகத்துக்கு நீர் அருந்தியபின், மீண்டும் கம்பானுடன் அதேபோல் சுழி ஓடிக்கொண்டு கடலடி நிலம் நோக்கி கோயிலான் நீங்குவான்.

முதல்நாளில் அவர்கள் சுண்டிக்குளம் நோக்கிப் பயணம் செய்த பாய் பொருத்தப்பட்ட வள்ளம் ஒன்று காற்றுக்குக் கவிழ்ந்தமையால் அதிலிருந்து கடலுக்குள் கொட்டுப்பட்ட அரிசிச்சாக்குகளை சுழியோடி எடுத்து இன்னொரு வள்ளத்தில் ஏற்றிக்கொண்டிருந்தனர். அவற்றைக் கரைக்கு எடுத்து வந்து பனை ஓலைப்பாயில் பரத்தி வெயிலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயவிட்டனர். இரண்டு நாளில் அரிசி நன்றாகக் காய்ந்துவிட்டது. மறுபடியும் சாக்குகளில் அந்த அரிசியைப் போட்டனர். மூடை மூடையாக அவற்றைக் கட்டினர். அவற்றை கரைவலை வாடிக்குள் பாதுகாப்பாக அடுக்கி வைத்தனர். அரிசி மூடையுடன் கொண்டுசென்ற உப்புமூடைகள் எல்லாம் கடல் நீரில் கரைந்துவிட்டன. இவ்விபத்தானது கி.பி. 1950களில் யாழ்குடாநாட்டின் வடமராட்சி கிழக்கிலுள்ள சுண்டிக்குளம் என்னும் ஊருக்கு நேரேயுள்ள கடலில் நடைபெற்றது.

செல்லையாச் சம்மாட்டியார் போலத்தான் பக்கத்து ஊரிலுள்ள சின்னையாச் சம்மாட்டியும் பேர் புகழுடன் கரைவலையை நடத்தி வந்தார். செல்லையாச் சம்மாட்டி தனது வாழ்விட ஊரிலேயே இரண்டு கரைவலைகள் நடத்தி வந்தார். சின்னையாச் சம்மாட்டி தன் சொந்த ஊரில் ஒன்றும், பதினைந்து மைல் கிழக்கேயுள்ள சுண்டிக்குளம் என்னும் ஊரின் கடற்கரையில் ஒன்றுமாக, இரண்டு கரைவலைகள் நடத்தி வந்தார். சொந்த ஊர்க்கடலில் கிடைப்பதைவிட சுண்டிக்குளக் கடலில் மீன்பிடிப்பு அதிகமாக நடைபெறுவது வழக்கம். எனவே அங்கும் ஒரு வாடி போட்டு இருபது தொழிலாளரை அங்கே வைத்து கரைவலையை நடத்தி வந்தார். அந்நாட்களில் சுண்டிக்குளத்துக்கு வீதிப்போக்குவரத்து எதுவும் இல்லை. இயந்திர வாகனம் போய்வருவதற்கு வசதியில்லை. சேறு சுரி சகதியுள்ள பாதையில் மாட்டு வண்டிலும் ஓட்டமுடியாது. கடற்கரை மண்ணிலும் வண்டிற்சில்லுகள் புதைந்துவிடும். எனவே வள்ளத்தில் 'துணிப்பாய்' பொருத்தி காற்றின் உதவியுடன் கடலில் வள்ளப் போக்குவரத்துச் செய்தனர். ஒவ்வொரு ஞாயிறும் சுண்டிக்குளத்தில் இருந்து கருவாட்டுச் சிப்பங்களை சின்னையாச் சம்மாட்டியின் ஊருக்கு அவரின் தொழிலாளிகள் சிலர் கொண்டு வருவர். திங்கள் காலையில் வாடிக்குத் தேவையான அரிசி சமையல் சாமான்கள் உப்பு மூடைகளை ஏற்றிக்கொண்டு பாய்வலித்து சுண்டிக்குளம் செல்வர்.

அது வைகாசி விசாக காலம். சோழகக் காற்று மிக வேகமாய் வீசிக்கொண்டிருந்தது. சாமானுடன் சென்ற வள்ளம் வாடிக்கு நேரே கரைநோக்கித் திருப்பும்போது கடுங்காற்றுக்குத் திடீரெனச் சரிந்தது. அவ்விடத்தில் வள்ளம் கவிழ்ந்தது. கரையில் நின்றோர் இன்னொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளத்தில் சென்று தொழிலாளரைக் காப்பாற்றினர். கவிழ்ந்த வள்ளத்தையும் கம்பானில் தொடுத்து கட்டி இழுத்துக் கரை சேர்ந்தனர். மறுநாள் வள்ளம் கவிழ்ந்த இடத்தின் கடலடி நிலத்திலிருந்து, அரிசி மூடைகளை மட்டும் சுழியோடி எடுத்தனர். ஏனைய சாமான்கள் கடலுடன் கலந்துவிட்டன.

சின்னையாச் சம்மாட்டியார் கொழும்பு சென்று தன் இடுப்பு மறைவில் பணம் கட்டிக்கொண்டு வருவார். இரண்டு கரைவலைகள் உழைத்த வருமானத்தில் மனைவி மக்களுடன் செல்வச் செழிப்பாய் வாழ்ந்தார். அவருக்கு ஒரு பெண் சிநேகிதமும் இருந்தது. வெறியும் சுதியும் ஏறினால் தன் மனைவிக்கும் தெரியாமல் அங்கும் சென்று வருவார். சின்னையாச் சம்மாட்டி நல்ல தளதளப்புடன் சிவப்பாய் இருப்பார். கல்வி அறிவு குறைந்தவர். அரசியல் செல்வாக்கு மிக்கவர்.

ஒருதடவை பாராளுமன்றத் தேர்தல் காலத்தில் சின்னையாச் சம்மாட்டியார் அரசியல் கூட்டம் ஒன்றின் மேடையில் ஒலிவாங்கியின் முன்னே நின்று, தன் குரலை ஒருமுறை செருமிக்கொண்டு பேச்சைத் தொடங்கினார்: "எனக்குப் பள்ளிக்கூடம் என்றால் சரியான களவு. நான் எங்காவது காட்டில ஒழித்துக் கிடந்துவிட்டு, பள்ளிக்கூடம் விடுகிற நேரம் பாத்து வீட்டை வருவன். இதை அறிஞ்ச வாத்தி என்ர அப்புக்குச் சொல்லிப்போட்டார். என்ர அப்பு பச்சை வடலி மட்டையால என்ர முதுகில சிவத்தக் குறி விழ விழ, எனக்கு நல்ல அடி போட்டார். நான் பள்ளிக்குப் போற வழியில ஒரு வேப்ப மரம் நிக்குது. அப்புவோட கோவிச்சுக்கொண்டு அடுத்த நாள், அந்த வேம்பில ஏறி உயர்ந்த கொப்பில நான் இருந்திட்டன். நேரம் இருண்டு போச்சுது. என்னைத் தேடி அப்பு ஆத்தை சொந்தங்கள் எல்லாம் ஊரெல்லாம் அலைஞ்சு திரிஞ்சினம். ஆரோ பொடியள் சொல்லிப் போட்டுதுகள் 'உந்த வேம்பில சின்னையன் ஏறினதை நாங்கள் பார்த்தனாங்கள்' எண்டு அப்பு ரோச் லைற் அடிச்சு என்னைக் கண்டுட்டார். 'மோனை இறங்கி வாடா' என்றார். நான் இறங்கயில்ல. கொக்கச் சத்தகம் ஒண்டு கொண்டுவந்து நான் இருந்த வேட்பங் கொப்பைக் கொளுவி ஆட்டினார். 'டேய் இறங்கடா இறங்கடா' எண்டார். நான் இறங்கயில்ல. அவர் பலமாக ஆட்டினார். 'இதிலயிருந்து நான் குதிச்சுச் செத்துப் போடுவன்' எண்டு, அப்புவை நான் வெருட்டினன். 'நான் இனிப் படிக்கமாட்டன்' எண்டு மரக்கொப்பில இருந்துகொண்டு நான் அழுதன். 'எடேய் என்ர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லமல்ல நீ குதியாதையடா. நீ இனி பள்ளிக்குப் போகவேண்டாமடா. நீ படிச்சது போதுமடா. உன்ர உயிர் இருந்தால் எனக்குப் போதுமடா. மெல்லம் மெல்லமாக கீழ இறங்கி வா மோன' என்று கெஞ்சியபடி அப்பு செல்லமாக என்னைக் கேட்டா. அதுக்குப் பிறகு சந்தோசமாய் நான் மரத்தால இறங்கி கீழ வந்தன். அன்றுதான். மூன்றாம் வகுப்போட என்ர படிப்பும் சரி. பள்ளியும் சரி'' என்று தன் பகிடிப் பேச்சை பேசி முடித்தார். கூட்டத்தில் நிறைந்திருந்த சனங்கள், வயிறு குலுங்கக் குலுங்கச் சிரித்தனர்.

யாழ் மாவட்டத்தில் பச்சிலைப் பள்ளி என்னும் பிரதேச நிர்வாகப் பகுதி ஒன்று உள்ளது. அதற்குட்பட்ட ஊர்கள் எல்லாம் தமக்கிடையில் ஆண்டுதோறும் விளையாட்டுப் போட்டி நடத்துவது வழக்கம். அந்த ஆண்டும் ஆடி மாதத்தில், பளை மகாவித்தியாலய திறந்த வெளி அரங்கில் விளையாட்டுப்போட்டி நடைபெற்றுக்கொண்டிருந்தது. பின்னேரம் ஐந்து மணியளவில் இருக்கும். ஒலிபெருக்கியில் "தலையணைச்சண்டை இப்போது ஆரம்பமாகப் போகிறது" என்ற அறிவித்தல் இனிய குரலில் வெளிப்பட்டது.

தலையணைச் சண்டை என்பது: இரண்டு மரக்குற்றிகளை ஏறத்தாழ பத்து மீற்றர் இடைவெளியில் அங்கொன்று இங்கொன்றாக, இரு முனையில் நிலத்தில் நாட்டிப் புதைப்பர். இரண்டு மரக் குற்றிகளையும் இணைத்து, ஏறத்தாழ ஐந்தடி உயரத்தில் இருவர் உட்காரக் கூடிய பலமான ஒரு தடியைக் கட்டுவர். போட்டியில் மோதப்போகும் இருவரும் அத்தடியில் ஏறி, அதன் மத்திய பகுதியில் கவடு போட்டு ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்தபடி விழாதவாறு இருப்பர். ஆளுக்கொரு தலையணையை ஒரு கையில் பற்றிப் பிடித்திருப்பர். மற்றைய கைகளை, தமது முதுகுப்புறமாகத் திருப்பி பின்பக்கக் காற்சட்டையில் பிடித்துக் கொள்வர். விளையாட்டைத் தொடக்கும் அதிகாரி 'விசில்' ஊதியதும், அவ்வாறு இருந்த நிலையிலேயே தலையணைகளால் ஆளுக்காள் அடித்து அடித்து ஒருவரை ஒருவர் இருக்கையால் விழுத்த முயற்சிப்பர். அடிவாங்கி எவர் நிலத்தில் வீழ்கிறாரோ, அவர் தோல்வியைத் தழுவியதாக அறிவிக்கப்படுவார்.

அன்று தலையணைச் சண்டைப் போட்டி தொடங்கியதிலிருந்து குறிப்பிட்ட ஒரு வீரன் அடித்து அடித்து வீழ்த்த வீழ்த்த, ஏனைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரர்கள் ஒவ்வொருவராக கீழே வீழ்ந்து தோல்வியைத் தழுவிக்கொண்டிருந்தனர். ஒருவர் விழுந்ததும், அவருக்கு ஈடாக இன்னொரு வீரன் அத்தடியில் ஏறிக்கொள்வான். தொடக்கத்தில் ஏறிய இருவரில், குறிப்பிட்ட அந்த வீரன் மட்டும் இன்னும் விழவில்லை. ஏறுவோர் எல்லோரையும் ஒன்று, இரண்டு அல்லது மூன்று, நான்கு நிமிடங்களில் அவ்வீரன் அடித்து விழுத்தினான். மிகுந்த பலசாலிகளை ஐந்து நிமிடத்திற்குள் ஓங்கி ஓங்கி அடித்து விழுத்தினான்.

அப்போது "அடியடா மகனே விழுத்தடா மகனே" என்று பார்வையாளர் கூட்டத்தில் ஆலமர நிழலில் இருந்தபடி, சின்னையாச் சம்மாட்டியார் அடிக்கடி உசார் கொடுத்துக் கொண்டிருந்தார். விளையாட்டை ரசித்துப் பார்த்தபடி நின்ற மக்கள் சின்னையாச் சம்மாட்டியையும் அடித்து விழுத்திக் கொண்டிருக்கும் அந்த விளையாட்டு வீரனையும் கவனித்துப் பார்த்தனர். தோற்கின்ற ஒவ்வொரு எதிர்வீரனும் கீழே விழும்போது "சபாஷ்" "அடிச்சு விழுத்தடா மோனே" "அவன் ஆருக்குப் பிறந்தவன் எண்டு தெரியுமோ?" என்று சத்தமாக சின்னையாச் சம்மாட்டி ஊக்கம் கொடுத்தார்.

இறுதியில் அந்தத் தோள்வலி வீரனுக்கே வெற்றி வாய்ப்புக் கிட்டியது. ஒலிபெருக்கியில் அவனது வெற்றிச் செய்தி அறிவிக்கப்பட்டதும் சண்டையிட்ட மரக் குற்றியிலிருந்து நிலத்தில் இறங்கி ஓடிவந்த அந்த வீரன், சின்னையாச் சம்மாட்டியைக் கட்டி அணைத்தான். கன்னத்தில் முத்தமிட்டான். அவரும் ஆனந்தத்தில் கண்கலங்க அவ்வீரனின் முதுகை ஆரத் தடவினார். அவனை அணைத்துக் கொஞ்சினார். வாழ்த்தி அவனுக்கு விடைகொடுத்தார்.

'சின்னையாச் சம்மாட்டிக்கும் அவர் களவியல் உறவு வைத்திருந்த பெண்ணுக்கும் பிறந்தவனே அந்தத் தலையணைச் சண்டை வீரன்' எனும் உண்மை இந்நிகழ்விலிருந்து சமூகத்தால் அறியப்பட்டது. அவ்வீரனும் அன்றிலிருந்து அவரைத் தன் தந்தையாக ஏற்று அவரிடம் சென்று வந்தான்.

சின்னையாச் சம்மாட்டியின் சொந்த மனைவிக்கு ஆண்பிள்ளை இல்லை. பிறந்தது எல்லாம் பெண் குழந்தைகள்தான். அவர்கள் வளர்ந்ததும் தன் ஒவ்வொரு மகளுக்கும் மிகவும் சீரும் சிறப்புமாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் செய்து கொடுத்தார். அந்தத் திருமணக் கொண்டாட்டங்கள் மிகவும் ஆடம்பரமாக நடைபெற்றன.

கோயில் திருவிழா மாதிரி சிகரம் மின்சார வெளிச்சம் முதலியன அமர்த்துவார். சோடிக்கப்பட்ட மணப் பந்தலுக்குள் சப்பறம் போன்ற மணவறை அமைத்து அதில் மாப்பிள்ளை பெண்ணை இருத்தி, ஊரின் முதிய பெரியவர் ஒருவர் தாலி எடுத்துக்கொடுக்க திருமணம் சிறப்புடன் நிறைவுபெறும். திருமணக் கொண்டாட்டம் ஏழு நாட்களுக்கு நடைபெறும். வந்துபோகும் சனங்களுக்கு எந்த நேரத்திலும் சோறுகறி பரிமாறப்படும். மதுப்போத்தல் வகை குறையாது. சிங்கள முதலாளியின் ஜீப் வாகனத்தில் சாராயச் சாக்குகள் வந்திறங்கும். வளவின் கிழக்கு மேற்குப்பக்க வேலியோரப் பனைகளில் சீவல் தொழிலாளி ஒருவர் ஏறி ஒலிபெருக்கிகளை பனையின் முக்கால் உயரத்தில் கட்டுவார். அவர் ஏறி இறங்கிய களைப்புக்கு ஒரு கண்ணாடிக் குவளை சாராயத்தை உறிஞ்சிக் குடித்துச் செல்வார். நீண்ட குழலுள்ள ஒலிபெருக்கிகள் இரண்டும் ஏழு நாளும் பாடிக்கொண்டே இருக்கும்.

பூம்புகாரின் வணிகச் செழிப்பை கோவலன் கண்ணகி திருமண ஒழுங்குகள் தெரியப்படுத்தின. இப்பிரதேச மீன்பிடி முதலாளிகளின் செழிப்பை, சின்னையாச் சம்மாட்டி வீட்டுத் திருமணங்கள் வெளிப்படுத்தின. ஒருமுறை அவருக்குச் சாராயம் ஏற்றிவந்த ஜீப் வாகனம் வழியில் பழுதடைந்து நின்றுவிட்டது. எனவே சின்னையாச் சம்மாட்டி தனது தொழிலாளிகள் இருவரை அவ்விடத்திற்கு அனுப்பி வைத்தார். அவர்கள் சாராயச் சாக்கை கம்பானால் கட்டி அக்கம்பான் கயிற்றில் பலமான நீளத் தடியைக் கொளுவி, தடியின் ஒவ்வொரு நுனியையும் தமது தோள்களில் வைத்து சாராயச் சாக்கைக் காவிக்கொண்டு வந்தனர். தூரமோ ஏறத்தாழ மூன்று மைல்கள். மணல் நிறைந்த நடைபாதை. அவர்களின் நாக்குகள் காய்ந்து தண்ணீர்த்தாகம் எடுத்தன. அக்கம் பக்கம் குடிநீர்க் கிணறுகளும் காணப்படவில்லை. அப்பொழுது சாக்கிலிருந்த ஒரு சாராயப் போத்தலை எடுத்தனர். போத்தலின் மூடியைத் திருகித் திறந்தனர். ஆவென்று அண்ணாந்த நிலையில் இருவரும் மாறிமாறி ஒரு போத்தல் சாராயம் முழுவதையும் குடித்து முடித்தனர். அந்த உசாருடன் சாராயச் சாக்கைக் காவிக்கொண்டு சம்மாட்டியின் வீடு வந்து சேர்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னையாச் சம்மாட்டியார் வீட்டில் கலியாணக் கொண்டாட்டம் என்றால், அந்த ஊருடன் சில அயல் ஊர்களின் வயிறுகளும் நிறைந்துவிடும். கடல் நீரில் வந்த அவரின் பணம் தண்ணிபோல் ஊர் மக்களிலும் கலந்தது. "அவற்ர நல்ல மனசில அன்பு சுரக்கிற மாதிரி அவருக்கு காசும் ஊறுது" என்று பொதுவாக மக்கள் பேசிக்கொண்டனர்.

காலப்போக்கில் அவரது மகள்மார் மூன்று நான்கு என்று குழந்தைகளைப் பெற்றெடுத்தனர். மருமகன்மார், மாமனின் கரைவலையை நடத்தி வந்தனர். வீட்டு வரவு செலவு பற்றி அவர்களுக்குத் தெரியாது. மகள்மாரின் வீட்டுச் செலவுகளையும் தன் சொந்தச் செலவாகவே சம்மாட்டி கவனித்து வந்தார். பேரப்பிள்ளைகளின் உணவு உடுப்பு புத்தகம் மருந்து முதலிய செலவுகளையும் அவர் பொறுப்பேற்று நடத்தி வந்தார். பேரக் குழந்தைகள் பெருகப் பெருக சின்னையாச் சம்மாட்டியின் செலவுகளும் மேலும் விரிவடைந்து சென்றன.

பெண்பிள்ளைகளைப் பெற்றுள்ள தனது தொழிலாளருக்கும் அவர் மேலதிகமாக உதவி செய்வார். நகை, பணம், புடவை கொடுத்து அப்பிள்ளைகளின் கலியாணங்களையும் ஆசையுடன் செய்து வைப்பார். இவ்வாறாக வருடங்கள் பல நகர்ந்தன. அவரின் வயதும் வளர்ந்து சென்றது. செலவுகளும் அதிகரித்துச் சென்றன.

தொழில் இறுதி மாதமான ஐப்பசியில் அந்த வருடக் கரைவலைத் தொழில் நிறைவுற்றது. சம்பளக் கணக்கைப் பார்த்து தொழிலாளரின் பணத்தைக் கொடுத்து முடித்தார். வரவுக்கும் மீறிய செலவுகள் கையிலுள்ள சேமிப்பையும் கரைத்துள்ளமை தெரிய வந்தது. மறுநாள் பின்னேரம்..... தனது தெற்குக் கொட்டில் வீட்டு முகப்பில் சாய்ந்திருந்தார். அவரின் கண்கள் தென்னம்பிள்ளை வட்டுக்குள் நிலைகுத்தி நின்றன. மிகவும் ஆழமாக யோசித்தார். ஒரு இறுதி முடிவுக்கு வந்தவராக, மண்டாடிப் பதவியிலுள்ள தன் மூத்த மருமகனை அழைத்தார்.

"மருமோன், சுண்டிக்குளத்து வள்ளம் வலை சாமான்கள் எல்லாத்தையும் எங்கட ஊருக்குக் கொண்டுவாங்கோ" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் மாமா? அங்கைதானே நிறைய மீன் பிடிபடுகுது இங்க கொண்டுவந்து எப்புடி. மாமா நாங்கள் நடத்துறது".

"இல்லை மருமோன் நான் சுண்டிக்குள வலையை மூடுறதாக முடிவெடுத்திட்டன். ஆட்களைப் பிடிக்க ஏலாது. ஆட்களுக்கும் முற்பணம் கொடுக்க கையில காசில்லை. கொழும்பு முதலாளி கையை விரிக்கிறான். என்னால ரண்டு கரைவலை நடத்த ஏலாத நிலை வந்திட்டுது. ஐம்பது அறுபது பேருக்கு சோறு சம்பளம் போட, என்னால இனி ஏலாது. அதுதான் அதை நிப்பாட்டிப் போட்டு இருக்கிற ஆட்களை வைச்சு ஊரில ஒண்டை நடத்துவம்" என்று ஒரே முடிவாகச் சொல்லி நிறுத்தினார் சம்மாட்டி.

அவர் சொன்ன மாதிரியே அடுத்த ஆண்டு பங்குனி முதல் திகதியில் தொழில் தொடங்கியது. இருபத்தைந்து தொழிலாளருடன் தனது சொந்த ஊரிலேயே கரைவலை ஒன்றை மட்டும் நடத்திக்கொண்டிருந்தார்.

சின்னையாச் சம்மாட்டியார் அனுப்பி வைக்கும் கருவாட்டுச் சிப்பங்கள் படிப்படியாகக் குறைந்து வருவதைக் கொழும்பு முதலாளி கவனித்து வந்தார். முன்பெல்லாம் லொறி லொறியாக அவரது பல இன கருவாட்டுச் சிப்பங்கள் வாராந்தம் வந்திறங்கும். கொழும்புப் புறக்கோட்டை 'பாங்ஷால்' வீதியில் அவரின் பெயர் பரவலாகப் பேசப்படும்.

இந்த ஆண்டில் இருபது முப்பது சிப்பங்கள் அனுப்பக்கூடிய மீன்பிடிதான் நடைபெற்றது. அவரின் சொந்தச் செலவுக்கும் பெருத்த அவரின் குடும்பச் சுமைக்கும் தொழிலாளரின் சம்பளத்துக்கும் 'ஆனைப்பசிக்குச் சோளப் பொரி போட்ட மாதிரி' வருமானம் கிடைத்தது. 'கழுதை தேய்ந்து கட்டெறும்பாகும்' நிலை ஒன்று அவருக்குத் தொடங்கியது. கையில் இருந்த சிறு சேமிப்பும் கரைந்தது. ஆனாலும் சின்னையாச் சம்மாட்டியார் மனம் கலங்கவில்லை.

ஆனி மாதத்தில் ஒருமுறை புகையிரத்தில் அவர் கொழும்பு பயணித்தார். பத்தாயிரம் ரூபா பணத்தை வியாபாரியிடம் கடன் வாங்கி வந்தார். அதன் பின்பும் அவருக்குப் பணத் தட்டுப்பாடு ஏற்பட்டது. தன் மனைவியின் பவுண் நகைகளை விற்றுச் சமாளித்தார். 'கரைவலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிக்கு வாரந்தோறும் அரிசி மிளகாய் முதலிய அத்தியாவசிய சாமான்கள் வாங்கிப் போடவேணும். தொழிலாளரின் சம்பளப் பணமும் ஒழுங்காகக் கொடுக்கவேணும். வயதுபோன வள்ளம் ஒன்றுக்கு மாற்றீடாக புதிய வள்ளம் செய்வதற்கு அவர் முற்பணம் கொடுத்திருந்தார். அதையும் தன்னிடம் ஊருக்கு எடுத்து வரவேணும். வலைகளின் வயதும் காலம் கடந்து பழமையாகின்றன. புதிய வலைகளுக்கான ஏற்பாடுகள் எப்படியோ செய்யவேணும்' என்று தனது கடமைகள் பொறுப்புகளை நினைத்து யோசித்தார்.

அடுத்த ஆண்டு நடைபெற்ற தொழிலும் ஐப்பசியில் முடிவடைந்தது. வாடைக்காற்றும் மெதுவாக வீசத்தொடங்கியது. மழைபடாமல் வள்ளம் வலைகளை பாதுகாப்பாக மூடிக்கட்டியும் வைத்தாயிற்று.

"நான் கொழும்புக்குப் போய் கணக்குப் பார்த்து காசு கொண்டுவாறன். தீபாவளிக்கு முதல் கிழமை, உங்கட சம்பளக் கணக்கைப் பார்த்து காசு தாறன்" என்று சொல்லி தனது தொழிலாளரை சின்னையாச் சம்மாட்டியார் அவர்களின் வீடுகளுக்கு அனுப்பி வைத்தார்.

1940களிலும் பாய்க் கப்பல் வணிகம் தனிப்பட்ட முதலாளிகளின் அதிகாரத்தில் நடைபெற்று வந்தது. ஊர் காவல் துறை, வல்வெட்டித் துறை, பருத்தித் துறை, காங்கேசன்துறை போன்ற வட இலங்கைத் துறைகளிலிருந்து, ஏலம், கராம்பு, புகையிலை, பாக்கு முதலியவற்றை கப்பலில் ஏற்றி, இந்தியா பர்மா தாய்லாந்து ஜாவா முதலிய துறைமுகப் பட்டினங்களைச் சென்றடைவர். அரிசி, பானைசட்டி, துணி, புடவை, சீனச்சட்டி முதலிய பலவித பொருட்களுடன் மீண்டும் இலங்கைத் துறைமுகங்களை கடலோடிகள் வந்து சேர்வர். கப்பல் விரைந்து ஓடக்கூடிய சித்திரை வைகாசி மாதச் சோழகக் காற்றில் பாய் விரித்து தமது பயணத்தை மேற்கொள்வர். மீண்டும் ஐப்பசிமாத வாடைக் காற்றுடன் ஈழத்துறைகளை வந்தடைவர். மரப்பலகையால் செய்யப்பட்ட பெரிய கப்பல்களில், சிறிதும் பெரிதுமாக ஏறத்தாழ முப்பத்திரண்டு 'பாய்கள்' மட்டில் பொருத்தப்பட்டிருக்கும். இப்பாய்கள் தடித்த வெள்ளைத் துணியால் செய்யப்படும். பாய்க்கப்பல்கள் ஒன்றன்பின் ஒன்றாகப் புறப்பட்டுச் செல்லுதல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் அவை இலங்கை நோக்கி வருதலாகிய நிகழ்வுகள் ஒருவகைக் கண்கொள்ளாக் காட்சியாகும். மாலை நேரங்களில் கடற்கரை மண்புட்டியில் சாய்ந்து படுத்திருந்து கடலோர மக்கள் இவற்றைக் கண்டுகளிப்பர்.

கப்பல்களில் பொருட்கள் ஏற்றுவதற்கு ஒருசில மாதங்கள் எடுக்கும். 'கப்பல் பறியலும்' அதுபோல நடைபெறும்.

அந்த வருடத்தின் ஐப்பசியில் தீபாவளிக்கு முந்திய நாட்களில் கப்பல்கள் வட இலங்கைத் துறைகள் நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தன. "இந்த வருசம் வாடைச்சரிவு கொஞ்சம் வேகமாய் அடிக்குது" என்று ஏற்கெனவே கரைசேர்ந்த மாலுமிகள் தமக்குள் பேசிக்கொண்டனர்.

வந்துகொண்டிருந்த கப்பல்களில் ஒன்று ஏறத்தாழ ஐம்பது வயது கடந்த பழைய கப்பல். அப்போது வங்காள விரிகுடாவில் வாடைக்காற்று மிகப் பலமாக வீசிக்கொண்டிருந்தது. கடல் அலைகள் அரைப் பனை உயரத்துக்கு மேல் எழும்பிக் குதித்தன. கப்பல்கள் தமது அணியத்தை கடலுக்குள் குத்தி, மீண்டும் நிமிர்ந்து எழும்பி மிகமிக ஆபத்தின் மத்தியில் கரைநோக்கி ஓடிக்கொண்டு வந்தன. சில கப்பலுக்குள் கடல்நீர் உட்புகுந்தது. வேகமாகச் செயற்பட்ட மாலுமிகள் வாளியால் தண்ணீரை அள்ளி அள்ளி கடலில் இறைத்தனர். குறிப்பிட்ட அந்தப் பழைய கப்பல் அலைகடல் புயற்காற்றுக்கு தப்பிப் பிழைத்து கரையிலிருந்து ஏறத்தாழ பத்து மைல் தூரத்தில் வந்துகொண்டிருந்தது. இன்னும் சிலமணி நேரத்தில் அக்கப்பல் துறைமுகத்தை வந்து சேர்ந்துவிடும். ஆனால்...

அப்போது கப்பலின் அடிப்பாகத்தில் பெரிய ஓர் வெடிப்பு ஏற்பட்டது. ஏற்றியுள்ள சாமான் பாரத்தால் அந்த வெடிப்பு சிறிது சிறிதாக விரிவடைந்தது. வல்வெட்டித்துறைத் துறைமுகமோ கரைக்குறிப்பில் கண்ணுக்குத் தெரிகிறது. கப்பலுக்குள் வேகமாக 'குபுகுபு' என்று புகுந்துகொண்டிருந்த கடல்நீரை மாலுமிகள் தம்மால் முடிந்தளவு வேகத்தில் வெளியே அகற்றினர். ஆனால் கப்பலுக்குள் தண்ணீர் புகுந்துகொள்ளும் வேகம் 'ரைற்றானிக்' கப்பல் போன்று மிக வேமாக அதிகரித்தது. வல்வெட்டித்துறையில் இருந்து இருபது மைல் கிழக்காக ஐந்து கடல்மைல் உயரத்தில், அரைவாசி மூழ்கிய நிலையிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கப்பல் தத்தளித்தபடி வந்து கொண்டிருந்தது. ஆனால் கரையிலிருந்து மூன்று மைல் உயரத்தில் 'உடுத்துறை' எனும் ஊருக்கு நேரே வரும்போது, அக்கப்பல் முற்றாக மூழ்கிவிட்டது.

உடுத்துறைக் கரையோர ஊர்ச்சனங்கள் இந்நிகழ்வை ஏக்கத்துடன் பார்த்து நின்றனர். கோயிலான் என்பவன் மிகுந்த துணிவுள்ளவன். சுழி ஓடுவதில் மிக்க திறமைசாலி. சுண்டிக்குளக் கடலில் அரிசி மூடைகளை சுழியோடி எடுத்தவன். அவன் வேறு சில தொழிலாளிகளுடன் சேர்ந்து, வள்ளம் ஒன்றை வலித்துக்கொண்டு கப்பல் மூழ்கிய இடம் நோக்கி விரைந்தான். அங்கே மிதப்புகளில் பிடித்துத் தொங்கிக்கொண்டு கால்களை நீரில் அசைத்தபடி மாலுமிகள் தத்தளிப்பதைக் கண்டான். விரைந்து செயற்பட்டான். எல்லோரையும் உயிருடன் காப்பாற்றி பாதுகாப்பாகக் கரை சேர்த்தான்.

மறுநாள், வல்வெட்டித்துறையில் இருந்து பாய்க்கப்பல் ஒன்றில் சுழியோடிகள் பலர் கொண்டுவரப்பட்டனர். கப்பல் மூழ்கிய இடத்திற்கு நேரே உள்ள ஊர்ச் சுழியோடிகளும் அவர்களுக்கு உதவியாக இணைந்துகொண்டனர். பகலெல்லாம் சுழியோடிச் சுழியோடி சாமான் மூடைகளை எடுத்தனர். இரவானதும் ஏற்றிய சாமான்களுடன் கப்பல் வல்வெட்டித்துறை சென்றுவிடும். அவ்வாறாகவே சில நாட்களில் மூழ்கிய அந்தக் கப்பலில் இருந்து நீரில் கரையாத சாமான் மூடைகளை மட்டும் எடுத்துச் சென்றனர். சுழியோடிகளுக்கு சாராயமும் பணமும் கூலியாக வழங்கப்பட்டது. சுழியோடும் குழுவில் மண்டாடி கோயிலான் மிகுத் திறமையாகச் செயற்பட்டான். மூச்சடக்கி அதிக நேரம் கடலடி நிலத்தில் கிடந்து வேலை செய்வதில் அவன் 'மஹாகெட்டிக்காறன்' என்ற புகழும், இந்நிகழ்விலிருந்து அவனுக்கே கிடைத்தது.

சம்மாட்டிமாரின் வரலாறுகள் கூறும்போது, மண்டாடி தரத்திலுள்ள இந்தக் கோயிலானின் வாழ்க்கை வரலாறு பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமானது. அந்நாட்களில் எட்டுப் பத்துப் பிள்ளைகள் இல்லாத தம்பதிகள் மிகக் குறைவென்றே சொல்லலாம். ஒன்று இரண்டு பிள்ளைகள் உள்ள குடும்பங்கள் மிக அரிதாகவே காணப்பட்டன. அவற்றில் கோயிலானின் தாய்தந்தையர் குடும்பமும் ஒன்றாகும். கோயிலான், கிட்டிணன் என இரண்டு ஆண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகள் மட்டுமே அத்தம்பதிக்குப் பிறந்தனர். கோயில் நேர்த்திகள் பல செய்தும் பெண் குழந்தையோ அல்லது வேறு பிள்ளைகளோ அவர்களுக்குப் பிறக்கவில்லை. மகன்மார் இருவரும் வளர்ந்தனர். முதலில் கோயிலானுக்கும் இரண்டு வருடம் கடந்து கிட்டிணனுக்கும் பெற்றோர் திருமணம் செய்து வைத்தனர். சில வருடங்களின் பின்னர் குறுகிய கால இடைவெளியில் ஒருவர் பின் ஒருவராக கோயிலானின் தாய் தந்தை இருவரும் இறந்தனர்.

அதன்பின் தனித்தனி வளவுகளில் வீடுகள் அமைத்து, கோயிலானும் கிட்டிணனும் தங்கள் தங்கள் குடும்ப வாழ்க்கைகளைத் தொடங்கினர். அண்ணன் தம்பி இருவரின் வளவுகளும் மிக அண்மித்தே அமைந்திருந்தன. இரண்டுக்கும் இடைப்பட்ட தூரம் நூறு மீற்றர் அளவில் இருக்கும்.

நாட்கள் பல நகர்ந்தன. சமூகத்தில் சாதாரணமாக நிகழ்வதுபோல், அற்ப சொற்ப குற்றம் குறைகளுக்கெல்லாம் அவர்களின் மனைவிமார் அதை இதைச் சாட்டாக வைத்து அடிக்கடி வாய்த்தர்க்கம் செய்து வந்தனர். அவற்றை ஒருவாறு சமாளித்து அண்ணன் தம்பி இருவரும் ஒற்றுமையாக குடும்பம் நடத்தி வந்தனர். ஆறாவது வருடத்தில் கிட்டிணன் மனைவி நான்காவதாகவும் கருத்தரித்தாள். கோயிலான் மனைவிக்கோ இன்னும் குழந்தைச்செல்வம் கிடைக்கவில்லை. ஒருநாள் கிட்டிணன் மனைவி எட்டுமாதப் பிள்ளை வயிற்றுடன், வழமைபோல் கோயில் சென்று கும்பிட்டபின் தன் வீடுநோக்கி வந்துகொண்டிருந்தாள். வரும் வழியில் அவளை எதிர்கொண்ட கோயிலான் மனைவியுடன் முரண்பாடு ஏற்பட்டது. வாய்ச்சண்டை இறுதியில் மயிர்பிடி சண்டையில் முடிந்தது. உடன்வந்த பெண்கள் சிலர் விலக்குப் பிடித்து இருவரையும் அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைத்தனர்.

கோயிலான் ஒரு ஊர்ச்சண்டியன். நல்ல பலசாலி. திறமைசாலி. சிறந்த தொழிலாளி. கள், சாராயம் அதிகம் குடிப்பவன். ஒரு கிலோ மீனும் மூன்று கோப்பை சோறும் ஒரே வேளையில் சாப்பிடக் கூடியவன். புராண காலத்து வீமன் போன்றவன்.

தலையில் நல்லெண்ணெய் தேய்த்துக்கொண்டு முழுகுவதற்கு அரப்பு அவிக்கும்படி மனைவியிடம் சொல்லிவிட்டு கள் குடிக்கவென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளுக் கொட்டிலுக்கு கோயிலான் சென்றான். நான்கு போத்தல் கள்ளை வயிற்றுக்குள் ஊற்றிக்கொண்டு ஒரு போத்தல் கள்ளை கையில் பற்றிப் பிடித்தவாறு மதுவெறியுடன்; தன் வீடு நோக்கி வந்தான்.

வளவின் கிழக்குப் படலையைத் திறக்கும்போது, கிணற்றடிக்குப் பக்கத்தில் செவ்விளநீர் தென்னைமர நிழலின் கீழிருந்து தன் அன்பு மனைவி மூக்குச் சீறிச்சீறி அழுவதைக் கண்டான்.

"என்ன நடந்தது அரப்பு அவிக்கயில்லையோ?" என்று கேட்டான். மனைவி மௌனம் சாதித்தாள். அவளின் மேற்சட்டையின் பின்பக்கம் சிறிது கிழிந்திருந்தது.

"என்ன நடந்ததெண்டு சொல்லடி?" என்று அதட்டிக் கேட்டான்.

"உங்கட தம்பியின்ர பெண்டில் எனக்கு அடிச்சுப்போட்டாள்" என்று சொல்லி 'கூ' என்று வாய்திறந்து குழறி அழுதாள். கோயிலானின் கோபம் அவனுக்கு தலை உச்சியில் பற்றியது. தனது கிணற்றடி வேலியோரமாக மண்ணில் கள்ளுப் போத்தலை அழுத்திச் சாத்தினான். வேகமாக, தன் தம்பி கிட்டிணனின் வீடு நோக்கி நடந்தான். தன் தோளில் கிடந்த துவாயை எடுத்து ஒருதரம் உதறிவிட்டு தலையில் தலைப்பாகையாகக் கட்டிக்கொண்டான்.

நேரம் பகல் பதினொரு மணியிருக்கும். கிட்டிணன் மனைவி மத்தியானச் சமையலை முடித்தாள். 'பனையோலை சுமந்துவரப் போன புருசன் வரும்வரை சும்மா இருப்பதோ' என்று தென்னைகளின் கீழ் விழுந்து கிடக்கும் குப்பைகளை, கூட்டி அள்ளி சிறுசிறு வேலைகள் செய்துகொண்டிருந்தாள்.

வளவுப் படலையைத் திறந்து உள்ளே வந்த கோயிலான் "எடியேய், எங்கயடி என்ர தம்பி?" என்று சத்தமிட்டபடி முற்றத்துக்கு வந்தான்.

மூத்த அத்தானின் கண்ணில் தெரிந்த கோபத்தைப் பார்த்துப் பயந்தபடி "அவர் ஓலைக்கட்டு கொண்டுவரப் போட்டார் அத்தான்" என்று பதிலளித்தாள்.

கோயிலானின் கை கால்கள் கோபத்தில் உதறிக் கொண்டிருந்தன. மதுவெறி கோபவெறி தலையில் தேய்த்த நல்லெண்ணெய் எல்லாம் ஒன்றுசேர, அவனது கண்கள் இரத்தம் போல் சிவந்து காணப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எடியேய் உனக்கு வாய்தான் நீளுதெண்டு பாத்தால், இப்ப கையும் நீண்டு போச்சோடி?'' என்று சொல்லிக்கொண்டே ஓடிவந்தவன், அவளின் கூந்தலைப் பற்றிப் பிடித்து அவளைத் தூக்கி வீசி எறிந்தான். "என்ர அப்பூ" என்று கத்தியபடி தொப்பென்று நிலத்தில் வீழ்ந்தாள் கிட்டிணன் மனைவி.

கோயிலானின் கைகள் இயங்கவில்லை. கால்கள்தான் வேலை செய்தன. தனது தம்பியின் மனைவி என்ற எண்ணத்தை மறந்தான். தன் காலால் அடித்து உதைத்து அவளை எற்றி உழக்கினான். அவள் மூச்சடங்கி மரக்கட்டைபோல் சாய்ந்தாள். ''இதோட நீ செத்துத் துலைஞ்சுபோ" என்று சொல்லிவிட்டு தனது வீடு நோக்கி விரைந்தான் கோயிலான்.

அவ்வூர்களில், அதுவும் முன்னைய காலங்களில் அண்ணன் தம்பிமார் இறுக்கமான பாசத்துடன் வாழ்க்கை நடத்தி வந்தனர். சமூக அமைப்பிலும் ஆண் ஆதிக்கம் மிகவும் மேலோங்கியே இருந்தது. ஆண்கள் என்ன பிழை செய்தாலும் அவர்களின் சார்பாகவே தேசவழமைத் தீர்ப்பு அமைந்துவிடும்.

ஒரேயொரு அண்ணன்மீது தன் உயிரையும் உயர்ந்த மதிப்பையும் கிட்டிணன் வைத்திருந்தான். தன் தலையிலிருந்த பனை ஓலைக்கட்டை நிலத்தில் போட்டுவிட்டு திரும்பிப் பார்க்கும்போது தன் மனைவி தென்னைமர நிழலில் அனுங்கியபடி சரிந்து படுத்துக் கிடப்பதைக் கண்டான். சம்பவம் நடந்த சத்தம் கேட்டு ஓடிவந்த அயல்வீட்டுப் பெண்கள் அவளைச் சூழ்ந்திருந்தனர். அவளின் முகத்தை குளிர்ந்த நீரால் கழுவினர். தமது முந்தானையால் காற்றை விசுக்கினர். நடைபெற்ற நிகழ்வுகள் எல்லாவற்றையும் கிட்டிணன் விசாரித்து அறிந்துகொண்டான். அவனது அன்பு மனைவியின் கடைக்கண்ணால் கண்ணீர் வடிந்தது. அந்த நிலையிலும் தன் மனைவியைப் பார்த்து "நீ ஏனடி அண்ணையின்ர மச்சாளோட வாய் காட்டின்னி சரி சரி நடந்தது நடந்து முடிஞ்சுபோச்சுது. இனி என்ன செய்ய. போய் பரியாரியைக் கூட்டி வாடா தம்பி'' என்று பக்கத்து வீட்டுப் பொடியன் மணியனைப் பார்த்துச் சொன்னான் கிட்டிணன்.

பரியாரி வந்தார். மணிக்கட்டில் பிடித்து நாடித்துடிப்பைப் பார்த்தார். ஒரு பெருமூச்சுவிட்டபடி சில வினாடிகள் யோசித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வயித்தில பலமாத்தான் உதை விழுந்திருக்குது. குழந்தையிலும் தாக்கிப்போட்டுது" என்று சொல்லியபடி இஞ்சிச் சாறு விட்ட மருந்துச் சிரட்டையில் நாலு குளிசை போட்டு, தனது பெரு விரலால் சிரட்டையில் குளிசையை உரசி உரசிக் கரைத்து அவளின் வாயில் பருக்கினார். சுறுப்பு நிறத்தில் கொஞ்சம் சுழிம்பு கொடுத்தார். "நோ பட்ட கீழ்வயித்திலயும், பக்க வயித்திலயும் மூன்று நேரமும் இதைப் பூசுங்கோ" என்று சொல்லி, தன் கூலியைப் பெற்றுச் சென்றார் பரியாரியார்.

கிட்டிணன் மனைவிக்கு நாளுக்குநாள் நோவு அதிகரித்தது. அந்த ஊரில் அக்காலத்தில் இயந்திர வாகன வசதிகள் இல்லை. கடுமையான நோயாளரை மட்டும் இரட்டை மாட்டு வண்டிலில் வளத்தி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வர். எல்லோரிடமும் பண வசதியுமில்லை. அவசர தேவைக்கு சம்மாட்டிமாரின் கையைத்தான் எதிர்பார்க்க வேண்டும். கிட்டிணன் ஓர் சம்பளத் தொழிலாளி. மனைவியை பட்டணம் கொண்டுசெல்வதற்கு வசதியற்றவன். எனவே ஊர்ப் பரியாரியின் மருந்து போதும் என்ற முடிவை எடுத்தான்.

பரியாரியின் மருந்துக்கு வயிற்று நோவு கட்டுப்படவில்லை. நாளும் பொழுதும் வேதனை அதிகரித்தது. அவளும் "என்னை எங்கயும் கொண்டு போகாதையுங்கோ. அவங்கள் கீறிக் கிழிச்சுப் போடுவாங்கள்" என்று ஒரேயடியாக மறுத்துப் படுக்கையில் கிடந்தாள். உதை விழுந்த ஒரு கிழமைக்குள் வயிற்றுக்குள் சிசு இறந்துவிட்டது. அதனால் ஏற்பு வலி தொடங்கியது. இரண்டாம் கிழமை பிள்ளை வயிற்றுடன் கிட்டிணன் மனைவி மரணத்தை ஏற்றுக்கொண்டாள்.

ஊதிப்பொருமிய வயிற்றுடன் அவளின் உடலை பாடையில் கிடத்தி மிகவும் சிரமத்துடன் சுடலை நோக்கிக் காவிச்சென்றனர். பெண்கள் கதறி அழுத ஓலம் அவ்வூர்ப் பிள்ளையார் கோயில் மூலஸ்தானத்திலும் எதிரொலித்தது. சைவசமய வழக்கப்படி பிள்ளைவயிற்றுடன் இறந்தோரை எரிப்பதில்லை. புதைப்பர். 'காட்டுப் பன்றி கிண்டிப்போடும் என்று' மிகவும் ஆழமான கிடங்கு தோண்டி சுடலையில் அவளைப் புதைத்தனர்.

கிட்டிணன் இப்போது தாரம் இழந்தவன் ஆனான். கரைவலைத் தொழிலைச் செய்துகொண்டே வீட்டு வேலைகளைக் கவனித்தவாறு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மூன்று பிள்ளைகளையும் வளர்த்து வந்தான். மறுமணம் செய்யவில்லை. அந்த ஊர்களில் 'பெண்விதவை' மறுமணம் செய்வதில்லை. பெரும்பாலான 'தாரமிழந்த ஆண்களும்' மறுமணம் செய்யாமலேயே வாழ்ந்து வந்தனர்.

"இந்த இளம் வயதில பெண்டிலைப் பறிகுடுத்துட்டு அங்க பார், ரண்டாம் கலியாணம் கட்டாமல் பிள்ளையளை வளக்கிறான்" என்று கிட்டிணனின் நன்நடத்தை பற்றி, ஊர் மக்கள் பெருமையாகப் பேசிக் கொண்டனர். மனைவி இல்லாத கவலையும் காலப்போக்கில் கிட்டிணனிடம் மறைந்தது.

ஆண்டுகள் சில கடந்தன. கோயிலான் மனைவி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தோய்ந்த ஈரத்தலையுடன், பிள்ளையார் கோயிலைச் சுற்றி முட்டுக்காலில் தவழ்ந்து அடியழித்து வணங்கி வந்தாள். குழந்தை இல்லாத அவளின் துயரம் சில வருடங்கள் நீடித்தது. அதன்பின் அவளின் கோயில் நேர்த்தி வீண்போகவில்லை. அவள் கர்ப்பமுற்றாள். 'கோயிலானுக்கு பிள்ளை பிறக்கப் போகுதாம்' என்று அந்த ஊரே மகிழ்ந்தது. முதலில் ஒரு பெண் குழந்தையும் மூன்று வருடங்களின் பின் ஓர் ஆண் குழந்தையும் பிறந்தனர். தமது இரண்டு கண்கள்போல் கோயிலானும் மனைவியும் தம் குழந்தைகளைக் கவனித்து வந்தனர். நாளும் பொழுதும் குழந்தைகள் செழித்து வளர்ந்தனர்.

"உவன் மலட்டுக் கோயிலான்" என்ற பகிடிப்பேச்சை இல்லாமல் செய்த தம் இரு பிள்ளைச் செல்வங்களையும் தம் உயிர்போல் அவர்கள் பேணிக் காத்தனர்.

அந்த ஊர்ப் பள்ளிக்கூடத்தில் உள்ளது ஐந்து வகுப்புத்தான். மேலே படிப்பதாயின் பட்டணம் செல்லவேண்டும். பணவசதி குறைந்த கோயிலான் பிள்ளைகளின் படிப்பும் ஐந்தாம் வகுப்புடன் நின்றுவிட்டது. தந்தையுடன் சேர்ந்து மகன் கரைவலைத் தொழில் செய்தான். தாய்க்கு உதவியாக இருந்து வீட்டு வேலைகளை மகள் கவனித்தாள். இவ்வாறாக வருடங்கள் நகர்ந்தன. மகளின் கலியாணக் காலமும் நெருங்கியது. அவளை உறவுமுறை மச்சானுக்கு திருமணம் செய்து கொடுத்தனர். அவள் தனது கணவனுடன் 'தனிக்குடித்தனம்' சென்றுவிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலானின் மகன் பலம் மிகுந்த இளந்தாரியானான். முறுக்கேறிய உடற்கட்டு. மாரி காலத்தில் எவ்வித காற்றுக் கடலிலும் கட்டுமரம் தள்ளி மீன்பிடிக்கச் செல்வான். கோயிலான் இப்போது, ஓரளவு செல்வாக்குடன் ஊருக்குள் உலாவினான்.

காலம் நீள்வது போல் கோயிலான் மகனும் நீண்டு வளர்ந்தான். இனியும் தாமதம் கூடாதென்று மகனுக்கும் திருமணம் செய்து வைத்தனர்.

சில வருடங்களின்பின் கந்தசஷ்டி விரத காலத்தில் தொண்டமானாறு சந்நிதி மடத்தில் கோயிலானும் மனைவியும் ஒவ்வொரு வருடமும் மிளகும் தண்ணியும் குடித்து, கடும் விரதம் இருந்து வந்தனர். பதினைந்து வருடங்கள் சென்றும் அவர்களின் மகளுக்கோ மகனுக்கோ குழந்தை ஒன்றும் பிறக்கவில்லை. அந்த மன வேதனையால் தமது பரம்பரை தழைக்க வேண்டுமென்று நேர்த்தி வைத்து கந்தசஷ்டி விரதமிருந்து, கோயில் மடத்தின் வெற்றுத் தரையில் இருவரும் படுத்துக் கிடந்தனர்.

அறிவு வளர்ச்சியின் பயனாக காலப்போக்கில் நவீன இயந்திர வள்ளம் நைலோன் வலை முதலிய வசதிகளுடன் கூடிய ஆழ்கடல் மீன்பிடிமுறை அறிமுகமானது. அம்முயற்சியில் வருமானமும் அதிகமாகக் கிடைத்தது. வாடைக்காற்றுக் காலத்தில் நெடுந்தீவு காரைநகர் முதலிய ஈழத்தின் வடபகுதிக் கடல்களிலும் மேற்கே சிலாபம் மன்னார் கடல்களிலும் ஆழ்கடல் மீன்பிடியில் இவ்வூர் மக்கள் ஈடுபட்டனர். சோழகக்காற்று வீசுகின்ற மாதங்களில் யாழ் குடாநாட்டின் கிழக்குப்பக்கமாக ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்வர். இவ்வாறு வருடத்தின் பன்னிரண்டு மாதங்களும் மீன்பிடிக்கும் வாய்ப்பை இந்த நவீனத்துவம் வழங்கியது.

ஆழ்கடல் மீன் பிடி பெரும்பாலும் இளைஞர்களைக் கவர்ந்திழுத்தது. அவர்களின் இளம் மனைவிமார் வசதியாக தங்கள் வீட்டில் இருந்தனர். கணவன்மார் பிறகடல் தொழிலின் விடுமுறை நாட்களில் பணத்துடன் வீடு வந்து மீளுவர். மனைவிமாரை நகரத்துக்கு அழைத்துச் சென்று சினிமா பார்த்து வருவர். தங்க நகை, பட்டுப்புடவை முதலியனவற்றை வாங்கிக் கொடுப்பர். இவ்வாறு அவ்வூர்களின் பணப்புழக்கத்தில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய வருமானக் கவர்ச்சியால் கோயிலான் மகன் அருணனும் தூண்டப்பெற்றான். தமது சொந்த ஊர்க்கடலில் உழைத்து, தாய் தந்தை மனைவியுடன் அவன் குறைவின்றி வாழ்ந்து வந்தவன். இருந்தும், இன்னும் அதிகமாக உழைக்கவேணும் என்ற ஆசையால் ஆழ்கடல் தொழிலில் சேர்ந்தான். தாய் தந்தைக்கு இதில் சிறிதும் விருப்பமில்லை. எவ்வளவோ புத்தி சொல்லித் தடுத்தனர். ஆனால் மனைவியின் தூண்டுதல், இறுதியில் வெற்றிபெற்றது.

இயந்திரவள்ள மீன்பிடித் தொழிலில் இரண்டு வருடங்கள் கழிந்தன. கோயிலானின் வீடும் முன்பிலும் பார்க்க கலகலப்பாக மாறியது. அவரின் மருமகளின் உடலை அட்டியல், சங்கிலி, காப்பு, தோடு, முதலிய ஆபரணங்கள் அலங்கரித்தன. ஆழ்கடல் தொழிலாளரின் மனைவிமாரை கோயில் திருவிழாக்களில் சனங்கள் ஆசையுடன் பார்த்தனர்.

அது ஒரு மாரிகாலம். நெடுந்தீவுக் கடலில் ஆழ்கடல் தொழில்செய்த கோயிலான் மகன் அருணன், இரண்டு நாள் விடுமுறையில் வீடு வந்தான்.

"எட மோன காலம வைச்ச நல்லெண்ணையல்லோ. உங்க பார் கண்ணுக்க வழியுது. நேரமும் உச்சிப் பொழுதாகுது. முழுகன் மோன... கெதியாய் முழுகு" என்று அருணனின் தாயார் அன்புடன் பணித்தார்.

"எணை அம்மா, அரப்புப் பானையை சுட வையணை. நான் ஓடிப்போய் கள்ளு வாங்கிக்கொண்டு வாறனணை" என்று, பதில் கொடுத்தான் அருணன்.

"எடேய் மோன, கொய்யா போய் கள்ளை வாங்கி வரட்டுமடா. நீ முழுகடா ஒரு கிழமையாய் சரியான நித்திரையுமில்லை எண்டு சொல்லுறாய். உந்தப் பழங்கிணத்தில சூடு பறக்க நல்லாய் முழுகு மோன. முழுகிப்போட்டு முட்டை பொரிச்சு வைச்சிருக்கிறன், கோழி இறைச்சியோட நல்லாத் தின் மோன திண்டுட்டுப் படு. படுத்து நித்திரையைக் கொள்ளு மோன'' என்று தாயார் தன் ஒரே மகன்மீது அன்பைக் கொட்டினாள்.

கோயிலான் மனைவி கண்ணாத்தையும் மகன் அருணனும் இவ்வாறு உரையாடிக்கொண்டிருக்கும்போது அருணனின் மனைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தினம், மீன் துண்டுகளை பொரித்துக் கொண்டிருந்தாள். பொரியல் வாசனை மூக்கைத் துளைத்தது.

"மாமி சொல்லுறதும் சரிதால்லோ. கெதியாய் முழுகிப் போட்டு வாங்கோவன் சாப்பிட காலமைக்கு பயணம் எண்டும் சொல்லுறியள்". மாமிக்கும் தன் கணவனுக்கும் கேட்கும்படியாக இரத்தினம் உரத்துச் சொன்னாள்.

இவர்கள் இப்படிக் கதைக்கும்போது அருணன் கால்கிளப்பி தெற்குப் பக்கமாக ஓடினான். பதினைந்து நிமிடத்தில் நுரை கக்கும் இரண்டு போத்தல் பனங்கள்ளுடன் ஓடிவந்தான். அவற்றை மண்ணுக்குள் அழுத்தி வேலியுடன் சாய்த்து மெதுவாக வைத்தான். தாயார் கண்ணாத்தை அரப்புப் பானையை அடுப்பிலிருந்து இறக்கி, கையில் சுடாதவாறு பழைய சீலைத்துண்டால் பானையின் வாயை பற்றிப் பிடித்தபடி, கிணற்றடிக்கு அரப்பைக் கொண்டு வந்தாள்.

"இஞ்சை வா மோன. வந்து இங்க இரு மோன. அம்மா அரப்பு வைச்சு விடுறன்" என்று மகனை அழைத்தாள்.

மகன் கிணற்றடி ஈரமண்ணில் குந்தி இருந்தான். தாயார் அவிந்து வேகின தேசிக்காய் துண்டுகளால், சுடச்சுட அவன் தலையில் உரசினாள்.

"என்னடா மோன, சின்னச் சின்ன சொடுகுகள் எல்லாம் தலையுக்க கிடக்குது?".

"அங்க தீவுக்கிணத்துத் தண்ணியளுக்க அம்மா உப்பு கலந்திருக்குதம்மா".

"அதுதான் சொடுகு பிடிக்குதுபோல" என்று சொல்லிக்கொண்டு வெந்தயம் சீயாக்காய் இரண்டையும் சேர்த்து, தன் வலக்கையால் பிசைந்து இரண்டு கையாலும் அரப்பை அள்ளி சுடச்சுட மகன் தலையில் தேய்த்தாள்.

"ஆ.... ஊ.... அம்மா.... ணேய்.... சுடுகுதணை. அரப்புக்க கொஞ்சம் பச்சத்தண்ணி கலவணை".

"மோன, சுடச்சுட அரப்பு வைச்சால்தான் தலைச் சொடுகெல்லாம் போகும் மோன. பேசாமல் கொஞ்ச நேரம் பல்லைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிச்சுக்கொண்டு இரு மோன. தலை என்ன அவிஞ்சு போகப் போகுதோ மோன?'' என்று பெற்ற வயிறு, மகனை ஆறுதல் படுத்தியது.

சிறிய ஒரு பானையில், அதன் அரைவாசியளவில் கண்ணாத்தை அரப்பு அவித்திருந்தாள். அதை இரண்டு கையாலும் கொஞ்சம் கொஞ்சமாய் அள்ளி அள்ளி, தன் மகன் தலையில் வைத்து 'மசாஜ்' செய்வதுபோல கசக்கிக் கசக்கித் தேய்த்தாள்.

"அம்மா இந்த வருசம் நல்லாய் மீன் படுகுதணை. சூரையும் அறக்கோளாவும் முந்தின வருசத்திலும்பாக்க, கூடுதலாய் படுகுதணை".

"அது சரி மோன இந்த மாரித்தொழில் முடிய, பேசாமல் ஒரு மாதம் வீட்டில வந்து ஆறுதலாய் இரு". தாய்ப்பாசம் பேச்சில் வெளிப்பட்டது.

"அம்மா, என்ர ஆசையண உந்தக்களிமண் கொட்டிலை இடிச்சுப் போட்டு, ஒரு கல் வீடாய்க் கட்டி கூரைக்கும் ஓடு போட வேணுமணை. ஐயா பாவம். அவருக்கு வயசும் போகுதண. அவரால இனி கிடுகு பின்ன ஏலாதெல்லோ. உங்கள் ரண்டு பேரையும் கடைசி காலத்தில, நான் சந்தோசமாய் வைச்சிருக்க வேணுமெல்லோ''.

"மோன, எங்களுக்கு காசு கல்வீடு பெரிசில்ல. நீதான் எங்கட உயிர். நீ உந்த ஏறாக்கடல்ல போறது எங்களுக்கு விருப்பமில்லை. உதை விட்டுட்டு, ஊரில வந்து தொழிலைப் பார்த்துக்கொண்டு உன்ர மனிசியோட வீட்டோட இரு மோன''.

"அம்மா கொஞ்சக் காலம் பொறணை. வடக்கு வீட்டையும் குசினியையும் கல்வீடாக்கிப்போட்டு, நான் வீட்டோட இருக்கிறனம்மா. சரிதானே?''

"சரி மோன, நீயும் பிடிச்ச பிடியில நிக்கிறாய். எங்கட சொல்லையும் கேளாயாம். ஏதோ உன்ர விருப்பம்" என்று தாயார் சொல்லும்போது, அரப்பும் தேய்த்து முடிந்தது. அருணனின் கண்களுக்குள் அரப்பும் எண்ணெயும் சேர்ந்து ஒன்றாய் வழிந்தது. கண்களைக் கசி மூடியபடி கிணற்றடிக்குச் சென்றான். இடிகம்பில் கொளுவிய வாளியை எடுத்து கிணற்றிலிருந்து நீரை இறைத்து இறைத்து தலைமுழுகத் தொடங்கினான். மனதுக்குள்ளே ஒன்று இரண்டு என்று எண்ணியபடி அருணன் நீராடினான். மகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுகுவதை தென்னைமர நிழலில் குந்தி இருந்துகொண்டு பார்த்த தாய் "மோன, சூடு பறக்க நல்லாய் முழுகு மோன ஐநூறு வாளி எண்டாலும் முழுகவேணும் மோன" என்று கண்டிப்புடன் சொன்னாள்.

அருணன் நன்கு நீராடிவிட்டு வெயிலில் தலையை உலர்த்தினான். கள்ளைக் குடித்தான். குசினிக்குள் புகுந்தான். குந்து பலகையில் அமர்ந்தான். மூடல் கவிழ்த்து அதற்குமேல் சோற்றுக் கோப்பையை வைத்து, மனைவி இரத்தினம் உணவைப் பரிமாறினாள். வெயில் நேரமாதலால் உடல் வியர்க்க வியர்க்க சுவைத்துச் சுவைத்து உணவை உண்டான் அருணன்.

"இன்னும் கொஞ்சம் ஒடியல் புட்டு வைக்கட்டே?"

"ஓம், வைச்சு இறைச்சிக் குழம்பையும் ஊத்து"

"இந்தாங்கோ முட்டைப் பொரியல்"

"அச்சா, சோக்காத்தான் இருக்கு"

"இன்னும் ஒரு துண்டு, மீன் பொரியல் போடட்டே?"

"வேண்டாம், கொஞ்சம் கத்தரிக்காய் விடு"

என்றவாறு இருவரும் உரையாடியபடி கணவன் உண்பதை மனைவி இரத்தினம் ஆசையாகப் பார்த்தாள். பொரித்த மீன் முள்ளை நீக்கி எடுத்து உண்பதற்கு வசதியாக கணவனின் கையில் கொடுத்தாள். தாம் பெற்ற பிள்ளை என்றாலும் தம்பதியாக சேர்ந்திருந்து உண்பதை, பெற்றோர்கள் பார்ப்பது வழக்கமில்லை.

எனவே முற்றத்துத் தென்னை நிழலில் இருந்து, தாயார் கண்ணாத்தை காகங்களைக் கலைத்தார்.

அப்போது, அவர்கள் வளவின் படுவான் மூலையில் நிற்கும் இத்திகட்டிப் பனையில் சீவல்கார மாணிக்கன் ஏறினான்.

"எணேய் அம்மா, தம்பியர் ஏதாவது கருவாடு கொண்டு வந்தவரோணை?"

நடுப்பனையில் இருந்து இளைப்பாறியபடி மாணிக்கன் கண்ணாத்தையைக் கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை மாணிக்கன். இந்த முறை அவன் ஒண்டும் கொண்டு வரயில்லை".

"அடுத்த முறை வரயுக்க எனக்கொரு கட்டாக்கருவாடு கொண்டுவரச் சொல்லுங்கோம்மா. நான் காசு தாறன். என்ர மனிசி பிள்ளைத்தாச்சி. நான் ஊருக்குப் போகயுக்க மனிசிக்கு கொண்டு போகவேணும்".

சிவல்கார மாணிக்கனில் அருணனுக்கும் நல்ல விருப்பம். அருணன் சாப்பிட்டு முடிந்து குசினிக்கு வெளியால் வரும்போது, தாயும் மாணிக்கனும் உரையாடுவது அருணன் காதிலும் கேட்டது. அந்தப் பனையை நிமிர்ந்து பார்த்து வெயிலுக்குள் கண்ணைச் சுருக்கி கூசியபடி "ஓம் மாணிக்கன், நான் இன்னும் ஒரு மாதத்தால கட்டாயம் ஊருக்கு வருவன். வரயுக்க ஒரு கருவாடு உனக்குக் கொண்டுவாறன்" என்று மாணிக்கனுக்கு பதில் சொன்னான். மாணிக்கன் அப்போது பனை ஓலையில் உட்கார்ந்தபடி பாளைகளிலிருந்து மண் முட்டிகளை கழற்றிக் கழற்றி, பெரிய ஒரு 'ஏத்துமுட்டிக்குள்' கள்ளை ஊற்றிக்கொண்டிருந்தான். மறுநாள் காலையில் தொழிலுக்காக அருணன் நெடுந்தீவுக்கு பயணமானான்.

கி.பி. 1964 ஆம் ஆண்டு வாடைக்காற்றுக் காலம். மார்கழி மாத நடுப்பகுதி. அப்போது கந்தசாமியின் வயது நாற்பத்தொன்று. அந்த இயந்திர வள்ளத்தில் மீன்பிடித்தொழில் செய்வோரில் அவன்தான் வயதில் மூத்தவன். சுக்கான்பிடித்து வள்ளத்தைச் செலுத்தும் 'தண்டையல்' பணியைச் செய்தவனும் அவன்தான். அன்று அவனது இயந்திர வள்ளத்தில் மீன் அதிகமாகப் பிடிபட்டது. சூரை, கட்டா, அறக்கோளா முதலிய மீன்களால் வள்ளம் நிறைந்திருந்தது. உதயப்பொழுது ஏழு மணியளவில் கரை நோக்கி மீன் பாரத்தில் வள்ளம் மெதுவாக ஓடிவந்தது. அப்போது கச்சான் மூலையிலிருந்து வித்தியாசமான காற்று மெதுவாக வீசுவதை, தண்டையல் கந்தசாமி புரிந்துகொண்டான். அவன் நீண்டகாலமாகக் கடலோடும் அனுபவம் பெற்றவன். நெடுந்தீவுக்கரை சேர்ந்ததும் வள்ளத்தில் இருந்து மீன்களை இறக்கினர். மீன் விற்பனையும் முடிவுற்றது. வாடியில் இருந்த தொழிலாளிகள் கருவாடு போடும் மீன் இனங்களை கீறிக்கிழித்து உப்பிட்டுக் கிடங்கில் புதைத்தனர். கந்தசாமியும் இரு உடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளரும் கள் குடிக்கச்சென்று வந்தனர். மதிய உணவை உண்டனர். சிறிது நேரம் உறங்கினர். நேரம் பிற்பகல் நான்கு மணி இருக்கும். இயந்திர வள்ளங்கள் ஒன்றன் பின் ஒன்றாக நெடுந்தீவுக் கடலில் தென் இந்தியா நோக்கிச் சென்றுகொண்டிருந்தன. கந்தசாமி தொழில் செய்கின்ற இயந்திரவள்ள முதலாளி மூன்று சோற்றுப் பெட்டிகளைக் கட்டினான். கடலுக்குப் புறப்படுவதற்கு ஆயத்தமானான்.

"மாமா மாமா, எல்லாற்ற வள்ளங்களும் போகுது. எழும்புங்கோ எழும்புங்கோ. நாங்களும் வெளிக்கிடவேணும்" என்று வள்ளமுதலாளி, மாமனை தூக்கத்தால் எழுப்பினான்.

கந்தசாமியின் பழக்கம், நித்திரையில் அவனை யாரும் எழுப்பக்கூடாது. தன் நித்திரையை யாராவது குழப்பினால் அவர்மீது கோபப்படுவான். தான் குறித்த நேரத்தில்தான் அவன் தூக்கத்தால் எழும்புவான். அன்று இரண்டு போத்தல் தென்னங்கள் குடித்துச் சாப்பிட்டுவிட்டு ஆறுதலாக அவன் ஆழ்ந்த உறக்கத்தில் படுத்துக் கிடந்தான்.

"மாமா மாமா எழும்புங்கோ". முதலாளியின் குரல் சிறிது அதிகாரத்துடன் ஒலித்தது.

பயந்து திடுக்கிட்டெழுந்த மூன்றாவது தொழிலாளி உடனே உசாரடைந்தான். தன் முகத்தை நன்கு கழுவினான். சுருட்டு, தீப்பெட்டி, வெற்றிலைபாக்கு ஆகிய தேவையானவற்றை எடுத்துக்கொண்டு கடலுக்குப் புறப்படுவதற்குத் தயார் நிலையில் இருந்தான்.

"மாமா நீங்களும் ஒரு மனிசனோ? எத்தின முறை எழுப்புறன் படுத்துக் கிடக்கிறியள். மீனும் தேனும் கண்ட அண்டைக்குத்தானே. உங்க பாருங்கோ, எல்லாற்றை வள்ளமும் உயரப்போய் மறைஞ்சுட்டுது" என்று முதலாளி குரல் எடுத்துச் சத்தம் போட்டான்.

கந்தசாமி முக்காடு போட்டபடி போர்த்துப் படுப்பது வழக்கம். கடற்காற்றும் அதிக குளிருடன் அன்று வீசிக்கொண்டிருந்தது. வள்ளமுதலாளி விங்கனின் குரல் கேட்ட கந்தசாமி, மெல்லமாக தன் முக்காட்டை நீக்கினான். நித்திரை, கள்வெறி, தொழில் அலுப்பு என்பன இன்னும் அவனது உடலில் காணப்பட்டன. அரைகுறையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கக் கண்ணோடு கண்ணைக் கூசியபடி கந்தசாமி தலையைக் கிளப்பினான்.

"மாமா எழும்புங்கோ கடலுக்குப் போவம்" என்று வள்ளமுதலாளி எழுப்பினான்.

வடமேற்குக் கச்சான் மூலையையும் கடலையும் வானத்தையும் திரும்பத் திரும்ப, இரண்டு தடவை கந்தசாமி பார்த்தான். அன்றைய உதயத்திலும் பார்க்க, இன்னும் கொஞ்சம் கூடுதலாக 'கிசுகிசு' என்று கச்சான்காற்று வீசிக்கொண்டிருந்தது. காற்றின் குளிரும் அன்று சிறிது வித்தியாசமான முறையில் 'சுள்' என்று உடலில் குத்தியதை கந்தசாமி உணர்ந்துகொண்டான்.

"மருமோன்! கடல் நோக்கம் இண்டைக்கு சரியில்லை. இண்டைக்கு நாங்கள் கடலுக்குப் போகவேண்டாம். பேசாமல் எல்லாரும் படுங்கோ" என்று அறிவுரை கூறினான்.

"மாமா, என்ன விசர்க்கதை கதைக்கிறியள். ஒவ்வொரு நாளும் பத்தாயிரம் இருபதாயிரத்துக்கு மீன் படுகுது. உந்த உழைப்பை இந்தக் காலத்தில ஆரும் விடுவினமே? கெதியாய் எழும்புங்கோ கடலுக்குப் போவம்" என்று மாமன் என்றும் பார்க்காமல், சிறிது உரத்த கோபத்துடன் சொன்னான் வள்ளமுதலாளி லிங்கன்.

கந்தசாமிக்கு மெல்லிய கோபம் அரும்பி வந்தது. திரும்பவும் கச்சான் மூலையை ஒருமுறை நன்றாகப் பார்த்தான்.

"எடேய் ஆரெண்டாலும் கடலுக்குப் போறவங்கள் போகட்டும். நீங்களும் விரும்பினால் போங்கோ. நான் இண்டைக்குத் தொழிலுக்கு வரயில்லை, தெரியுதோ? இதுக்குமேல கதைச்சால், தெரியும்தானே மாமாவின்ர குணம். என்னை இராத்தீனுக்கும் ஒருதரும் எழுப்பக்கூடாது" என்று அழுத்திச் சொல்லிவிட்டு எவரது பதிலுக்கும் காத்திராமல் முக்காடு போட்டு இழுத்துமூடி உடலைப் போர்த்தபடி படுத்துக்கொண்டான் கந்தசாமி.

மாமனுக்குக் கோபம் வந்தால் பயமும் மரியாதையும் வள்ளமுதலாளி லிங்கனிடம் காணப்படும். அவனது தகப்பன் வழிவந்த இரத்த உறவில் லிங்கனுக்கு, கந்தசாமி மாமன் முறையானவர். எனவே தன் மாமனை எதிர்த்துப் பேசுவதை லிங்கன் நிறுத்தினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கென்ன மாமா, உங்களோட்ட நட்டம்தானே எனக்கும்" பேசாமல் இண்டைக்குப் படுப்பம், என்ற முடிவுக்கு வந்தான் வள்ளமுதலாளி.

"எடேய் தம்பி, நீ நீந்திப்போய் எஞ்சினை ஸ்ராட்பண்ணி வள்ளத்தைக் கொஞ்சம் உயரத்திலை கட்டிப்போட்டு நீந்தி வாடா தம்பி" என்று தனக்கு இளைய தொழிலாளியான துரையனுக்கு, வள்ளமுதலாளி லிங்கன் சொன்னான். அப்போது மாமன் கந்தசாமியின் கொறட்டைச் சத்தம் ஒருவித இராகத்துடன் கேட்டது. கொறட்டையைக் கேட்டதும் சிறிது கோபம் வந்தாலும் தன் மனதில் லிங்கன் அதை அடக்கிக்கொண்டான். பின்னேரக் கள் ஒரு போத்தல் குடிப்பம் என்று அவன் தெற்குப் பக்கம் சென்றான்.

இரவு ஒன்பது மணியளவில் சுருட்டைப் பற்றவைத்து புகையை விட்டபடி, படுப்பதற்குத் தயாரானான் வள்ளமுதலாளி லிங்கன்.

"கச்சான் காற்று கொஞ்சம் கூடுதுபோல கிடக்கு" என்று சொல்லியபடி "அப்பனே முருகா" என்று தன் குலதெய்வத்தை மனதில் இருத்திக்கொண்டு தூக்கத்துக்குத் தலை சாய்த்தான் லிங்கன். சிறிது நேரத்தில் சில கொறட்டை ஒலிகள் இராகம் பாடின.

இரவு பத்துமணியளவில் 'உஸ் உஸ்' என்ற இரைச்சலுடன் காற்றும் பெருமழையும் பொழியத் தொடங்கின. நிமிடத்திற்கு நிமிடம் அவற்றின் வேகங்கள் அதிகரித்தன.

மீன்பிடித் தொழிலாளர் தமது ஆறுமாத மாரித் தொழிலுக்கென தற்காலிகமான வாடிகள் அமைத்திருப்பர். நான்கு கப்புகள் நாட்டி கிடுகுக்கூரையுடன் கொட்டில் போடுவர். இவை பலமான கட்டமைப்பைக் கொண்டவையல்ல. அன்று வீசிய பேய்க்காற்று இந்தவகை வாடிகளை உலுப்பி எடுத்ததால் அவற்றின் கூரைகள் அசையத் தொடங்கின.

லிங்கன் முதலாளியின் கொட்டிலுக்குள் பொங்கலாண்டி உட்பட நால்வர் அன்று உறங்கிக் கிடந்தனர். பெருமழை சுழல்காற்று கடல் இரைச்சல் சத்தத்தில் எல்லோரும் விழித்தெழுந்து குந்தி இருந்தனர்.

காற்று மிகுந்த பலத்துடன் வீசத் தொடங்கியது. பக்கத்து வாடியில் ஆட்கள் இல்லை. அவர்கள் கடலுக்குச் சென்றுவிட்டனர். அவர்களின்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாடிக் கூரையைக் கிளப்பிய புயற்காற்று, தூரத்தில் வீசி எறிவதை நால்வரும் கண்ணுற்றனர்.

"மாமா நீங்கள்தான் எங்களைக் காப்பாற்றினியள் மாமா. இல்லாட்டில் நாங்களும் உந்தக் கடல்ல துலைஞ்சிருப்பம் மாமா" என்று தழதழத்த குரலில் சொன்னான், முதலாளி லிங்கன்.

"மருமோன் அமத்திப் பிடியுங்கோடா ஒவ்வொரு மூலையிலும் கூரையை இழுத்துப் பிடியுங்கோடா தம்பிமாரே..." என்று சத்தம் போட்டான் கந்தசாமி. வாடியின் உட்பக்கக் கூரையின் நான்கு மூலைகளிலும் நால்வரும் பற்றிப் பிடித்து, தமது பலம் முழுவதையும் சேர்த்து கூரையை புயல்காற்று தூக்கி வீசாதவாறு அழுக்கி வைத்திருந்தனர்.

புயல்காற்று மேலும் பலமாக வீசியது. "பிள்ளையள் இறுக்கிப் பிடியுங்கோடா" என்று கத்தினான் கந்தசாமி. அவர்கள் நால்வரையும் கூரையையும் சேர்த்து, புயல்காற்று ஒருமுறை மேலே கிளப்பியது.

"விடாதையுங்கோ பலமாக மூச்சைப்பிடித்து அமத்துங்கோ" என்று கந்தசாமி உசார் கொடுக்க, எல்லோருமாக கூரையை இழுத்து அழுக்கிப் பிடித்துக் கொண்டிருந்தனர். பேய்க்காற்றும் பெருமழையும் 'உஸ் உஸ்' என்ற இரைச்சலுடன் தொடர்ந்தன. கடலை நால்வரும் உற்று நோக்கினர். நுரை நுரையாக வெள்ளை வெளீரென்று கண்ணுக்கெட்டிய தூரம்வரை பால்போன்ற நிறத்தில் கடற்பரப்பு காட்சியளித்தது.

"உந்தக் கடலுக்க தொழிலுக்குப் போனதுகளின்ர பாடு என்னவோ தெரியாது. மண்டலாய்ப் பிள்ளையாரே..." என்று நெடுமூச்சு விட்டான் கந்தசாமி.

"மாமா! நீங்கள் எங்கட கண்கண்ட தெய்வம் மாமா. நீங்கள் எங்கள்ள உயிரைக் காத்த கடவுள் மாமா...." என்று மாமன் கந்தசாமியைப் பார்த்து, கண்கலங்கியபடி கூறினான் இயந்திர வள்ளமுதலாளி லிங்கன்.

விடியப்புறம் ஐந்து மணியளவில், காற்று படிப்படியாகக் குறையத் தொடங்கியது. மழையும் ஓய்ந்து நின்றது. கடலும் அடங்கியது. அலைகள் சிறியதாக அடிக்கத் தொடங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய இருள் துக்கத்துடன் மெல்லென விலகியது. பொழுதும் காலித்தது. நேரம்: 6... 7... 8... 9..10... ஆழ் கடலுக்கு மீன் பிடிக்கப்போன இயந்திர வள்ளங்கள் ஒன்றும் கரைவந்து சேரவில்லை. தொழிலுக்குப் போகாமல் கடலில் கட்டியிருந்த இயந்திர வள்ளங்களின் நங்கூரக் கம்பான்கள் புயல் காற்றினால் துண்டிக்கப்பட்டு, அந்த வள்ளங்கள் கடற்கரையோர மணலில் தூக்கிவீசி எறியப்பட்டிருந்தன.

தேடுதல் பணிகள் தொடங்கப்பட்டதாக இலங்கை வானொலி அறிவித்தது. பாதுகாப்பாக வேறு துறைமுகங்களில் நின்ற இயந்திர வள்ளங்களும் இலங்கைக் கடற்படைக் கப்பல்களும் ஆழ்கடல் நோக்கிப் புறப்பட்டுச் சென்றன. நான்கு நாட்களாக கடலெங்கும் தேடி அலைந்தனர். கடலில் மிதந்துவந்த சில சடலங்களை மட்டும் கரைக்கு எடுத்து வந்தனர். தொடர்ந்து சில நாட்கள் தேடியும் எதுவித பயனுமில்லை. தேடுதல் பணிகளும் கை விடப்பட்டன.

பல வீடுகளில் ஒப்பாரி ஓலங்கள் ஒலித்துக்கொண்டே இருந்தன.

"பத்தாவை வேண்டி, பல்லாண்டு தவமிருந்து, பெத்துச் சுமந்து, பெருமையுடன் நான் வளர்த்தேன் ஓ... ஓ...

என்ர ஐயா
என்ர அப்பு
என்ர செல்வம்"

"கடலோடிப் பேரெடுத்து, கண்ணியமாய் வாழ்ந்த உன்னை, கண்கெட்ட தெய்வங்கள் தண்ணிக்கிரையாக்கினதோ... ஓ... ஓ...

என்ர சீதேவி
என்ர பவுண்குஞ்சு
என்ர மஹாராசாவே"

"கொள்ளி வைக்க வந்தவனே, குடமுடைக்கப் பிறந்தவனே, எங்கள அநாதை ஆக்கிப் போட்டு ஆழி விழுங்கியதோ... ஓ... ஓ...

எங்கட அருச்சுனா
எங்கட தெய்வமே
எங்கட கடவுளே"

என்று 'தொம் தொம்' என்று மார்பு இரண்டிலும் குத்திக் குத்தி, அருணனின் தாய் சுண்ணாத்தை ஓராறு கண்ணீரும் ஒருமித்து

Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஓடும்படி' தினமும் ஒப்பாரி வைத்தாள். வருடங்கள் நான்கு கழிந்தன ஆயினும் அவரின் ஒப்பாரி இன்னும் ஓயவில்லை.

காலையில் எழுந்ததும் கண்ணாத்தை கடற்கரைக்குச் செல்வாள். மண் புட்டியில் கடற்பக்கம் கால்நீட்டி இருந்துகொண்டு ஒப்பாரி சொல்லி அழத் தொடங்குவாள். பொழுது மேலே ஏறி ஏறி பத்துமணி ஆகிவிடும். எழும்பவேமாட்டாள். தொடர்ந்தும் அழுதுகொண்டே இருப்பாள். கணவன் கோயிலானும் பக்கத்து வீட்டுப் பெண்களும் கைத்தாங்கலாக தூக்கி வந்து கண்ணாத்தை வளவு முற்றத்துத் தென்னைமர நிழலில் அவளைக் கிடத்துவர்.

சூறாவளி அடித்த நாளான அன்று மீன்பிடிக்க ஆழ்கடல் சென்ற பல்லாயிரம் ஆண்கள் கடலில் காணாமலே போயினர். அதில் கோயிலார் மகன் அருணனும் ஒருவன். தேடுதல் பணிகள் முடிவடைந்ததும், காணாமல் போன ஒவ்வொருவரின் தாய் தகப்பன் மனைவி போன்ற உறவினர் பலரும் சாத்திரிமார் வீடுகளில் சாதகம் குறிப்பு என்பனவற்றின் கணிப்பீடுகளைப் பார்த்து, தமது உறவுகளை தேடி அலைந்து திரிந்தனர்.

''இராமேஸ்வரத்தில் நிற்கிறாராம், அந்தமானில் இருக்கிறாராம், கேரளக்கரையில் ஒதுங்கி கிடக்கிறாராம், சாமியாகி தாடி வளர்த்து எங்கோ பூசை வைக்கிறாராம்..'' இப்படியே சொல்லிச் சொல்லி, அந்த ஏழைகளின் பணத்தை சாத்திரிமார் கறந்ததுதான் மிச்சம். 'யாரோ ஒருவர் வெற்றிலையில் மை போட்டு குறிப்புச் சொல்கிறாராம்' என்று அறிந்ததும் அவரிடமும் பலர் ஓடிச்சென்றனர்.

மகனின் கவலையால் கோயிலான் நோயுற்றார். மகன் இறந்த ஏழாவது வருடம் அவரும் இறந்தார். கோயிலானின் மகள் கலியாணம் முடித்து இருபது வருடங்களுக்கு மேலாகியது. இன்னும் அவளுக்குக் குழந்தைப் பாய்க்கியம் இல்லை. இத்தகைய பலவித கவலைகளால் அவளின் கணவனும் இறந்தான். தன் கணவன் இறந்த கவலையில் கோயிலார் மகளும் அதன் பின் இரண்டு வருடத்தில் இறந்தாள்.

அருணனுக்கோ குழந்தை இல்லை. சில ஆண்டுகளின் பின் அருணன் மனைவி இரத்தினம் பலரின் வற்புறுத்தலால் மறுமணம் செய்தாள். ஆனாலும் குழந்தைச் செல்வம் கிடைக்கவில்லை. எல்லாவித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்ப துயரங்களைச் சுமந்து நாளும் பொழுதும் உடல் தேய்ந்து... கோயிலார் மனைவி கண்ணாத்தையும் இறுதியில் காலமானாள்.

'சுழியோடும் திறமைசாலி' என்ற புகழ் எடுத்த கோயிலானுக்கு, வம்சப் பரம்பரை என்பது இல்லாமலேயே போயிற்று. அவனது தம்பி கிட்டிணனின் மூன்று பிள்ளைகளும் வளர்ந்து திருமணம் முடித்து, பரம்பரை தழைக்க வாழ்ந்து வந்தனர்.

13

தீபாவளிக்கு இரு கிழமைக்கு முன்னம் வெள்ளை வேட்டியும் அரைக்கை நைசனலும் அணிந்து, கையில் ஒரு பயணப் பையுடன் சின்னையாச் சம்மாட்டியார் தலைநகர் கொழும்பு செல்வதற்குத் தயாரானார். வாடகைக்கு ஓடுகின்ற பழைய 'சோமசெற்' கார் ஒன்று விடியப்புறம் நான்கு மணிக்கே சம்மாட்டியின் வளவுப் படலையில் வந்து நின்றது. மனைவி மக்களுக்குப் பயணம் சொல்லிய சம்மாட்டி காரின் பின் இருக்கையில் ஏறி அமர்ந்தார். அதுவரை மரியாதையுடன் கைகட்டி நின்ற கார்ச்சாரதி பின் கதவைச் சாத்திவிட்டுத் தன் இருக்கையில் ஏறி அமர்ந்தான். ஏறத்தாழ முப்பது நிமிடங்களில் 'பளை' புகையிரத நிலையத்தை கார் சென்றடைந்தது. அதிகாலையில் காங்கேசன்துறை புகையிரத நிலையத்தில் இருந்து புறப்பட்டு வந்துகொண்டிருந்த புகையிரதத்தில் ஏறிய சின்னையாச் சம்மாட்டியார் கொழும்பு நோக்கிப் பயணித்தார்.

"வாங்க சம்மாட்டியார் வாங்க" என்று வரவேற்றார், கருவாட்டுக்கடை முதலாளி.

"வணக்கம் முதலாளி" என்று சொல்லிய சம்மாட்டி அவர்முன் அமர்ந்தார்.

"வாங்க சம்மாட்டியார் எப்பிடி சுகங்? கறவல கூடு கட்டி வெச்சுப்புட்டீங்கலா?

"ஓமோம் முதலாளி, ஓமோம் அதுதான் கணக்குப் பாக்க எண்டு வந்தனான்".

கொழும்பு நகரின் முக்கிய வணிகவலயமான புறக்கோட்டையில், இந்திய வம்சாவழி வந்த பரவரும் தெற்குக் கரையோரச் சிங்களவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன் கருவாட்டு வணிகத்தை அப்போது முதன்மையாக நடாத்தி வந்தனர். தனது மீன் கருவாட்டு உற்பத்தியின் பெரும்பகுதியை பெர்னாண்டோ எனும் சிங்கள முதலாளிக்கே சின்னையாச் சம்மாட்டி அனுப்பி வந்தார். நீண்டகாலமாக அவருடன்தான் வியாபாரத் தொடர்பை வைத்திருந்தார். குருநாகல் நகரிலுள்ள அப்புகாமி எனும் சிங்கள முதலாளிக்கும் தனது உற்பத்தியில் ஏறத்தாழ பத்து விழுக்காடு அளவில் அனுப்பி வந்தார்.

"சரீங்க சம்மாட்டி, நீங்க கோச்சியில வந்த களையுங்க, நல்லாக் குளீங்க. சாப்பிடுங்க. தூங்குங்க. நாள காலயில பிஸினஸ் பத்தி பேசிப்புடுவம் சம்மாட்டி''.

"ஓம் முதலாளி, ஓமோம்" என்று சொல்லிக்கொண்டே சுற்றிச் சுற்றி சுழன்று செல்லும் ஏணிப் படிகளில் ஏறியவாறு, கருவாட்டுக் கடையின் மேல் மாடிக்கு வந்து சேர்ந்தார் சின்னையாச் சம்மாட்டி.

மறுநாள் காலை பத்து மணியாகிவிட்டது. கடைகள் திறந்து கலகலப்பாக வியாபாரம் நடைபெறும் சத்தம் கேட்கிறது. சம்மாட்டி யன்னலால் எட்டிப் பார்க்கிறார். லொறிகள் வரிசையாக வந்து நிற்கின்றன. சாக்குகளால் முதுகுப்புறமாக முக்காடு போட்ட தூக்குக் கூலிகள் லொறிகளில் இருந்து பலவகைச் சிப்பங்களை இறக்குகின்றனர். கரத்தை வண்டிகளில் சிப்பங்களை அடுக்கி பலர் தள்ளிச் செல்கின்றனர். தெருவோரப் பெட்டிக்கடையில் தேநீர்க் கடைக்காரன் பால்கலந்த தேநீரை இழுத்து ஆத்துகிறான். வெள்ளை வேட்டியும் வெள்ளை மேற்சட்டையும் அணிந்த முதலாளிகள் பலர் கார்களில் வந்து இறங்கி, தமது கடைகளுக்குள் கால் வைக்கின்றனர். பக்கத்துக் கடையின் பரவ முதலாளி, தனது பென்ஸ் காரில் வந்து இறங்குகிறார்.

சாளரத்தின் ஓரமாக சுவரில் முழங்கைகளை ஊன்றி, கை முஷ்டிகளை நாடிக்குக் கொடுத்துத் தாங்கியவாறு கடைத்தெருவில் நடைபெறும் கலகலப்புகளை தன்னை மறந்த நிலையில் சின்னையாச் சம்மாட்டி ரசித்துக்கொண்டு நின்றார்.

பெர்னாண்டோ முதலாளி படிக்கட்டில் மெதுவாக ஏறி மேல்மாடிக்கு வந்ததைக்கூட அவர் கவனிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சம்மாட்டியோவ்" என்று அழைக்கும்போதுதான், திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்.

"வாங்க சம்மாட்டி. உப்புடி உக்காருங்க" என்று மேசைக்கு முன்னாலுள்ள நாற்காலியை பெர்னாண்டோ காண்பித்தார். தானும் சுழல் கதிரையில் எதிர்முகம் நோக்கி அமர்ந்துகொண்டார்.

"சம்மாட்டி ஆச்சி, புள்ளங்க, பேரப்புள்ளங்க எல்லாப்பேரும் சுகங்களா சம்மாட்டி?"

என்று கேட்டுக்கொண்டே கலகலக்கும் தனது சாவிக்கொத்திலிருந்து ஒரு திறப்பைத் தெரிந்தெடுத்து, வலது பக்க மேசை லாச்சியைத் திறந்து, நீள நீளமான கணக்குப் கொப்பிகளை மேசையின் இரு பக்கத்திலும் அடுக்கி அடுக்கி, ஒழுங்காக வைத்தார்.

"ஓம் முதலாளி ஓமோம். எல்லாரும் சுகம்தான். இப்ப வலை வைச்சாச்சுத்தானே வாடைக் காற்றும் மெல்லிசாய் அடிக்குது. ஊரும் ஒடுங்கிப்போச்சுது. தீபாவளியை எதிர்பாத்து சனங்கள் காத்திருக்குதுகள்".

பெர்னாண்டோ முதலாளி ஒரு நீளக்கொப்பியை விரித்தார். அதில் கணக்கெழுதிய பக்கத்தில் தனது வலது கையின் நடுவிரலால் மேலிருந்து கீழாக கீறிக்கொண்டே கணக்கில் ஆழ்ந்திருந்தார்.

"அதுதான் முதலாளி கணக்குப் பார்த்து தொழிலாளியளுக்கு சம்பளக்காசு குடுக்கவேணும். வாற வருசம் தொழில் செய்ய புதுக்கணக்கால முற்பணமும் குடுக்கவேணும். இந்த முறை காசும் கொஞ்சம் கூடுதலாய் தேவைப்படுகுது முதலாளி".

என்று சம்மாட்டி சொல்லிக்கொண்டிருக்கும்போது கடை முதலாளி ஒருமுறை நிமிர்ந்து அவர் முகத்தைப் பார்த்தபின், மறுபடியும் கணக்குக் கொப்பியில் கண்ணைச் செலுத்தினார். திரும்பவும் ஒருமுறை சம்மாட்டியின் முகத்தை உற்றுப்பார்த்து ஒரு பெருமூச்சும் விட்டார்.

"அது சரி சம்மாட்டி உப்ப மூணு வருசமாய் ஒங்கட பாக்கி ஏறிக்கிட்டுப் போவுது. அதில இந்தாண்டு, ஒங்கட பிசினஸ் ரொம்ப ரொம்பக் கம்மி" என்று கூறியபடி, தனது குரலை ஒருமுறை செருமி நிறுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுக்கு நான் என்ன செய்யுறது முதலாளி. இருபது வருசத்துக்கு மேலாக உங்களோடதானே நான் வியாபாரம் செய்யுறன் முதலாளி. முந்தியெல்லாம் மீன் நல்லாய் பிடிபட்டுது. சிப்பங்களும் லொறி லொறியாய் ஏறிச்சுது இப்ப நான் செய்யுறதும் ஒரு கரைவலைதானே முதலாளி".

"சரிங் சரிங், சம்மாட்டி; ஆனா நானுங் ஒங்கப்போல முப்பது நாப்பது சம்மாட்டிகள கரைநீட்டுக்கு கவனிச்செல்லே இருக்கு".

"ஏதோ - இந்தமுறை உதவி செய்யுங்கோ முதலாளி. எப்புடியும் உங்கட கடனை நான் கெதிப்பண்ணி அடைச்சுப்போடுறன் முதலாளி''.

"அதுங் எப்புடிச் சம்மாட்டி முடியும் ? ஒங்க பாக்கி ஏக்கனவே உள்ளதோட இந்தாண்டுங் கூட்டினா, ஐம்பதாயிரத்து சொச்சங் எல்லே ஆவுது. மேல மேல ஏறிக்கிட்டெல்லே கடன் போவுது'' என்று இன்னும் கொஞ்சம் தெளிவாக்கினார், பெர்னாண்டோ முதலாளி.

"நான் கடனாளி எண்டு தெரிஞ்சுதானே இங்க வந்தனான் முதலாளி. எப்புடியோ ஒரு பத்தாயிரம் எண்டாலும் தந்து உதவினால், பெரிய கோடி புண்ணியமாய் இருக்கும் முதலாளி. வாறாண்டு தொழிலை நடத்தி எப்புடியும் உங்கட கடனை அடைச்சுப் போடுவன் முதலாளி" என்று கெஞ்சியபடி கேட்டு முடித்தார் சின்னையாச் சம்மாட்டி.

'புலனாய்வு செய்பவரின் நேர்மையைக் கவனிப்பதற்காக அவரை இன்னொரு புலனாய்வாளர் மூலம் ஆராய்ந்து அறிய வேண்டும்' என்னும் சிறந்த உத்தியை 'ஒற்றாடல்' அதிகாரத்தில் வள்ளுவர் தெளிவாகக் கூறியுள்ளார். அதுபோல, சம்மாட்டிகள் மூலமாகவே சம்மாட்டிகளின் நிலைகளை, கொழும்பில் இருந்தபடியே கடை வியாபாரிகள் அறிந்துகொள்வது வழக்கம். சம்மாட்டிமாரின் சொத்துவிபரம் பழக்கவழக்கம் முதலிய எல்லாத் தகவல்களும் அவர்களுக்குத் தெட்டத் தெளிவு. சின்னையாச் சம்மாட்டியின் நிலையையும் பெர்ணான்டோ முதலாளி ஏற்கெனவே நன்கு அறிந்து வைத்திருந்தார். இருந்தபோதும் நீண்ட காலம் பழகிய மனிதன் என்ற அன்பால் மூன்று நான்கு வருசமாக தொடர்ந்து அவருக்குக் கடன் கொடுத்து உதவினார். இதுக்கு மேலும் தான் கை விரிச்சால் தானும் கடையை இழுத்துமூட வேண்டிவரும் என்ற முடிவுக்கு வந்தவராக,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அதற்கு மேலே ஒன்றும் பேசாமலும் சம்மாட்டியின் முகத்தைப் பாராமலும் தன் தலையைக் குனிந்தவாறு படிக்கட்டில் சுற்றிச் சுற்றிக் கீழே இறங்கி, வியாபாரம் நடைபெறுகின்ற கீழ்த்தளத்துக்கு வந்தார்.

பின்னேரம் ஐந்து மணியிருக்கும். கடைகள் பூட்டுகின்ற நேரம். கணக்கனின் காதில் ஏதோ இரகசியமாகச் சொல்லிய பெர்னாண்டோ முதலாளி தனது காரில் ஏறிச்சென்றார்.

'முதலாளி ஏதோ அலுவலாய் போய்விட்டார் போல' என்று நினைத்தார் சின்னையாச் சம்மாட்டி. 'எப்புடியும் என்னைக் காண வருவார்தானே' என்ற எண்ணத்துடன் பாயை விரித்து ஒரு தலையணையைப் போட்டார். சுருட்டைப் பற்ற வைத்துக்கொண்டு சங்க இலக்கிய முல்லைப்பாட்டில் வரும் கடகக்கைபோல ஒரு கையை மடித்து அதில் தன் தலையைச் சாய்த்தபடி, புகையை விட்டுக் கொண்டு ஆழ்ந்த யோசனையில் படுத்திருந்தார்.

இரவு ஏழு மணியாகியும் பெர்னாண்டோ முதலாளியைக் காணவில்லை. படிக்கட்டில் வேகமாக ஏறி யாரோ மேல்மாடிக்கு வருகிற சத்தம் கேட்டது. பார்த்தார். அது கணக்கப்பிள்ளை.

"சம்மாட்டியார் இந்தாங்கோ. இதில ஐநூறு ரூபாய் இருக்கு. முதலாளி கிராமப் பக்கம் போட்டார். அவர் வர எப்புடியும் ஒரு கிழமை எடுக்கும். இதை உங்களட்ட குடுக்கச் சொன்னார். உங்களக் கூட்டிப்போய் காலமைக்கு, யாழ் தேவியில ஏத்திவிடச் சொன்னார்".

சம்மாட்டி ஒருமுறை திடுக்கிட்டார் பெர்ணாண்டோ முதலாளி இந்த மாதிரி நட்டாற்றில் தன்னைக் கைவிடுவார் என்று அவர் சிறிதளவும் நினைக்கவில்லை. தனது குலதெய்வமான ஐந்தாண்பனைப் பிள்ளையாரை நின்ற நிலையில் ஒருமுறை நினைத்துக் கும்பிட்டார். பெருமூச்சு விட்டார் கணக்கன் அவரின் பதிலுக்காக காத்து நின்றான்.

கணக்கனை ஒருமுறை பார்த்தார். "தம்பி, நீ என்னை கூட்டிப் போக வேண்டாம். நானே வேளைக்கெழும்பி றயில் பிடிச்சுப் போறன். நீ உன்ர வீட்டை போ தம்பி" என்று அவனை அனுப்பி வைத்தார் சின்னையாச் சம்மாட்டி.

கணக்கன் காசு ஐநூறு ரூபாவை மேசைமீது வைத்துவிட்டு, படிமீது கீழ்நோக்கி இறங்கி நடந்து சென்றான். சம்மாட்டி இரவுணவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிடவில்லை. சரியாகத் தூங்கவுமில்லை. ஒரு கட்டுச்சுருட்டு முழுவதையும் யோசித்து யோசித்து இரவிரவாய் புகைத்து முடித்தார். விடியப்புறம் எழும்பினார். அந்த ஐநூறு ரூபாவையும் எடுத்துக்கொண்டு வட இலங்கை செல்கின்ற யாழ்தேவி புகையிரதம் பிடித்து முற்பகலில் குருநாகல் நகர் வந்து சேர்ந்தார்.

தற்காலக் கணினிவலைப் பின்னல்போல் அப்போதும் மக்கள் மூலமாகவே செய்திப் பரிமாற்றம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. குருநாகல் அப்புகாமி முதலாளியும் சின்னையாச் சம்மாட்டியின் வரலாற்றைத் தெரிந்திருந்தார். நான்கு வருடமாக அவரிடமும் பெருந்தொகை கடன் ஏறிக்கொண்டு போனது. ஒரு சதமும் குறைந்தபாடில்லை. சம்மாட்டியின் வாய்ப் புலம்பல் இத்தடவை அப்புகாமி முதலாளியின் காதிலும் உட்புகவில்லை.

"இந்தாங்க, இதை வெச்சுக்கொள்ளுங்க. ஒழுங்கா இனிமே சரக்கை அனுப்புங்க" என்று பத்துரூபா தாள் பணக்கட்டு ஒன்றை அவரிடம் நீட்டினார். அதில் ஆயிரம் ரூபாதான் இருந்தது. சின்னையாச் சம்மாட்டியோ எதுவும் பேசாமல் அதை வாங்கிக்கொண்டார். நாற்பது ஆயிரத்துக்கு மேலிருந்த கடன், அவரின் வாயை அடைத்திருந்தது.

"அடோவ்" என்று கடைப்பையனை அப்புகாமி முதலாளி கூப்பிட்டார். ஏற்கெனவே சொல்லிவைத்தபடி ஒரு கூடை 'றம்புட்டான்' பழத்துடன் பையன் வந்து நின்றான். முதலாளி தலையசைத்து சைகை மொழியில் ஏதோ சொல்லவும், அந்தப் பழக்கூடையைச் சம்மாட்டிக்குப் பக்கத்தில் வைத்துவிட்டு அவன் சென்றான்.

"சம்மாட்டி, இந்த றம்புட்டாம் பழத்தை சம்மாட்டி ஆச்சிக்கும் புள்ளங்களுக்கும் குடுங்க. அவங்க மிச்சங் நல்லவங்க இது நம்ம தீபாளி அன்பளிப்பெண்டு சொல்லுங்க".

ஒருவித மன வேதனையுடன், சம்மாட்டி புன்னகைத்தார். 'ஓம்' என்று தலையை மட்டும் அசைத்தார்.

"ராவுக் கோச்சியில ஊரு போய்ச் சேருங்க" என்று சொல்லிக்கொண்டே அப்புகாமி கடையைவிட்டு வெளியேறினார். சில வினாடிகளில் கார்க்கதவு அடித்துச் சாத்தும் சத்தமும் அதைத் தொடர்ந்து இயந்திர இரைச்சலும் கேட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிரவு குருநாகலில் தங்கிய சம்மாட்டியார் மறுநாள் காலையில் புகையிரதத்தில் ஏறினார். யாழ் குடாநாட்டிலுள்ள 'பளை' என்னும் புகையிரத நிலையத்தில் றம்புட்டான் கூடையுடன் மத்தியானம் ஒரு மணியளவில் சின்னையாச் சம்மாட்டியார் வந்திறங்கினார். Car ஒன்றை வாடகைக்கு அமர்த்தினார். கார் புறப்பட்டது. ஐநூறு மீற்றர் தூரத்தில் அதை நிற்பாட்டச் சொன்னார். சாராயத் தவறணைக்கு முன்னால் கார் நின்றது. இரண்டு போத்தல் சாராயம் மட்டும் ஒருவர் கொண்டு செல்லலாம் என்பது அரச சட்டம். எனவே இரண்டு போத்தல் சாராயத்தை அவர் வாங்கினார். இரண்டு பண நோட்டுக்களை கார்ச்சாரதியிடம் நீட்டினார்.

"எட தம்பி, இதுக்கு ரண்டு போத்தல் சாராயம் வாங்கடா தம்பி. தச்சேலா இடைவழியில பொலிசு மறிச்சால், ஆளுக்கு ரண்டு போத்தல் எண்டு சொல்லலாமெல்லே" என்று கண்ணைச் சிமிட்டியபடி கார்ச்சாரதிக்குச் சொன்னார். சாரதியும் சாராயத்தை வாங்கினான். சில நிமிடங்களில் கார் புறப்பட்டது. பத்துமைல் கடந்து வந்த கார், சம்மாட்டியின் வளவுப் படலையோரம் ஒரு இரைச்சலுடன் சரித்து வெட்டி நின்றது.

கார்ச் சத்தம் தூரத்தில் கேட்கும்போதே 'கொழும்புக்குப் போன ஆளைக் காணயில்லை' என்று யோசித்தபடியிருந்த மனைவி மக்கள் உசார் அடைந்தனர். முதலில் சம்மாட்டி ஆச்சிதான் வளவுக்கு வெளியில் விரைந்து வந்தார்.

"எடி பிள்ளையள், கொப்பு கொழும்பால வாறாரெல்லே" என்று குரல் கொடுத்தார்.

"நாலைஞ்சு நாளாய் எங்கட அப்புவைக் காணாமல், எவ்வளவு சோட்டையாய்க் கிடக்குது" என்று சொல்லிக்கொண்டு மூத்த மகள் அன்னம், வளவுப் படலையை நோக்கி வேகமாய் வந்தாள்.

"எங்கட அப்பு.. எங்கட அப்பு.." என்று சத்தமிட்டபடி தென்னைமர நிழலுக்குள் விளையாடிக்கொண்டிருந்த பேரப்பிள்ளைகள் எல்லாம் ஓடி வந்தனர்.

"டேய் சோக்கான காரடா" என்று சொல்லிக்கொண்டு, களிமண் தெருச் சாம்பல் படர்ந்திருந்த அந்தக் கறுத்தக் காரில், சம்மாட்டியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரப்பெடியன் ஒருவன் நாய்க்குட்டி உருவம் ஒன்றை வரையத் தொடங்கினான். கார்ச் சாரதிக்கு சிறிது கோபம் வந்தது. ஆனாலும் சம்மாட்டியின் பேரப்பிள்ளைகள் என்ற பயத்தில், மனதுக்குள் கோபத்தை அடக்கியபடி விருப்பற்ற ஒரு புன்னகையுடன் அவன் பொறுமை காத்து நின்றான்.

"தம்பி, உந்தப் பழக்கூடையைத் தூக்கடாம்பி" என்று கார்ச்சாரதியைப் பார்த்து சம்மாட்டி சொன்னார்.

சாரதி றம்புட்டான் கூடையைத் தூக்கி தோளில் வைத்து, நாலு கவடு எட்டி நடந்து கொட்டில் வீட்டுத் திண்ணையில் கூடையை வைத்தான். தனது பயணப் பையினுள் நான்கு போத்தல் சாராயத்தையும் வைத்து, ஸிப்பை இழுத்து அந்தத் தோல்பையை மூடி, தன் வலது விலாவுடன் பையை அணைத்து கையால் அமத்திப் பிடித்துக்கொண்டு கொட்டில் வீட்டுக்குள் குனிந்து புகுந்தார் சின்னையாச் சம்மாட்டி.

கார்க்கூலியை வாங்கிய சாரதி, றோட்டுக்குக் குறுக்கே அங்குமிங்கும் ஓடியபடி புதினம் பார்த்துத் திரிந்த சிறிய பெட்டையள் பொடியன்கள் விலகும்படி 'ஹோங்' அடித்துக்கொண்டு வேகத்தைக் குறைத்து, காரை ஓட்டிச் சென்றான். ஊர்மனை கழிந்து தெருவின் இருபக்கமும் பனை பற்றைகள் தொடங்கும் இடத்தில், காரின் வேகத்தை அதிகரித்தான்.

வீட்டுக்குள் புகுந்த சம்மாட்டியார் உடுத்திருந்த வேட்டியை உரிந்தார். அரக்கை 'நைசனல்' சட்டையை தன் இரு கைகளையும் உயர்த்தி தலைக்கு மேலாகக் கழற்றும்போது, தனது மூன்றாவது மருமகன் படுத்துக் கிடக்கின்ற கோலத்தை சாளரத்தின் ஊடாகக் கண்டார். 'மத்தியானம் அடித்த 'தண்ணி' இன்னும் முறியவில்லைப் போல' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டார். தென்னைமர நிழலில் படுத்துக் கிடக்கும் அந்த மருமகனின் தலை, தலையணையால் நழுவி மண்ணில் சரிந்து கிடந்தது. முகத்தில் மண் ஒட்டி வாயால் வீணி வழிந்து உடுத்திருந்த சாரம் விலகி, நீலநிறக் கோவணத்துடன் ஆழ்ந்த கொறட்டையில் அவன் தூங்குவதைக் கண்டார். திருமணம் முடித்து எட்டு வருடத்தில் ஐந்து பிள்ளைகளைப் பெற்றாலும் அவனது வாழ்க்கைச் செலவுகளைக் கவனிப்பது சம்மாட்டிதான். எனவே, எதுவித கவலையுமின்றி அந்த மருமகன் உறங்கிக் கிடந்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயண உடையைக் களைந்த சம்மாட்டி, சாரத்தை உடுத்தார். ஒரு துவாயால் உடலைப் போர்த்துக்கொண்டார்.

"எடி மோன, பயணக் களை தீர கொப்புவைக் குளிக்கச் சொல்லுங்கோடி. நான் கறியள் சுடவைக்கிறன். தீன் குடுக்க"

என்று சொல்லிய சம்மாட்டி ஆச்சி குசினிக்குள் புகுந்தாள். அப்போதைய வழக்கத்தில் 'அப்பு' 'ஆத்தை' என்றுதான் தந்தை தாயை, பிள்ளைகள் அழைப்பர். பேரப்பிள்ளைகளும் அவ்வாறே அழைப்பர்.

சின்னையாச் சம்மாட்டியார் கொழும்பால் வந்து இறங்கியது ஒரு செவ்வாய்க்கிழமை. அன்று பின்னேரத்திலிருந்து அவரது தொழிலாளிகள் வந்து அவரிடம் சுகம் விசாரித்துச் சென்றனர். வருவோர்க்கு, தேநீரும் வெற்றிலைத் தட்டமும் சம்மாட்டி ஆச்சி கொடுத்து ஆதரித்தாள். கொண்டுவந்த சாராயத்தை ஊற்றி ஊற்றிக் குடித்த சம்மாட்டியார் முக்கால் மதுவெறியில் இருந்தார். அவரின் நெருங்கிய அன்புக்குரிய தொழிலாளிகள் இருவர் கருக்கல் நேரத்தில் வந்தனர்.

"வாங்கோடா தம்பிமாரே, வாங்கோடா" என்று வரவேற்றார் சம்மாட்டி.

"எப்புடிச் சம்மாட்டியார் கொழும்பு குருநாகல் பயணமெல்லாம்?''.

"எல்லாம் நல்லாத்தான் நடந்தது பொடியள்''.

"அப்ப, எப்ப சம்மாட்டியார் எங்கட கணக்குப் பாக்கிறது?''

"ஞாயிறு பின்னேரமாய், வாங்கோடா தம்பிமாரே''.

சிறிது நேரமாக பலவாறு ஊர்ப்புதினங்களை உரையாடினர். அதன்பின் அத்தொழிலாளிகள் இருவரும் புறப்படத் தயாராகினர்.

"அப்ப சம்மாட்டியார், நாங்கள் போட்டுவாறம்".

" ஓம் பொடியள், ஞாயிறு வாங்கோ. சந்திப்பம்''

அந்த இருவரின் வீடுகளும் சின்னையாச் சம்மாட்டியார் வீட்டிலிருந்து ஒரு மைல் தூரத்தில் இருந்தன. மணல்பாதையால் இருவரும் நடந்து போகும்போது, கதைத்துக்கொண்டே சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னடா மச்சான், சம்மாட்டியாற்ற முகத்தில இண்டைக்கு கலகலப்பைக் காணயில்லை".

"ஓமடா மச்சான், முந்தியெண்டால் எங்களை இப்புடியோடா விடுறவர்".

"அதுதானே மச்சான்''.

"மச்சான் ஒரு துண்டுப் பொயில தா மச்சான்".

தலைப்பாகைக் கட்டுக்குள் செருகியுள்ள வல்லுவத்தை எடுத்து விரித்து, ஒரு துண்டுப் புகையிலையை முறுக்கி கிள்ளி, தன் நண்பனுக்குக் கொடுத்தான்.

"அட சோக்கான பொயில மச்சான். நல்ல பாணி போட்டிருக்கு. எங்க மச்சான் கொடிகாமச் சந்தையில வாங்கினதோ?" என்று விசாரித்தபடி சப்பிச்சப்பி சப்புக்கொட்டி, வெற்றிலைச் சாற்றை ஒருமுறை உறிஞ்சி விழுங்கிக்கொண்டான்.

"முந்தியெண்டால் சம்மாட்டியார் கொழும்பால வந்திட்டார் எண்டு போனால், எங்களுக்கு முதல்ல வாறது சாராயப் போத்தலும் கிளாசும் தானே மச்சான்''.

"ஓமடா மச்சான். இண்டைக்கெதுவோ சம்மாட்டியார் யோசிச்சுக்கொண்டிருக்கிறார். சம்மாட்டி ஆச்சியும் தேத்தண்ணியை கொண்டாறா. வெத்திலைத் தட்டத்தை மண்ணுக்குள்ள புதைத்து வைச்சிட்டுப் போறா. தட்டத்துக்க பொயிலையுமில்லை".

"என்ன செய்யுறது மச்சான். என்ன மாதிரி இருந்த மனிசன். சுண்டிக்குளக் கரைவலையை மூடினதோட ஒரு படுபட்சிமாதிரி. மீன்பாடும் குறைஞ்சு கொண்டுதானே போகுது மச்சான்''.

"இதுதான் சொல்லுறது மச்சான், மீனும் தேனும் கண்ட அண்டைக்குத்தானெண்டு".

"ஓம் மச்சான், உந்த மனிசனட்ட காசு குவிஞ்ச நாளையில, சேத்துச் சேத்து வச்சிருந்தால் இப்ப உந்தமாதிரி யோசிக்க வேண்டிவந்திராது கண்டியோ".

"ஓமடாப்பா, நீ சொல்லுறதும் சரிதான் மச்சான்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி மச்சான் என்ர வளவு நெருங்குது, நான் போட்டு வாறன்".

"ஓம் மச்சான். எல்லாத்துக்கும் வாற ஞாயிற்றுக்கிழமை சம்மாட்டியாற்ர வீட்டில சந்திப்பம்".

"ஓமோம் மச்சான், சுகமாய் போட்டு வா மச்சான்" என்று இருவரும் பிரிந்தனர்.

தோட்டப்பயிர், நெல்வயல், சூடுகுவித்த நெற்கதிர் முதலிய உணவுப் பயிர்களை பன்றி, யானை, காட்டெருமை போன்ற மிருகங்கள் அழித்துவிடுவது உண்டு. அவற்றைத் துரத்தி காவல் காப்பதற்காக இரவு முழுவதும் ஆண்கள் தமது வீட்டுக்கு வெளியே நேரத்தைக் கழிக்கின்ற நடைமுறை மருதநிலத்தில் இருந்துள்ளது. இவ்வழக்கம் நெய்தல் சமூகத்திலும் காணப்பட்டது. மனைவிமாரை துயில் எழுப்பி சொல்லிச் செல்லவேணும் என்ற கண்டிப்பு, இருநில வாழ்விலும் இருந்ததில்லை. இத்தகைய சூழல் ஆண்களின் களவியற் காதல் தொடர்புகளுக்கு வாய்ப்பாக அமைந்திருந்தது.

அது ஒரு சனிக்கிழமை. 'நாளைக்கு கணக்குப் பார்ப்பு' என்ற நினைப்புடன் சம்மாட்டி ஆச்சி அதிகாலையில் எழுந்து முற்றம் கூட்டி தண்ணீர் தெளித்தார். தெற்குப் பக்கக் கொட்டிலுக்குள் தாங்கள் வளர்க்கின்ற பசுமாட்டில் பால்கறந்து தேநீர் போட்டுக் குடித்தார். அவர் கண் விழிக்கும்போது தனக்குப் பக்கத்தில் பாயில் படுத்திருந்த கணவனைக் காணவில்லை. அவரின் போர்வையும் அங்கில்லை. வடக்கிலிருந்து ஐப்பசித் தென்றல் சில்லென்று வீசிக் கொண்டிருந்தது. வானம் மப்பும் மந்தாரமுமாகக் காணப்பட்டது. முகில் கூட்டங்கள் வானத்தில் வேகமாக ஓடிச் சென்றன. 'வலைவள்ளம் கவனமாய் மூடிக்கட்டி இருங்கோ' என்று உவர் பார்க்கப் போயிருப்பார் என்று நினைத்தபடி குசினிக்குள் தேங்காய் துருவிக்கொண்டிருந்தார் சின்னையாச் சம்மாட்டியின் மனைவி.

'காற்றும் பலமாக அடிக்குது. பழுத்து விழுகிற தென்னோலை பனை ஓலைகளை பொறுக்கி எடுத்து குவிக்க உவர் பொயிருப்பார்' என்று பலவாறு யோசித்தபடியே அரிசிமாப் 'புட்டு' அவித்து இறக்கினார். வீட்டுக்கு வெளியால் வந்து கடற்கரை வேலியுடன் நெருங்கி நின்று தலையை வெளியில் நீட்டிக்கொண்டு கிழக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குமாக தலையைத் திருப்பித் திருப்பி, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கணவனைத் தேடி அவள் உற்றுப்பார்த்தார். பொழுது காலித்து மேலெழுந்து வருவதால் கிழக்கே அவள் பார்க்கும்போது, சூரியக்கதிர்கள் கண்களைக் கூச வைத்தன. தனது வலது கையை விரித்து கண்ணுக்கு நேரே நெற்றியில் பதித்துக்கொண்டு, மீண்டும் கரையோரமாக உற்று நோக்கினாள்.

வீச்சு வலையால் சிலர் கரைக்கடல் வீசுகின்றனர். கடலோரமாக அங்கொன்று இங்கொன்றாய் குந்தியிருந்து சிலர் மலம் கழிக்கின்றனர். அலைகள் தரையில் ஊர்ந்து வரும்போது குந்தியிருந்தவர்கள் தமது பின்பக்கத்தை உயர்த்துகின்றனர். அலைத் தண்ணீர் கடலுக்குள் மீண்டதும் திரும்பவும் குந்துகின்றனர். மலம் கழித்து முடிந்த நிம்மதியில் சிலர் கழுவுகின்றனர். கழுவிய தமது இடதுகையை உப்பு மண்ணில் உரசி உரசி தண்ணீரில் அலம்பி கையைத் தூய்மைப் படுத்துகின்றனர். ஆண்கள் இப்படியாக இருப்பதை பெண்கள் பார்க்கக்கூடாது. தனது கணவனையும் காணவில்லை. எனவே ஒருசில நிமிடங்களில் தன் தலையை வேலியுள்ளே இழுத்து எடுத்தாள். மீண்டும் சம்மாட்டி ஆச்சி தன் குசினிக்குள் புகுந்தாள்.

அவளின் பேரப்பிள்ளைகள் புட்டும் சம்பலும் உண்டு முடிந்த மகிழ்ச்சியில் முற்றத்தில் மாங்கொட்டை போட்டு கெந்தி விளையாடிக்கொண்டிருந்தனர். மருமகன் ஒருவர் தோட்டத்து வேலிக்கு முள் கம்பி அடிக்கவென கோடரி கத்தியுடன் தெற்குப் பக்கமாக புறப்பட்டான். தனது இடது தோளின் முதுகுப்புறமாக கோடரியைக் கொளுவி தொங்கவிட்டபடி, பீடி ஒன்றைப் பற்றவைத்து புகையை நெஞ்சுக்குள் இழுத்து வெளியே ஊதிக்கொண்டு அவன் நடந்து சென்றான். மகள் ஒருத்தி தலையில் கடகப்பெட்டியை வைத்துக்கொண்டு சாமான் வாங்கவென கிழக்குப் பக்கமாக சங்கக்கடைக்குச் சென்றாள். தமது காலை உணவை முடித்தபின் 'அரிசி சாமான் கொஞ்சம் தாய் வீட்டிலிருந்து எடுத்துக்கொண்டு போவம்' என்ற எண்ணத்தில் மூத்த மகள் அன்னம் தாய்வீடு நோக்கி வந்து சேர்ந்தாள். முற்றத்தில் குந்தியிருக்கும் தன் தாயார் வாடிய முகத்துடன் கிழக்குத் திசையை நோக்கி வளவுப் படலையைப் பார்த்தபடி இருப்பதைக் கண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னாத்தை யோசிச்சுக்கொண்டிருக்கிறாய்?''.

"ஒண்டுமில்லை மோன, உவர் கொப்புவை இன்னும் காணயில்ல. நேரமும் விடிஞ்சு பத்துமணியாகுது'' என்று நொந்த மனத்துடன் தாயார் பதில் சொன்னாள்.

"ஏனணை அப்பு எங்கயண போனவா?"

"எடியேய், கொப்பு எதுவும் எனக்குச் சொல்லிப்போட்டுப் போறவரோடி மோன. ராத்திரி பச்சைப் பனையோலை கிழிச்சு உந்த மாடுகளுக்குப் போட்டு தண்ணியும் வைச்சிட்டு, நான் படுக்கப்போக நேரம் நல்லாய்ச் செண்டு போச்சுது. அந்த அலுப்பில நான் நல்லாய் உறங்கி விட்டன். கொப்பு பக்கத்தில பாயில கிடந்தவரடி. காலமை பாக்கயுக்க அவரை காணயில்ல மோன'' என்று விளக்கமாகச் சொன்னாள் தாயார்.

தகப்பனின் இரவு விளையாடல் பற்றி மூத்த மகளுக்கு சிறிது தெரியும். இருந்தாலும் அதை அமத்தி மூடி பூசிமெழுகி தகப்பனின் மானம் மரியாதையை காப்பதில் அவள் கெட்டிக்காரி. தன் தாயே தகப்பனை கடுமையாகப் பேசுவதை அவள் பொறுக்கமாட்டாள். சின்னையாச் சம்மாட்டியும் தனக்கு ஆண்பிள்ளை இல்லாத குறையை ஈடுசெய்ய மூத்த மகள் அன்னத்தை தனது மூத்த மகனாகவே கருதி வாழ்ந்தார். அவள்மேல் மிகுந்த பாசத்தையும் அவர் வைத்திருந்தார்.

"எணேய் ஆத்தை, உவா எங்கயணை போறது. உங்கின வாடி பாக்க, ஓலை தேங்காய் பொறுக்கப் போயிருப்பா. கடலும் கொஞ்சம் அடிக்குதணை. சிலவேளை ஆக்களைச் சேத்து வள்ளத்தை உயர்ந்த மணல் புட்டியில இழுத்து வைக்கவும் போயிருப்பா" என்று பொருத்தமான சில பொய்களைச் சொல்லி, தாயின் மனக்குமுறலை ஒருவாறு சமாளித்தாள் அன்னம்.

சின்னையாச் சம்மாட்டியார் வளவின் தெற்கே நாலைந்து வளவு தள்ளி ஒரு குசினி ஒரு கொட்டிலுடன், மாணிக்கம் என்னும் விதவை மூதாட்டி தனித்திருந்து வாழ்ந்து வந்தார். வயது அறுபத்தைந்துக்கு மேல் இருக்கும். கடற்கரையில் மீன் தெரிவது கருவாடு கூட்டுவது போன்ற கூலித்தொழில்களைச் செய்து அம்மூதாட்டி பிழைத்து வந்தார். நாலாறு ஆடுகளும் வளர்த்து வந்தார். தனது வளவின் தெற்கு மூலைக்குள் சிறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டில் ஒன்று அமைத்து, அதற்குள் தன் ஆடுகளைக் கட்டி குழை போட்டுத் தண்ணீர் வைப்பார். பகலில் அவற்றை அவிழ்த்து விடுவார். இலை குழைகளைக் கடித்து, தொடுவாய் புல் மேய்ந்து, குளத்தில் நீர் குடித்து, பின்னேரம் நிலம் இருட்டுப்பட முன்னம் கத்திக் கனைத்தபடியே அந்த ஆடுகள் மாணிக்கம் மூதாட்டியின் வீடு வந்து சேரும்.

முதல்நாள் வெள்ளி பின்னேரம் அவரின் ஆடுகள் அவரின் வளவுப் படலையில் கத்திக்கொண்டு நின்றன. மாணிக்கம் ஆச்சி ஓடிப்போய் வளவுப் படலையைத் திறந்துவிடவும் அவை ஆட்டுக் கொட்டிலுக்குள் ஓடிச்சென்று உள்பக்கக் கூரையில் தொங்கிய குழைக் கொப்புகளை, கடித்துத் தின்னத் தொடங்கின. தண்ணி வாளியுடன் வந்த மாணிக்கம் ஆச்சி தனது 'கிடாய் ஆடு ஒன்று வரவில்லையே' என்பதைக் கண்டார். அந்தக் கறுத்தக்கிடாய், மறி ஆட்டைக் கலைத்து அதில் ஏறி 'தமர்பாய்ந்து' தாமதமாக வீடு வருவதுமுண்டு. 'எப்படியும் அந்த கிடாய் வந்துவிடும்' என்று மூதாட்டி காத்திருந்தார். இரவு ஒன்பது மணிக்கும் மேலாகிவிட்டது. இன்னும் அந்தக் கிடாய் வந்து சேரவில்லை.

தனது அரிக்கன் லாம்பைக் கையில் எடுத்துக்கொண்டு, ஒரு பொல்லுத் தடியுடன் பனங்கூடல் பக்கமாக தேடிச் சென்றார். ''டேய் கறுவல்..... டேய் கறுவல். '' என்று அன்புக் குரல்கொடுத்து, தன் மகன்போன்ற அந்தக்கிடாயை அழைத்தார். தன் காதைக் கூர்மையாக்கி, 'ஆடு கத்தும் சத்தம் ஏதாவது கேட்குதோ' என்பதை அவதானித்தார். பயனில்லை. மாணிக்கம் ஆச்சி தன் வீடு திரும்பினார். அன்றிரவு யோசனையுடன் படுத்துக் கிடந்தார். அவருக்குத் தூக்கம் வரவில்லை.

மறுநாள் நிலம் விடிய முன்னமே மற்றைய ஆடுகளை அவிழ்த்து அவற்றை மேய்ச்சலுக்குக் கலைத்து விட்டார். தொடுவாய்வெளி, சவுக்கம் காடு, வடலிக்கூடல் மற்றைய எல்லா இடங்களிலும் கிடாயைத் தேடி அலைந்தார். தனது கிடாயை நாய் நரி தின்றதோ? இறைச்சிக்காக கள்ளர் பிடித்துச் சென்றனரோ? என்று பலவாறு நினைத்து ஏங்கினார். முற்பகல். நேரம் பதினொரு மணியை நெருங்கியது. மாணிக்கம் ஆச்சியின் சுருக்கம் விழுந்த முகத்தில் வியர்வை கோடுகளாக வழிந்தோடியது. முடிச்சுக்கல் போட்ட முந்தானையால், தன் முகத்தைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடைத்தார். 'தன் மகளுக்குச் செய்தி அனுப்பி காட்டுப் பக்கம் தேடிப்பாப்பம்' என்று நினைத்தபடி தனது வீடு நோக்கி யோசனையுடன் நடந்தார். பசிக்களையும் தாகமும் மூதாட்டியை வாட்டி எடுத்தது. கண்பார்வை பஞ்சாகத் தெரிந்தது.

மாணிக்கம் ஆச்சியின் வளவுக்குத் தெற்கேயுள்ள காணிநிலம் அடைப்பின்றி வெளியாகக் கிடந்தது. அரசாங்க உத்தியோகம் கிடைத்தமையால் அந்தக் காணிக்குள் வாழ்ந்தோர் பல வருடங்களுக்கு முன்னம் இலங்கையின் தலைநகருக்கு குடிபெயர்ந்து சென்றுவிட்டனர். அதன்பின்பு அந்த வீடுகள் பாவனையற்று, கூரையும் களிமண் சுவரும் அழிந்த நிலையில் காணப்பட்டன.

அந்தக் காணிக்குள்ளிருந்த சுற்கிணற்றினுள் தென்னங் கோம்பை தென்னம் மட்டை பனைமட்டை போன்ற கழிவுகளை, விளையாட்டுப் பிள்ளைகள் போட்டு விடுவர். அக்கிணறு பல வருடங்களாக புழக்கமின்றி இருந்தது. தற்போது கோடைகாலம் என்பதால் ஏறத்தாழ இரண்டு அடி உயரத்தில் அதற்குள் வற்றிய அழுக்கு நீர் இருந்தது. அது தெருவோரமுள்ள காணி. அந்தப் புழங்காத கிணறு மாணிக்கம் ஆச்சியின் கண்ணில் பட்டது. 'துள்ளி விளையாடுற உந்தக்கிடாய் மேய்ச்சலால வரயுக்க துள்ளிக்குதிச்சு உந்தக் கிணத்துக்க விழுந்துதோ' என்று யோசித்தபடி கிணற்றுக்கட்டில் கை வைத்து, தலையை குனிந்து அடிக்கிணற்றை எட்டிப்பார்த்தார். மத்தியான வெயில் நேரம். பார்வை குறைந்த கண்ணுக்கு ஒன்றும் தெரியவில்லை. நிமிர்ந்து ஒருமுறை தன் நாரி உளைவைச் சரிசெய்தார். கண்ணைத் துடைத்துக்கொண்டு மீண்டும் குனிந்து பார்த்தார். பச்சை நிறத்தில் ஏதோ ஒன்று தெரிந்தது. கிணற்றுத் தண்ணிக்குள் பாசி பிடித்திருக்குதோ? என்று நினைத்துக்கொண்டு கிணற்றினுள் உற்றுப் பார்த்தார். தனது கிடாய் காணப்படவில்லை. ஆனால் பச்சை நிறத்தில் ஒரு புடவை தெரிந்தது. 'என்னவாக இருக்கும்' என நினைத்த மாணிக்கம் ஆச்சி பக்கத்து வீட்டுத் தருமனிடம் போய்ச் சொல்லுவம் என்று தன்னால் முடிந்த வேகத்தில் அவனது வீடு நோக்கி நடந்தார்.

இடைவழியில் சோமு என்னும் இளந்தாரிப் பொடியனைச் சந்தித்தார். ''எட தம்பி இஞ்ச நில்லடா. உந்தக் கிணத்துக்குள்ள ஒரு பச்சைச்சீலை தெரியுதடா. ஒருக்கால் போய் பாரடா தம்பி'' என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்குச் சொன்னார். சோமு கிணற்றை நோக்கி வேகமாய் ஓடினான். மாணிக்கம் ஆச்சியும் வேக நடையில் குனிந்தபடி, அவன் பின்னால் விரைந்தாள். சோமு கண் கூர்மையானவன். கிணற்றை எட்டிப் பார்த்ததும் திடுக்கிட்டான். ஒரு பச்சைநிறத் துணியும் மடிந்த நிலையில் இரண்டு கால்களும் தெரிந்தன. பதற்றத்துடன் வடக்குப்பக்கமாக கடற்கரைநோக்கி ஓடினான். வாற போற சனங்களைக் கை அசைத்து அழைத்தான். உரத்த குரலில் கூப்பிட்டான். சில நிமிடங்களில் ஏழெட்டுப்பேர் கிணற்றைச் சுற்றி நின்றனர். துடிப்பான இளைஞன் செல்லத்தம்பி என்பவன் கிணற்றுக்குள் வேகமாக இறங்கினான். விழுந்துகிடந்த அந்த ஆளைத் தூக்கினான். முகத்தைப் பார்த்தான்.

"ஐயோடா எங்கட சம்மாட்டியாரடா....."

"ஐயோடா எங்கட சம்மாட்டியாரடா....." என்று வாய்விட்டுக் கத்தினான்.

கிணற்றுக்குள் இருந்து அலறியபடி இடக்கையால் உடலை அணைத்துக்கொண்டு, வலக்கையால் தன் தலையில் அடித்தடித்து செல்லத்தம்பி அழுதான். செய்தி அறிந்த ஊர்ச்சனங்கள் கிணற்றடியில் கூடினர். வேகமாகச் செயற்பட்டனர். கிணற்றிலிருந்து வெளியே தூக்கி, கிடுகுத் துண்டுகள் பரத்தி அதன்மேல் சின்னையாச் சம்மாட்டியின் உடலைக் கிடத்தினர். ஊர் எங்கும் காட்டுத்தீபோல் செய்தி பரவியது. சம்மாட்டி ஆச்சி, பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் எல்லாம் "ஐயோ எங்கட அப்பு." என்று அலறியபடியே கிணற்றடி நோக்கி ஓடி வந்தனர். ஒப்பாரியுடன் அழுகையும் தொடங்கியது.

அவரின் இறப்புச்செய்தி எல்லா இடமும் பரவியது. யாழ்ப்பாணம் பருத்தித்துறை முதலிய நகரங்களிலிருந்து உறவினர் நண்பர் கடைக்காரர் எனப் பலரும் வந்து சேர்ந்தனர். சம்மாட்டி வளவின் தெற்குக் கொட்டிலுக்குள் பலகைக் கட்டிலில் அவரின் உடலைக் கிடத்தியிருந்தனர். புன்னகை பூத்த முகத்துடன் சின்னையாச் சம்மாட்டியார் கண்மூடிக் கிடந்தார். மனைவி மக்கள் உறவினர்கள் சூழ்ந்திருந்து கதறி அழும் ஒப்பாரி, காற்றோடு அள்ளுண்டு ஐநூறு மீற்றர் தூரம் கடந்தும் கேட்டுக் கொண்டிருந்தது. அவரது அரை ஏக்கர் வளவெங்கும் மக்கள் வெள்ளம் நிறைந்திருந்தனர். வளவுக்கு வெளியேயுள்ள பனை தென்னை நிழல்களின் கீழும் கூட்டங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டமாய் சோகத்துடன் தலையைத் தொங்கப் போட்டபடி ஆண்கள் பலர் கூடியிருந்தனர். அவரின் தொழிலாளிகள் பீடி சுருட்டு வெற்றிலைத் தட்டம் என்பவற்றை பரிமாறினர். ஒருவர் கம்பான் துண்டில் தீ மூட்டி, அதன் தணல் நெருப்பை பீடி சுருட்டு புகைப்போருக்கு கொடுத்துக்கொண்டு திரிந்தார்.

திங்கள் முற்பகலில், பிரேத பரிசோதனையும் மரண விசாரணையும் நிறைவுற்றன. 'தற்கொலை' என்ற பேச்சே எங்கும் அடிபட்டது.

அன்று மதியம் கடந்து, சம்மாட்டியின் இறுதி ஊர்வலம் ஒன்றரை மைல் தூரத்திலுள்ள சுடலை நோக்கிப் புறப்பட்டது. மிகவும் அழகாக அலங்கரித்த பாடையை நால்வர் தோளிற் காவிச்சென்றனர். முக்கிய சந்திகளில் சவப்பாடை சில நிமிடம் தரித்து நின்றது. இரண்டு கூட்டுப் பறைமேளங்கள் முழங்கிப் பொழிந்தன. பனை வடலிகளில் கட்டித் தொங்கவிடப்பட்ட வெடிக்கோர்வைகள் பல நிமிடங்கள் தொடர்ச்சியாக வெடித்துச் சத்தமெழுப்பின. வெடி ஓய்ந்தபின் அவற்றின் கடதாசித் துண்டுகள் காற்றில் அள்ளுண்டு சென்றன. மயிர்வெட்டும் குடிமக்களான அம்பட்டர் இருவர், பாடையின் முன்னே சங்கு ஊதிச் சென்றனர்.

பெண்கள், சுடலைக்குச் செல்லும் வழக்கமில்லை. அவர்கள் தங்களின் தலையில் அடித்து அடித்து பயண ஒப்பாரியைச் சொல்லிச் சொல்லி அழுதனர். வளவுப் படலைக்கு வெளியால் வட்டமாக குந்தி இருந்து ஒப்பாரி சொல்லி மார்பில் குத்திக் குத்தி, கதறி அழுதனர். அவர்களின் கூந்தல்கள் கலைந்திருந்தன. மூக்கைச் சீறிச் சீறி முந்தானையால் துடைத்துத் துடைத்து அழுவதால், அவர்களின் முந்தானைச் சேலைகள் நனைந்திருந்தன.

சின்னையாச் சம்மாட்டியின் களவியல் பெண் பெற்ற அந்தத் தலையணைச் சண்டை வீரன், தன் தந்தையின் பாடையின் முன்னே சோகத்துடன் சென்று கொண்டிருந்தான். ஈற்றில் நாவற் காட்டின் மத்தியிலுள்ள சுடலையில், கொழுந்துவிட்டு எரியும் தீயில் சின்னையாச் சம்மாட்டியார் இரண்டறக் கலந்தார்.

அவரின் அஸ்தி, அவரை வாழவைத்த வங்கக் கடலுடன் மூன்றாம் நாளில் கலந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்போக்கில், அவரைப்பற்றி ஊர் மக்கள் பலவிதமாகப் பேசிக்கொண்டனர்:

"ராசாமாதிரி இருந்த எங்கட சம்மாட்டியார் கடனால செத்துப்போனார்"

என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே மண்டாடி சண்முகம் சொன்னான்.

"கடன் என்ற கவலையில தற்கொலை செய்யுறதெண்டால், இந்த ஊரில பாதிப்பேரெல்லோ சாகவேணும். ஆருக்குத்தான் மச்சான் இங்க கடனில்லை. மனுசனாய்ப் பிறந்தவன் வாழ்க்கையில போராட வேணும் மச்சான்''

"அதுகும் சரிதான் மச்சான்''

"உந்த மனிசன், அந்த நாளிலை உழைச்சதை எல்லாம் குடியிலயும் கூத்தியிலயும் தானே கொட்டினவர்"

"பின்ன என்ன, உவருக்குப் பட்ட மீனுக்கு உவர் காசைச் சேத்துச் சேத்து வைச்சிருந்தால், உந்தக் குசினி உயரத்துக்கெல்லோ இப்ப உவரட்ட காசு கிடக்கும்"

"எட காசையும் மனிசனால, கட்டி ஆளத் தெரியவேணுமடா"

"ஓம் மச்சான், அது சரிதான். சம்மாட்டியாருக்குப் படிப்பறிவும் காணாதுதானே"

"பாவம், பிறந்ததும் எல்லாம் பெட்டைக் குஞ்சுகள்தானே மச்சான்''

"எட பெட்டையளையும் கட்டிக்குடுத்துட்டு, மனிசன் அதுகளுக்கும் கொட்டிக்கொண்டுதானே இருந்தவர்"

"சரியாய்ச் சொன்னாய் மச்சான். பேருக்குத்தான் அவற்ற மருமக்கள் புருசன்கள். பெத்துத் தள்ளுறதிலையும் அவங்களுக்குக் குறைச்சலில்லை"

"பின்ன என்ன மச்சான். பிள்ளையள், பேரக்கிளையள், மருமக்கள் எண்டு, வருசம் முழுக்க சம்மாட்டியின்ர சொத்தைத்தானே திண்டு அழிச்சுதுகள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சம்மாட்டி ஆச்சிதான் பாவம். இனி என்ன செய்யப்போறாவோ? தெரியாது மச்சான்"

"ஓமடா மச்சான். உழைச்சவயின்ர கணக்கைப்பாத்து, கொஞ்சமெண்டாலும் தொழிலாளியளுக்கு அவா குடுக்கத்தானே வேணும்".

இவ்வாறாகப் பலவித கதை பேச்சுக்கள் ஊருக்குள் உலாவின.

நாட்கள் நகர்ந்தன மாதங்கள் பல கடந்தன 'கடன் தொல்லை தாங்க முடியாமல் சின்னையாச் சம்மாட்டியார் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துக்கொண்டார்' என்று பரவலாக எங்கும் பேசப்பட்டது. சிறிது சிறிதாக அவரின் நினைவு மறக்கப்பட்டுக் கொண்டிருக்கிற வேளையில் புதிய தகவல் ஒன்று காற்றுடன் வீசத் தொடங்கியது.

சின்னையாச் சம்மாட்டியார், கொழும்பால் வந்ததிலிருந்து மனம் உடைந்து காணப்பட்டார். சிரித்துப் பேசி அவர் சமாளித்துப் பழகினாலும் அகத்தின் அழகு அவரின் முக ரேகையில் பிரதிபலித்தது. கொண்டு வந்த சாராயப் போத்தலைத் திறந்து குடித்தார். மதிய நேரத்தில் கள்ளும் குடிப்பார். பயணத்தால் வந்ததிலிருந்து மது வெறியுடன் எந்நேரமும் காணப்பட்டார்.

மறுநாள் நள்ளிரவில் தன் மனைவி ஆழ்ந்து உறங்கும்போது மெல்லென எழுந்து கடற்கரை வந்தார். கடற்கரையோரம் நடந்து தனது களவியல் காதலியின் வீட்டை அடைந்தார். மகிழ்ச்சியாக அவளுடன் இரவைக் கழித்தார். பொழுது விடிய முன்னமே தனது வீடு வந்து படுக்கையில் கிடந்து கொறட்டை விட்டார்.

சின்னையாச் சம்மாட்டியார் பிறப்பால் சைவ சமயத்தவர். ஆனால் அவர் நாள் நட்சத்திரம் பார்ப்பதில்லை. ஆடு மாடு ஆமை தொடக்கம் பன்றி உடும்புவரை எல்லாவகை ஊனும் அவர் உண்பார். அன்று ஒரு வெள்ளிக்கிழமை. நன்றாக சாராயம், கள் குடித்தார். ஆசைதீர உண்டார். உறங்கினார். மீண்டும் பின்னேரம் 'கள்' குடித்தார். இரவு ஒன்பது மணியளவில் இன்னொரு போத்தல் சாராயம் குடித்து முடித்தார். இரவு உணவின்பின் படுத்தார். மனைவி தன் குசினி வேலைகள் முடித்து மாட்டுப்பட்டி ஒழுங்கு பார்த்து பதினொரு மணியளவில் உடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையுடன் படுக்கையில் வந்து வீழ்ந்தாள். சில நிமிடங்களில் ஆழ்ந்த தூக்கம் அவளைத் தழுவிக்கொண்டது. நேரம் நள்ளிரவைக் கடந்தது.

சம்மாட்டியார் கண் விழித்துப் பார்த்தார். மனைவியின் கொறட்டைச் சத்தம் கேட்டது. அன்றைய பகல் பொழுதில் கள்ளுக்குச் சென்று வரும்போது பார்த்த, இன்னொரு காதலியின் முகம் ஞாபகத்தில் ஓடி வந்தது.

எழுந்து தனது பச்சைநிறப் போர்வையால் உடலைப் போர்த்திக்கொண்டு வேகமாக நடந்தார் அவள் வீட்டை அடைந்தார்.

இவர்களின் தொடர்பு அப்பெண்ணின் உறவுக்கார ஆண் ஒருவருக்கு இரகசியமாகத் தெரிந்திருந்தது. அதிலிருந்து அவன் கடுங்கோபங் கொண்டிருந்தான். சரியான ஒரு சந்தர்ப்பம் பார்த்துத் திரிந்தான். அன்று அவனும் நீண்ட ஒரு பயணத்தால் தன் வீடு நோக்கி வந்து கொண்டிருந்தான். நேரம் பின்னிரவு இரண்டு மணி இருக்கும். கும்மென்ற இருட்டு. ஓர் உருவம் தன் உறவுப்பெண்ணின் வளவிலிருந்து, வெளியேறி வருவதைக் கண்டான். திடீரென ஒரு தென்னைமர மறைவில் ஒழித்து நின்றான். இருட்டை ஊடறுத்து உற்றுப் பார்த்தான். சின்னையாச் சம்மாட்டியார் வேகமாக வந்துகொண்டிருந்தார். கணப்பொழுதில் எல்லாம் அவனுக்குத் தெளிவாகியது. அவனைக்கடந்து சம்மாட்டியார் தெருவோரமாக நடந்து சென்றார். கோபம் அவனுக்குக் கொப்பளித்தது. இரத்தம் கொதித்தது. நிலத்தை நோக்கினான். உலக்கை அளவில் உள்ள தடித்த ஒரு சதியால் கம்பை ஒழுங்கை ஓரத்தில் கண்டான். குனிந்து அதை எடுத்தான். மெல்லம் மெல்லமாக சத்தம் கேளாமல், சம்மாட்டியைப் பின்தொடர்ந்தான். கணப்பொழுதில் தடியை உயர்த்தி அவரின் பிடரியில் பலமான அடி ஒன்று போட்டான். எதுவித சத்தமுமின்றிச் சம்மாட்டியார் சுருண்டு விழுந்தார். கிட்டப்போய் அவரின் முகத்தைத் திருப்பிப் பார்த்தான். சம்மாட்டியின் கழுத்து மடிந்து தலை தொங்கியது. அவரின் உயிர்மூச்சு காற்றுடன் கலந்துவிட்டதை உணர்ந்துகொண்டான்.

சில வினாடிகள் ஏதுமறியாது திகைத்து நின்றான். சம்மாட்டி இப்படி இறப்பார் என்று அவன் நினைக்கவேயில்லை. ஒரு முடிவுக்கு வந்தவனாக சம்மாட்டியின் உடலை அவரது பச்சை நிறப் போர்வையால் சுற்றினான். அப்படியே அவரைத் தூக்கி தன் தோளில் போட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருட்டில் எவரும் காணாதவாறு கடற்கரையை நோக்கி விரைந்து நடந்து சென்றான். உடலை, கடலில் எறிவதுதான் அவனின் நோக்கமாக இருந்திருக்கவேண்டும். கடற்கரைக்கு இன்னும் சிறிது தூரம் இருக்கும்போது, தனக்கும் முன்னால் ஒரு நபர் நடந்து செல்வதுபோல் அவனது கண்ணில் புலப்பட்டது. திடீரென ஒரு பனைமர மறைவில் ஒழித்து நின்றான். அங்குமிங்கும் பார்த்து, பரக்கப் பரக்க முழிசினான். தெருவோரம் அழிந்துபோன ஒரு வளவு இருப்பதைக் கண்டான். அந்தக் காணிக்குள் காலடிவைத்து நடந்தான். அங்கு கிணறு ஒன்று இருப்பதைப் பார்த்ததும் அவனது மூளை மாறுபாடாக வேலை செய்யத் தொடங்கியது. 'இனிமேலும் தாமதித்தால் தான் யாரிடமும் பிடிபட்டுவிடுவேனோ?' என்ற பயத்தில், ஒருமுறை நான்கு திசைகளிலும் சூழலை நோக்கினான். தோளில் இருபுறமும் தொங்கி வழிந்து கிடந்த சம்மாட்டியின் உடலை, தலைகீழாக 'தொப்' பென்று அந்தக் கிணற்றுக்குள் போட்டான். மீண்டும் நாலு பக்கமும் சுழன்று பார்த்தான். யாரும் தன்னை அவதானிக்கவில்லை என்பதை உணர்ந்துகொண்ட துணிவில், பனைமர நிழல்களின் கீழால் மறைந்து மறைந்து தனது வீடு போய்ச் சேர்ந்தான்.

14

கோடைகாலத்தில் கடலோரக் கிராமங்களில் மீன்பிடித் தொழில் நடைபெறும். ஐப்பசியில் வாடைக்காற்றுத் தொடங்கும்போது கரைவலைத் தொழில் நிறுத்தப்படும். கார்த்திகை மார்கழி தை மாதங்களில் கூத்துப் பழகுவர். மாசி பங்குனி மாதங்களில் அரிவி வெட்டுக்கென வயல் பிரதேசமான, கிளிநொச்சி கண்டாவளை வன்னிப் பகுதிகளுக்குச் செல்வர். பங்குனிக் கடைசியில் கூலி நெல் மூடைகளுடன் ஊர் திரும்புவர். சித்திரையில் கொட்டகை போட்டு கூத்து ஆடுவர். அந்த மாதத்தில் தொடங்கும் கரைவலைத் தொழில் மீண்டும் ஐப்பசியில் முடிவடையும். இப்படியான ஒரு சுழற்சித் தொழில்முறைதான், அந்த ஊர்களில் காலங்காலமாய் நடைமுறையில் இருந்து வந்தது.

சின்னையா, குழறிவல்லி போன்ற சம்மாட்டிமாரின் வீழ்ச்சியானது செல்லையாச் சம்மாட்டிக்கு இன்னும் எழுச்சியாகவே மாறியது. மேலும் பல தொழிலாளிகள் அவரிடம் வந்து சேர்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடியப்புறம் தொடங்கி மாலை ஆறு மணிவரை செல்லையாச் சம்மாட்டி தொழிலாளரைப் பிழிந்தெடுத்தார். மீன் அதிகமாகப் பிடிபட்டால் இரவிலும் கரைவலை வளைப்பார். நள்ளிரவு மட்டும் சிலநேரம் மீன்வேலைகள் நடைபெறும். இத்தகைய தொழில் துன்பத்தால் கரைவலையை விட்டு, சிலர் விலகுவதுமுண்டு. சில இளந்தாரி ஆண்கள் ஒழித்து ஓடுவதுமுண்டு. திருமணம் முடிக்காத இளந்தாரி ஆண்கள் இரவில் வாடியில் தங்குவது வழக்கம். அவர்கள் உறங்குவதற்காக புறம்பான கொட்டில் ஒன்றையும் சம்மாட்டியார் அமைத்திருந்தார்.

ஊரிலுள்ள இளந்தாரிப் பொடியன்களுக்கு சினிமா என்றால் கொள்ளை ஆசை. அவர்கள் சினிமா பார்ப்பதாயின், பட்டணம் நகரம் செல்ல வேண்டும். அதுவும், அங்குள்ள எல்லா இளம் ஆண்களாலும் முடியாத செயல். ஏழை இளந்தாரிப் பொடியன்கள் சினிமாவுக்குப் போவதில்லை. பெண்கள் சினிமா பார்ப்பதென்பது மிக மிக அரிது.

அது ஒரு ஆடி மாத கொடிய வெயில் காலம். தொழில் அலுப்பில் தொழிலாளிகள் கொறட்டை விட்டுத் தூங்கினர். முன்னிரவு. வாடிக்குள் அருகருகே படுத்திருந்த பதினைந்து பதினாறு வயதுள்ள மூன்று இளந்தாரிப் பொடியன்கள், தங்களுக்குள் மெதுவான குரலில் பேசிக்கொண்டனர்:

"எட மச்சான்மாரே, உவர் செல்லையாச் சம்மாட்டியார் மனிசரைக் கொல்லுறாரடா. விட்டிட்டு எங்காவது ஓடுவமோடா?"

"ஓமடாப்பா. இங்க சினிமாப் படமும் பாக்கேலாது"

"அதுதானே. போன மாரியில படகுத் தொழிலில யாழ்ப்பாணம் போய் நிண்டு, எவ்வளவோ படம் பாத்தம். அது சோக்கான தொழில் மச்சான்"

"எடேய், இது கோடையடா"

"ஓமோம். ஓம் மச்சான். கோடையில படகுத்தொழில் இல்லைத்தானே"

"அப்ப எங்க மச்சான் போவம்"

"மன்னார் முல்லைத்தீவுப் பக்கம் போவமடாப்பா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அங்கயெண்டால் கரைவலையும் வளைக்கலாம், படமும் பாக்கலாம்''

''மச்சான் மன்னாருக்குப் போவமடா''

''ஏன்ரா?''

''மன்னாரில, பேசாலைப் பக்கம் இருகரையிலும் தொழில் செய்யலாம் மச்சான். கோடைமாரி எண்டில்ல. பன்ரண்டு மாசமும் தொழில் செய்யலாம் மச்சான்''

''நல்லாய் படம் பாக்கலாமோடா மச்சான்?'' என்று

மன்னாரைப் பற்றி அறிந்திராத கிளியன் கேட்டான்.

''எட அங்க இல்லாத தியேட்டரோடா'' ரண்டு மூண்டு தியேட்டர் இருக்கெண்டு, யாழ்ப்பாணப் பாஷையூர்ப் பொடியள் சொன்னவங்களடா மச்சான்''

''அப்ப, ஒருதருக்கும் சொல்லாமல் வாற கிழமை ஓடுவம் மச்சான்''

''ஓமடாப்பா, இங்க ஒரு முசுப்பாத்தியும் இல்லாமல் சாகிற நேரம், எங்காவது ஓடுவம் மச்சான்''.

இவ்வாறாக வேலன், நல்லையன், கிளியன் என்ற திருமணம் முடிக்காத மூன்று இளந்தாரி ஆண்கள் தமக்குள் கதைத்து திட்டமிட்டு முடித்தனர். அதன்பின் அன்றிரவு நிம்மதியாய் கொறட்டை விட்டனர்.

கரைவலைத் தொழிலின் ஓய்வு நாளான ஞாயிறுகளில், பொங்கலாண்டியும் மூன்று தொழிலாளிகளும் வாடியில் தங்கி இருப்பர். ஏனையோர் தமது வீடுகளுக்குச் சென்றுவிடுவர். வீட்டில் எண்ணெய் அரப்பு வைத்து, சூடு இறங்கும்படி பழைய கிணற்றுத் தண்ணீரில் நீராடுவர். அன்றைய தினம் வீட்டில் சமைத்த உணவை உண்பர். மறுநாள் வள்ளம் தள்ளி வலை வளைப்பதற்கு அவர்கள் விடியப்புறமே கடற்கரை வந்தடைவர்.

வழக்கமாக இளந்தாரிப் பொடியன்களும் வாழ்விழந்த முதியோரும் வாடியில் படுத்துக் கிடப்பர். உயர் பதவி வகிக்கும் மண்டாடி கணக்கன் போன்றோர், பின்னிரவு மூன்று மணிக்கே வந்து வள்ளத்தின் ஒதுக்கில் அல்லது தென்னை மரங்களின் ஒதுக்கில் படுத்துக் கிடப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்கள் கிழமை விடியப்புறம் ஐந்து மணியளவில் கரைவலை வள்ளத்தைக் கடலில் தள்ளினர். துடுப்பு வலிக்கும் நால்வரில் இளந்தாரிப் பொடியள் மூவர் அன்றைய தினம் தொழிலுக்கு வரவில்லை. எனவே வேறு மூன்று ஆண்கள் வள்ளத்தில் ஏறி துடுப்பு வலித்து வலையை வளைத்து வந்து இறங்கி இழுத்தனர்.

''உவங்கள் வேலன், நல்லையன், கிளியன் மூண்டு பேரையும் காணயில்லை. ஏதாவது தண்ணி போட்டுட்டு எங்காவது கிடக்கிறாங்களோ தெரியாது. டேய் சிங்கா, நீ ஒருக்கால் போய் அவங்களை பாத்து வாடா'' என்று மண்டாடி முருகேசர், சிங்கன் என்ற பொடியனை அனுப்பினார். அவன் போய் எல்லா இடங்களும் தேடிப் பார்த்துவிட்டு வந்தான்.

''மண்டாடியார், அவையளை ஒரு இடமும் நான் காணயில்லை'' என்றான்.

''எங்களோட ராத்திரி அவங்கள் கிடந்தவங்கள். நாங்கள் எழும்பயுக்க அவங்கள் மூண்டு பேரையும் நாங்கள் காணயில்லை. கிணத்தடிப்பக்கம் முகம் கழுவப் போட்டாங்களோ? அல்லது கக்கூசுக்குப் போட்டாங்களோ? எண்டுதான் நான் அப்ப நினைச்சன்'' என்று வேலுப்பிள்ளை என்ற இளந்தாரி சொன்னான்.

காலை ஏழு மணியளவில் முதலாவது தடவையாக கரைவலை இழுத்து முடிந்தது. கணக்கன் கணபதி மீனை நிறுத்து விற்பனைக்கு கொடுத்துக் கொண்டிருந்தான். சம்மாட்டி செல்லையா முகங்கழுவி தேநீர் குடித்து திருநீற்றுப் பூச்சுடன், கரைவலை வள்ளத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

''சம்மாட்டியார், உவங்கள் வேலன், நல்லையன், கிளியன் மூண்டு பேரையும் காணயில்லை'' என்று இரண்டாம் மண்டாடி முருகுப்பிள்ளை சொன்னார்.

''அவங்கள் தங்கட வீடுகள்ள கிடந்தவங்களோ?''

''இல்லை அவங்கள் வாடியிலதானாம் கிடந்தவங்கள்''

அவர்களின் வீடுகளில் தனித்தனியாக விசாரித்து வரும்படி ஒரு பொடியனை சம்மாட்டி அனுப்பி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அவங்கள் வீடுகளுக்கு வரயில்லை. வாடியில்தான் படுத்தவங்கள்' என்ற பதில்தான் கிடைத்தது. செல்லையாச் சம்மாட்டி மிகுந்த கோபத்துடன் காணப்பட்டார்.

மூவரும் தமது வீடுகளில் ஐந்து, பத்து, ரூபாய்களை எடுத்தனர். சாரம் மேற்சட்டைகளை ஒரு பயணப்பையினுள் போட்டனர். அவற்றை காட்டுப் பற்றைக்குள் ஒழித்து வைத்தனர். ஞாயிறு இரவு பந்தல் வாடிக்குள் ஏனைய தொழிலாளருடன் படுத்துக் கிடந்தனர். தூங்குவது போல் பாசாங்கு செய்தனர். நள்ளிரவு கடந்தது. ஒரு மணி இருக்கும். ஆளுக்காள் கைவிரலால் சுரண்டினர். பூனைபோல் மெதுவாகத் தவழ்ந்து தவழ்ந்து வாடிக்கு வெளியில் வந்தனர். தம்முடன் படுத்திருந்தோரை அவதானித்தனர். ஞாயிற்றுக்கிழமை. முழுக்குச் சாப்பாடு. கள், சாராயம் குடித்த மயக்கத்தில் அவர்கள் கொறட்டைவிட்டு ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்தனர். யாரும் தம்மை அவதானிக்கவில்லை என்ற துணிவில் மூவரும் தெற்குப் பக்கமாக விரைந்து நடந்தனர். வாடிக்குக் காவல் காக்கின்ற 'அருச்சுனன்' நாய் வாலை ஆட்டியபடி சிணுங்கிக் கொண்டு ஓடிவந்தது. அது குரைக்காதவாறு வேலன் அதன் முதுகையும் பிடரியையும் தடவிக்கொடுத்து சாந்தப்படுத்தினான்.

"அருச்சுனா, நீ போய்ப் படடா" என்று கிளியன் இரகசியமாக நாய்க்கு உத்தரவு போட்டான். அது வாலை ஆட்டிக்கொண்டு பொங்கல் வாடிப்பக்கமாக ஓடிப்போய் ஒரு சுற்றுச் சுற்றியபின், தான் படுத்திருந்த சூட்டுமண்ணில் வசதியாய் சுருண்டு படுத்துக்கொண்டது.

பற்றைக்குள் வைத்த பயணப்பையை எடுத்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாக ஊடுகாட்டுப் பாதையால் மூவரும் தெற்கு நோக்கி விரைந்தனர். வீரக்கழி ஆற்றைக் கடக்கும்போது ஆடிமாதம் என்பதால் ஆற்றுநீர் வற்றிய சேற்று நிலத்தில், ஒரு அங்குல உயரமளவில் தண்ணீர் தங்கியிருந்தது. யப்பான், சள்ளை, திரளி முதலிய மீன் இனங்கள் சாகும் நிலையில், தமது உயிரைக் காக்கவென வற்றுத் தண்ணிக்குள் துடித்தபடி கிடந்தன. அவற்றை வாயால் கவ்வி சப்பிச் சப்பித் தின்று கொண்டிருந்த சில நரிகள், உறுமிக்கொண்டே கலைந்தோடிச்சென்றன. சிறிது தூரம் அவை ஓடியபின், திரும்பி நின்று பார்த்து நாக்கைத் துளாவி ருசித்தவாறு வீணி வடிய நின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன்கள் மிதிபடாதபடி கால்களை எட்டி எட்டி வைத்து மூவரும் விரைந்து நடந்தனர். அவர்களின் பாதங்களில் அடிக்கடி சில மீன்கள் மிதிபட்டன.

''எடேய், கவனமாய்ப் பாத்து காலை வைச்சு வாங்கோடா. கெழித்திச் சுங்கன் குத்திப்போடுமடா'' என்னும் எச்சரிக்கையை முன்னே செல்லும் வேலன் கொடுத்தான். வீரக்கழி ஆற்றைக் கடந்து மாவிலங்கை, பண்ணைத் தோட்டங்களின் ஊடாகச் செல்லும் தெருவில் நடந்து அதிகாலை நான்கு மணிக்கு இயக்கச்சி முச்சந்திக்கு வந்து சேர்ந்தனர். சிகரட் குடிப்பதென்றால் மூவருக்கும் மிகுந்த ஆசை. கடைகள் இன்னும் திறபடவில்லை. தமது மேற்சட்டைப் பைகளுக்குள் இருந்த பாலக்காடு 'ஆர் வீ ஜி' பீடிக்கட்டில் ஒவ்வொன்றை உருவி எடுத்து 'யானைமார்க்' தீப்பெட்டியை உரசி, பீடியைப் பற்றவைத்தனர். புகையை நெஞ்சுக்குள் இழுத்து காலைக்குளிரை உடலில் சூடாக்கியவாறு, சுருள்சுருளாக புகையில் வட்டம் விட்டனர். நல்லையன் வானத்தைப் பார்த்து புகை வளையத்தை ரசித்தபடி இருந்தான். நேரம் ஐந்து மணியைக் கடந்தது. அடிக்கடி மேற்குப் பக்கமாகத் தலையைச் சாய்த்து, கண்டி வீதியைப் பார்த்தபடி இருந்தனர். விடியப்புறம் யாழ்ப்பாணத்திலிருந்து மன்னாருக்குப் போகும் 'கடுகுதி அரசப்பேரூந்து' வந்துகொண்டிருந்தது. மூவரும் எழுந்து தமது கைகளை மேலும் கீழுமாக அசைத்தவாறு நின்றனர். உறுமிக்கொண்டு வந்த சிவப்புநிற 'அசோக்லேய்லாண்ட்' பேரூந்து கிறீச்சென்று பிறேக் போட்டு, சரித்து வெட்டி வீதியோரமாக இரைந்தபடி நின்றது. மூவரும் அதில் ஏறிக்கொண்டனர். தலைமன்னார் செல்வதற்குரிய பயணச் சீட்டுக்களை நடத்துனரிடம் பெற்றனர். திங்கட்கிழமை என்பதால் அரசப்பணியாளர் பலர் இருக்கைகளை நிறைத்திருந்தனர். எனவே பேரூந்தின் முகட்டுக் கம்பியைப் பிடித்துக்கொண்டு நின்றபடியே மூவரும் பயணித்தனர்.

இந்த ஊரிலுள்ள வாலிபப் பொடியள் மன்னார், முல்லைத்தீவு, உடப்பு போன்ற கடலோரக் குடியிருப்புத் தொழிலிடங்கள் சென்று மீன்பிடித் தொழில் செய்து, மீண்டும் தமது ஊர் திரும்பும் வழக்கம் இதற்கு முன்னரும் நடைமுறையில் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே 'உந்தக் காவாலிப் பொடியள் சினிமாப்படம் பாக்கிற பட்டணப் பக்கம் எங்கயோ ஓடிவிட்டாங்கள் போல கிடக்கு' என்று நினைத்த அவர்களின் உறவினர் அவர்களைத் தேடாமல் கைவிட்டனர்.

''நாங்கள் உழைச்சு எப்புடியெண்டாலும் அவங்கள் வாங்கின கடனைக் கட்டுறம் சம்மாட்டியார்'' என்று, அவர்களின் தாய்மார் செல்லையாச் சம்மாட்டியைச் சமாதானப் படுத்தினார்கள்.

'நாங்கள் தலைமன்னாரில் கரைவலையில் நிக்கிறோம். யாரும் எங்களைத் தேட வேண்டாம். வலை வைச்சதும் நாங்கள் ஊருக்கு வருவோம்' என்று இரண்டு கிழமை கடந்து அவர்களிடமிருந்து, தாய்மாருக்குக் கடிதம் வந்தது.நல்லையாவின் தாயும் தந்தையும் அவனது சிறுவயதிலேயே இறந்துவிட்டனர். அதன்பின் தாய்மாமன் மாமியுடன் இருந்து அவன் வளர்ந்து, அவர்களை தன் பெற்றோராக மதித்து வாழ்ந்து வந்தான். எனவே நல்லையா தன் மாமன் மாமிக்கு கடிதம் போட்டிருந்தான்.

அந்தக் காலத்தில் நாற்பது ரூபா அளவில்தான் ஒரு மாதச் சம்பளம் கிடைக்கும். அதில் ஒவ்வொரு சனிக்கிழமை பின்நேரத்திலும் மூவரும் ஆளுக்கு ஐந்து ரூபாவை 'கிழமைக்காசு' என்ற கணக்கில் சம்மாட்டியிடம் பெற்றுக்கொள்வர். அந்த ஐந்து ரூபாப் பணம் அவர்களின் ஒரு கிழமைச் செலவுக்குப் போதுமானது. சாராயம் கள் குடிப்பது சிகரட் பீடி புகைப்பது சினிமா பார்ப்பது போன்றவை, அவர்களின் விருப்பத்துக்குரிய பழக்கங்களாகும்.

மன்னாருக்கு ஓடிப்போனதிலிருந்து ஆறுமாதமாக மூவரும் தமது ஊர்ப்பக்கம் திரும்பவில்லை. தாய்மாரும் உறவினரும் அவர்களைப்பற்றி யோசித்துக் கவலைப்பட்டுத் திரிந்தனர். மாதம் ஒருமுறை அவர்களிடம் இருந்து கடிதங்கள் வந்தன. ஆனால் தாய் சகோதரர் மற்றும் உறவுகளுக்கு உதவும் நோக்கில் பணம் அனுப்பும் பழக்கம் அவர்களிடமில்லை. ''உவங்களை உப்புடியே விட்டால் காவாலியளாய் மாறிவிடுவாங்கள் மச்சாள். ஊர் உறவுகள் அறுந்துபோடும். அங்க எங்கயும் கலியாணம் முடிச்சிடுவாங்கள் மச்சாள்''

''ஓம் மச்சாள். நீ சொல்லுறதும் சரிதான் மச்சாள். உவங்களுக்கு கால்கட்டு போட்டால்தான் அடங்குவாங்கள் போல கிடக்கு மச்சாள்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தந்திரமாய் கடதாசி போட்டு அவங்களைக் கூப்பிடுவம் மச்சாள்''

''ஓம் மச்சாள்''.

கவலையுடன் யோசித்துக்கொண்டு திரிந்த ஆளுக்காள் மச்சாள் முறையான, கிளியன், வேலன் இருவரின் தாய்மாரும் தமது மகன்மாரைப்பற்றி அடிக்கடி இப்படியாக உரையாடிக் கொள்வர்.

''இந்த ஐப்பசி மாசம் நீங்கள் மூவரும் ஊர் வரவும். உங்களுக்கு கலியாணப் பேச்சு நடக்குது. வராட்டில் நாங்கள் தூங்கிச் செத்துப்போடுவம். எங்கட சவத்திலதான் வந்து நீங்கள் முழிப்பியள்' என்ற கண்டனத் தொனியில், தாய்மாரும் நல்லையாவின் மாமனும் கடிதம் எழுதிப் போட்டனர். தமது குல தெய்வங்களுக்கு நேர்த்தியும் வைத்தனர்.

தெய்வ அருளோ, உறவுகளில் இரங்கியோ, அல்லது பிறந்த ஊர்ப்பாசமோ எது எப்படியோ? ஐப்பசி மாதக் கடைசியில் மூவரும் தமது ஊர் வந்து சேர்ந்தனர். ஒருவகை நாகரிகத் திமிருடன் ஊருக்குள் உலாவினர். அவர்களின் உடல்களும் சிறிது வளர்ச்சியடைந்து மினுமினுப்பாக காட்சி அளித்தன. ஊரிலுள்ள ஏனைய இளந்தாரிப் பொடியன்கள் அவர்களைப்பார்த்து அங்கலாய்த்தனர். தாங்களும் தூர இடங்களுக்குத் தொழிலுக்குப் போனால், பட்டண சுக இன்பங்களை அனுபவிக்கலாம் என்ற ஆசை அவர்கள் மனத்திலும் ஊற்றெடுத்தது.

அந்த ஊருக்குள்ளே, இளங்குமரிகளான , அவர்களின் மனைவிமார் மூவரும் உண்மையிலேயே சிறந்த அழகிகள்தான். திருமணத்தின்பின் மேலும் மினுமினுத்த கன்னி முகத்துடன் காணப்பட்டனர். திருமணம் நிகழ்வு அப்படி ஒன்றும் தடல்புடலாக நடைபெறவில்லை. இரவோடு இரவாக சோறு குடுப்புடன், மூவரின் கலியாணமும் நெருங்கிய உறவினருடன் நடந்தேறியது.

புது மாப்பிள்ளைமார் மூவரும் 'மாதஊண்' சாப்பாட்டில் கொழுத்துக் காணப்பட்டனர். மன்னாரிலிருந்து கொண்டுவந்த காசும் கொஞ்சம் கையில் இருந்தது. மனைவிமாரை யாழ்ப்பாணம் அழைத்துச் சென்றனர். சினிமாப்படம் பார்த்தனர். ஸ்ரூடியோவில் போட்டோ எடுத்தனர். ஆறு பேரும் சேர்ந்து ஒன்றாகவும், ஆண்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவரும் ஒன்றாகவும், அவர்களின் மனைவிமார் மூவரும் ஒன்றாகவும் என மூன்று படங்களை எடுத்துக்கொண்டனர். எம். என். ராஜம், ஈ. வி. சரோஜா, சாவித்திரி போன்ற அழகிகள் அந்நாட்களில் சினிமாவில் வலம்வந்தனர். தமது மனைவிமாரையும் அவர்கள்போலவே தம் மனதில் மூவரும் பதித்துக்கொண்டனர்.

மாரிகாலக் குளிரும், மழை இரைச்சலும், இந்த விடலைச் சோடிகளின் தேன் நிலவை பகலிரவின்றி ஒன்றிணைத்தன. கிடைத்த ஓய்வு நேரங்களில், நண்பர்கள் மூவரும் சீட்டு ஆடுவர். கிளித்தட்டு விளையாடுவர். இவ்வாறாக உண்பது, படுப்பது, விளையாடுவது என தேன்நிலவு நாட்கள் மிகவும் இன்பமாகக் கழிந்தன. 'மோகம் முப்பது நாள் ஆசை அறுபது நாள்' என்றவாறு, மாரிகாலம் கடந்து சென்றது. அரிவி வெட்டுக்குரிய முன்பனிச் சுவாத்தியமும் தொடங்கியது.

அரிவி வெட்டுத் தொழிலுக்கு வன்னிக்குப் போகவேணும். அங்கு அதிகாலை ஐந்து மணிக்கெழும்பி 'பனித்தண்ணீர்' காயமுன்னம் வயலில் இறங்க வேணும். 'ஜில்' என்ற குளிருள்ள சேற்று நீரில் கால் வைக்கவேணும். நீர்ப்பாம்புகள் காலுக்குள் ஓடிச்செல்லும். தவளைகள் துள்ளிப் பாயும். விரால் மீன்கள் காலில் உரசி ஓடும். குனிந்த உடல் நிமிர நெடுநேரம் எடுக்கும். உச்சிப் பனிவெயில் உடலை எரிக்கும். சூரியன் உறைக்குள் புகுந்தபின் குளத்தில் இறங்கித் தலைமுழுக வேணும். கொட்டிலுக்குள் படங்குச்சாக்கில் உறங்கி, மறுபடியும் விடியப்புறம் எழும்பவேணும். காலையில் பழையகஞ்சி குடிக்கவேணும். சினிமா பார்க்க ஏலாது. இத்தகைய கட்டுப்பாடுகள் கொண்ட கடும் உழைப்புக்காலம் அது.

புது மாப்பிள்ளைமார் மூவரும் அரிவி வெட்டுக்கு ஆயத்தமாகினர். அவர்களின் வீடுகளில் மகிழ்ச்சிச் சூழல் காணப்பட்டது. மறுநாள் விடியப்புறம் வன்னிக்குச் செல்வதற்கான ஏற்பாடுகள் தடல்புடலாக நடைபெற்றன. நல்லையாவின் மாமன் அரிவி வெட்டுவதற்குரிய புதிய அரிவாள் மூன்றை வாங்கி வந்து வேலன் கிளியன் நல்லையன் மூவருக்கும் அன்பளிப்புச் செய்தார். அவர்களின் மனைவி மாமிமார்கள் 'பொரிமா' திரணைகளை உருட்டி, அவற்றைப் பேணிகளுக்குள் காற்றுப் புகாமல் பாதுகாப்பாக அடைத்து வைத்து, தமது மாப்பிள்ளைகள் மூவரிடமும் கொடுத்தனர். அதிகாலை நான்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியளவில் மனைவிமார் மிகுந்த மகிழ்ச்சியுடன் தமது கணவன்மாரை பயணம் அனுப்பி வைத்தனர்.

அன்று முற்பகலில் நெல்வயல் பிரதேசமாகிய வன்னி நிலப்பகுதியை வந்து சேர்ந்தனர். எல்லாமாக இருபது தொழிலாளிகள் அவர்களின் அரிவி வெட்டுக் குழுவில் இருந்தனர். கமக்கார முதலாளி கப்பு, தடி, கிடுகு, கயிறு முதலியவற்றைக் கொடுத்தார். இந்த அரிவிவெட்டுக் குழுவினர் வயலோரக் காணிக்குள் ஒரே நாளில் பெரிய ஒரு கொட்டில் கட்டி அதை வேய்ந்து முடித்தனர். கொட்டிலின் ஒரு மூலைப்பகுதியை மறைத்துக்கட்டி, அதை குசினியாகப் பாவித்தனர். கொட்டிலின் காய்ந்த களிமண் பகுதியில் படங்கு விரித்தனர். அவ்விடத்தை அவர்கள் உறங்கும் இடமாகப் பாவித்தனர்.

மறுநாள் விடியப்புறம் நான்கு மணிக்கு எல்லோரும் கண் விழித்தனர். பொங்கலாண்டி எல்லோருக்கும் தேநீர் போட்டுக் கொடுத்தான். தேநீரைக் குடித்தபின் நாலரை மணிக்கே வயலில் எல்லோரும் இறங்கி ஒருவித ஒழுங்கு முறைப்படி வரிசையாக நின்று, அதன்பின் குனிந்தபடி அரிவி வெட்டத் தொடங்கினர். பனிக்குளிருக்கு தமது பல்லைக் கடித்துக்கொண்டு, குனிந்த நிலையில் அரிவியைக் கோலிக் கோலி வேகமாக வெட்டினர். காலை ஒன்பது மணியளவில் கஞ்சியைக் குடித்தனர். மதியம் கடந்து மூன்று மணியளவில், கருவாட்டுச் சொதியுடன் சோறு உண்டனர். இரவு எட்டு மணியளவில் வயலுக்குள்ளால் வெளியேறினர். குளத்தில் குளித்தனர். உடல் சில்லென்று குளிர்ந்தது. இரவு உணவை உண்டபின்பு சிலர் சுருட்டுப் புகைத்தனர். சிலர் பீடி புகைத்தனர். அரிக்கன்லாம்பு வெளிச்சத்தில் சிறிது நேரம் சிலர் சீட்டு விளையாடினர். பத்துமணியளவில் ஆழ்ந்த உறக்கத்தில் எல்லோரும் கொறட்டைவிடத் தொடங்கினர்.

இவ்வாறாக ஒரு கிழமை கடந்தது. பௌர்ணமி நாள் நெருங்கியது. அரிவிவெட்டுக் குழுத் தலைவன் 'பெரியதம்பி' சொன்னான்:

''நல்ல நிலவு வெளிச்சம் அடிக்குது. வானம் தெட்டத்தெளிவாய் கிடக்குது. நடுச்சாமம் மட்டும் அரிவியை வெட்டுவம். அப்புடி நாங்கள் உழைச்சால் கடைசியில பங்கு பிரிச்சுப்பாக்க எங்களுக்குக் கூடுதலான உழைப்பு கிடைக்கும்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஓமோம் மச்சான், எங்கட குழுவின்ர பேரையும் புகழையும் ஒருக்காலும் நாங்கள் மங்க விடக்கூடாது மச்சான்'' என்று கதிரவேலு என்ற முதியவர் குழுத்தலைவன் பெரியதம்பிக்கு ஒத்துப் பாடினார்.

நல்லையன் வேலன் கிளியன் மூவரும் மன்னாரில் நின்று கரைவலைத் தொழில் செய்தபோது கிழமையில் ஒரு நாளாவது 'சுகமில்லை' என்றோ, வேறு ஏதாவது பொய்ச்சாட்டு சொல்லியோ வாடியில் படுத்துக் கிடப்பார்கள். அதே இரவில் எப்படியோ களவாகச் சென்று ஒரு காட்சியாவது சினிமாவும் பார்த்து வந்துவிடுவார்கள். கரைவலைத் தொழிலில் ஞாயிறு ஒரு நாளாவது ஓய்வு கிடைக்கும்.

இந்த அரிவி வெட்டுத் தொழிலில் கண்டிப்பாக ஏழுநாளும் உழைக்க வேணும். கடந்த ஒரு கிழமைக்குள், வேலன் நல்லையன் கிளியன் மூவரின் முகங்களும் கறுத்து உடல்களும் காய்ந்து காணப்பட்டன. "நிலவு நாட்களில் நள்ளிரவு மட்டும் கண்டிப்பாக அரிவி வெட்ட வேண்டும்" என்று 'குழுத்தலைவன்' பெரியதம்பி சொன்னதும் மூவரும் முழிசத் தொடங்கினர்.

நல்லையா : ''மச்சான், இனிமேல் இது சரிப்பட்டு வராதுபோலத் தெரியுது மச்சான்''

வேலன் : ''ஓமடா மச்சான். மனிசரைக் கொல்லப் போறாங்களடா''

கிளியன் : ''எடேய் மச்சான், பேசாமல் மன்னாருக்கு ஒழிச்சு ஓடுவமடா''

அருகருகில் மூவரும் குனிந்த நிலையில் அரிவி வெட்டியபடி கதைத்துக்கொண்டே முன்னேறி நகர்ந்தனர். அப்போது இரகசிய மொழியில் தமக்குள் பேசிக்கொண்டனர்.

''படமும் இல்லை குடியும் இல்லை மச்சான்''

''பட்டணமும் இல்லை கடைத்தெருவும் இல்லையடாப்பா''

''ஆசைக்குப் பாக்கிறத்துக்கு, ஒரு பெண்பிரசுகூட கண்ணில படுகுதில்லை மச்சான்''

''ஊருக்குப் போனாலோ மனிசிமார் கலைச்சுப்போடுவாகள் மச்சான்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எங்காவது ஓடிப்போறதுதான் ஒரே வழியடாப்பா''

''அப்ப, முல்லைத்தீவுக்கு ஓடுவமோ மச்சான்?''

''இல்லை மச்சான், மன்னார்தாண்டா நல்லது''

"எடேய் பொடியள், என்னடா வாயுக்க முணுமுணுப்பு. அரிவி வெட்டயுக்க என்னடா கதை?'' என்று குழுத் தலைவன் 'பெரியதம்பி' சத்தமிட்டதும் மூவரும் இரகசியக் கதையை நிறுத்திக்கொண்டனர்.

அன்றிரவு உப்பளக் குவியல் போன்ற நிலவு வெளிச்சத்தில், முதியோர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் பாடிப்பாடி அரிவியை வெட்டிக் கொண்டிருந்தனர்.

''எட, விடிய விடிய அரிவி வெட்டலாம்போல கிடக்கடாப்பா. அப்புடி பால்போல நிலவு வெளிச்சம் அடிக்குதடா மச்சான்'' என்று குன்னிக்கண் தம்பிமுத்தன், குழுத் தலைவனுக்குப் 'பந்தம்' பிடித்தான். அதைக் கேட்ட இளந்தாரிப் பொடியன்களுக்கு கோபம் மூக்கு நுனியில் முட்டிமோதியது.

அன்றிரவு எல்லோரும் குளித்து சாப்பிட்டு உறங்கும்போது நேரம் பின்னிரவு இரண்டு மணியாகிவிட்டது.

இனிமேலும் இந்தத் தொழிற் கொடுமையை தம்மால் சகிக்க முடியாது என்று, கிளியன் வேலன் நல்லையன் மூவரும் தமக்குள் தீர்மானித்துக் கொண்டனர். அவர்கள் திட்டமிட்டபடி மறு நாள் பின்னிரவு மூன்று மணியளவில் யாருக்கும் தெரியாமல் எழுந்து வேகமாக நடந்து சென்று அரச பேருந்தில் ஏறி மன்னார்ப் பட்டினம் போய்ச் சேர்ந்தார்கள்.

"உவங்கள் மூண்டு பேரும் தொழிலுக்குக் கள்ளப்பட்டு மனிசிமாரட்ட தங்கட ஊருக்கு ஓடிவிட்டாங்கள் போல கிடக்கு" என்று வெறுப்புடன், கோபத்தை மனதுக்குள் அடக்கியபடி ஏனைய தொழிலாளரைப் பார்த்துச் சொன்னார் பெரியதம்பி.

குழுத்தலைவன் அவர்களின் ஊருக்குச் செய்தி அனுப்பினார். அங்கு அவர்கள் போகவில்லை என்பதை அறிந்துகொண்டார். அவர்களுக்குப் பதிலீடாக வேறு மூவரை ஊரிலிருந்து வரவழைத்து, அரிவிவெட்டு ஒப்பந்தத்தை இடையூறின்றி நடத்தினார். இச்செய்தியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்த வேலன் கிளியன் நல்லையன் மூவரின் மனைவிமாரும் மிகுந்த மன வேதனை அடைந்தனர்.

'தாங்கள் மன்னாரில் கரைவலையில் நிற்பதாக' எழுதிப்போட்ட கடிதங்கள் மனைவிமாரின் கைகளில் சில நாட்களின் பின்பு கிடைத்தன.

"உவங்களை இனித் திருத்த ஏலாது" என்று பெண் கொடுத்த மாமன்மார் மூவரும் கவலைப்பட்டனர். புதுமாப்பிள்ளைகள் மூவரும் நான்கு மாதத்திற்கு மேலாக தமது சொந்த ஊர்ப்பக்கம் தலைகாட்டவே இல்லை. வாழ்க்கையை அனுபவிக்கும் வயதில் தமது இளவயதுப் பெண்கள் வாழாவெட்டிகளாக பெருமூச்சு விட்டபடி அடுப்புக்குப் பக்கத்தில் இருப்பதைப் பார்க்கும் தாய்மாரின் கண்கள் அடிக்கடி கலங்கிச் சிவந்தன.

அறுபத்தைந்து வயதைக் கடந்த 'பாண்டியன்' என்ற முதியவரும் அந்த ஊரில் வாழ்ந்து வந்தார். அவரது ஒரு உறவுப் பேத்தியை நல்லையாவும் இன்னொரு உறவுப் பேத்தியை வேலனும் திருமணம் முடித்திருந்தனர். அந்த இளந்தாரிகள் இருவரின் பொறுப்பற்ற இத்தகைய நடத்தைகள் பாண்டியன் கிழவனுக்கு மிகுந்த கோபத்தை மூட்டியது. ஆனாலும் மனதுக்குள் கோபத்தை அடக்கிக்கொண்டு சந்தர்ப்பம் எதிர்பார்த்தபடி காத்திருந்தார். அடிக்கடி தன் பேத்திமாரிடம் சென்று சுகம் விசாரிப்பார். மனதில் கடும் கோபத்தை வைத்துக்கொண்டு ஆழ்ந்த யோசனையுடன் திரிந்தார்.

''உவங்கள் எப்பவாம் பிள்ளை மன்னாரால வாறது?''

''எப்பவெண்டு தெரியாதப்பு. கடிதமும் ஒரு மாசத்துக்கு மேலா வரயில்லை''

''என்ன, உவங்கள் குரங்குச் சேட்டையோ விட்டுக்கொண்டு திரியுறாங்கள்? 'அரிவிவெட்டைக் குழப்பிப்போட்டு ஒழிச்சு ஓடிவிட்டாங்களெண்டு' அவன் பெரியான் கள்ளுக்கொட்டில்ல சொல்லித் திரியிறான். எனக்குச் சரியான வெட்கமாக் கிடக்குது''

''எங்களுக்கும் வெட்கம்தானே அப்பு''

''உவங்களைத் திருத்துறதுக்கு, நல்ல ஆட்கள் இன்னும் கிடைக்கயில்லைப் போல கிடக்குது''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவயள் ஆருக்குத்தான் அப்பு அடங்கி நடக்கினம்?''

''அவங்கள் என்ர கையில பிடிபடட்டன். அவங்களை நான் ஒரு கை பாக்கிறன்'' என்று பல் இல்லாத தன் முரசை, பாண்டியன் கிழவன் ஒருமுறை கடித்துக்கொண்டார்.

கோடை காலம் மெல்ல மெல்லமாக நகர்ந்து கொண்டிருந்தது. ஐப்பசி மாதம் நெருங்கியது. மன்னாரில் கரைவலைத்தொழில் செய்தபடி ஏழு மாதமாக சொகுசு, முசுப்பாத்தி, களியாட்டம், காவாலிமேய்ச்சல் முதலிய சுகங்களை மூவரும் நன்றாக அனுபவித்தனர். மாரி காலம் நெருங்கும்போது அவர்களின் மனதிலும் தமது இளம் மனைவிமாரின் முகங்கள் அடிக்கடி ஞாபகம் ஊட்டியவாறு இருந்தன.

''மச்சான் எங்கட ஊர்ப்பக்கம் போவமோடாப்பா?''

''ஓம் மச்சான். இனி மாரிகாலம் ஊரில தொடங்கப்போகுது. போவம் மச்சான்''

''ஓமடாப்பா. இனி அங்க தொழில் ஒண்டும் இல்லைத்தானே. அங்கினபோய் சும்மா விளையாடிக்கொண்டு, சுத்தித் திரியலாம் மச்சான்''

''ஓம் மச்சான். மனிசிமாரைக் கூட்டிக்கொண்டு யாழ்ப்பாணத்துக்குப் படம் பாக்கப் போகலாமடாப்பா''

இத்தகைய உரையாடல்களின் முடிவில், தாம் பிறந்த ஊருக்குப் போவதென முடிவெடுத்தனர்.

தீபாவளிக்கு முதல் வாரத்தில் கிளியன் வேலன் நல்லையன் மூவரும் தமது ஊர் வந்து சேந்தனர். அவர்களின் கையில் எதுவித பணமும் இல்லை. பேரூந்துக் கட்டணச் செலவுடன் கையிலுள்ள காசும் கரைந்துவிட்டது. தமது மனைவிமாருக்கு புடவை துணி வாங்கிக்கொண்டு வரவுமில்லை.

வெறுங்கையுடன் வந்தாலும் தமது மருமக்களை மாமன் மாமிமார் தடல்புடலாக வரவேற்றனர். மனைவிமாரின் மனங்களிலும் குதூகலம் தெரிந்தது. இது அவர்களின் இரண்டாவது தேன்நிலவு. புதுப்பெண்களின் தந்தைமார் அரிவி வெட்டிக் கொண்டுவந்த நெல் மூடைகள் கொட்டில் வீடுகளுக்குள் அடுக்கி வைக்கப்பட்டுக் கிடந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழி, பணியாரம், பாற்பிட்டு போன்ற உணவு வகைகள் தினமும் தயாராகின. மாப்பிள்ளை மூவரின் உடல்களும் மேலும் மினுமினுத்தன.

''இனிமேல் உப்புடி அங்க இங்க எண்டு ஓடித் திரியாதையுங்கோ பிள்ளையள். எங்கட ஊருக்குள்ளயும் உழைக்கலாம்தானே பாவம் பெண் புள்ளையள். உங்கட மனிசிமாரை விட்டிட்டு எங்கயும் இனி போகாதையுங்கோ'' என்று முதிய ஆண்களும் பெண்களும் வந்து பலவித புத்திமதிகளைக் கூறிச்சென்றனர். உறவினர் பலரும் வந்து சுகம் விசாரித்துச் சென்றனர்.

கிளியன் வேலன் நல்லையன் மூவரும் ஊருக்குள் வந்துவிட்டதை முதியவர் பாண்டியன் அறிந்து கொண்டார். ஆனாலும் அவர்களின் வீடுகளுக்கு உடனடியாக அவர் போகவில்லை. 'வந்த பொடியள் கொஞ்சம் பயணக்களை ஆறட்டும்' என்று மௌனமாக அவர் இருந்து விட்டார். மூன்றாம் கிழமை தன் பேத்தி ஒருவரின் வீட்டுக்கு பாண்டியன் கிழவர் சென்றார். அவளை நல்லையா திருமணம் முடித்திருந்தான்.

''என்ன பேத்தி, சுகமாய் இருக்கிறியளோ?''

''ஓமப்பு... ஏதோ நல்லாயிருக்கிறம்''

''அவன் தம்பி எங்க மோன?''

''அவர் பந்தடிக்கப் போட்டார் அப்பு''. வளவின் முற்றத்தை பெருக்கிக்கொண்டே அவள் பதில் சொன்னாள்.

''என்ன பிள்ளை, ஏதாவது உன்ர புருசன் கொண்டுவந்தவனே?''

''ஒண்டும் கொண்டுவரயில்லை அப்பு. அதுக்கென்ன அப்பு. அவர் வந்து சேர்ந்ததே எனக்குப் போதுமப்பு. நான் இப்ப சந்தோசமாய் இருக்கிறனப்பு''.

''இனிமேலும் அவன் ஓடமாட்டானோ மோன?''

''இனி அவர் என்னை விட்டுட்டு போகார் போல தெரியுதப்பு''

''கொம்மா எங்க புள்ள?''

''அவ கிளிநொச்சிச் சந்தைக்குப் போட்டா. இன்னும் அம்மாவைக் காணயில்ல அப்பு. நேரமும் பின்னேரம் ஆறு மணியாகுது''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்ப கொப்பர் உழைச்சு வந்து போட, கொம்மா சுமந்து வந்து கொட்ட உன்ர புருசன் ஒசியில இருந்து தின்னுறான் எண்டு சொல்லு''

பேரன் பாண்டியனின் வார்த்தை, கொஞ்சம் திசை மாறிச் செல்வதை பேத்தி அவள் உணர்ந்து கொண்டாள். அவர் பேச்சைத் தன் பக்கம் திருப்பும் நோக்கத்துடன், ''அப்பு இருங்கோ. நான் தேத்தண்ணி போட்டுக்கொண்டு வாறன்'' என்றாள்.

''எனக்கு வேண்டாம் மோன. நான் இப்பதான் வீட்டில குடிச்சிட்டு வாறன்''

''அப்ப இந்தாங்கோ அப்பு. வெத்திலையைப் போடுங்கோ'' என்று குடத்தடி ஈரமண்ணுக்குள் புதைத்து வைத்திருந்த வெற்றிலையை எடுத்து வந்து அதை நீரில் கழுவி தட்டில் வைத்து பாக்கு சுண்ணாம்பு புகையிலை எல்லாவற்றையும் சரிபார்த்து, வெற்றிலைத் தட்டத்தைக் கொண்டுவந்து தன் பேரன் முன் வைத்தாள்.

நாலு பாக்குப்பிளகை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு, பாதி வெற்றிலையைக் கிழித்தெடுத்து அதில் சுண்ணாம்பை, பாண்டியன் தடவினார்.

''நான் சொல்லுறத மனசில வைச்சுக்கொள் பேத்தி. இனியாவது கவனமாய் நட பிள்ளை. அவன ஊருக்குள்ள உழைக்க விடு. அவன்ர உழைப்பில நீ தின்னப்பார்''.

''அப்பு, ஐயா அம்மாட்ட வாங்கித்தின்ன, எனக்கும் கவலையாத்தான் கிடக்கு அப்பு. என்ர புருசனுக்கும் சேர்த்தெல்லோ அவயள் ஊட்டுப் போடுகினம். இன்னும் மூண்டு தங்கச்சிமாரும் எல்லோ எனக்குக்கீழ கலியாணம் முடியாமல் இருக்குதுகள். அதுகளையும் அம்மா ஐயா ஆருக்காவது கரைசேர்க்கத்தானே வேணுமப்பு''.

''ஏதோ பிள்ளை, குடும்பத்தில நீதான் மூத்தனீ. உனக்கு எல்லாம் தெரிஞ்சு உணர்ந்து, நீ நடந்து கொண்டால் சரிதான்''

''ஓமப்பு. நான் யோசிச்சு நல்லாய் நடக்கிறன் அப்பு''.

''சரி பிள்ளை, நான் போட்டு வாறன் மோன. அவன் உன்ர புருசனையும் நான் சுகம்; விசாரிச்சதாக, ஒருக்கால் சொல்லு பிள்ளை''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பேத்தியின் மனம் நோகக்கூடாது என்பதற்காக அந்தக் கடைசி வசனத்தையும் மனமின்றிக் கூறிக்கொண்டே, பாண்டியன் வடக்குப் படலையைத் திறந்துக்கொண்டு கடற்கரையால் நடந்து, தன் வீடு நோக்கிச் சென்றார்.

கிளியன் வேலன் நல்லையன் மூவரும் விளையாடி முடியவும் இரவு எட்டு மணியாகும். அதன்பின் அவர்களுடன் சேர்ந்து விளையாடிய பொடியன்கள் எல்லாம் அவர்கள் மூவரையும் வட்டமாக சூழ்ந்து மண்ணில் அமர்ந்திருப்பர். அப்போது, அவர்களுக்கு 'கிளுகிளுப்பு' மூட்டக்கூடிய தமது மன்னார் அனுபவங்களை, உபகதை சொல்லும் பாணியில் மூவரும் எடுத்துரைப்பர்.

சினிமாக் கதைகளை கேட்போரின் வாய்களில் இன்பம் ஊறும்படி அபிநயத்துடன் தமது வாய்களை அசைத்து தொடர்ச்சியாகச் சொல்வார்கள். சினிமா பார்க்க வசதியற்ற கிராமப் பொடியன்கள் தமது தாடையில் கையை ஊன்றி வாயை ஆவென்று திறந்தபடி, அவர்கள் மூவரும் கூறும் கதைகளைக் கேட்டு ரசிப்பர். 'இன்றைக்கு இவ்வளவும் போதும். இனி வீட்டுக்குப் போவம்' என்று சொல்லியபடி அவ்விடத்தை விட்டு எழுந்து செல்வதற்கு சிலர் தயாராவர்.

"இப்போது எம்ஜியாரின் படக்கதை ஒன்று சொல்லப்போறேன்" என்று கிளியன் உரத்துச் சொன்னதும் வீடு போவதற்கென்று எழுந்து நின்ற சிலர் மீண்டும் 'தொப்பென்று' மண்ணில் இருந்துவிடுவர்.

"வீரப்பா பெரிய ஒரு வாளால விசுக்கிறார், விசுக்கிறார். எம். ஜி. ஆர் வலது காலை மடிச்சு, இடது முழங்காலில் இருந்துகொண்டு வீரப்பாவின்ர வாள தடுத்து, தடுத்து, தன்ர உடம்பை சுழட்டி நெழிச்சு, இரண்டு பேருமாக உக்கிரச் சண்டை போடுகினம், போடுகினம். கொஞ்ச நேரத்தில வீரப்பா களைச்சுப்போனார். அவற்ற கையில இருந்த வாள் திடீரெண்டு தவறி, கீழ விழுகுது. உடன அவர் அரண்மனையின்ர அறை ஒன்றுக்குள்ள ஓடிப்போய், ஒரு சூலத்தை எடுத்து வந்து அதை கையில இறுக்கிப் பிடிச்சு பல்லையும் கடிச்சுக்கொண்டு, தலை ஆட்டினபடி பெரிய ஒரு தூண் மறைவில நிக்கிறார்" என்று தனது கையையும் காலையும் அசைத்து, சைகைமொழியும் சேர்த்து, தன்னைச் சூழ இருப்போர் ஒரு திரையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரிடையாகப் படம் பார்க்கிறமாதிரியாக, சண்டைக்காட்சிகளை உயிர்த்துடிப்புடன், கிளியன் சொல்லிக் கொண்டிருந்தான்.....

'எம்ஜிஆர் வீரப்பா சண்டையின்' உச்சக்கட்டம் மிகுந்த ஆவலைத் தூண்டியதால், "அப்ப அண்ண, வீரப்பா அந்தச் சூலத்தால எம்ஜிஆரைக் குத்திப்போட்டானோ அண்ண?" என்று, அந்தக் கூட்டத்திலிருந்த பத்து வயதுப் பொடியன் ஒருவன் திகைத்த முகத்துடன் கிளியனைப் பார்த்துக் கேட்டான்.

கதை சொல்லிக் கொண்டிருந்த கிளியன், அந்தப் பொடியனைத் திடீரெனத் திரும்பிப் பார்த்தான். "வீரப்பா சூலத்தால, உன்ர சூனாவுக்க குத்தினவரடா. எடேய், சும்மா பேசாமல் இருந்து கதையைக் கேளன்ரா. குறுக்க வந்து குட்டிநாய்மாதிரி குழப்பிக் கொண்டிருக்கிறாய்'' என்று அன்புக்கோவத்துடன் அதிகாரமாகச் சொன்னதும், அங்கு கூடியிருந்த எல்லோரும் ''அஹ்ஹஹ்ஹா.....'' என்று ஒரே நேரத்தில் தமது குடல் குலுங்கச் சிரிக்கத் தொடங்கினர். அந்தத் தொடர் சிரிப்பு அடங்கியதும் மீண்டும் சிரித்த முகத்துடன், விட்ட இடத்திலிருந்து கிளியன் கதையை சொல்லத் தொடங்கினான்.

ஐப்பசி மாதம் தொடக்கம் பந்தடி, கிட்டிப்புள், சிட்டாட்டம், கூத்துப்பழக்கம் போன்ற பொழுது போக்குகளுடன், அந்த மாரி காலமும் நகர்ந்து சென்றது. தைப்பொங்கல் நெருங்கியது. பொங்கல் கொண்டாட்டமும் மகிழ்ச்சியாக நடந்தேறியது. மாமன்மார் வன்னி சென்று நெற்கதிர் அறுத்து, புதுநெல் கொண்டுவந்தனர். வீடுகளில் 'புதிர்' சாதம் சமைத்து படைத்து உண்டனர். புதிர் உண்டபின்பு புதிய அரிசியை ஊர் மக்கள் தமது உணவுக்குப் பயன்படுத்தும் வழக்கம் காலங்காலமாக நடைமுறையில் காணப்பட்டது. சில வீடுகளில் தமது நெருங்கிய உறவினரையும் அழைத்து 'புதிர்' தின்னுதலை, ஒரு கொண்டாட்டமாக நடத்துவர். ஊர்க் கோயில்களிலும் தை, மாசி மாதங்களில் புதிர்ப் பூசை நடைபெறும்.

மன்னாரில் கரைவலைத் தொழில் செய்த காலத்தில், மீன் ஏற்றிச் செல்லும் ஜீப் வாகனத்தில் ஓடிப்பழகிய நல்லையா, மோட்டார்க்கார் ஓட்டும் அனுமதிப் பத்திரம் பெற்றிருந்தான். 'ஊர் திரும்பியதும் ஒரு மோட்டார்க்கார் வாங்கி வாடகைக்கு ஓடவேணும்' என்ற ஆசையும் அவர்கள் மூவரின் அடி மனதில் நீண்டநாளாக அடங்கிக் கிடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செல்லையாச் சம்மாட்டி இரண்டு மூண்டு வாகனம் சொந்தமாய் வச்சிருக்கிறார். நாங்களும் ஒரு கார் வாங்கி ஏன் ஓடக்கூடாது? அதில சனங்களை ஏத்தி இறக்கி உழைக்கலாம்தானே" என்று அடிக்கடி மூவரும் உரையாடிக்கொள்வர். ஆனால் மோட்டார்க்கார் வாங்குவதற்கு அவர்களின் கையில் பணம் இல்லை.

அந்த ஊரில் 'மெக்கானிக் இரத்தினசிங்கம்' என்பவர் இயந்திரம் திருத்தும் நிறுவனம் ஒன்றை நடத்தி வந்தார். அவரிடம் கைவிடப்பட்ட பழைய கார்கள் சில நின்றன. கிளியன் நல்லையன் வேலன் மூவரும் அவரிடம் சென்றனர். தமது ஆசையைத் தெரிவித்தனர்.

''தம்பிமாரே 'ஸ்ராட்டிங் மோட்டர்' இல்லாத ஒரு போட் கார் நிக்குது. வேணுமெண்டால் அதை எடுங்கோ. ஆனால் தள்ளித்தான் அதை ஸ்ராட் பண்ணவேணும்"

''இரத்தினசிங்கண்ணை, என்னத்துக்கும் எங்களட்டை இப்ப காசு கையில இல்லையண்ணை''

"எடேய் பொடியள், கன காசு வராதடா தம்பிமாரே"

" அப்ப எவ்வளவண்ணை அதின்ர விலை?"

" என்ர அப்பன்மாரே, உங்களுக்கு நான் எப்புடியடா விலை சொல்லுறது?"

வேலன் கிளியன் நல்லையன் மூவரின் கையில் காசு இருக்கும் வேளைகளில், மெக்கானிக் இரத்தினசிங்கம் அண்ணரையும் கூட்டிச்சென்று கள் சாராயம் குடித்து 'பாட்டிபோட்டு' குடிவெறியில் பாட்டுப்பாடி மகிழ்வது வழக்கம். 'நாங்கள் எல்லாரும் சேர்ந்து கருவாடு சுட்டு கள்ளும் குடிக்கிற உந்தப் பொடியளுக்கு நான் என்ன விலையைச் சொல்லுறது?' என்று மெக்கானிக் இரத்தினசிங்கம் சிறிது நேரமாக யோசித்தார். பழைய ஒரு மொட்டார்க்கார் இயந்திரத்தினுள் கையை வைத்தபடி, குனிந்த நிலையில் ஏதோ அவர் செய்துகொண்டு நின்றார்.

''சரி, சரி ஒரு ஐம்பது ரூபாயைத் தந்துட்டு, நீங்கள் காரைத் தள்ளிக்கொண்டு போங்கோடா தம்பிமாரே'' என்று தன் முடிவைச் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் குளிர மூவரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

''கை விடுகிற பழைய கார் எண்டாலும் இரத்தினசிங்கம் அண்ணை எங்களுக்கு உந்த விலைக்குத் தந்துட்டாரடா'' என்று மனம் பூரித்தனர்.

''அது சரி, அந்த ஐம்பது ரூபாய்க்கு நாங்கள் எங்க போக மச்சான்?'' என்று மூவரும் மந்திர ஆலோசனை நடத்தினர்.

மூவரின் மாமன்மாரில் வேலனின் மாமன் அந்த ஊரில் வசதி படைத்தவர். அவரிடம் காணி நிலங்களுண்டு. பனங்கூடல் காணிகளும் வைத்திருந்தார். 'கள்' இறக்கும் தொழிலாளரை கூலிக்கு அமர்த்தி, கள் விற்றுப் பணம் சம்பாதித்தார். அவரது மகளின் கையில் இரண்டு தங்கக் காப்புகள் மின்னிக் கொண்டிருந்தன. பெரிய ஒரு சங்கிலியும் கழுத்தில் காணப்பட்டது. கிளியன் நல்லையன் இருவரது மனைவிமாரும் இறப்பர்க் காப்புகள்தான் அணிந்திருந்தனர். அத்துடன் ஒவ்வொரு தும்புச் சங்கிலி மட்டும் அவர்களின் கழுத்தை அலங்கரித்தன.

ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாக "மச்சான்மாரே, நான் ஒரு வழி சொல்லுறன் கேளுங்கோ" என்று வேலன் ஆரம்பித்தான்.

"சொல்லு மச்சான், சொல்லு''

"என்ர மனிசியின்ர கையில கிடக்கிற காப்பு ஒண்டை அவளிடம் வாங்கி அடைவு வைச்சு, காசு எடுத்து அதில கார் வாங்குவம். அந்தக் காரால் உழைச்சு, காப்பை மீட்பம். சரிதானே! எப்புடி என்ர மூளை?"

"ஓம் மச்சான். அப்புடியே செய்வம் மச்சான்" என்று மற்றைய இருவரும் தலையாட்டியபடி சம்மதித்தனர்.

காப்பை அடகு வைத்து ஐம்பது ரூபாவை மெக்கானிக் இரத்தினசிங்கத்திடம் கொடுத்து கார் வாங்கினர். காரை மூவருமாக கையால் தள்ளியபடி நல்லையாவின் வீட்டுக்குக் கொண்டு சென்றனர். பிள்ளையார் கோயிலுக்கு பூசை ஒன்றும் செய்தனர். தேங்காய் உடைத்து காரைச் சுற்றி மூவரும் கும்பிட்டனர். கார் இப்போது, வாடகைக்கு ஓடுவதற்கான தயார் நிலையில் நின்றது.

"உவங்கள் மன்னாரால வந்த பெடியள் கார் ஒன்று வாங்கிப் போட்டாங்களாம். ஹயறுக்கு ஓடி உழைக்கப் போறாங்களாம். காவாலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேய்ச்சாலும் எப்புடியோ அவங்கள் கெட்டிக்காறங்கள்தான்" என்று ஊர் மக்கள் வியப்பாகப் பேசிக்கொண்டனர்.

மறுநாள் காலையில் பன்னிரண்டு வயது மதிக்கத்தக்க ஒரு பொடியன், உடல் வியர்க்க வியர்க்க இளைத்துக் களைத்து ஓட்டமும் நடையுமாக நல்லையா வீடு நோக்கி ஓடிவந்தான். அப்போது மூவருமாக கார் கழுவித் துடைத்துக்கொண்டு நின்றனர்.

"எங்கட கடைசித் தங்கச்சிக்கு சுகமில்ல. உங்கட காரை அம்மா ஒருக்கால் கொண்டு வரட்டாம். ஆசுப்பத்திரிக்குப் போகவேணுமாம்" என்று மேல்மூச்சுக் கீழ்மூச்சு வாங்க, தான் வந்த செய்தியை பொடியன் சொல்லி முடித்தான். மகிழ்ச்சியில் மூவரின் உடலும் மீண்டும் குளிர்ந்தன. முதல்நாளே நல்ல உழைப்பு வரப்போகுது என்று குதூகலம் அடைந்தனர். "டேய் மச்சான் இதால உழைச்சு நாங்கள் ஒரு புதுக்கார் வாங்கி இந்த ஊர் மக்களுக்கு எங்கட கெட்டித்தனத்தை காட்டத்தான் வேணும் மச்சான்" என்று வேலன் பெருமை கூறினான்.

"நீ சரியாய்ச் சொன்னாய் மச்சான்" என்று கிளியன், வேலனின் முதுகில் தட்டிக்கொடுத்தான்.

நாற்பது வயது மதிக்கத்தக்க அந்தப் பெண் காரின் பின் இருக்கையில் ஏறிக்கொண்டார். தனது ஒரு வயதுப் பெண் குழந்தையை தன் மடியில் வைத்திருந்தார். கார்க்கதவு அடித்துச் சாத்தப்பட்டது. நல்லையன் சாரதியின் இருக்கையில் அமர்ந்து கார் ஓட்டும் வளையத்தை இருகையாலும் பற்றிப் பிடித்துக் கொண்டான்.

"மச்சான்மாரே நான் றெடி, தள்ளுங்கோடாப்பா" என்று உசார் கொடுத்தான்.

வேலனும் கிளியனும் காரின் வலமும் இடமுமாக பின்பக்கத்தில் நின்று காரை வேகமாகத் தள்ளத்தொடங்கினர்.

"வேகம் காணாது வீச்சாத் தள்ளுங்கோடா மச்சான்மாரே" என்று சொல்லி பக்கக் கதவுக் கண்ணாடியைப் பதித்து அதனூடு தலையை வெளியே நீட்டி, திரும்பிப் பின்னே பார்த்து, சாரதி நல்லையன் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தான். மற்றைய இருவரும் ஓடி ஓடி தம்மால் இயன்றளவு வேகமாகத் தள்ளினர். ஏறத்தாழ இருபத்தைந்து மைல் வேகத்தில் அவர்களின் கார் ஓடிக்கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது "போடு மச்சான் போடு" என்று கார் தள்ளும் இருவரும் கத்தியபடி கூறினர். சாரதி நல்லையன் 'அக்சிலேட்டரை' வலது பாதத்தால் விட்டு விட்டு, சிலதடவை அமத்தினான். கார் இருமுறை சடக், சடக், என்று விக்கல் எடுத்தபடி 'படக்' கென்று நின்றது. கார் ஸ்ராட் அடிக்கவில்லை. தள்ளிய இருவரும் சிறிது நேரம் தெருவோரம் குந்தி இருந்து களைப்பு ஆறினர்.

மீண்டும் தள்ளினர்

எஞ்ஜின் ஸ்ராட் அடிக்கவில்லை.

மீண்டும் களைப்பு ஆறினர்.

மீண்டும் தள்ளினர்

எஞ்ஜின் ஸ்ராட் அடிக்கவில்லை.

இவர்கள் வாழ்கின்ற உடுத்துறை என்னும் ஊரிலிருந்து மருதங்கேணித் தரவையில் அமைந்துள்ள கிராமிய மருத்துவ மனைக்குச் செல்லவேண்டிய தூரம் ஏறத்தாழ நான்கு மைல்கள். இதுவரையில் அந்தக் காரைத் தள்ளித் தள்ளியே ஒரு மைலுக்குமேல் அவர்கள் கடந்துவிட்டனர்.

"மச்சான், ராத்திரிப்பெய்த மழைக் குளிருக்கு எஞ்சின் இளகிப் போச்சுதுபோல. எஞ்சினைச் சூடாக்க வேணும்" என்று நல்லையன் சொன்னான். வேலன் முன்னுக்கு ஓடிப்போய் காரின் முன்மூடியைத் திறந்து உயர்த்தி, தடைக்கம்பி ஒன்றை வைத்தான். காரின் பின் றங்கைத் திறந்து, பழைய சீலைத்துணியையும் மண்ணெண்ணைத் தகரத்தையும் கிளியன் விரைவாக எடுத்து வந்தான். பக்கத்து வேலியில் ஒரு தடியை முறித்து அதன் நுனியில் தீப்பந்தம்போல் சீலைத்துணியை வேலன் சுற்றினான். மண்ணெண்ணையில் பந்தத்தை நனைத்தான். தீப்பெட்டியை உரசி பந்தத்தைப் பற்ற வைத்தான். அவசர அவசரமாக ஆளுக்கொரு பீடியை வாயில் கவ்வி பற்றவைத்தனர். இரண்டுதரம் புகையை நெஞ்சுக்குள் இழுத்து தங்களையும் உசார்ப்படுத்திக் கொண்டனர். கார் இயந்திரத்தினுள் தொடுக்கப்பட்டுள்ள மின்சாரக் கம்பிகள் எரியாதபடி பாதுகாப்பாக அந்தத் தீப்பந்தத்தால் வேலன் இயந்திரத்தினுள் சூடு காட்டினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மச்சான் போதுமோடா?"

"ஓம்மச்சான், சூடேறியிருக்கும் எண்டு நம்புறன்"

"சரி, பந்தத்தை நூர் மச்சான்"

தெருவின் அருகிலுள்ள மண்ணுக்குள் பந்தத்தைப் புதைத்து தீயை அணைத்தனர். பந்தத்தையும் மண்ணெண்ணைத் தகரத்தையும் கார் றங்கினுள் வைத்து மூடினர்.

"சரி, இப்ப றெடியோ மச்சான்?"

"ஓம் மச்சான் தள்ளுங்கோ"

"ஓய்... ஓய்... ஓய்... ஓய்..." என்று வேகத்துடன், ஓடி ஓடித் தள்ளினர்.

"ஓய்... ஓய்... ஓய்... ஓய்..." இப்போது, முப்பது மைல் வேகத்தில் கார் ஓடிக்கொண்டிருந்தது.

"மச்சான் போடப்போறேன்." சாரதி நல்லையன் சத்தம்போட்டுச் சொன்னான்.

"ஓமடா மச்சான் போடடா களைக்குதடா மச்சான் போடடா"

நல்லையன் 'அக்சிலட்டரை' தனது வலது பாதத்தால், விட்டு விட்டு சில தடவைகள் வேகமாய் அமத்தினான்.

சடபுட சடபுட... டக் டக் டக்...

சடபுட சடபுட... டக் டக் டக்...

ஜிர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்...

"கார் ஸ்ராட்டாய்ப்போச்சடா... ஏறுங்கோடா மச்சான்மாரே... கெதியாய் ஏறுங்கோடா... சிலவேளை நிண்டுபோடுமடா..." என்று சாரதி நல்லையன் கத்தினான். கார் ஸ்ராட் அடித்ததில் எல்லோருக்கும் மிக்க மகிழ்ச்சி. வேலன் சாரதிக்குப் பக்கத்திலும் கிளியன் பின் இருக்கையிலும் கார் ஓட ஓட. அவர்களும் ஓடி ஓடி தாவித்தாவி ஏறி இருந்து கொண்டனர். இது அவர்களின் கன்னிப் பயணம். முதலாவது உழைப்பு. ஏதோ! விமானத்தில் பறந்து கொண்டிருப்பதாக, மூவரும் கற்பனையில் மிதந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எப்புடி மச்சான் எங்கட கார்?"

"நல்லாய் இருக்குதடா மச்சான்"

"வேகம் போதுமோடா மச்சான்?"

"இன்னும் கொஞ்சம் அமத்தடா மச்சான்"

நல்லையன் அக்சிலட்டரை கொஞ்சம் கூடுதலாய் அமத்தினான்.

"இப்ப போதுமோடா மச்சான்?"

"ஓமடா மச்சான், போதும் மச்சான். நல்ல வீச்சா ஓடுது மச்சான்''

ஏறத்தாழ நாற்பது மைல் வேகத்தில் கார் ஓடிக்கொண்டிருந்தது. வேகத்தைக் காட்டுகின்ற 'மீற்றர்' இருக்கும் இடங்கள் எல்லாம் ஓட்டைகள் காணப்பட்டன.

அப்போது திடீரென தெருவின் குறுக்காக ஒரு நாம்பன் மாடு ஓடி வந்தது.

"மச்சான், மாடு ஒண்டு வருகுதடா..... கவனமடா..... ''

நல்லையன் பிறேக்கைப் போட்டான். அப்போதுதான் தெரிந்தது, காருக்கு போதிய பிறேக் இல்லை என்பது

''மச்சான் பிறேக் இல்லையடா''

"மச்சான் பெஸ்ற், செக்கண், தேட் என்று கியரை பட பட என்று கெதியாய் மாற்றி மாற்றிப் போடு மச்சான். அப்ப காரின் வேகம் குறையும் மச்சான். மெக்கானிக்கண்ணர் சொன்னவர் அப்புடித்தானாம் பிறேக் அடிக்கவேணும் எண்டு". சாரதியின் துடையில் தன் வலக்கையால் அடித்து வேலன் விளக்கம் கொடுக்கவும் அந்த உத்தியை உடனடியாகச் செயற்படுத்தி, மாட்டையும் காரையும் காப்பாற்றிய மகிழ்ச்சியில், சாரதி நல்லையன் தன் தலையைச் சரித்து மற்றைய இருவரையும் பார்த்து பல்லை இளித்து, வழக்கமான தனது அனுங்கல் சிரிப்பு ஒன்றை அவிழ்த்து விட்டான்.

'பிறேக்' பிடிக்கும் உத்தியை தெரிந்துகொண்ட பெருமிதத்தில், சாரதி நல்லையன் இப்போது துணிவுடன் காரை ஓட்டிக் கொண்டிருந்தான். தூரத்தில் தெரியும் ஆடு மாடுகள் விலத்திச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வதற்காக தனது வலது கையை வெளியில் நீட்டி பலூரன் போன்ற 'இறப்பர்' ஹோணை அழுத்தி, 'பாம்' 'பாம்' என்று அடிக்கடி ஒலி எழுப்பச் செய்தான்.

கார் உறுமியபடி ஒரு விக்கல் விக்கிக்கொண்டு மருத்துவ மனைக்கு முன்னாலுள்ள வேப்பமர நிழலில் போய் நின்றது. குழந்தையுடன் தாயையும் காரிலிருந்து பாதுகாப்பாக இறக்கி விட்டனர். நான்கு மைல் தூரத்துக்கான அக்காலத்தைய கார் வாடகை இரண்டு ரூபாதான்.

இளந்தாரியள் மூவரும் இந்தமாதிரி வியர்த்தொழுக களைத்து இடர்பட்டதை கண்ணுற்ற அந்தப் பெண்:

"மோன இந்தாங்கோ, உங்களுக்கு இது முதல் கார் கூலி. இந்த ஐஞ்சு ரூபா முழுவதையும் நீங்களே வச்சுக்கொள்ளுங்கோ" என்று கை விசேஷம்போல் இளஞ்சிவப்பு நிறத்தில் ஐந்து ரூபா தாள் ஒன்றை நீட்டினார்.

கிழக்கே பார்த்துக் கும்பிட்டு அந்த ஐந்து ரூபா தாள் பணத்தை இரண்டு கைகளையும் நீட்டி வேலன் வாங்கினான். கார் தள்ளிய இருவரின் உடலும் தண்ணீரில் குளித்த மாதிரி ஈரமாய் இருந்தது. சாரமும் மேற்சட்டையும் வியர்வையில் நனைந்திருந்தன.

அதில் இரண்டு ரூபாவுக்கு ரொட்டி தேநீர் சாப்பிட்டு பீடி புகைத்தனர். மிகுதிப் பணத்தை சேமிப்பாக வைத்திருந்தனர். மருத்துவ மனைக்கு முன்னால் நிற்கின்ற வேப்பமர நிழலின்கீழ் யாராவது வாடகைக்கு கார் அமர்த்த வருவார்களா? என்று மூவரும் காத்திருந்தனர். மாலை ஐந்து மணியளவில் இன்னொரு இரண்டு ரூபாவுக்கு வாடகை பேசி, காரை தள்ளியும் கொளுத்தியும் ஒருவாறு தமது வீடு போய்ச் சேர்ந்தனர்.

இப்படியாக முதலாவது கிழமையில் நாலைந்து சிறு சிறு வாடகை உழைப்புகள் கிடைத்தன. அவ்வருமானத்தில் காருக்கான எரிபொருள் தேநீர்ச் செலவுகளைச் சமாளித்தனர். உடல் அலுப்பைச் சரிசெய்வதற்காக சிலவேளைகளில் அரைப்போத்தல் சாராயம் வாங்கி, அதை மூன்று கண்ணாடிக் குவளைகளில் சரி சமனாகப் பங்கிட்டு ஊற்றி மூவரும் குடிப்பதுமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் கிழமையில் ஒருநாள் மருதங்கேணிச் சந்தை சென்று மீளும்போது இடை வழியில் கார் நின்றுவிட்டது. உடனே சீலைப்பந்தம் கொளுத்தி காரின் இயந்திரத்தைச் சூடாக்கினர். அப்போது இயந்திரத்தைச் சூழ இருந்த இறப்பர் மின்கம்பிகள் எல்லாம் நெருப்பில் 'கிசு கிசு' என்று எரியத் தொடங்கின. கிளியன் பக்கத்துத் தோட்டத்துக்குள் ஓடிச் சென்றான். பயிருக்கு நீர் இறைக்கும் பனை ஓலைப் பட்டையை எடுத்து வந்தான். குளத்திலிருந்து நீரை அள்ளி அள்ளி எடுத்து, ஓடி ஓடி வந்து பல தடவைகள் இயந்திரத்தில் ஊற்றினான். இயந்திரத்தைப் பற்றிப்பிடித்த நெருப்பு மிகுந்த சிரமத்தின்பின் அணைந்துகொண்டது.

"எல்லாம் போச்சு காரும் போச்சு காசும் போச்சு காப்பும் போச்சு "என்று வாயால் முணுமுணுத்தபடி மூவரும் தெரு ஓரமாகக் குந்தி இருந்தனர். சில நிமிடங்களில் தமது மனங்களை ஒருவாறு தேற்றிக்கொண்டனர். எரிந்த அந்தக் காரைத் தள்ளிக்கொண்டே மெக்கானிக் இரத்தினசிங்கம் அண்ணாரின் கராஜ் போய்ச் சேர்ந்தனர்.

"அண்ண, இதைப்பாருங்கோ அண்ண ஏதாவது சரிப்படுத்தி ஓடலாமோ எண்டு ஒருக்கால் பாரண்ண?''

இரத்தினசிங்கம் இயந்திரப் பகுதிக்குள் தலையைக் குனிந்து கண்ணால் துளாவிப்பார்த்தார். கையை வைத்து எரிந்து கருகியிருந்த கம்பிகள் சிலவற்றை பிய்த்துப் பிடுங்கி இழுத்தெடுத்து வெளியில் எறிந்தார். பெருமூச்சு ஒன்றை விட்டுக்கொண்டே நிமிர்ந்தார்.

"என்ர தம்பிமாரே இது எனிச் சரிவராது என்ர அப்பன்மாரே இதை எனி பழைய இரும்புக்குத்தான் குடுக்கவேணும். அல்லது உயர் கடல்ல கொண்டுபோய் கறுப்புக்குத்தான் தள்ளவேணும்"

"அப்ப சரியண்ண, நாங்கள் போட்டு வாறம்"

"ஓம் தம்பிமாரே. இதுக்குமேல உதவிசெய்ய என்னட்ட ஒரு வழியுமில்லை, என்ர செல்வங்களே''

"அண்ண, உது போனால் போகட்டுக்கு. உந்தக் கவலையை எனி விடுவம். நாளைக்கு மத்தியானம் வாங்கோ, எல்லாருமாய் கள்ளுக்குடிப்பம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் தம்பியவை. கவலையை மறவுங்கோ. இப்ப நீங்கள் போங்கோ. நான் கட்டாயம் நாளைக்கு வாறன் என்ர அப்பன்மாரே".

மூவரும் நிலத்தைப் பார்த்து யோசித்தவாறு தமது வீடுநோக்கி நடந்து சென்றனர். எதிர்வரும் கோடைகாலக் கரைவலையில் உழைத்து வேலன் மனைவியின் தங்கக் காப்பை அடமானத்தால் மீட்டு எடுத்துக் கொடுப்பதென மூவரும் தீர்மானித்துக் கொண்டனர்.

இத்தகைய பயனற்ற முயற்சிகள், அவற்றால் ஏற்படுகின்ற இழப்புக்கள் போன்ற செயற்பாடுகளினால் இவர்கள் மூவர்மீதும் உறவினர்கள் மேலும் வெறுப்பைக் காட்டத் தொடங்கினர். மனைவிமார் மாமன்மார் மாமிமார் தமது கோபத்தை வெளியில் காட்டமுடியாமல் மனதில் அடக்கி வைத்துக் கொண்டனர். ஆனால் 'பாண்டியன்' கிழவர் மிகவும் ஆத்திரத்துடன் காணப்பட்டார்.

அடுத்த வருடமும் அரிவி வெட்டுக்கு வன்னி செல்லும் காலம் நெருங்கிக் கொண்டு வந்தது. அப்போது ஒரு நாள் காலை நேரம் எட்டு மணி இருக்கும்.

காலை உணவை முடித்தபின் நல்லையா, மனைவி, மச்சாள்மார் எல்லோருமாக முற்றத்தில் கதைத்துப் பேசி சிரித்துக் கொண்டிருந்தனர். வாடைக்காற்று 'கிசு கிசு' என்று வீசிக்கொண்டிருந்தது. அவர்களின் வீடு கடற்கரை ஓரத்தில் அமைந்துள்ளதால் குளிர்த்தன்மை அதிகமாக காணப்பட்டது. அப்போது வடக்கேயுள்ள வளவுப்படலையின் ஆடுகால் 'கீறீச்' என்று சத்தமிட்டது.

"உங்க பாருங்கோ எங்கட அப்பு வாறா" என்று நல்லையாவின் மனைவி முதியவர் பாண்டியனை வரவேற்றாள்.

குளிர்காலத்தில் வயதுபோன முதியோர்கள் தமது சாரத்தை உயர்த்தி கழுத்தளவில் மூடிப் போர்த்துக்கொண்டு நடந்து செல்வதைக் காணலாம். பாண்டியன் கிழவரும் அப்படியாக, அன்று போர்த்துக்கொண்டு வந்தார்.

"அப்பு வாங்கோ. இப்புடி இருங்கோ. நான் புட்டுக் கொண்டு வாறன். தின்னுங்கோ" என்று சொல்லிக்கொண்டு பேத்தியார் எழும்பினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இல்லை மோன வேண்டாம். நான் இப்பதான் பாற்கஞ்சி குடிச்சிட்டு வாறன்''

''அப்ப, கொஞ்சம் தேத்தண்ணீயாவது குடியுங்கோ அப்பு''

''அதுவும் வேண்டாம் மோன. உவன் பேரன், உன்ர புருசன் நல்லையாவில ஒரு அலுவல். அதுதான் வந்தனான் மோன''.

நல்லையா ''ஹி..ஹி...ஹி..'' என்று மாப்பிள்ளைத் திமிருடன், சிரித்துக் கொண்டிருந்தான். பாண்டியன் நல்லையாவை நெருங்கி ''பேரன் எப்புடி மோன சுகம்?'' என்று கேட்டுக்கொண்டே அவன் வாய் திறந்து பதில் கூறுவதற்கிடையில் ஒரு நொடியில், திடீரென தனது போர்வைக்குள் மறைத்து வைத்திருந்த 'திருக்கைவாலை' எடுத்து நல்லையாவின் முதுகில் அடிபோடத் தொடங்கினார். இதைச் சிறிதும் எதிர்பார்த்திராத நல்லையா திடுக்கிட்டான். நிலத்திலிருந்து அவனால் எழும்பவே முடியவில்லை.

''ஐயோ! அப்பு, என்ர அப்பு, அடியாதையண'' என்று கத்தத் தொடங்கினான்.

பாண்டியன் மூசிமூசி, தனது முழுப்பலத்தையும் சேர்த்து அவனை அடித்துக் கொண்டிருந்தார். வேதனை தாங்கமுடியாமல் வளவின் மணல் முற்றத்தில் நல்லையா உருண்டு கொண்டிருந்தான். அவன் உருள உருள அடியும் விழுந்துகொண்டே இருந்தது. நல்லையாவின் மனைவி உட்பட ஏனையோர் திகைத்தபடி ஏங்கி நின்றனர்.

''எடேய், இனிமேலும் என்ர பேத்தியை விட்டிட்டு ஓடவியோடா?''

''ஐயோ இல்லை அப்பு''

பளார்.. பளார்... பளார்... அடி தொடர்ந்தது.

''எடேய் இனியும் காவாலி மேய்ப்பியோடா?''

பளார்.. பளார்.. பளார்..

''ஐயோ, இல்லை அப்பு, இல்லை. அப்பு நான் சாகப்போறன், என்னைக் கொல்லாதை அப்பு''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அரிவி வெட்டுக்குப்போய், ஒழிச்சு ஒடுவியோடா?''

''இல்லை அப்பு, இல்லை''

''ஊருக்குள்ள இருந்து, ஒழுங்கான முறையில இனிமேல் உழைப்பாய்தானே?''

''ஓமப்பு ஓமப்பு...''

''டேய்! உன்ர உழைப்பில உன்ர பெண்டிலை, வாழவைப்பாய்தானே?''

பளார்... பளார்... பளார்... அடி தொடர்ந்தது.

"ஐயோ..... ஓமப்பு..... நான் அவளை நல்லாய் வாழவைப்பன் அப்பு..... இனி அடியாதை அப்பு".

கணவன் படும் வேதனையைக் கண்டு கண் கலங்கிய பேத்தி ஓடிவந்தாள். "அப்பு, அவரை அடியாதையுங்கோ அப்பு. இனி விடுங்கோ அப்பு'' என்று குனிந்தபடி நின்றாள். கணவன் நல்லையனின் முதுகால் இரத்தம் கசிந்தது.

"எடியேய்! நீங்கள் குடுக்கிற இணக்கத்தாலதானடி இவங்கள் இப்புடி ஒழிச்சோறு திண்டுகொண்டு, உழைப்பில்லாமல் ஊர் சுத்தித் திரியிறாங்கள். இவன்ர முதுகுத்தோலை இப்ப உரிக்கிறன் பார்" என்று சத்தம் போட்டுக்கொண்டு மேலும் வெருட்டினார்.

நல்லையாவின் மாமியாரான பாண்டியனின் மகள் ஓடிவந்து "அப்பு இனி அடியாதையண. எங்கட மருமோன் இனித் திருந்திவிடுவாரணை'' என்று தந்தையின் கையைப் பிடித்தபடி நின்றாள்.

தான் பெற்ற மகள், தன் உடலைத் தொட்டதும் பாண்டியன் கிழவரின் மனம் தண்ணீராய் இழகியது.

நல்லையனைப் பார்த்தார். "இண்டையில இருந்து நீ ஒழுங்காய் இருக்கவேணும். இல்லாட்டில் உன்னை ஆடாக்கட்டித் தோலாய் உரிப்பன்'' என்று எச்சரித்த பாண்டியன் தன் குரலை ஒருமுறை செருமிக்கொண்டு வலது கையில் திருக்கை வாலை இறுக்கிப் பிடித்தபடி தெற்குப்பக்கப் படலையால் வெளியேறி, கிழக்கு நோக்கி வேகமாக நடந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே மாதிரி போர்வைக்குள் 'திருக்கைவால்' வைத்தபடி, தனது மூத்த பேத்தியை மணந்திருந்த வேலன் வளவுக்குள் புகுந்தார். 'திருக்கைவால் அடிவிழுந்து நல்லையாவின் முதுகால் இரத்தம் வழிகிறதாம்' என்பதைக் கேள்வியுற்ற வேலன் குதிக்கால் தனது பின்பக்கம் படும்படியாக, காட்டுப்பக்கம் நோக்கி வேகமாக ஓடினான். யாரும் தன்னைக் காணாதவாறு ஒரு அடர்ந்த பற்றைக்குள் ஒழித்திருந்தான்.

வேலன் அவனது வீட்டில் இல்லை. பாண்டியன் கிழவர் ஏமாற்றமடைந்தார்.

"அப்பு, அவர் எங்கயோ ரவுண் பக்கம் போய்விட்டாரண" என்று பேத்தியார் பெரிய ஒரு பொய்யைச் சொன்னாள்.

"காட்டுக்குள்ள போய் ஒழிச்சிருங்கோ. நான் அப்புவைச் சமாளிச்சு அனுப்பின பிறகு நீங்கள் வாங்கோ'' என்று சொல்லி, அவள்தான் தன் கணவனை மறைத்து வைத்திருக்கிறாள் என்பது அவருக்குத் தெரிந்திருக்காது.

''இனியாவது உழைச்சு ஒழுங்காய் இருக்கட்டாமெண்டு அவனுக்கும் சொல்லு. இல்லாட்டில் அவன்ர முதுகுத்தோலும் கண்டிப்பாய் உரிப்பன்" என்று சொல்லிக்கொண்டே ஆறாத கோபத்துடன் தன் வீடு நோக்கி, பாண்டியன் வேகமாக நடந்தார். கையில் பற்றியிருந்த திருக்கை வால், வெயில் வெளிச்சத்தில் மினுங்கிக் கொண்டிருந்தது.

திருக்கை மீனின் பின்பக்கமாக நீளமான வால் உண்டு. வாலின் அடிப்பகுதியை இரண்டரை முழ நீளத்தில் வெட்டி எடுப்பர். அதை வெயிலில் நன்கு காயவிடுவர். அதன் ஒரு பக்கத்தில் 'வாள் கைப்பிடிபோல' சிலைத்துணியால் நன்கு சுற்றிக்கட்டுவர். அந்தப்பகுதியில் பற்றிப்பிடித்தபடி குற்றம் செய்வோர்க்கு 'கசையடி' கொடுப்பர். அடி பெறுபவரின் உடலெங்கும் 'வரிவரியாக' தழும்புகள் விழுந்து தோல் வெடிக்கும். இந்தத் 'திருக்கைவால்அடி' என்பது அக்காலத்தைய ஒருவகை கடுந்தண்டனையாகும்.

நல்லையாவின் உடலெங்கும் வரிக்குதிரைபோல் தழும்புகள் காணப்பட்டன. வெடித்த சில காயங்களிலிருந்து இரத்தம் கசிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தது. திருக்கை வாலால் அடி வாங்கிய ஒருவரால்தான் அதனுடைய நோவின் தன்மை பற்றி சிறப்பாக விபரிக்க முடியும். ஏனையோருக்கு அதன் 'அருமை பெருமை' தெரிய வராது.

அடிவாங்காத வேலனும் கிளியனும் பாண்டியரின் கண்ணில் படாமல் சில நாட்களாக ஒழித்துத் திரிந்தனர். என்றோ ஒருநாள் அவரிடம் அடிவாங்க வேண்டி வரும் என்பதை உணர்ந்து பயந்து முழிசிக்கொண்டு இருவரும் மறைந்து திரிந்தனர். இதற்கு ஒரே ஒரு வழி, தங்கள் மனிசிமாரின் காலில் விழுவதுதான் என்று முடிவெடுத்தனர்.

"இஞ்சாருங்கோ, வாங்களேன் புட்டுத்தின்ன" என்று காலை உணவுக்காக மனைவி பவளம், கணவன் வேலனை அழைத்தாள்.

"அது சரியடியப்பா, இனிமேலும் நான் ஒழிக்கேலாது. நீதான் உன்ர ஐயா அம்மாவுக்குச் சொல்லி, உங்கட அப்புவின்ர கோவத்தை ஒருமாதிரி ஆத்தவேணும்."

"அவையள் சரிப்படுத்த நீங்கள் பேந்தும் எங்கள விட்டிட்டு எங்கயும் ஓடுவியள். பிறகு எங்கட அம்மா ஐயாதானே திருக்கைவால் அடி வாங்கவேணும்" என்று சிறிது எச்சரித்தாள் பவளம்.

'திருக்கைவால்' என்ற சொல்லைக் கேட்டதும் வேலனுக்கு ஒருதரம் இதயம் 'படக்' என்றது. பயத்தில் சலம் வாற மாதிரியும் இருந்தது. நள்ளிரவு நேரத்தில் பதுங்கிப் பதுங்கிச் சென்று அடிவாங்கிப் படுத்திருக்கும் நண்பனை, வேலனும் கிளியனும் பார்த்து அவனுக்கு ஆறுதல் சொல்லி வந்தனர். நல்லையாவின் முதுகில் எள் எண்ணெய் சீலை போடப்பட்டு இருந்தது. முகம் கவிழ்ந்தபடி அவன் பாயில் படுத்திருந்தான். அவன் சிந்தும் கண்ணீர் படுத்திருந்த தலையணையை நனைத்திருந்தது. இத்தகைய தாங்கொணாத துன்பக் காட்சிகள் வேலனின் கண்ணில் 'திரைப்படம்போல்' ஓடிச்சென்றன.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை, ஊர்ப் பெரியவர் சிலருடன் மாமன்மார் மாமிமாரையும் அழைத்துக்கொண்டு வேலனும் கிளியனும் பாண்டியர் வீடு சென்றனர். காவல் நிலையத்தில் சரணடைவது போல் அவர்முன் குனிந்து வளைந்து கை கட்டி நின்றபடி மன்னிப்புக் கேட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பு, எங்களை மன்னிச்சுக் கொள்ளுங்கோ அப்பு. இனி நாங்கள் குழப்படி விடமாட்டம்"

" ஒழுங்காய் உழைச்சு, கவனமாய் மனிசிமாரை வைச்சுப் பாப்பியளோ..?"

"ஓமப்பு, நாங்கள் உழைச்சு அவயளை நல்லாய் வைச்சுப் பாப்பம்"

"அப்ப, நீங்கள் எங்க இருக்கப் போறியள்?"

"அப்பு, நாங்கள் இனி தனி வளவு அடைக்கப்போறம். இனிமேல் எங்கட ஊர் ஆம்பிளையள்மாதிரி, நாங்களும் தனிக்குடித்தனம் நடத்தப்போறம்".

பாண்டியன் பல்லில்லாத வாயால் ஒரு சிரிப்பை உதிர்த்தார். 'திருக்கைவால் அடி நல்லாய்த்தான் வேலை செய்திருக்கு' என்று மனதுக்குள் மகிழ்ந்தார்.

"எட பொடியள். எனக்கு ஆசையோடா உங்களுக்கு அடிக்க? எட நீங்கள் நல்லாய் இருந்தால் எங்களுக்கும் எவ்வளவு சந்தோசமடா. எட நீங்கள் கலியாணம் முடிச்சாலும் அவகள் இப்பவும் குமர்ப்பெட்டையள் போலத்தானேயடா இருக்கிறாகள். அவகள் உலகம் தெரியாத பெட்டையள். அவகள விட்டிட்டு நீங்கள் உப்புடி வெளி இடங்கள்ள போய் ஒழிச்சால், நாளைக்கு உங்களப் பாத்து ஊரில உள்ள மற்றப் பொடியளுமெல்லோ பழகப்போறாங்கள். மோன, உங்களால ஊர் கெடலாமோ?" என்று விளக்கமாக நல்ல ஒரு 'புத்திமதியை' பாண்டியர் கொடுத்து முடித்தார்.

கிளியனும் வேலனும் தலை குனிந்து, நிலத்தைப் பார்த்தபடி வெட்கத்துடன் நின்றனர்.

"நாங்களப்பு இப்ப திருந்திவிட்டம். நாங்கள் இனி எப்புடிக் குடித்தனம் நடத்துறம் என்றதை, நீங்கள் இருந்து பாருங்கோவன்"

"அதுதானே பிள்ளையள் எங்கள் எல்லாருக்கும் தேவை".

"மருமோள், தேத்தண்ணியை கொண்டு வா பிள்ளை" என்று பாண்டியர் தனது மருமகளை அழைத்தார். மனைவியை இழந்த பாண்டியர், மணம் முடித்த தன் மகனுடன் வாழ்ந்து வந்தார். அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருமகளும் தன் தகப்பன்போல் அவரைக் கவனித்து வந்தாள். வந்திருந்த எல்லோரும் தேநீர் குடித்து வெற்றிலை போட்டுக்கொண்டு, பாண்டியர் வீட்டிலிருந்து மன நிறைவோடு வெளியேறினர்.

அன்றுதொட்டு வேலன், கிளியன், நல்லையன் மூவரும் வியக்கத்தகுந்த வளர்ச்சி நோக்கி வாழ்க்கையில் நடைபோட்டனர். குழந்தைகளைப் பெற்றனர். சமூகத்தில் முன்மாதிரியாக வாழ்ந்தனர். பிறந்த ஊருக்கும் பெருமை தேடிக் கொடுத்தனர்.

15

க.பொ.த. சாதாரணதரம் எனப்படும் பத்தாம் வகுப்புக்கான அரசாங்கத் தேர்வு நெருங்கிக் கொண்டிருந்தது. 'மார்கழி மாதம் பதினான்காம் திகதி தேர்வு தொடங்கும்' என்ற அறிவித்தல் கரும்பலகையில் எழுதப்பட்டிருந்தது.

தேர்வில் தோற்றும் மாணவர்கள் இரவு பகலாக கண்விழித்துப் படித்தனர். தேர்வில் வெற்றிபெற்றபின் பட்டணம் சென்று உயர்கல்வி கற்கவேண்டும் என்ற உயரிய நோக்கில் பலர் ஊன்றிப் படித்துக் கொண்டிருந்தனர். பத்மாவதி தன் பங்குக்குரிய தோட்ட வேலைகளை தற்காலிகமாக தன் உடன் பிறப்புகளிடம் பொறுப்புக் கொடுத்துவிட்டு கடும் தவமிருந்து முயற்சியுடன் ஊன்றிப் படித்தாள். சிவசம்பு தனது நாளாந்த வேலைகளை ஒதுக்கி வைக்க முடியவில்லை. அவனின் வீட்டின் சீவிய ஒழுங்குகள் வறுமை நிலையில் காணப்பட்டன. எனவே காலை மாலை நேரங்களில் அவன் கடற்றொழில் செய்தான். மிகுதி நேரத்தை படிப்புக்காக ஒதுக்கினான். நீண்ட நேரமாக இரவில் கண்விழித்துப் படித்தான். நித்திரை கண்ணை மூடும்போது தூங்கி வழிந்தான். அப்போது இந்த நித்திரையை எப்படிப் போக்குவது? என்று யோசித்தபடி அதற்கான முயற்சியில் இறங்கினான்.

தென்னம்பிள்ளைக்கு தண்ணீர் இறைக்கும் பெரிய ஒரு வாளியை எடுத்தான். வாளியின் அரைவாசிக்கு குளிர்ந்த கிணற்று நீரை நிரப்பினான். தான் படிக்கும் மேசைக்குக் கீழே அதனை வைத்தான். அந்த நீருக்குள் தனது இரண்டு பாதங்களையும் பதித்தான். அப்போது அவனது உடல் 'ஜில்' என்று குளிர்ந்தது. நித்திரையும் அகன்றது. தொடர்ந்து படித்தான். மணிக்கூடு வாங்குவதற்கு வசதி இல்லை. எனவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கு வெளியே வந்து நட்சத்திரங்களைப் பார்த்து, நேரக் கணிப்பை அறிந்துகொள்வான்.

'ஆறாம்மின் நட்சத்திரம் பட்டுப்போச்சுது. இனி விடியப்புறமாகப் போகுது. இனிப் படுப்பம்' என்று புத்தகத்துடன் உறங்கச் செல்வான். அதிகாலையில் விழித்தெழும் தாயார், அவனது நெஞ்சில் விரித்தபடி இருக்கும் புத்தகத்தை எடுத்து அதை மேசைமீது வைத்து, அவனது உடலையும் போர்த்திவிடுவாள்.

தேர்வில் எட்டுப்பாடங்களும் எழுதி முடிந்தன. மாணவர்கள் பலவித முறைகளில் தமது கோயில்களுக்கு நேர்த்தி வைத்திருந்தனர். சிவலிங்கன் என்னும் மாணவன் ஐம்பது செடில்முள் முதுகில் குத்தி, வாயில் அலகும் குத்தி 'திரியாய்' அம்மனுக்கு காவடி எடுப்பேன் என்று நேர்ந்திருந்தான். சில பெண் மாணவிகள் அதே அம்மனுக்கு 'கற்பூரச் சட்டி எடுப்போம்' என நேர்த்தி வைத்திருந்தனர்.

ஏறத்தாழ ஐந்து மாதங்களின் பின்னர் தேர்வுப் பெறுபேறு வந்தது. சிவசம்புவும் சிவலிங்கனும் எட்டுப் பாடங்களிலும் வெற்றி பெற்றனர். உச்ச மகிழ்ச்சியுடன் அவர்கள் இருவரும் மேற்படிப்புக்குத் தயாராகினர். ஏனைய மாணவர்கள் எல்லோரும் பரீட்சையில் தோல்வி அடைந்தனர்.

பத்மாவதி இரண்டு பாடங்களில் மட்டுமே வெற்றி பெற்றாள். முழு முயற்சியுடன் அடுத்த ஆண்டும் தேர்வு எழுதினாள். ஆனால் அப்போதும் தேர்வில் கிடைத்தது தோல்விதான்.

"மகளே! உனக்குத்தானே நிலம் புலம் காணி பூமி இருக்கே. நீ ஒன்றுக்கும் யோசியாத பிள்ளை. நல்ல ஒரு உடல் உழைப்பாளி உனக்கு மாப்பிளையாய் வந்தால் போதும். உனக்கு அசையாத சோறு கிடைக்கும்" என்று அவளின் தாய் தந்தையர் தேவையான நேரங்களில் பத்மாவதிக்கு ஆறுதல் வார்த்தைகளைக் கூறினர்.

"எந்த ஊரில் எந்த நாட்டில் எங்கு காண்போமோ எந்த விழியில் எந்த உறவைக் கொண்டுசெல்வோமோ ? என்ற, நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 'இரத்தத் திலகம்' திரைப்படப் பாடல்போல, மாணவர் எல்லோரும் அவரவரின் தனித்தனிப் பாதைகளில் பிரிந்து சென்றனர்.

காலப்போக்கில் வீட்டு மனைவிகளாக, அரசப் பணியாளர்களாக, வியாபாரிகளாக, விவசாயிகளாக, மீன்பிடியாளராக முதலிய வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு நிலைகளில் இலங்கைத் தீவெங்கும் உதிர்ந்து சிதறி அவர்களின் வாழ்வுகள் அசைந்து கொண்டிருந்தன.

சிலர், சிலரை மறந்தே விட்டனர்!

ஒரு சிலரை, இளமையில் மரணம் தழுவிக்கொண்டது.

ஒரு சிலர், மிக இளவயதில் மணவாழ்வில் புகுந்து கொண்டனர்.

கிராமங்களில் பதினாறு வயதுகளிலேயே பெண்கள் மணம்முடிக்கத் தொடங்கிவிடுவர். இளவயது கடந்தால் மாப்பிள்ளை எடுப்பது மிகக்கடினம். இருபது வயதுக்கு முன்னமே இளம் ஆண்கள் மணம் முடித்து விடுவதுதான் அதற்கான காரணம்.

பத்மாவதிக்கு இருபத்தைந்தாவது பிறந்த நாளும் வந்தது. 'தனது மனதில் இருப்பதை வெளியில் சொல்ல முடியாத நிலையில்' அவள் வாழ்ந்து வந்தாள்.

பத்மாவதியின் தந்தை பஞ்சலிங்கத்திற்கு, பல இடத்து மக்களுடனும் பழக்கம் இருந்தது. 'வட்டிக்கு' பணம் கொடுத்து வாங்குவதால் அத்தகைய தொடர்புகள் அவருக்குக் கிடைத்தன.

பத்மாவதியின் பத்தொன்பது வயதிலிருந்தே தந்தை அவளுக்கு கலியாணம் பேசத்தொடங்கினார். பேசிவரும் வரன்களை அவள் வேண்டாம் என்றாள். "எனக்கு இன்னும் வயதிருக்கு" என்று கூறி மறுத்து வந்தாள்.

நெருங்கிய உறவினரும் அவளுக்கு கலியாணம் பேசிவந்தனர். பஞ்சலிங்கம் விவசாய குழுமத்தைச் சேர்ந்தவர். அவரின் உறவினர் சிலர் அரசப் பணிகளிலும் சேவை செய்தனர். ஆதலால் தன்னுடைய சாதிக்குள்ளேயே, உத்தியோக மாப்பிள்ளை தேவையென்று பஞ்சலிங்கம் ஒற்றைக்காலில் விடாப்பிடியாய் நின்றார். அவரின் நண்பர்கள் பேசிவரும் சில வரன்களை தாழ்வு தரம் சொல்லித் தட்டிக்கழித்தார்.

பத்மாவதியின் வயது இருபத்தெட்டைக் கடந்தது. அவர்களின் வளவு, வயலோரமாக அமைந்திருந்தது. பயிருக்கு கிருமிநாசினி தெளிக்கும்போது அந்தச் சுவாத்தியம் சோழகக் காற்றுடன் அள்ளுண்டு செல்லும். பத்மாவதியின் காதோரமுள்ள சில கூந்தல்கள் வெள்ளை விழுந்தமைக்கு அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இனிச் சரிவராது' என்று நினைத்த பஞ்சலிங்கம் கலியாணத் தரகரின் கையைப் பிடித்தார். "எப்படியும் என்ர மகளுக்கு மாப்பிள்ளை ஒன்று நீதான் தேடிவரவேணும்" என்று சொல்லி, பச்சைநிறப் பணத்தாள் நான்கை தரகரின் கையினுள் திணித்தார்.

இருபது மைல் தூரத்தில் வசிப்பவர். அவர்களின் சாதியைச் சேர்ந்தவர். படிப்பு எட்டாம் வகுப்பு. தொழில் சங்கக் கடை மனேச்சர். சம்பளத்துடன் 'அப்படி இப்படி' என்று வருமானமும் கிடைத்தது. வயதும் முப்பது. நல்ல சாதகப் பொருத்தம்.

எது எப்படியோ தங்களுடைய 'சாதி' காப்பாற்றப் பட்டதில், பஞ்சலிங்கத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சி.

'தாய் தந்தை சகோதரம் உற்றம் சுற்றம் எல்லோரையும் அனுசரித்துப்போவம், தனது வயதும் ஏறுது' என்று பத்மாவதியும் நினைத்தாள். இதற்குமேல் அதிகமாகச் சிந்திக்கவும் அவளால் முடியவில்லை. தனக்குக் கீழுள்ள சகோதரிமார் இருவரின் நிலையும் அவளின் உள்ளத்தை உறுத்தியது.

திருமணத்திற்கு "ஓம்" என்றாள். "ஓம்" என்ற மந்திரத்துடன் தாலியும் கழுத்தில் ஏறியது.

பத்மாவதி தன் கணவனின் சொல்லுக்கிணங்க அன்பொழுக வாழ்ந்தாள். விளைந்தது முத்து. பிறந்தது பெண் குழந்தை.

'துளாவிக் காய்ச்சாத கஞ்சியும் கஞ்சியல்ல, வினாவிக் கட்டாத கலியாணமும் கலியாணமல்ல' என்னும் பழமொழிக்கமைய தூரத்து இடத்துச் சம்பந்தம், காலப்போக்கில் கருங்காலியல்ல, அது 'முருங்கைமரம்' என்பது தெரியத் தொடங்கியது.

பத்மாவதியின் கணவன் தன் சொந்த ஊரில் தொழில் பார்த்தான். மனைவி குழந்தையிடம் விடுமுறை நாட்களில் மாமன் வீடு வந்து போவான். வரும்போது வாயில் 'மது' வாடையடிக்கும். உதட்டில் வெண்சுருட்டுப் புகையும். ஏன்? என்று கேட்கும் பத்மாவதிக்கு, கை காலால் பதில் கிடைக்கும். அவன் பிறந்த ஊரில் ஒரு பெண் தொடர்பு இருப்பதாகவும் 'கதை' கசியத் தொடங்கியது.

இத்தகைய நெளிவு சுழிவுகளுடன் வாழ்க்கை ஓடும்போது உள்நாட்டு யுத்தம் தொடங்கியது. தனது பங்குக்குரிய வயல் தோட்டச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கைக்காகவே பத்மாவதி தன் தந்தை வீட்டில் தங்கியிருந்தாள். உள்ளூர் யுத்தத்தால் வயல் தோட்டக் காணிகள் கை விடப்பட்டுத் தரிசு நிலங்களாக மாறின. தென்னை மரங்கள் எல்லாம் தறிக்கப்பட்டு 'பங்கர்' அமைக்கப்பட்டன.

இதுதான் சந்தர்ப்பம் என்று அறிந்த மாப்பிள்ளை, தன் மனைவி மகளை அழைத்துக்கொண்டு தனது சொந்த ஊர் போய்ச்சேர்ந்தான். தாய் தந்தை தம்பி தங்கைமார் பிறந்தமண் விளையாடிய வயல்வெளி எல்லாவற்றையும் இழந்து மாற்று வழியின்றி வெற்று இதயத்துடன் கணவனுடன் சென்ற பத்மாவதி, புகுந்த ஊரில் தனிக்குடித்தனம் தொடங்கினாள்.

உள்ளூர் யுத்தக் கெடுபிடியால் நாளுக்கு நாள் இலங்கை நாட்டின் நிலமை மோசமடைந்து சென்றது. வயல் தோட்டம் பனை தென்னை போன்ற விவசாய வருமானத்தில்தான் பஞ்சலிங்கம் குடும்பம் காலங்காலமாக வாழ்ந்து வந்தது. அவரின் மூத்த மகளான பத்மாவதியும் பட்டணத்தை அண்மித்த தனது கணவனின் ஊரில் நிரந்தரமாய் தங்கிவிட்டாள்.

அவரின் அடுத்த மகள் சிறீதேவி பன்னிரெண்டாம் வகுப்பில் வெற்றி பெற்றபின் வேலைக்கு விண்ணப்பித்தபடி வீட்டில் இருந்தாள். தன்னுடன் படித்த சிநேகிதிகளுடன் கடிதத் தொடர்பும் வைத்திருந்தாள். அவர்களில் சிலர் அரசாங்கத்திலும் தனியார் நிறுவனங்களிலும் பணிசெய்து கொண்டிருந்தனர். சிலர் வெளிநாடுகளுக்குச் சென்று கொண்டிருந்தனர். வெளிநாட்டு வேலை முகவர்களும் கழுத்தில் பவுண் சங்கிலியும் கை விரல்களில் மோதிரங்களும் மினுங்க அப்போதைக்கப்போது ஊரில் உலாவித் திரிந்தனர்.

சிறீதேவி படித்த ஊர்ப் பள்ளியில் ஒரு சனிக்கிழமை வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான கருத்தரங்கு நடைபெற்றபோது, சிநேகிதிகள் சிலருடன் சிறீதேவியும் அங்கு சென்று வந்தாள். அவர்களுடன் கற்ற ஆண்கள் சிலரும் அதில் கலந்து கொண்டனர்.

வீட்டுக்கு வந்து பள்ளிக்கூடக் கருத்தரங்கில் நடந்தவற்றைத் தன் தாயிடம் சறீதேவி சொன்னாள். 'தான் வெளிநாடுபோய் உழைத்தால் தங்கள் குடும்பச் சீவியம் சீரடையும்' என்பதை விளக்கமாக எடுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினாள். தாயாருக்கு முதலில் இதில் விருப்பமில்லை. இருப்பினும் 'தேய்வடைந்து செல்லும் தங்கள் வீட்டு வருமானத்தை நிவர்த்தி செய்வதற்கு' இது ஒரு வாய்ப்புத்தான் என்று தாயார் நினைத்தார். இருப்பினும் எப்படி நம் பெண் பிள்ளையை, அதுவும் குமர்ப்பிள்ளையை, கண்காணாத தேசத்துக்கு அனுப்புவது?' என்ற மன வருத்தத்துடன் தாயார் சிந்தித்தார். சிறீதேவியும் ஒரு கிழமையாக தன் தாய்க்கு ஓதிக்கொண்டிருந்தாள்.

"எனக்கு உதைப்பற்றித் தெரியாது. உதுக்கு முடிவெடுக்க வேண்டியது உன்ர அப்பாதான். நீ அவரைக் கேட்டு எதுவும் செய்துகொள்" என்று ஒரே மூச்சில் அந்தச் சுமையை, தன் சுணவனிடம் போட்டாள் சிறீதேவியின் தாயார்.

ஒரு பின்னேரம். பகல் உறக்கத்தால் எழும்பி முகம் கழுவித் தேநீர் குடித்து மாட்டுத்தீனுக்குப் பச்சைப் பனையோலையைச் சிறிது சிறிதாக பஞ்சலிங்கம் கிழித்துக் கொண்டிருந்தார். சிறீதேவி தந்தைக்குப் பக்கத்திலிருந்து அவருக்கு உதவியாகத் தானும் ஓலையைக் கிழித்துக் கிழித்து, ஒரு புறம் பனை ஓலைத்தீனையும் மறுபுறம் பனை ஈர்க்கையும் வைத்துக் கொண்டிருந்தாள். அடிக்கடி நிமிர்ந்து தகப்பனின் முகத்தைப் பார்த்தாள்.

'ஏதோ உவள் கேட்கப் போறாள்' என்பது, பஞ்சலிங்கத்துக்கு விளங்கிவிட்டது.

"அப்பா"

"ஓம்"

"நான் ஒண்டு சொல்லட்டோப்பா?"

"சொல்லன் பிள்ளை, என்ன அப்புடி?"

"அது ஒண்டுமில்லையப்பா"

"ஆ- ஒண்டுமில்லாட்டால் பேசாமல் ஓலையைக் கிழி"

"இல்லை, வந்தப்பா....."

"என்ன வந்தப்பா, போயப்பா ஏதோ நீ சொல்ல வாறாய் பிள்ளை. சொல்லு சொல்லு. உள்ளதை விழுங்காமல் சொல்லு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது என்னன்டாப்பா..... என்னோட படிச்ச பெட்டையள், வெளிநாட்டுக்கு உழைக்கப் போறாகளாம்"

"அதுக்கென்ன பிள்ளை, ஆரும் போகட்டுமன்"

"அதுதானப்பா நானும் போகலாமெண்டு, ஆசைப்படுறன்"

பஞ்சலிங்கம் கிழிந்த ஓலையைப் போட்டுவிட்டு கோபத்துடன் ஒருமுறை மகளை முழுசிப் பார்த்தார். குரலை ஒருக்கால் செருமிக்கொண்டார்.

"எடி மோன, உங்கள உந்தப் பள்ளிக்கூடத்தையும் எங்கட தோட்டக் காணியையும் தவிர, வேற எங்கயும் நான் விட்டனானே? அப்புடி எங்கட பரம்பரையில ஆரையும் வெளியில விட்டுப் பழக்கமே? கஞ்சியெண்டாலும் ஒண்டாய் இருந்து குடிப்பம் மோன. வெளிநாடோ.....? உதுகும் ஒரு பிழைப்போ.....? உன்னைக் கண்காணாத தேசத்துக்கு அனுப்பிப் போட்டு, எப்புடி மோன நான் கண் தூங்குறது?".

சிறீதேவி எதுவித பேச்சு மூச்சின்றி, தலை குனிந்தபடி பனை ஓலையைக் கிழித்தாள். அன்றைய பொழுது அந்தளவுடன் முடிவுற்றது.

மேலும் இரண்டு மூன்று மாதங்கள் உருண்டோடின. முதல் குழுவில் சென்ற இருபது இளம் பெண்கள் சிங்கப்பூரில் வேலை செய்தனர். தமது வீடுகளுக்குப் பணம் அனுப்பி வைத்தனர். வெளிநாட்டு உடுப்புகள் அனுப்பி வைத்தனர். சிலர் தமது தாய் அக்கா தங்கைகளுக்கு தங்கச் சங்கிலிகள் தங்கக் காப்புகள் அனுப்பி வைத்தனர். இத்தகைய வெளிநாட்டுப் பணப் புழக்கத்தால் ஒருவகைக் 'கிளுகிளுப்பு' ஊர்களுக்குள் பரவியது. பஞ்சலிங்கத்தின் குடும்பம் வறுமையை நோக்கி நகர்ந்தது.

அடுத்த குழுவிலும் பதினைந்து இளம் பெண்கள் சிங்கப்பூருக்கு பயணப்பட்டனர். சிறீதேவியுடன் படித்து இலங்கையில் வேலை கிடைக்காமல் வீட்டிலிருந்த பெண்களில் பலர் மத்தியகிழக்கு நாடுகளுக்கும் சிங்கப்பூருக்கும் சென்று கொண்டிருந்தனர்.

'மெல்லெனப் பாயும் தண்ணி கல்லையும் உருக்கிப் பாயும்' என்பார்கள். சிறீதேவியின் எடுத்துரைப்பால் பஞ்சலிங்கத்தின் மன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியும் படிப்படியாய் தளம்பியது. உள்ளூர் யுத்தமும் அன்றைய வறுமை நிலையும் சமுதாய அசைவியக்கமும் அவரை அந்த நிலைக்குள் தள்ளிவிட்டது.

தொழிற்சாலை ஒன்றில் 'தையல் வேலை' என்று சொல்லி சிறீதேவியுடன் சேர்த்து எல்லாமாக இருபது இளம் பெண்களை தொழில் முகவர் ஒருவர் இலங்கை வந்து அழைத்துச் சென்றார். சிங்கப்பூர் 'சாங்கி' விமானத் தளத்தில் அவர்களின் பாதங்கள் பதிந்தன.

ஆனால் முகவர் கூறிய ஒப்பந்தப்படி அங்கு தொழில் கொடுபட்டவில்லை. வேறு பலவித தொழில்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக அப்பெண்கள் சேர்க்கப்பட்டனர். சிறீதேவிக்கு வீட்டுப் பணிப்பெண்வேலை கிடைத்தது. முதலில் அவளுக்கு அதில் ஏமாற்றம்தான். இருப்பினும் சிங்கப்பூர்ச் சீமையின் அழகும் பொலிவும் தூய்மையும் அவளின் துயரத்தை மழுங்கடிக்கச் செய்தன. 'என்ன தொழில் செய்தாவது கையில பணம் வந்தால் போதும்' என்ற தீர்மானத்தில் கிடைத்த வேலையை அவள் கண்ணியத்துடன் செய்து கொண்டிருந்தாள்.

இப்போது மாதாமாதம் பஞ்சலிங்கத்தின் வீட்டுக்கும் சிங்கப்பூர் டொலர் இலங்கை ரூபாயில் மாறி வந்துகொண்டிருந்தது. சிறீதேவியின் உடன் பிறப்புகளும் மகிழ்ச்சி அடைந்தனர். ஆயினும் மகளைப் பிரிந்திருந்த அவளின் தாய் தந்தைக்கு அடிமனதில் வேதனை இருக்கத்தான் செய்தது.

16

டண் டாண்டண்.. டண்டுக்கிட.. டண்.... டண் ... டண்... டண்....
டண் டாண்டண்.. டண்டுக்கிட.. டண்.... டண் ... டண்... டண்....

என்ற தாள லயத்தை கொட்டியபடி இரண்டு 'பறை' மேளங்களும்;

டொங்குங், டொங்குங், டொங்குங், டொங்குங்.....

என்று ஓசை எழுப்பியபடி, இரண்டு 'தம்பட்ட' மேளங்களும்;

செல்லையாச் சம்மாட்டியின் வளவுப் படலைக்குள்ளால் இருந்தபடி முழங்கிக் கொண்டிருந்தன. பறை முத்தையா, அந்த மேளக்கூட்டுக்குத் தலைமை தாங்கிவாறு ஒரு பறை மேளத்தை அடித்துக் கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலின் பூசைக்கேற்றவாறும், காவடி ஆட்டத்துக்கு ஏற்றவாறும், 'கரக' ஆட்டத்துக்கு ஏற்றவாறும், செத்தவீட்டுக்கான சோக ஓசையுடனும், பல வித நாதம் எழுப்பி பறை அடிப்பதில் 'சுற்கோவளம் முத்தையா' மிகுந்த திறமைசாலியாக அவர் இறக்கும்வரை திகழ்ந்தார். அப்பிரதேச மக்கள் ''எங்கட முத்தையா'' என்ற உரிமையுடன் அவரை அழைப்பர். துன்பமான வாழ்க்கைச் சூழலில் உதவி கேட்கும்போதெல்லாம் முகம் கோணாது செல்லையாச் சம்மாட்டியார் முத்தையாவுக்கு பொருள் பண உதவிகளைச் செய்வார். அதனால் சம்மாட்டிமீது தன் உயிரையே வைத்திருந்தார் முத்தையா.

அத்தகைய சம்மாட்டியின் ஒரே புதல்வனின் இழப்பை தனது சொந்த இழப்பாகவே முத்தையா உணர்ந்தார். மேள அடியிலேயே முத்தையாவின் அழுகுரலும் ஒலித்தது. அவரின் கண்களும் அடிக்கடி கலங்கின. தனது அரையில் சுற்றிக் கட்டியிருந்த சால்வைத் தலைப்பால் தனது கண்ணீரை முத்தையா அடிக்கடி துடைத்துக் கொண்டார்.

கையும் காலும் இயங்காமல், தூக்கிச் செல்லும் கதிரைக்குள் வாழ்ந்திருந்த செல்லையாச் சம்மாட்டியின் பத்தொன்பது வயது இளந்தாரி மகனுக்கு ஒருநாள் திடீரெனக் காய்ச்சல் குணம் ஏற்பட்டது. உடனடியாக அவனை மருத்துவ மனைக்குக் கொண்டோடினர். கார் சென்று கொண்டிருக்கும்போதே இடை வழியில் அவனது வாய், வலது பக்கமாக இழுத்துவிட்டது. அவனால் பேச முடியவில்லை. பாதி நாக்கு வலப்பக்க வாயால் தொங்கிக் கொண்டிருந்தது. வாயால் வீணியும் வடிந்தது. தாயார் வீணியைத் துடைத்தபடி அழுது கொண்டிருந்தார். மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட அவனுக்கு அவசர சிகிச்சை அளிக்கப்பட்டது. சம்மாட்டியை நோக்கி விரைந்து வந்த மருத்துவர் 'ஏற்புவலி' என்று சொன்னார். சம்மாட்டியிடம் ஒரு பத்திரத்தில் கையொப்பம் வாங்கிச் சென்றார். பெரிய ஒரு ஊசி மருந்தை அவனது தொடையில் செலுத்தினார். அந்த மருந்துக்கும் வலி கட்டுப்படவில்லைப் போலும். சில மணி நேரம் கடந்து நாலைந்து தரம் விக்கல் எடுத்த செல்லையாச் சம்மாட்டியின் மகனது ஆவி, காற்றுடன் இரண்டறக் கலந்தது. சம்மாட்டி ஆச்சியும் அவரின் தாயாரும் மருத்துவ மனையில் தொடங்கிய கூக்குரல், தமது வீடு வந்து சேர்ந்தும் இன்னும் ஓயவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லையாச் சம்மாட்டியின் கடலோர வளவு அரை ஏக்கர் நிலத்தில் நாற்சதுரமாக அமைந்திருந்தது. அதற்குள் கட்டப்பட்டிருந்த வடக்குவீடு சிகரம்போன்ற நவீன சிற்ப வேலைகளுடன் காணப்பட்டது. கிழக்கே குசினி, தெற்கே கொட்டில், மேற்கே பூசை அம்மன் என்பனவும் கல்வீடுகளாகவே அமைந்திருந்தன.

வளவின் நடு முற்றத்தில் ஒரு தட்டிப் பந்தல் போடப்பட்டிருந்தது. அதன் உள்பக்க கூரையில் குடிமகனான கட்டாடியார் வெள்ளைச் சேலைகளை விரித்துக் கட்டியிருந்தார். பனை தென்னை குருத்தோலைகளால் பின்னப்பட்ட தோரணங்களும் மாவிலையும் அதன்கீழே இரண்டு வரிசையாகத் தொங்க விடப்பட்டன. பந்தலின் நடுவிலுள்ள மண்ணில் பலகைக் கட்டில் ஒன்று போடப்பட்டிருந்தது. குளிப்பாட்டி புதிய உடை உடுத்திய செல்லையாச் சம்மாட்டி மகனின் உடல், அதில் கிடத்தப் பட்டிருந்தது. அவனது தேகத்தை மோதிரங்கள் கைச்சங்கிலி கைக்கடிகாரம் கழுத்துச் சங்கிலி முதலிய தங்க அணிநகைகள் அலங்கரித்திருந்தன. கழுத்துச் சங்கிலியின் அடிப்பாகத்தில் தொங்கிய 'பதக்கம்' அவனின் தொப்புளை தொட்டுக்கொண்டு இருந்தது. பத்தொன்பது வயதான அந்த இளந்தாரிப் பொடியன், பார்ப்போர் கண்களுக்கு ஓர் இளவரசனாகவே காட்சி அளித்தான்.

செல்லையாச் சம்மாட்டியார் கிணற்றடியில் குந்தி இருந்தார். நெருங்கிய மச்சான்மார் இருவர் தண்ணீர் இறைத்து அவருக்கு முழுக வார்த்தனர். "மகனே..... என் மகனே..... என்னை விட்டுட்டுப் போயிட்டியோடா என்ர செல்லமே....." என்று அடிக்கடி அவர் வாய்விட்டு கதறினார். துயரத்தில் அவரது உடல் அடிக்கடி உதறியது. அவரின் முதுகைத் தடவித் தடவி அந்த மச்சான்மார் ஆறுதல் வார்த்தைகளைக் கூறினர். நீராடிய பின்னர் ஈரச் சாரத்தைக் கழைந்து, வெள்ளை வேட்டியை அவருக்கு உடுத்தினர். நெருங்கிய மச்சான் கணக்கன் கணபதி, சம்மாட்டியின் ஈரத்தலையை துடைத்து எடுத்தான். அவரின் அடர்த்தியான பிடரி மயிரால் தண்ணீர் சிந்திக் கொண்டிருந்தது. அவர் முறைப்படி தீட்சை பெற்றவர். சைவ சமயத்தை கடைப்பிடிப்பவர். எனவே அவரின் நெற்றி, நெஞ்சு, கைப்புஜம், விலாப்புறம், பின்முதுகு எங்கும் விபூதியால் முக்குறி பூசினர். ஐயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்த 'பூணூலை' சம்மாட்டியார் அணிந்து கொண்டார். விரலில் தெற்பைப்புல் மோதிரம் போட்டுக்கொண்டார்.

பூணூல் அணிந்த சைவக் குருக்கள் 'சவக்கிரிகை' செய்து கொண்டிருந்தார். "எல்லாரும் அழுகையை நிப்பாட்டுங்கோ. இப்ப சுண்ணம் இடிக்கத் தொடங்கப்போறம்" என்று சிவம் சின்னப்பு என்னும் முதியவர் அழுதுகொண்டிருக்கும் பெண்களை அமைதிப் படுத்தினார்.

மத்தளம் கதிர்காமரும் சிவம் சின்னப்புவும் பலவித தேவாரங்களைப் பாடினர். சாம்பிராணிப் புகை முகில் கூட்டம்போல் உள் பந்தலின் வெள்ளை விரிப்பைத் தொட்டது. பெரிதும் சிறிதுமாக பல குத்து விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. காய்ந்த மான் தோலில் சைவக் குருக்கள் அமர்ந்திருந்தார். செல்லையாச் சம்மாட்டியார் செல்வாக்கு மிகுந்த மனிதன் என்பதால், ஊரிலுள்ள ஆண் பெண் அனைவரும் அங்கு குழுமி இருந்தனர். சனக்கூட்டத்தால் வளவு முழுவதும் நிறைந்திருந்தது. எஞ்சிய ஆண்கள் பலர் கடற்கரை வேலி ஓரமுள்ள தென்னைமர நிழலில் அமர்ந்திருந்தனர்.

செல்லையாச் சம்மாட்டியின் கரைவலைத் தொழிலாளிப் பொடியன்கள் அங்கு வந்திருந்த சனங்களுக்கு வெற்றிலைப் பெட்டிகளை வழங்கித் திரிந்தனர். இரு பொடியன்கள் சுருட்டுத் தட்டையும் இன்னும் இரு பொடியன்கள் பீடித் தட்டையும் ஏந்தியவாறு சனத்துக்குள் அங்கும் இங்குமாக நடந்தபடி கொடுத்துத் திரிந்தனர். ஒரு பொடியன் கயிற்றுக் கம்பான் துண்டு ஒன்றில் நெருப்பை மூட்டி, பீடி சுருட்டுப் புகைப்போர்க்கு நெருப்புத்தணல் கொடுத்துத் திரிந்தான். வளவுக்குள் செத்த சவம் கிடக்கும்வரை அந்த வீட்டில் உணவோ அல்லது குடிபானமோ பரிமாறுதல் அல்லது உண்ணுதல் அவ்வூர் வழக்கத்தில் இருந்ததில்லை.

சுண்ணம் இடிக்கும் பாடலை சின்னப்புவும் கதிர்காமரும் சேர்ந்து பாடினர். ஒவ்வொரு பாடல் முடியும்போதும் உலக்கையைத் தூக்கி உரலுக்குள் மூன்று தடவைகள் சம்மாட்டியார் இடிக்க வேண்டும். ஆனால் அவரால் அப்படி இடிக்க முடியவில்லை. உலக்கையைப் பிடித்தபடி அதில் சாய்ந்துகொண்டு, உடல் குலுங்கிக் குலுங்கி அழுதார். அவரின் ஆற்றாமை கண்டு துன்பம் பொறுக்க முடியாமல் உறவினரும் சேர்ந்தே அழுதனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மாட்டி விடுகின்ற கண்ணீர் சுண்ணம் இடிக்கும் உலக்கையில் கோடு கீறி வழிந்தோடி உரலுக்குள் துளியாக விழுந்தது. அவரை அப்போது யாராலும் தேற்ற முடியவில்லை. அவரைப்பார்த்து அன்று கல்நெஞ்சங் கொண்ட மனிதர்களே மனம் கலங்கிக் கண்ணீர் விட்டனர்.

"சரி... சரி... நிப்பாட்டுங்கோ, எல்லாருக்கும் ஒருநாளைக்கு இதுதான் முடிவு." என்று முதியவர் சின்னப்பு வாய் திறந்து சனங்களை ஆறுதல் படுத்தினார். அவர் தனது இடது கையால் செல்லையாச் சம்மாட்டியை அணைத்துக்கொண்டு, தனது வலது கையை சம்மாட்டியின் கையுடன் சேர்ந்துப் பிடித்தபடி, உலக்கையைத் தூக்கித் தூக்கி இருவருமாய் சுண்ணத்தை இடித்தனர்.

ஒருவாறு சவக்கிரிகை நிறைவுற்றது. சவத்தைத் தூக்கிப் பாடையுள் கிடத்தினர். பெண்கள் சிலர் பாடையைச் சற்றிச் சுற்றி நெஞ்சில் அடித்து அழுதனர்.

"சரி எல்லாரும் விலகுங்கோ பாடை தூக்கவேணும்" என்று முதியவர் கதிர்காமர் ஆயத்தப்படுத்தினார். பெண்கள் பாடையைச் சூழ்ந்துகொண்டனர்.

"ஐயோ எங்கட செல்லத்தைக் கொண்டு போகாதையுங்கோ"

"ஐயோ எங்கட தங்கத்தை எரியாதைங்கோ" என்று கதறி அழுதனர் ஒப்பாரி வைத்தனர்.

பாடையைத் தூக்குவதற்கு உறவுக்கார மச்சான்மார் நால்வர் தயாராக நின்றனர். பாடைக்குக் கிட்டவாக அவர்களால் போக முடியவில்லை. பாடையைச் சூழ்ந்து குவிந்து நின்ற பெண்கள், உரத்துக் குரலெடுத்து அழுதனர்.

"சரி சரி இன்னும் கொஞ்ச நேரம் பொறுப்பம். அதுகள் நல்லாய் அழட்டும்" என்றான் செல்லையாச் சம்மாட்டியின் இரண்டாம் சணக்கன் வேலுப்பிள்ளை.

மேலும் ஐந்து நிமிடமளவில் சனங்கள் அழுது கொண்டிருந்தனர். பறைமேளக் கலைஞர்கள் படலைக்கு வெளியில் நின்றபடி 'பயண அடியை' சோகமான ஓசையில் தட்டியபடி பாடைக்கு முன்னே நடப்பதற்கு தயாராக நின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உதுகளை உப்புடி விட்டால் இன்னும் நீட்டுக்கு அழுதுகொண்டுதான் இருக்குங்கள். நாங்கள் பாடையைத் தூக்குவம்" என்று முற்றுப்புள்ளி வைத்தான் பாடை தூக்கும் நால்வரில் ஒருவரான சிற்றம்பலம்.

"சரி சரி போதும் பிள்ளையள். விலத்துங்கோ. விலத்துங்கோ பாடை தூக்கவேணும். பொழுதும் சாயுது" என்று ஊர்ப்பெரியவர் சிவம் சின்னப்பு, ஒரு முடிவை அங்கு ஏற்படுத்தினார். பாடை தூக்கப்பட்டது. சவ ஊர்வலம் சுடலையை நோக்கிப் போகுது.... போகுது... போகுது.... போய்க்கொண்டே இருக்குது. 'இதுபோல நீளமான, சன அடர்த்தியான 'சவஊர்வலம்' ஒன்று அந்த ஊரில் இதுவரையில் நடைபெறவில்லை' என்று ஊர் முதியோர்கள் பலர் பேசிக்கொண்டனர்.

17

யார் கண் பட்டுதோ? ஊர் கண் பட்டுதோ? அல்லது யாரும் செய்வினை சூனியம் செய்தார்களோ? ஒழுங்காக நடைபெற்று வந்த சுப்பையாச் சம்மாட்டியின் கரைவலையில் படிப்படியாக பல சிக்கல்கள் தலைக்காட்டத் தொடங்கின.

"உது என்ன கரைவலையே? உது அடிதடி சண்டைக் கூட்டமெல்லோ" என்று ஊர்ச் சனங்கள் இழிவாகப் பேசுகிற மாதிரி சுப்பையாவின் கரைவலை தற்போது சீரழிந்து சென்றது. அண்ணன் தம்பிகள் தமக்குள் அடிக்கடி சண்டை பிடித்தனர். தம்பிகள் நால்வரும் கொடுத்த உசாரில்தான் சுப்பையா கரைவலையை தொடங்கினான். அவர்கள் அப்போது காப்பு சங்கிலி மோதிரம் போன்ற தங்க நகைகளை அண்ணனுக்குக் கடனாகக் கொடுத்திருந்தனர். அவற்றை 'அடைவு' வைத்துப் பணம் பெற்றுத்தான் சுப்பையா தொழிலைத் தொடங்கினான். வருமானம் கூடுதலாகக் கிடைக்கும்போது தம்பிமாரின் கடன்களை ஒவ்வொன்றாக அவன் கொடுத்து வந்தான். இன்னும் இரண்டு தம்பிமாரின் நகைகளை மட்டும் மீட்டுக் கொடுக்க வேண்டி இருந்தது.

ஒரு நாள் மதியம். நல்ல வெயில் நேரம். கரைவலையை இழுத்துக் கொண்டிருந்தனர். மீன் குறைவான காலமது. சுப்பையாவின் கடன் ஏறிக்கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அண்ண, வெயில் களையாக் கிடக்குதண்ண. கள்ளுக்கு ஒரு ஆளை அனுப்பண்ண" என்று தம்பி வேலுச்சாமி சுப்பையாச் சம்மாட்டியைப் பார்த்துக் கேட்டான்.

"எடேய் தம்பி, என்ர கையில காசில்லையடா. கள்ளுக் கொட்டில் காறனுக்கும் முன்னூறு ரூபாய்க்குமேல நான் குடுக்குமதி இருக்கு. பேசாமல் போய் வலையை இழு தம்பி" என்று அழுத்திச் சொன்னதற்காக அந்தத் தம்பியிடமும் சுப்பையா அடி வாங்கினான்.

நாளும் பொழுதும் மீன்பிடியும் குறைவடைந்து சென்றது. சுப்பையாவின் வருமானமும் இப்போது சில்லறையில் கிடைத்தது.

"ஆரோ சிங்காரவேலரின்ர மக்களுக்கு சூனியம் செய்து போட்டாங்கள் போல கிடக்கு" என்று ஊர் முதியோர்கள் சிலர் இரகசியமாகப் பேசிக் கொண்டனர். தொழிலாளரின் சம்பளப் பணம் கொடுப்பதற்கே சுப்பையா மிகவும் இடர்பட்டான். அதனால், சில தொழிலாளிகள் அவனைவிட்டு விலகிச் சென்றனர். இரு தம்பிமார் தமது வருமதியைப் பெற்றுக்கொண்டு உண்ணிபோல் மெல்லெனக் கழன்று சென்றனர். இன்னும் இரு தம்பிமார்தான் அண்ணன் சுப்பையாவுக்கு உதவியாக நின்று தொழில் செய்தனர்.

சுப்பையா கரைவலை தொடங்கியபோது செல்லையாச் சம்மாட்டிதான் அவனைக் கொழும்புக்கு கூட்டிச் சென்று, தான் வியாபாரம் செய்யும் முதலாளியிடம் அறிமுகம் செய்து பொறுப்புச்சொல்லி முற்பணமும் பெற்றுக் கொடுத்து உதவினார். சுப்பையாவின் கரைவலைத் தொழில் இப்போது தேய்வடைந்து போவதை செல்லையாச் சம்மாட்டி மூலமாக அந்த கொழும்பு வியாபாரியும் அறிந்து கொண்டார்.

சிறிய ஒரு தொகை பணம் கடன்கேட்டு அந்தக் கொழும்பு வியாபாரிக்கு 'கடிதம் ஒன்றை' சுப்பையா எழுதியிருந்தார்.

அந்நாட்களில் தனக்கு வருமதியான பணத்தை வாங்கி வருவதற்காக செல்லையாச் சம்மாட்டியும் கொழும்பு சென்றிருந்தார். அங்கே சுப்பையாவின் கடிதம் தொடர்பான பேச்சையும் அந்த வியாபாரி ஆரம்பித்தார்.

"சம்மாட்டி, நம்ம சுப்பையாச் சம்மாட்டி சல்லி கொஞ்சம் கடன் கேட்கிறாரு. குடுக்கவா? தொழில் உசத்தியா நடக்குதா? அவற்ர சரக்கு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வருமா? நம்ம 'சல்லி' நம்ம கைக்கு வந்து சேருமா?" என்று பலவாறு வியாபாரி வினவினார்.

நிலத்தைப் பார்த்தபடி இருந்த செல்லையாச் சம்மாட்டி, இரண்டு கையாலும் தன் தலையைச் சொறிஞ்சபடி நிமிர்ந்து ஒரு முறை கூரையைப் பார்த்தார். ஏதோ கனதியாய் யோசித்தார். ஒரு முடிவுக்கு வந்தவராக ஒரு பெருமூச்சு விட்டார்.

"முதலாளி, நாலு வருசமாய் நான் பொறுப்பு நிண்டன். நீங்களும் அவனும் இப்ப நல்லாய் புளங்கிப்போட்டியள். இனிமேல் தயவுசெய்து என்ர தலையில அவன்ர பாரத்தை போடாதையுங்கோ. சரிதானே நான் சொல்லுறது?'' என்று நறுக்கென்று, தன் பேச்சை முடித்தார் சம்மாட்டி.

"கடன் கேட்டு தயவுசெய்து கொழும்புக்கு என்னிடம் வரவேண்டாம்" என்ற பதில் கடிதம் சுப்பையாவின் கையில் சில நாட்களில் கிடைத்தது. கடிதத்தை வாசித்து முடித்ததும் வானத்தைப் பார்த்தபடி, கண் இமைகளை வெட்டி வெட்டி சுப்பையா யோசித்தான். தனது ஐந்தாவது தம்பி சேதுலிங்கத்துக்கு வயது இருபதாகிறது. 'பையனும் பாவல்காயும் முற்றக்கூடாது'. எப்படியும் அவனுக்கு இந்த ஆவணியில் கலியாணம் முடித்துக் கொடுக்கவேணும். கையில் பணம் இல்லை. கடலிலும் மீன் ஒறுப்பு. கடன் பெறுவதற்கு யாருமில்லை. முதலாளிமாரும் கையை விரித்துவிட்டனர். வேதனையுடன் தனது உற்ற நண்பன் சின்னத்தம்பியிடம் சென்று தனது நிலையை முறையிட்டான். வள்ளத்தின் உறுதிப்பத்திரம் மட்டும் ஒரு சொத்தென சுப்பையாவின் கையில் இருந்தது.

"மச்சான்! தம்பிக்கு கலியாணம் பேசிவந்த பொம்புளை பக்கமும் ஒரு சம்மாட்டி குடும்பம். நல்ல காசுக்காறர். நான் இதை விட்டுக்குடுக்க ஏலாது. என்ர தம்பி எனக்கு நாலு வருசமாய் நின்று உழைச்சுத் தாறான். எப்புடியும் அவனை இந்தப் பொம்புளைக்கு நான் முடிச்சுக்குடுக்க வேணும்" என்று, சுப்பையா அங்கலாய்த்து நின்றான்.

"என்ர நிலையும் உனக்குத் தெரியும்தானே மச்சான். நான் வச்சுக்கொண்டு உனக்கு இல்லை எண்டு சொல்லுவனோ மச்சான்?'' என்றான் சின்னத்தம்பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்ப என்ன மச்சான் செய்வம்?"

"ஏதாவது நகை நட்டு இருக்கோ? இருந்தால், நான் கதைச்சு கொஞ்சம் கூடிய தொகைக்கு வட்டிக்கு எடுத்துத் தாறன் மச்சான்''

"என்னட்ட நகை இருந்தால், நான் ஏன் இங்க வாறன் மச்சான்"

"அப்ப என்னடாப்பா செய்வம்?''

"என்ர வள்ளத்து உறுதிப்பத்திரம் கொண்டு வந்தனான். அதை ஈடு வைச்சு பணம் எடுத்து தரவியோ மச்சான்?"

"எட, உதுக்கு இந்த ஊருக்குள்ள ஆரடா மச்சான் பணம் தரப்போறாங்கள். அப்புடியெண்டால் உதைக்கொண்டு பருத்துறைதான் போகவேணும்"

"சரி போவம் மச்சான்"

"எப்ப?"

"நாளைக்கு முதல் பஸ்ஸில் போவம்"

"சரி, போவம் மச்சான்'' என்று சம்மதித்தான் சின்னத்தம்பி.

மறுநாள் இருவரும் பருத்தித்துறை சென்றனர். வட்டிக்கடை இராமையாவிடம் வள்ளத்தின் உறுதிப்பத்திரத்தை பொறுப்பு வைத்து ஐந்து சதவீத வட்டிக்கு, ஆயிரம் ரூபாய் வாங்கினர். சின்னத்தம்பி சாட்சிக்காக கையெழுத்துப் போட்டான். ஆயிரம் ரூபா பணக்கட்டில் ஒரு பத்து ரூபாவை உருவி எடுத்து இருவரும் சாராயம் குடித்தனர். மூக்கு முட்டிய மது வெறியில், பின்னேரம் நான்கு மணியளவில் ஊர் வந்து சேர்ந்தனர்.

சுப்பையாவின் தம்பி சேதுலிங்கத்தின் திருமணம் தடல்புடலாக நடந்தது. மணவறை ஒலிபெருக்கி பவுண்தாலி விலைஉயர்ந்த கூறையுடன், மூன்று நாள் கொண்டாட்டமும் நடைபெற்று முடிந்தது.

'ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள்' என்பார்கள். ஆனால் பதினைந்து நாள் மோகத்திலேயே அவன் தம்பி மூழ்கிவிட்டான். திருமணமாகிப் பதினாறாம் நாளில் தன்னுடைய மாமனின் கரைவலைத் தொழிலில் சேதுலிங்கன் சேர்ந்துவிட்டான். தன் சொந்த அண்ணன் சுப்பையாவைக் கைவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பையா 'கையறு நிலையில்' துடிதுடித்தான். இப்போது அவனது ஒரேயொரு தம்பி சின்னையாதான், தன் அண்ணனுக்கு தோள் கொடுத்து நின்றான்.

வாடை சோழகம் கச்சான் கொண்டல் காற்றுக்கள் மாறி மாறி கடலை தழுவிச் சென்றன. சுப்பையாவின் சம்மாட்டிப் பதவியும் நாளும் பொழுதும் தேய்ந்து சென்றது.

கொழும்பு முதலாளி கைவிட்டபின், கடற்கரையில் வந்து மீன் கொள்வனவு செய்யும் வியாபாரியான 'பெனடிக்' என்பவருடன் சுப்பையா தொடர்பு வைத்திருந்தார். அவரிடமும் கடன் வாங்கி வாங்கி..... ஏழாயிரம் ரூபாய் மட்டில் அவருக்கும் கொடுக்குமதி இருந்தது. மீன்பிடியும் மேலும் குறைவடைந்தது. கடன் பெருகியதால், பணத்தைத் தரும்படி கேட்பம் என்ற முடிவுடன் பெனடிக் வியாபாரி சுப்பையாவிடம் வந்தார். அங்கே சுப்பையாவின் 'வள்ளம்' மூடிக்கட்டி இருப்பதைக் கண்டார்.

'சுப்பையாவுக்கு கடன் பெருகிவிட்டுது. தொழிலாளர் எல்லாம் அவனைவிட்டு விலகிவிட்டினம். இப்ப ஒரு கிழமையாய் அவன்ர வள்ளம்வலைகள் எல்லாம் மூடிக்கட்டிக் கிடக்குது. சுப்பையாவையும் ஊரில காணயில்லை' என்ற தகவலை பெனடிக் வியாபாரி அறிந்து கொண்டார்.

மறுநாள் லொறி ஒன்று சுப்பையாவின் வாடிக்குத் தெற்கேயுள்ள தொடுவாய் புல்வெளியில் வந்து நின்றது. வள்ளம், கரைவலை, சாளைவலை, தூர்மடி எல்லாவற்றையும் கடனுக்காக எடுத்துச்செல்வதற்கு சில ஆட்களுடன் பெனடிக் வியாபாரி வந்திருந்தார்.

இச்சம்பவத்தை செல்லையாச் சம்மாட்டி அறிந்தார். என்னதான் இருந்தபோதும் தன் ஊரவனின் தொழிலை பிற இடத்து வியாபாரி வந்து எடுத்துச் செல்வதை அவர் விரும்பவில்லை. தன் கணக்கன் கணபதியுடன் சுப்பையாவின் வாடிக்கு வந்தார்.

"நான் அந்த ஏழாயிரத்தையும் ஒரு கிழமைக்குள்ள தாறன். சுப்பையாவின்ர வள்ளம் வலையில ஒருதரும் தொடவேண்டாம்" என்று பெனடிக் வியாபாரிக்கு செல்லையாச் சம்மாட்டி பொறுப்புச் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி சம்மாட்டியார். நீங்கள் சொன்னால் சரிதான். உங்களை நம்பி, நான் போறன்" என்று கூறி வந்த வழியே பெனடிக் வியாபாரி திரும்பிச் சென்றார்.

செல்லையாச் சம்மாட்டி தனது தொழிலாளரை அழைத்து வந்தார். சுப்பையாவின் வள்ளம் வலைகள் அனைத்தையும் தன் வாடிக்குக் கொண்டு சென்றார். சொன்ன வாக்கின்படி பெனடிக் வியாபாரியின் கடன் பணத்தைக் கொடுத்து முடித்தார்.

'பழைய குருடி கதவைத் திறவடி' என்றவாறு, சுப்பையா மறுபடி கூலித் தொழிலாளியாக செல்லையாச் சம்மாட்டியின் வலையில் சேர்ந்தார். 'சம்மாட்டியாகிய' தான், மீண்டும் சாதாரண ஒரு 'கூலி' ஆகிவிட்டதை நினைத்து சுப்பையா கண்ணீர் சிந்தியபோது அவன் நடந்து சென்ற உப்புமண்ணும் சேர்ந்து அழுதது.

'பொறுப்பு' எழுதிப் பணம் கொடுத்த பருத்தித்துறை இராமையா, வட்டி குட்டி எல்லாம் சேர்த்து இரண்டாயிரம் ரூபாவுக்கு கடிதம் அனுப்பிக் கொண்டிருந்தார். சுப்பையாவும் பல தவணைகள் கேட்டு, பதில் எழுதிக் கொண்டிருந்தான்.

ஒரு வெள்ளிக்கிழமை, ஐந்தாண்பனைப் பிள்ளையாரில் மார்கழிமாதக் காப்புக்கட்டுப் பூசைக்கான ஆரவாரங்கள் நடந்து கொண்டிருந்தன. சுப்பையாவும் அவனது நண்பன் சின்னத்தம்பியும் வேறு சிலரும் மடப்பள்ளிக்குள் 'மோதகம்' அவித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது ஒரு இயந்திர இரைச்சல் கேட்டது. ஜீப் வாகனம் ஒன்று வந்து அந்தக் கோயிலடியில் நின்றது. அதிலிருந்து இரண்டு காவல் துறையினர் இறங்கி வந்தனர். "சுப்பையா உள்ளே இருக்கிறாரா?" என்று கோயிலின் மடப்பள்ளி வாசலில் வந்து நின்று கேட்டனர். சின்னத்தம்பிக்கு உடனே சம்பவம் விளங்கிவிட்டது. 'நான்தானே பொறுப்பு நின்று பணம் எடுத்துக் கொடுத்தவன். என் நண்பனை இந்த வேளையில் நான் காப்பாற்ற வேண்டாமா?' என்று வேகமாக அவன் யோசித்தான்.

"மச்சான், நீ வெளியில வராத. பேசாமல் உள்ள இரு" என்று சுப்பையாவிடம் சொல்லிவிட்டு, திடீரென மடப்பள்ளியால் சின்னத்தம்பி வெளியில் வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாரைத் தேடுறியள்?"

"சுப்பையாச் சம்மாட்டியை"

"ஏன்?"

"நீர் ஆர் அதைக் கேட்க?"

"நான் அவன்ர நண்பன். அவன்ர கடனுக்கு நான்தான் பொறுப்புக் கையெழுத்து போட்டனான்"

"ஓ! அப்படியா? அப்படியெண்டால் நட, நட, நீ நட" என்று சின்னத்தம்பியின் கைகளில் விலங்கிட்டு, அவனை அழைத்துச் சென்றனர்.

காவல் துறையின் ஜீப் வாகனம் சென்று விட்டது. சுப்பையா பிள்ளையார் கோயிலின் வாசலில் நின்று கண் கலங்கி, வாய்விட்டு அழுதான்.

"எனக்காக என் நண்பன் காப்புச் சுமந்து கைவிலங்குடன் போறானே" என்று மனம் கலங்கி நின்றான். சில நிமிடங்களில் மனதை உசார்ப் படுத்திக்கொண்டு கிழக்குப் பக்கம் வேகமாக நடந்தான்.

அது ஒரு சிறிய கிராமம். ஒரு இயந்திர வாகன இரைச்சல் கேட்டாலே போதும். ஏன் வந்தது? என்ன விசயம்? என்ற விபரங்கள் காட்டுத் தீ போல் ஊரெல்லாம் உடனடியாகப் பரவிவிடும்.

அவ்வூரின் பெரிய மனிதரான கூத்துக் கலைஞர் கதிர்காமர் இச்செய்தியை அறிந்தார். அவர் சுப்பையாவுக்கு மாமன் முறையானவர்.

பிள்ளையார் கோயிலடியை நோக்கி, கதிர்காமர் வேகமாக வந்தார். வழியில் மருமகன் சுப்பையாவைக் கண்டார்.

"மருமோன், துலைக்கோ போறியள்?"

"அது வந்து மாமா..."

"எல்லாம் நான் அறிஞ்சன் மருமோன். நீங்கள் ஒண்டுக்கும் கவலைப் படாதயுங்கோ. கோயில் பூசையை முடியுங்கோ. முடிஞ்சதும் உங்கட வீட்டைபோய்ப் படுங்கோ. காலமைக்கு நாங்கள் ரண்டுபேரும் பருத்துறை போவம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாமா! இரண்டாயிரம்..."

"மருமோன் எல்லாத்துக்கும் நான் இருக்கிறன். ஒன்றுக்கும் நீங்கள் யோசியாதையுங்கோ. நான் என்ர தென்னங்காணி உறுதியை பொறுப்பு வைச்சு, உங்களை மீட்கிறன்"

"மாமா நான் செத்தாலும் உங்களை மறவன் மாமா"

"அப்புடிக்குச் சொல்லாதையுங்கோ மருமோன். நான் என்ன புறத்தியானோ? நாளைக்கு எல்லாத்தையும் பருத்துறையில நாங்கள் வெல்லுவம். இப்ப யோசியாமல் நீங்கள் போங்கோ"

சுப்பையா தன் நண்பனை இழந்த சோகத்தில் கோயிலுக்குப் போகவில்லை. வீடு நோக்கிச் சென்றான். அன்றிரவு அழுதுகொண்டு படுத்தான். எப்போது விடியும் என்று காத்திருந்தான்.

மறுநாள், காணி உறுதியை ஈடு வைத்து இராமையரின் பணத்தைக் கோட்டில் கட்டி நண்பன் சின்னத்தம்பியையும் மீட்டுக்கொண்டு, மூவருமாக ஊர் வந்து சேர்ந்தனர்.

சுப்பையாவுக்கு இப்போது பத்தாயிரத்துக்கு மேல் கடன் இருந்தது. சுப்பையாவின் வலை வள்ளத்துக்கு விலை மதித்து ஐயாயிரம் போட்ட செல்லையாச் சம்மாட்டி, மிகுதிப் பணத்தை உழைத்துத் தருமாறு சுப்பையாவிடம் சொன்னார். மாமன் கதிர்காமரின் இரண்டாயிரமும் வட்டியும் மீளவேணும். ஊரில் நின்று சம்பளத்திற்கு உழைத்து அவற்றை மீட்க முடியாது. 'கடன்காறச்சுப்பையா' என்ற அவமானமும் நெஞ்சில் குத்தியது. எனவே தனது இளமைக்காலச் சம்மாட்டியிடம் இரவோடு இரவாக, சுப்பையா முல்லைத்தீவுக்கு பயணமானார்.

அந்த வருடங்களில் ஜப்பான் இயந்திர வள்ளம், நைலோன் வலை என்பன மேலும் மேலும் அதிகரிக்கத் தொடங்கின. மூன்று நான்கு தொழிலாளிகள் ஆழ்கடல் சென்று மீன்பிடித்து வரும் வசதிகள் இன்னும் அதிகரித்தன. அத்துடன், பங்குப்பிரிப்பு முறையுள்ள அத்தொழிலில் அதிக வருமானம் பெறக்கூடிய வாய்ப்பும் கிடைத்தது.

சுப்பையா இருபது வயது இளஞனாக இருந்தபோது, மூன்று வருடங்கள் முல்லைத்தீவில் கரைவலைத் தொழில் செய்தான். அந்த அறிமுகத்தில் இப்போதும் அதே சம்மாட்டியிடம் சென்றடைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலிப்பையாச் சம்மாட்டி என்பவர் முல்லைத்தீவில் விரல்விட்டு எண்ணக்கூடிய பணக்காரர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். இரண்டு கரைவலை, மூன்று இயந்திர வள்ளம், அத்துடன் புதிய 'பென்ஸ்' லொறிகள் இரண்டும் கொழும்புக்கு மீன் கருவாடு ஏற்றி இறக்கியபடி ஓடிக்கொண்டு இருந்தன. எல்லாமாக ஐம்பதுக்கு மேற்பட்ட தொழிலாளிகள் அவரிடம் உழைத்துக் கொண்டிருந்தனர்.

சுப்பையாவின் துன்பியல் வரலாற்றை பிலிப்பையாச் சம்மாட்டி நன்றாகக் கேட்டு அறிந்துகொண்டார். 'மண்டாடி' எனப்படும் தலைமைப் பதவியில் சுப்பையாவை அமர்த்தினார். இயந்திர வள்ளம் ஒன்றையும் சுப்பையாவின் பொறுப்பில் கொடுத்தார்.

'அன்புள்ள மனைவிக்கு. நான் நலம். உங்கள் நலமறிய ஆவல். பிள்ளைகள் கவனம். நான் இஞ்சின் வள்ளத்தில் தொழில் செய்கிறேன். பணம் தொகையாகச் சேர்ந்ததும் ஊர் வருவேன். சுதிர்காமு மாமாவின்ர கடனையும் செல்லையாச் சம்மாட்டியின்ர கடனையும் கொடுத்து முடிக்கவேணும். நீ கடிதம் போடு. நானும் மாதம் ஒரு கடிதம் போடுவன்' என்ற வாசகத்துடன், சுப்பையாவின் கடிதம் மனைவி கமலாம்பிகையின் கையில் வந்து சேர்ந்தது.

சுப்பையாவின் மகன் சிவசம்பு பத்தாம் வகுப்பிலும் வெற்றி பெற்றான். தாய் தந்தையின் உறவினர் ''அவன் படித்தது போதும். அவனை உழைக்க விடு'' என்று கமலாம்பிகையை வற்புறுத்தினர். 'தனது உடலில் ஒரு சொட்டு இரத்தம் இருக்கும் வரையில் தன் மகனைப் படிப்பிக்க வேணும்' என்று, கமலாம்பிகை தன் மனதில் சபதம் எடுத்துக்கொண்டாள்.

கையிலிருந்த சில்லறையில் ஒரு கடகப் பெட்டியை வாங்கினாள். பக்கத்து வீட்டுச் செல்லம்மாவிடம் பத்து ரூபா கடன் பெற்றாள். ஒரு தராசும் படிக்கற்களும் வாங்கிக்கொண்டாள். மறுநாள் காலையில் 'சுறிப்பெட்டியை' தூக்கித் தன் தலையில் வைத்தாள் கமலாம்பிகை.

18

சீமை எனப்படும் இங்கிலாந்துக்கும், மலேசியா சிங்கப்பூர் மத்தியகிழக்கு முதலிய பல நாடுகளுக்கும், கிரேக்கக் கப்பலுக்கும் படிக்கவும் உழைக்கவுமென தொடர்ச்சியாக இலங்கை மக்கள் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனர். அதனால் பெறப்பட்ட அந்நியச் செலாவணிக் கவர்ச்சியானது உள்நாட்டு மக்களிடம் ஒருவகைச் 'சிலுசிலுப்பை' தூண்டியதால், எப்படியாவது 'பிளேன்' ஏறவேணும் என்னும் கனவுக்குள் பலர் தள்ளப்பட்டனர்.

1983 ஆம் ஆண்டு ஆடி மாதம் தென் இலங்கையில் நடந்தேறிய மோசமான இனக்கலவரத்தின் பின்புதான் ஐரோப்பா அமெரிக்கா கனடா போன்ற நாடுகளுக்கும் ஈழத் தமிழர்கள் குடும்பம் குடும்பமாக, பெரும்பாலும் அகதிகளாக புலம் பெயரத் தொடங்கினர்.

வீட்டுப் பணியாளராக இளம் பெண்களும் துறைமுக தொழிற்சாலைப் பணிகளுக்கென இளம் ஆண்களும் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் 1980களிலேயே சிங்கப்பூர் நாட்டுக்குச் சென்றனர். அங்கு பணி செய்யும் இலங்கை மக்கள் தமது ஓய்வு நாட்களில் சிரங்கூன் சந்தை, கோயில்கள், பூங்காக்கள், படமாளிகைகள் போன்ற பொழுதுபோக்கு இடங்களில் ஆளுக்காள் தமக்குள் அறிமுகமாகினர்.

அந்த அந்நியச்சூழலில் தோன்றிய 'தாய்நாட்டு' உணர்வானது அவர்களுக்குள் சில சிநேகித உறவுகளையும் ஏற்படுத்தின. மேற்குலகு போன்ற கலப்புப் பண்பாட்டைக் கொண்டிருந்த சிங்கப்பூர், அவர்கள் சகசமாகப் பழகுவதற்கு வாய்ப்பையும் வழங்கியது. அவர்களில் சிலர் காதலித்தனர். சில சோடிகள் அங்கு தற்காலிகமாக வாழ்ந்து தமது காலத்தைக் கடத்தினர்.

இப்படியாக பூங்காவனம் புல்வெளி கோயில் திருவிழா பிறந்தநாள் கொண்டாட்டம் போன்ற இடங்களில் கலந்து மலர்ந்ததுதான், சந்திரன் - சிறீதேவி காதலும்.

அவள்: காற்றுத் துரத்த கடும் வேகத்தில் ஓடும் வெண் மேகம். அடிவானில் தோன்றும் அந்திச்சூரியன். நினைத்ததும் மழை தரும் முகில். இரத்தின தீபத்தின் கரு நீலக் கண். ஆழிச் சுழிக் கன்னம். உணவு ஊட்டும் உதடு. ஒடியும் இடை. வாழைத் தொடை.

அவன்: பெயர்தான் சந்திரன். ஆயினும் கிழக்கே உதிக்கும் சூரியன். கண்களில் கூரிய அம்புகள். குத்தி நிற்கும் தலைமுடி. நெஞ்சு நிமிர்ந்த நடை. உழைப்பில் இறுகிய தசைக்கட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இருவரும் ஒரே பிரதேசத்தில் ஆனால் வேறு வேறு ஊர்களில் பிறந்து வளர்ந்தவர்கள் என்பதால் விதிவடிவில் அவர்கள் ஒன்று சேர்ந்தனர் போலும். மலர்ந்து காய்த்து கனிந்தது அவர்களின் காதல்.

"அந்தக் கடவுள்தான் எங்கள இப்புடி இணைச்சு வைச்சிருக்கிறார் போல"

"உண்மைதான். நாங்கள் இலங்கை எண்டாலும் ரண்டுபேரும் வடபகுதியாய்ப் போனம்" என்று சொல்லி சிரித்தான் சந்திரன். அவனின் வலதுகை அவளின் இடையை வளைத்தபடி பூங்காவின் செடி மறைவில் புல் தரைநோக்கி நடந்து சென்றனர்.

கட்டிவைக்க முடியாமல் அறுத்துச் சென்றன ஆண்டுகள் இரண்டு.

சிங்கப்பூர் 'சாங்கி' விமான நிலையத்தில் பயணிகளை அனுப்ப வருவோர் அமரும் இளைப்பாற்று மண்டபத்தின் இருக்கைகளில், சந்திரன் சிறீதேவி இருவரும் நெருங்கியபடி அமர்ந்திருந்தனர். அவர்களுக்கிடையே அடிக்கடி நீட்சியற்ற உரையாடல் நடைபெற்றது. அதன்பின் சிறிது நேர மௌனம் சந்திரன்தான் கூடுதலாக கதைத்தான். அவளுக்கு ஆறுதல் மொழி கூறினான். பொங்கி வரும் தன் கண்ணீரை கைக்குட்டையால் சிறீதேவி அடிக்கடி துடைத்துக்கொண்டாள்.

"நீர் ஒன்றுக்கும் யோசியாதையும். என்ர அம்மா அப்பா உம்மை கவனமாய் பாப்பினம்"

"அதுசரி, நீங்கள் எப்ப சந்திரன் ஊர் திரும்புவியள்?"

"என்ர ஒப்பந்தம் முடிய இன்னும் ஒரு வருசம் இருக்கு. அது முடிய உன்னிடம் நான் ஓடி வாறன். அது மட்டும் நீ எங்கட வீட்டில கவனமாய் இரு"

"என்ர அம்மா அப்பா சகோதரங்களை நினைக்கத்தான் எனக்கு நெஞ்சு வெடிக்குது. நான் எங்கட ஊர்ப்பக்கம் இனி தலை வைச்சும் படுக்கேலாது. சந்திரன், நாங்கள் இனி குடும்பமாத்தான் என்ர பிறந்த வீடு போக வேணும்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி சரி, கனக்க எல்லாம் மண்டையைப் போட்டு குழப்பாதையும். ஒரு வருசம் எண்டது, டக்கெண்டு போவிடும். அதுக்குப்பிறகு நான் கெதியா வந்து எங்கட வீட்ட இறங்கிறன். அவ்வளவும் என்ர ஐயா அம்மாவோட அங்க கவனமாய் நீ இரு" என்று உறுதி மொழி சொல்லி விடைகொடுத்து சிறீதேவியை பிளேனில் அனுப்பி வைத்தான் சந்திரன்.

சிங்கப்பூர் எயர்லைன் விமானம் கொழும்பு நோக்கிப் புறப்பட்டது....

சந்திரன் தனது தங்குமிடம் நோக்கி ரைக்சியில் சென்று கொண்டிருந்தான். கடந்த சில சம்பவங்களை யோசித்தான்: சிறீதேவி வேலைசெய்த வீட்டு உரிமையாளரை கெஞ்சி மன்றாடியது, பல இடரின் மத்தியில் அவளின் தொழில் ஒப்பந்தத்தை முடிவு செய்தது, சந்நிதி முருகனுக்கு நேர்த்தி வைத்தது, ஒரு கிழமையாக ஆளுக்காள் ஆறுதல் கூறியது, கூடிய நேரங்களை இருவரும் தனிமையில் செலவிட்டது, ஆறுமாதம் கடந்து வயிறு வீங்கி வெளியில் தெரிவதற்கு முன்னம் விமானத்தில் அவளை ஏற்றி அனுப்பியது போன்ற நிகழ்வுகள், அவனது நினைவுத்திரையில் ஒரு தொடராக ஓடிக்கொண்டிருந்தன.

விமான நிலைய வாசல் கடந்து, கொழும்புப் புறக்கோட்டையை சிறீதேவி வந்தடைந்தாள். விடுதி ஒன்றில் அறை எடுத்து குளித்து மதிய உணவு உண்டு, சிறிது நேரம் பயணக்களை ஆறினாள்.

யாழ்ப்பாணம் நோக்கி பின்னேரம் ஆறு மணிக்குப் புறப்படுகின்ற இரவுத் தபால் புகையிரதத்தில் ஏறி உட்கார்ந்தாள். புகையிரதம் ஓடுகின்ற தண்டவாள ஓசை, தரிப்பிடங்களில் பயணிகள் இறங்கி ஏறும் ஆரவாரம், நிலைய அதிபர்கள் ஊதும் குழல் சத்தம், "வட வடேய்....." "தெமிலி தெமிலி" என்னும் புகையிரத மேடையில் நடைபெறும் வியாபாரக் கூச்சல் எதுவுமே சிறீதேவியின் காதில் புகவில்லை. தூக்கமும் வரவில்லை. நினைவலைகள் எங்கோ பறந்து சென்றன. அவளின் உடல் மட்டும் புகையிரத இருக்கையின் மூலைக்குள் சரிந்து வளைந்து சுருண்டு, அசைந்து கொண்டிருந்தது.

ஆனையிறவு கடந்து ஓடிக்கொண்டிருந்த புகையிரதம் கொடிகாமம் தரிப்பு நிலையத்தில் நின்றபோது கையில் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணப்பெட்டியும் தோளில் தொங்கும் கைப்பையுடனும் அதிகாலை ஐந்து மணியளவில் புகையிரத மேடையில் கால் வைத்தாள் சிறீதேவி.

'தபால் பேரூந்தின்' இருக்கைகள் நிறைந்து எஞ்சிய பயணிகள் முகட்டுக் கம்பியைப் பிடித்தபடி நின்றனர். வேகம் குறையாமல் உறுமிக்கொண்டு பருத்தித்துறை நோக்கி பேரூந்து விரைந்தது. இரவு முழுவதும் உறங்கிக் கிடந்த பனிக்காற்று பேரூந்தின் சாளரக் கண்ணாடி ஓரமாக இருந்து பயணிப்போரின் முகத்தை தடவி உசார்ப் படுத்தியது. வீடுகள் பற்றிய அவர்களின் ஆவலை குளிர்காற்று மேலும் அதிகரிக்கச் செய்தது.

கிழக்கே பொன்நிறம் மினுங்குகிறது. மக்கள் நடமாடத் தொடங்கிவிட்டனர். சைக்கிள் வண்டிகள் சிலது விலத்திச் செல்கின்றன. மாட்டுவண்டில் ஒன்று வாழைக்குலைகள் ஏற்றிக்கொண்டு கடகடவெனச் செல்கிறது. 'ஹோங்' அடித்துக்கொண்டு தட்டி வான் ஒன்று தெற்கே ஓடுகிறது.மாணவர்கள் அதிகாலை ரியூசன் வகுப்புக்குப் போகிறார்கள். கடகப் பெட்டிகள் தலையில் வைத்த பெண்கள் வடதிசையிலுள்ள சந்தை நோக்கி நடக்கின்றனர். 'கடுகதி' மினிபஸ் ஒன்று நெடுஞ்சாலையில் யாழ்ப்பாணம் நோக்கி விரைகிறது.

பருத்தித் துறையை அண்மித்து, பேரூந்திலிருந்து இறங்கிய சிறீதேவி பலவித காலைக் காட்சிகளைத் தன் கண்ணில் வாங்கியவாறு நடந்து சென்றாள்.

பயணப்பெட்டி அவளால் தூக்கக் கூடிய பாரம்தான். இருப்பினும் நீண்ட நேரம் அதைத் தூக்கிக்கொண்டு ஒரே மூச்சில் சிறீதேவியால் நடக்க முடியவில்லை. ஐம்பது மீற்றர் தூரம் நடப்பதும் தெரு ஓரமாக பயணப்பெட்டியை வைத்துவிட்டு களைப்பு ஆறுவதும் மீண்டும் முன்னேறி நடப்பதுமாக அவள் நகர்ந்தாள். அவளின் முகம் அதிகமாக வியர்த்து வழிந்தது. அசாதாரண ஒருவித உடற்களையை சறீதேவி அன்றுதான் உணர்ந்தாள்.

தலையில் சுமையுடன் நடுவயதுப் பெண் ஒருவர் எதிரில் வந்து கொண்டிருந்தாள். அவளிடம் தான் செல்லும் முகவரியை சிறீதேவி விசாரித்தாள். அப்படி இப்படி கையால் இடம் காட்டி, விளக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிவிட்டு அப்பெண் சென்றாள். அவள் சொன்னபடி எதிரில் வந்த ஒழுங்கையால் திரும்பி, இன்னொரு சிறிய தெருவில் நடந்தாள் சிறீதேவி. சிறிது தூரத்தில் சில சுற்று மதில் வளவுகளுக்குள் பல கல்வீடுகள் தெரிந்தன. அப்போது அவள் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தாள். 'அவற்றில் ஒன்றுதான் நான் வலதுகால் வைக்கப்போகும் புகுந்த வீடு' என்று நினைத்தபோது சிறீதேவியின் உடற் களையை, அந்த உயர்ந்த எண்ணம் வெட்டிச் சாய்த்தது.

அது ஒரு சுற்றிவர மதில் வைத்த வளவு. அதற்குள் ஐந்து ஆறு அறை உள்ள பெரிய ஒரு வீடு. இரும்புக்கம்பித் தடைகளால் செய்யப்பட்ட வெளிக்கதவு. கார், லொறி செல்லக்கூடிய விசாலமான சிறகு கொண்ட 'அசைகதவு'. கள்ளர் ஏறிப்பாய முடியாதபடி ஆணி, கண்ணாடிக்கீற்று முதலிய கூரிய கருவிகள் பதிக்கப்பட்ட உயர்ந்த மதில். முன் வீட்டில் கார் நிறுத்தக்கூடிய தலைவாசல் கூரை. அதன் இருமருங்கும் கிளைவிட்டுச் சடைத்து வளர்ந்துள்ள பாதிரி முல்லைகள். அவை பூத்துக் குலுங்கும் நட்சத்திர மலர்கள்.

வாடி உதிர்ந்து பழுத்துக் காய்ந்த பூக்களும் இலைகளும் மரங்களின் கீழ் சிதறிக் கிடந்தன. உதயத்தில் தலைமுழுகி, துவாயால்; தலையைமூடி கூந்தலுடன் சேர்த்து கொண்டை போட்ட இளவயதுப் பெண் ஒருத்தி; அவள் அநேகமாக அவ்வீட்டு எசமானியாக இருக்கலாம்; அவள் நின்றுகூட்டும் விளக்குமாறால், தனது உடல் நோகாதவாறு கூட்டி ஒதுக்கிக் கொண்டிருந்தாள்.

அவளை நோக்கி "அம்மா" என்று அழைத்தாள் சிறீதேவி.

கூட்டுவதை நிறுத்தி விளக்குமாற்றில் இரு கைகளையும் பிடித்துக்கொண்டு நிமிர்ந்து, சிறீதேவியைப் பார்த்தாள் அப்பெண்.

"அம்மா, நாகமணி எண்ட ஆளின்ர வீடு, இங்கின எங்க அம்மா இருக்கு? ஒருக்கால் எனக்குக் காட்டுறியளோ அம்மா?" என்று கேட்டாள் சிறீதேவி.

"ம்..... அடுத்த தெருவிலயும் ஒரு நாமணி இருக்கு. கிழக்குப்பக்கமுள்ள நாற்சந்திக்குக் கிட்டயும் ஒரு நாகமணி இருக்கு. பிள்ளை, நீங்கள் எந்த நாமணியைத் தேடுறியள்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருவில் நின்றபடி பேசிய சிறீதேவி, சிறிது முன்னோக்கி தலைவாசற் கதவோரம் வந்தாள். வீட்டுக்காரப் பெண்ணும் சிறிது முன்னே நகர்ந்தாள். தான் தேடிச்செல்லும் முகவரியை அவளிடம் காண்பித்தாள்.

அப்பெண் அதை வாங்கி வாசித்துப் பார்த்தாள். அந்த முதலாளி அம்மா வெளி உலகத்தை ஆழமாகப் பார்க்கிற ஒரு ஆளல்லப்போல. அவள் ஏறினால் கார், இறங்கினால் வீடு. அவளுக்கு ஒழுங்கையின் பெயர் மட்டும் தெரிந்தது. ஆனால் அது எங்கு இருக்கு? என்று குறிப்பிட்டுச் சொல்வதற்கு அவளால் முடியவில்லை.

"எனக்குச் சரியாத் தெரியல்லப் பிள்ளை. நீங்கள் உந்தப்பக்கமாக நாலு வளவுதள்ளி, ஆரிடமும் விசாரிச்சுப்பாருங்கோ பிள்ளை" என்று பரிந்து கூறி சிறீதேவியை அனுப்பி வைத்தாள்.

சிறீதேவி அதே தெருவில் கிழக்கு நோக்கி நடந்தாள். சையிக்கிள் ஒன்று எதிரில் வந்து கொண்டிருந்தது. அந்தச் சையிக்கிள் அவளை அண்மிக்கும்போது அரைக் காற்சட்டையும் அரைக்கை மேற்சட்டையும் காக்கித் துணியில் அந்நபர் அணிந்திருப்பதால் அவர் ஒரு தபாற்காரன் என்பதைப் புரிந்துகொண்டதில் சிறீதேவிக்கு மட்டற்ற மகிழ்ச்சி மின்னியது.

"அண்ண..... இதில கொஞ்சம் நில்லுங்கோ"

அவர் திடீரெனப் பிறேக்போட்டு நின்றார்.

"அண்ண நான் இடம் வலம் தெரியாமல் அலையிறன். தயவு செய்து இந்த வீட்டு விலாசம் எங்க இருக்கெண்டு, ஒருக்கால் பாத்துச் சொல்லுங்கோ அண்ண''

சந்திரன் கொடுத்த முகவரியை தபாற்காரனிடம் நீட்டினாள். அவர் அதை வாசித்தார் சிறிதேவியை மேலும் கீழுமாக ஒருமுறை பார்த்தார்.

"பிள்ளை! உதால நேரே போங்கோ. ஆறு ஏழு வளவுதாண்ட ஒரு ஒழுங்கை வரும். அந்த ஒழுங்கையால வடக்குப் பக்கமாகப் போங்கோ. அதில வாற மூண்டாவது வளவுதான் இந்த விலாசம்"

"அண்ண சரியாப் பாத்துத்தான் சொல்லுறியளோ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிள்ளை, பன்ரண்டு வருசமாய் நான் இந்த ஏரியாவில தபால் குடுக்கிறன் .போங்கோ போங்கோ போய்த் தேடிப்பாருங்கோ" என்று சொல்லிக்கொண்டே, தத்தி தத்தி ஏறி எழும்பி 'பெடலை' உதைந்ததும் சையிக்கிள் விரைந்து மறைந்தது.

தார் பூசிய அந்தத் தெருவின் இரு மருங்கும் வளவுகளைப் பார்த்தபடி சிறீதேவி நடந்தாள். தபாற்காரன் குறிப்பிட்ட அந்த ஒழுங்கை வந்தது. அது கல்போட்டு ஊரி பரவியுள்ள சிறிய ஒரு தெரு. அகலம் குறைந்தது. தெருவின் இருபக்கமும் குடிசை வீடுகள் காணப்பட்டன. மூன்றாவது வளவுப் படலைக்கு முன்னால் பயணப்பெட்டியை வைத்து சில நிமிடங்கள் களைப்பு ஆறினாள். அதேநேரம் நான்கு பக்கமும் நோட்டம் பார்த்தாள்.

'தபால்காரன் சரியாத்தான் விலாசம் சொல்லியிருப்பார். நான்தான் தெரு மாறி வந்திட்டனோ?' என்று ஒருமுறை யோசித்தாள். எதற்கும் உந்த வீட்டில் ஒருக்கால் விசாரித்துக்கொண்டு தொடர்ந்தும் தேடிப்பார்ப்பம் என்று முடிவெடுத்தாள். 'கண்டிப்பாய் என்ர சந்திரன்ர வீடு, இந்தச் சூழலில இருக்காது' என்று மனதுக்குள் நினைத்தவாறே .

"வீட்டுக்காறர்..... வீட்டுக்காறர்....." என்று குரல் கொடுத்தாள்.

"ஆரது ?" என்ற வினாவுடன் அடுப்படி வீட்டால் வெளியேறிய பெண் ஒருத்தி வளவின் முற்றத்தில் நின்று எட்டிப்பார்த்தார். நடுத்தர வயதிருக்கும். சுமாரான அழகி. மேற்சட்டை இல்லை. புடவையை உயர்த்தி மார்பை மறைத்து 'குறுக்குக்கட்டு" கட்டியிருந்தார். கழுத்துக்குக் கீழ் இருபக்கமும் காறை எலும்புகள் தெரிந்தன.

"அது நான்தானம்மா. நாகமணி வளவு எங்க இருக்கெண்டு விசாரிக்கத்தான் உங்களை கூப்பிட்டனான் அம்மா" என்றாள் சிறீதேவி.

அந்த வீட்டுக்காரப்பெண் கிழக்கேயுள்ள தனது வளவுப் படலைக்கு மெல்லமாக நடந்து வந்தார். படலையைத் திறந்து உள்ளே நின்றுகொண்டு தோளில் கைப்பை தொங்கியபடி வெளியில் நிற்கும் சிறீதேவியை கீழிருந்து மேலாகப் பார்த்தார்.

'இந்தப் பிள்ளை..... ஒரு உயர்ந்த குடும்பத்துப் பிள்ளைபோல கிடக்குது. ஏதோ வழி தவறி வந்துட்டுது போல. நல்லாய் விசாரிச்சு, என்னாலான உதவியைச் செய்வம்' என்று நினைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உதில வெளியில நில்லாத பிள்ளை. இஞ்ச கொஞ்சம் உள்ள வா பிள்ளை. இந்தப் பூவரச நிழலுக்க நிண்டு கதைப்பம்" என்று சொல்லி வளவின் உள்ளே அழைத்தார். தென்னம் கிடுகால் கட்டப்பட்ட வெளிவாசல் படலையைச் சாத்திக்கொண்டே, சிறீதேவியும் உள்ளே சென்றாள். கண்களைச் சுழற்றி அந்த வளவை நோட்டம் விட்டாள்.

ஏறத்தாழ நாலு பரப்பு நிலம் இருக்கும். அதற்குள் ஏழெட்டுப் பனைகள். கிழக்குப் பக்கம் அடுப்படிவீடு என்பதை புகை படிந்த சுவர் தெரிவித்தது. அந்த அடுப்படிக்கு களிமண் சுவர் வைத்து, பனம் மட்டை வரிந்து, காவோலையால் கூரை வேயப்பட்டிருந்தது. முற்றத்தில் ஒரு கொட்டில். அது கிடுகால் வேயப்பட்டு, கிடுகுத்தட்டியில் மறைப்புப் போடப்பட்டிருந்தது. தென் மேற்கு மூலைக்குள்ளே தெரிந்த கோழிக்கூட்டை, ஏறத்தாழ எட்டடி உயரத்தில் நான்கு தடிகள் தாங்கி நின்றன. அதன் முன்னே சிறிய ஒரு கொட்டில். அதற்குள் ஒரு ஆடும் குட்டியும் முன்னங் கால்களைத் தூக்கி, உட்கூரையில் தொங்கும் குழைக்கொப்பை கடித்துத் தின்றபடி நின்றன. வடக்குப் பக்கத்தில் கல் வீட்டுக்கான அத்திவாரம் ஒன்றும் புதிதாகப் போடப்பட்டிருந்தது. அதற்குப் பக்கத்தில் காய்ந்த புதிய சுவர்க் கற்கள், ஒரு ஆள் அளவு உயரத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

'பெரிய ஒரு வீடு எழும்பப் போகுதுபோல' என்று மனதுக்குள் யோசித்தபடி நின்றாள் சிறீதேவி.

"என்ன பிள்ளை யோசிக்கிறியள்?"

திடுக்கிட்டு, நினைவிலிருந்து திடீரென விடுபட்ட சிறீதேவி "அம்மா நாகமணி வீட்டைக் காட்டுறியளோ, நான் அங்க கெதியாய்ப் போகவேணும்" என்று உடனடியாகக் கேட்டாள்.

"பிள்ளை! என்ர அவருக்கும் பேர் நாகமணிதான். அடுத்த குறிச்சிக்குள்ளயும் நாகமணி எண்ட பேர்வழியில ஆட்கள் சிலர் இருக்கினம். அது சரி பிள்ளை நீங்கள் ஆர்? எங்க இருந்து வாறியள்? அதுகளைக் கொஞ்சம் விபரமாய்ச் சொன்னால் அறிஞ்ச ஆட்கள் வீட்டுக்கு உங்களை நான் கூட்டிப் போகலாமெல்லே".

'உந்த மனிசி சரியான இரக்கமுள்ள மனுசிபோல கிடக்கு. என்ர மனச்சுமையில கொஞ்சத்தை உவாட்ட இறக்குவம். எப்புடியும் என்ர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரன் வீடு கண்டுபிடிக்கத்தானே வேணும்' என்று நினைத்துக்கொண்டு, சிறீதேவி பேச்சைத் தொடர்ந்தாள்.

"அம்மா, உங்களைப் பாக்க என்ர அம்மாவின்ர ஞாபகம்தான் எனக்கு வருது. உங்களட்ட நான் என்ர உண்மையைச் சொல்லுறன். நான் சிங்கப்பூரால நேரா இங்க வாறன். என்ர புருசன் சிங்கப்பூரில வேலை பாக்கிறார். அவர்தான் கடிதம் போட்டோ விலாசம் எல்லாம் தந்து, என்னை இங்க பயணம் அனுப்பி வச்சவர். அதுதானம்மா அவற்ர வீட்டைத் தேடி திரியிறன்" என்று, தன் உண்மையைக் கொட்டித் தீர்த்தாள் சிறீதேவி.

"அதுசரி, பெடியன்ர பேர் என்னண்டு சொன்னனி பிள்ளை?"

"அவர, சந்திரன் எண்டுதானம்மா கூப்பிடுறது"

'என்ர மகன்ர பேர் சந்திரலிங்கம். ஆனால் அவனுக்குப் பெண்டில் இல்லையே. பாவம் உந்தப் பிள்ளை. எதுக்கும் உந்தப்பிள்ளைக்கு, கண்டிப்பாய் நான் உதவிசெய்ய வேணும்' என்று அப்பெண் நினைத்தார்.

"எங்க, அந்த விலாசத்தை ஒருக்காக் காட்டு பிள்ளை?"

"இந்தாங்கோ" என்று விலாசமிட்ட 'கடிதக்கூட்டை' சிறீதேவி நீட்டினாள்.

'அட, எங்கட வீட்டு விலாசமாய் கிடக்குது' என்று மனதுக்குள் யோசித்தபடி "பிள்ளை, அந்தப் பொடியன்ர படத்தையும் ஒருக்கால் பாக்கலாமே?"

"ஓமம்மா, படமும் உந்தக் கடிதத்துக்க கிடக்குது. எடுத்துப் பாருங்கோம்மா"

அப்பெண் கடிதத்தைத் திறந்தார். படத்தை எடுத்தார். பார்த்தார். திகைத்தார். வாயடைத்துப்போய் நின்றார். அவளால் ஒன்றும் பேச முடியவில்லை. படத்தையே வைத்தகண் எடுக்காமல், பல வினாடிகள் பார்த்தபடி நின்றார். இரண்டு வருடத்தில் உடல் மினுமினுத்து இன்னும் அழகனாகி சிரித்தபடி, தன்முன்னே தன்மகன் உயிரோடு நிற்பதை அவனைப் பெற்ற வயிறு உணர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா! என்னம்மா! சொல்லுங்கோம்மா! இந்தாளைத் தெரியுமோம்மா! என்னம்மா, நான் கேட்டுக்கொண்டிருக்கிறன், நீங்கள் பேசாமல் உங்கட பாட்டில நிக்கிறியள்?" என்று படபடப்புடன் கேட்டாள் சிறீதேவி.

"பிள்ளை.. இது .இது என்ர.. என்ர..... ஆசை மகன் பிள்ளை. நான் பெற்ற செல்வம் பிள்ளை" என்று கூறியபடியே கண்கள் குளமாகி நின்றார் அம்மாது.

சிறீதேவிக்கு தலை சுற்றியது. கண்கள் இருண்டன. பனைகள் சுழன்றன. வீடுகள் தன்னைச் சுற்றி வலம் வந்தன. ஆயிரம் கிலோ வெடிமருந்து மண்டைக்குள் படீர் படீர் என்று வெடித்துச் சிதறியது. கைகள் கழண்டு விழுந்தன. கால்கள் சோர்ந்தன. தன்னை அச்சாக வைத்து, பூமி மின்வேகத்தில் சுழன்றது அவளை அறியாமலே அப்படியே நிலத்தில் குந்தி இருந்தாள். சரிந்து சாய்ந்தாள். அப்படி எவ்வளவு நேரம் படுத்துக் கிடந்தாள் என்பது, அவளுக்கே தெரியாது....

திடீரென முகத்தில் அடைமழை பெய்ததுபோல் இருந்தது. சிறீதேவி கண்களைத் திறந்தாள். முற்றத்துக் கொட்டிலுக்குள் பாயில் படுத்திருந்தாள். சுற்றாடல் பெண்கள் அவளை சூழ்ந்து நின்று கவனித்தனர். இள, நடுத்தர, முதியோர் பலர் அங்கு குழுமியிருந்தனர். முதிய பெண்கள் சிலர் மேற்சட்டையின்றி மாறாடியுடனும் சிலர் குறுக்குக் கட்டுடனும் இளம் பெண்கள் மூடு சட்டையுடனும் தோற்றமளித்தனர். தோளில் துண்டுபோட்ட முதிய ஆண்கள் சிலர் மழிக்காத முகத்து மயிருடனும் அங்கு காணப்பட்டனர்.

சிறீதேவி சிந்தித்தாள். பலவாறு யோசித்தாள். ஆழமான நீண்ட பெருமூச்சுடன் மனம் கலங்கினாள் அவள் யாருடனும் அங்கு பேசவில்லை. மாலை மயங்கியது. பின்னிரவில், தூக்கம் அவளது கண்களை அடைத்துக்கொண்டது

அவள் விழித்தபோது காலை ஒன்பது மணி இருக்கும். சீவல் முடித்து விற்பனை நிலையத்தில் கள்ளைக் கொடுத்து, இரண்டு போத்தல் பதநீருடன் வளவுப் படலையைத் திறந்துகொண்டு, சந்திரனின் தந்தை நாகமணி உள்ளே வந்து கொண்டிருந்தார்.

"செல்லம்மா."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னங்கோ."

"நாலு மாசப் பிள்ளைத்தாச்சி எண்டு சொல்லுறாய். வாய்க்கு நல்ல இதமாயிருக்கும். என்ர மருமோளுக்கு இந்தக் கருப்பணியை குடிக்கக் குடணை" என்று நாகமணி தான் கொண்டுவந்த பதநீர் முட்டியை தன் மனைவியிடம் கொடுத்தார்.

அந்தக் குடும்பத்தினரின் மற்றும் ஏனைய அயலவரின் அன்பு பரிவு பாசம் நேசம் இதயத்தை தடவுகின்ற உரையாடல் போன்ற கருணைக் கடலில் சிறு துளிபோன்ற சிறீதேவி படிப்படியாக இரண்டறக் கலந்தாள் 'கணவனே கண்கண்ட தெய்வம். மாமனும் மாமியும் தாய் தந்தைக்கு நிகர்' என்ற உணர்வுடன் தன் வாழ்கையை அங்கு ஆரம்பித்தாள். படித்த, அழகிய தங்கள் மருமகள் என்ற சிறப்பால், புகுந்த வீட்டிலும் கொள்ளை இன்பம் குடிகொண்டது. நாகமணியின் வீடு இப்போது ஒருவித 'பெருமையில்' மிதந்தது. 'தனது பேரப்பிள்ளையை அழகிய ஒரு கல் வீட்டில்தான் தொட்டிலில் போடவேணும்' என்ற முழு மனதுடன், வடக்கு வீடு கட்டுகின்ற வேலையை நாகமணி துரிதப்படுத்தினார்.

இவற்றையெல்லாம் அறிந்த சந்திரன் இன்பத்தில் துள்ளிக் குதித்தான். எதுவித தாமதமின்றி, அவனிடமிருந்து பணமும் ஒழுங்காக வந்துகொண்டிருந்தது. கல் வீடும் எழும்பிக் கொண்டிருந்தது.

நாகமணியின் ஊரிலிருந்து இருபது மைல் கிழக்கே, சிறீதேவி பிறந்து வளர்ந்த அந்த ஊரில் இச்செய்தி காட்டுத் தீ போல் பரவியது. கம்பர் காட்டிய கூனியின் கோபத்தைப்போல் நூறு மடங்கு ஆத்திரத்தில் சிறீதேவியின் தந்தை பஞ்சலிங்கம் துள்ளிக் குதித்தார். கைகளைத் தொடையில் அடித்தார். கத்தினார். உஸ்..... உஸ் என்று நெருப்புக்கக்க நெடுமூச்செறிந்தார்.

"எங்கட குடும்பம் உந்தச் சாதியோட ஒம்பந்தம் சம்பந்தம் வைக்கவோ? எங்கட கொப்பிலுமில்லை குடியிலுமில்லை, உந்தப்பழக்கம். எங்கட குலத்துக்கு வந்ததே.... ஈனம்" என்று சத்தமிட்டார். கோப மிகுதியால் அழுதார். வடக்கு வீட்டுச் சுவரோரமுள்ள கயிற்றுக்கட்டிலில் ஓடிப்போய், தொப்பென்று இருந்தார். தலையில் கட்டியிருந்த துவாயை கழற்றி, முற்றத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறிந்தார். மீண்டும் அதைக் குனிந்தெடுத்து ஒருமுறை உதறி திரும்பவும் தோளில் போட்டார். வெற்றிலைச் சக்கையை, காறி 'தூ' என்று வலது பக்கமாக துப்பினார்.

அவரது மனைவி மக்கள் பயந்து நடுங்கினர். பிள்ளைகள் குசினிக்குள் ஓடி ஒழித்தனர். சத்தம் கேட்டு, பக்கத்து வீட்டுக்காரர் சிலர் வந்தனர். அவருக்கு பலவித ஆறுதல் கூறினர். எவரின் சொல்லும் அவர் கேட்பதாயில்லை. சம்பவத்தை அறிந்த அவரின் உறவிலுள்ள, உற்ற நண்பன் சங்கரன் ஓடி வந்தான். தன் நண்பனின் நிலை கண்டான். மனம் கலங்கினான். பேச்சடங்கி இருந்தான். இருவரும் சில வினாடிகளாக மௌனக் கண்ணீர் விட்டனர்...

சிறிது நேரத்தில் குரலைச் செருமியபடி, சங்கரன் பேச்சைத் தொடங்கினான்.

"மச்சான்! என்னப்பா செய்யுறது. நடந்தது நடந்ததுதானே. பெற்ற மனம் பித்து. பிள்ளை மனம் உண்மையில கல்லுத்தானே. உன்ர கோபத்தை அடக்கிக்கொண்டு சும்மா பேசாமல் இரும். கொஞ்சக்காலத்தால, எல்லாம் சரியில வந்திடும்" என்று தனக்குத் தெரிந்த ஆறுதலை சங்கரன் கூறினான்.

"என்னால இந்த அவமானத்தைத் தாங்க ஏலாது மச்சான். என்னால இனிமேல் இந்த உலகத்தில வாழ முடியாது மச்சான். முடியவே முடியாது" என்று, உதடு இரண்டையும் மடித்துக்கொண்டு, விம்மி விம்மி உடல் குலுங்கி அழுதார். கண்ணீர்த் துளிகள், வெள்ளையும் கறுப்பும் கலந்த அவரின் நெஞ்சு உரோமத்தில் உருண்டு வழிந்தன. நிலத்தை நோக்கித் தலை குனிந்திருந்த பஞ்சலிங்கம், திடீரென நிமிர்ந்து வானத்தைப் பார்த்தார். குருவி ஒன்று வெள்ளை மேகத்தின் கீழே தனியனாகப் பறந்து சென்றது.

அவர் வாழ்ந்த மருத நிலச்சூழலில், பெரும்பாலும் விவசாய மக்கள்தான் வாழ்ந்து வந்தனர். அங்கொன்றும் இங்கொன்றாக, சில மாற்றுச்சாதி மக்களின் வீடுகளும் அமைந்திருந்தன.

சங்கரன் ஒருமுறை பெருமூச்சு விட்டுக்கொண்டு, "உந்தப் பேர்போன குடும்பமெல்லாம் துணி வெளுக்கிற, மயிர்வெட்டுற குடும்பங்களுக்க காதல் கலியாணம் செய்யயில்லையே! அவை எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்ப செத்துப் போட்டினமே? போகப்போக உந்தச் சாதியெல்லாம் கரைஞ்சுபோடும் மச்சான். நீர் பேசாமல் உம்முடைய தொழிலைப்பாரும். பிள்ளையள் குடும்பமாக உன்னைத்தேடி உன்ர வீட்ட வரயுக்க, உன்ர கோபம் எல்லாம் ஆறிப்போடும். அதுக்குப் பிறகு எல்லாரும் இங்க ஒண்டுதான்'' என்று, தனது நற் போதனையை சொல்லி முடித்தான் சங்கரன். பஞ்சலிங்கம் தன் கடுங் கோபத்தை அடக்கியபடி பேசாமல் மௌனம் காத்தார். அவரின் கண்கள் சிறிது மேல்நோக்கிச் செருகியிருந்தன.

"நான் சொல்லுற அளவில சொல்லிப்போட்டன். இனி எல்லாம் உன்னைப் பொறுத்தது. சரி மச்சான், நான் போட்டு வாறன் மச்சான்'' என்று சொல்லிய சங்கரன், வெளியேறிச் சென்றான்.

பஞ்சலிங்கம் அன்றிரவு வீட்டின் வெளித் திண்ணையில் படுத்திருந்தார். இரவு சாப்பிடவுமில்லை. பொழுது விடிந்து ஏழு மணியாகியும் அவர் எழும்பவில்லை. மனைவி கமலம் அவரின் போர்வையை விலக்கிப் பார்த்தார். தன் உள்ளங்கையால் அவரின் நெற்றியில் தொட்டார். காய்ச்சல் நெருப்புப்போல் காய்ந்தது. பிள்ளைகள் ஓடிச்சென்று ஊர்ப் பரியாரியை அழைத்து வந்தனர். பரியாரி ஒரு சிறிய மருந்துச் செருக்குச் சிரட்டையில் குளிசை மூன்றைப் போட்டு தண்ணிவிட்டு உரசினார். பஞ்சலிங்கத்தின் வாயைத் திறக்கச்சொல்லி ஊற்றினார். தன் கூலியை வாங்கிக்கொண்டு அவர் சென்றார்.

மறுநாளில் அவரால் எழும்ப முடியவில்லை. வலது காலும் கையும் இழுத்துவிட்டது. படுத்த படுக்கையானார். தன்னை ஒரு இடமும் கொண்டுபோக வேண்டாம் என்று மனைவி கமலத்தின் காதில் முணுமுணுத்தார். மூத்த மகள் பத்மாவதிக்கு, செய்தி பறந்தது. ஊர்ப்பரியாரி மாற்று மருந்து கொடுத்துக் கொண்டிருந்தார். ஆறாம் நாள் அதிகாலை நான்கு மணியளவில் அவர் நாட்டி நீர் ஊற்றி வளர்த்த மிளகாய் புகையிலைக் கன்றுகளைத் தழுவி வந்த குளிர்காற்றுடன், அவரின் மூச்சும் கலந்து சென்றது.

வெள்ளாளர் சுடலையில் எரிக்கப்பட்ட பஞ்சலிங்கத்தின் அஸ்தி, வயல் வெளியின் மத்தியில் அமைந்துள்ள தாமரைக் குளத்து நீருடன் மூன்றாம் நாளில் கரைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19

அந்த மகன் பிறந்த மகிழ்ச்சியில் செல்லையாச் சம்மாட்டியார் சோதிடரிடம் ஓடினார். சோதிடர் சாதகத்தைக் கணித்துப் பார்த்தார். ஆச்சரியத்துடன் சம்மாட்டியின் முகத்தை நோக்கினார்.

"சம்மாட்டியார் உங்களுக்கு இனி என்ன குறை. உங்களுக்கு இனி வெள்ளி திசை தொடங்கப்போகுது" என்று தன் தொடையில் அடித்துச் சொன்னார். சோதிடர் சொன்னதுபோல் செல்லையாச் சம்மாட்டிக்கு அள்ளிக்கொட்டிய வெள்ளிதிசை கைகால் வழங்காத அந்த மகன் இறந்தவுடன், அவனுடன் கூடவே சென்று விட்டது. காலமாற்றம் என்பது சொல்லிக்கொண்டு வருவதில்லை. பணம் என்பது 'பாலைவனத்தின்' மண்மாதிரி என்னும் தத்துவம், அவர் வாழ்விலும் நிகழ்ந்தது.

மீன்பிடித் தொழிலில் நவீனத்துவம் புகுந்தது. கரைவலையைக் கட்டி இழுத்த கூலித் தொழிலாளிகள் தமது மனைவி மக்களின் நகைகளை விற்றனர், அல்லது அடகு வைத்து பணம் எடுத்தனர். சிலர் தமது காணித்துண்டுகளை ஈடு வைத்து பணம் பெற்றனர். இயந்திர மோட்டர் பூட்டிய கட்டுமரம், இயந்திர வள்ளம், பலவித கண்களில் நைலோன் வலை வகைகள், ஆழ்கடல் தூண்டில் வலை முதலிய கருவிகளை கொள்முதல் செய்தனர். தனித்தொழிலாளர் எனும் ஒரு கூட்டம் ஊர்களில் பெருகியது. முன்னைய கூலித்தொழிலாளிகள் இப்போது தமக்குத்தாமே சிறு முதலாளியாகி உழைக்கத் தொடங்கினர்.

சம்மாட்டிமாரிடம் மாதச் சம்பளத்துக்கு கூலியாக உழைத்த தொழிலாளரின் தொகை இப்போது படிப்படியாக குறையத் தொடங்கியது. சம்மாட்டிமார் கொடுக்கும் சம்பளத்திலும் பார்க்க, இந்தத் தனி முயற்சிகளில் உழைக்கும் வருமானம் அவர்களுக்கு அதிகமாகக் கிடைத்தது. அதனால் மேலும் மேலும், தொழிலாளிகள் சம்மாட்டிமாரின் கரைவலையை விட்டு விலகினர். அவர்களின் கைகளில் பணப்புழக்கமும் பரவலாகக் காணப்பட்டது.

மகன் இறந்த அந்த வருசத்திலேயே தொழில் செய்வதற்கு போதிய ஆட்கள் இன்மையால், தனது ஒரு கரைவலைக்குரிய வள்ளம் வாடிச் சாமான்கள் எல்லாவற்றையும் செல்லையாச் சம்மாட்டியார் விற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறத்தாழ பதினைந்து தொழிலாளருடன் இரண்டாவது கரைவலையை அவர் நடத்திக் கொண்டிருந்தார். பெருகிய நைலோன்வலை வள்ளங்கள் என்பன உயர்கடல் சென்று மீன்பிடித்து வந்தன. இதனால் கடற்கரை நோக்கி வருகின்ற மீன் இனங்கள் குறைவடையத் தொடங்கின. 'கரைவலைமீன்பிடி' இத்தாக்கத்தால் நாளடைவில் நலிவடையத் தொடங்கியது.

செல்லையாச் சம்மாட்டியின் சேமிப்பும் கரையத் தொடங்கியது. முதலில் அசையும் சொத்துக்களை விற்கத் தொடங்கினார். மோட்டார்க்கார், வான், உழவு இயந்திரம், இயந்திரவள்ளம், இயந்திரக் கட்டுமரம், வலை வகைகள் முதலியனவற்றைப் படிப்படியாக விற்றார். அந்தப் பணத்தில் இரண்டு ஆண்டுகள் ஓரளவில் உருண்டோடின. மூன்றாம் ஆண்டில் காணி தோட்டம் வயல் நிலங்களையும் விற்கத் தொடங்கினார்.

அது ஒரு பின்தங்கிய கிராமம். அங்கு வங்கி நிறுவனங்கள் இல்லை. வங்கித் தொடர்பு வைப்பதாயின் பல மைல் பயணம் செய்து பட்டணம் செல்லவேண்டும். செல்லையாச் சம்மாட்டியார் படிப்பறிவு குறைந்தவர். கை எழுத்து மட்டும் அவருக்கு வைக்கத் தெரியும். தனக்கு வங்கித் தொடர்பு ஒத்துவராது என்பதால், தனது சேமிப்புக்களை தங்க நகைகளாகவும் தங்கக் காசுகளாகவும் சேர்த்து வைத்திருந்தார். இறுதிக் காலத்தில் அவைதான் கைகொடுக்கும் என்று நம்பி இருந்தார்.

ஒருநாள் இரவு தெற்கு வளவில் அவர் தங்கியிருந்தபோது, அவரின் வீட்டில் உளவறிந்து திரிந்த யாரோ எவரோ, வடக்கு வளவிலுள்ள பூசைஅம்மன் வீட்டுக் கூரையின் ஓட்டைக் கழற்றி, முகட்டு வளையில் கயிறுகட்டி வீட்டுக்குள் இறங்கி, அவரின் இரும்புப் பெட்டியைக் களவாடிச் சென்றுவிட்டனர்.

தனது சொத்து முழுவதும் பறிபோய்விட்டதே.... என்று வயிறு குலுங்கக்குலுங்க பூசை வீட்டின் முற்றத்தில் இருந்து, அவர் வாய்விட்டு அழுதார். ஐயோ என்று அடிக்கடி அவர் கத்தினார். நான் தேடிய செல்வமெல்லாம் கொள்ளை போய்விட்டதே என்று கதறினார். செல்லையாச் சம்மாட்டியாரின் கையறு நிலைகண்ட உற்ற நண்பர் சிலர் அவருடன் சேர்ந்து குழறி அழுதனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பூசை அம்மனே! நீயும்தான் பார்த்துக்கொண்டு இருந்தியோ...?" என்று பூசைஅம்மனாக வழிபடும் பூசைப்பானையை தூக்கிக்கொண்டு வடக்கே ஓடிச்சென்றார். அதை கடலுக்குள் வீசி எறிந்தார். கவலை மிகுதியால் முகம் கவிழ்ந்தபடி முற்றத்தில் கிடந்தார். மூன்று நாளாக அவர் உண்ணாமல் படுத்துக் கிடந்தார். துன்பம் போக்கவென நண்பர் கொடுத்த கள்ளை மட்டும் குடித்து உணவின்றிக் கிடந்தார். செல்லையாச் சம்மாட்டியாரின் வயதும் எழுபதைக் கடந்து சென்றது. இந்த நிகழ்வின் பின்னர் அவர் அதிகமாக யோசித்தபடி திரிந்தார். ஞாபக சக்தியும் குறையத் தொடங்கியது. பேச்சில் நிதானமின்மை, தடுமாற்றம் போன்றன தென்பட ஆரம்பித்தன.

அவரின் கரைவலையை, அவரது மனைவியின் உறவினர் சிலர் நடத்தி வந்தனர். கண்டும் காணாமலும் 'சில்லறையை' மடிகளில் கட்டினர். சம்மாட்டியின் உடல் உள்ளம் பொருள் என்பன நாளும் பொழுதும் தேய்வடையத் தொடங்கின. பத்து ஆட்களுடன் நடைபெற்ற தொழிலும் 'சேடம் இழுத்துச் செத்தார்போல்' ஆகியது. செத்த நாயின் உண்ணிகளாக ஒட்டியிருந்த உறவுகளும் கழன்று சென்றனர். செல்லையாச் சம்மாட்டி தனிநபரானார். மனைவிதான் இப்போது துணையாய் இருந்தாள்.

குஞ்சரத்தில் ஊர்ந்த மன்னன் போல் குரல் எழுப்பி ஆணையிட்டு நிலம் நடுங்க நிமிர்ந்து நடைபோட்டு வாழ்ந்த செல்லையாச் சம்மாட்டியின் முதுகில் 'கூனல்' விழுந்தது. 'காலன் வருமுன்னே கண்பஞ்சடையுமுன்னே' எனும் பாடலைப்போல், கண்பார்வையும் மங்கியது. போவோர் வருவோரை அவரால் அடையாளம் காண முடியவில்லை. அவருக்குப் பக்கத்தில் வருவோரிடம் "நீ யார்?" என்று கேட்பார். ஞாபக மறதி மேலும் அதிகரித்தது. பட்டணம் அழைத்துச்சென்று கண் சோதித்து கண்ணாடி வாங்கிக் கொடுப்பதற்கு உறவு, நண்பர் என்று இப்போது யாருமில்லை. சம்மாட்டியின் கையில் பணமும் இல்லை.

செல்லையாச் சம்மாட்டியார் இளமையில் ஆடிய ஆட்டத்தால் தன் அரைக்குக் கீழேயும் 'சேமிப்பை' தேடிக்கொண்டார். ஆட்களுடன் நின்று கதைக்கும்போது தான் உடுத்திருக்கும் சாரத்துக்கு மேலால் கையை வைத்து, சலம்விடும் பகுதிக்குள் சொறிவார். பெண்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கிறார்களே என்ற வெட்கம் நாணம் அற்ற மனநிலையில் உலாவித் திரிந்தார். ஊரவரின் வளவுப் படலைகளைத் திறந்து உள்ளே சென்று முற்றத்தில் நின்று, 'கள்' குடிப்பதற்கு கை நீட்டிப் பணம் கேட்பார். "ஐயோ! எங்கட சம்மாட்டியாருக்கு இந்தக்கெதி வந்ததோ...?" என்று மனம்வருந்திய சிலர் ஐந்தோ பத்தோ கையில் கொடுத்து அனுப்புவர். சிலர் தமது வீட்டுப் படலையை அடித்துச் சாத்திக்கொண்டு, பேசாமல் இருந்துவிடுவர்.

ஆலம் இலைபோல் 'மினுமினு' என்றிருந்த அவரின் வயிற்றில் இப்போது சில சுருக்கங்கள் விழுந்து அவர் நடக்கும்போது அடிவயிற்று மடிப்புகள் அசைந்து கொண்டிருந்தன. தலைமயிர் உதிர்ந்து கொட்டுப்பட்டவில்லை. அடர்ந்திருந்த மயிரில் நரை விழுந்து, வெள்ளிக் கம்பிபோல் காட்சியளித்தது. தலைக்குள் கையை வைத்து அடிக்கடி சொறிவார். நடுச்சாமத்திலும் ஊருக்குள் உலாவித் திரிவார். "எங்கட சம்மாட்டியார் பேய்போல இரவில அலையிறார். பாக்கப் பாவமாக் கிடக்குது. பயமாயும் இருக்குது" என்று ஊர்ச்சனங்கள் கதைத்துக் கொண்டனர்.

அது ஒரு மார்கழி மாதம். அடைமழையும் தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது. ஊருக்குள்ளே சீவியப்பாடு மிகவும் கஷ்டமான நிலை. ஒரு வெள்ளிக்கிழமை காலையில் வடக்குப் பக்கமாக அழுகுரல் சத்தம் கேட்டது. இரவு உறக்கத்திலேயே செல்லையாச் சம்மாட்டியார் இவ்வுலகை விலகிச்சென்றார்.

நன்றி மறவாமல் வாழ்ந்த அவரின் மச்சான் அந்தக் கணக்கன் கணபதி வெடிப்பெட்டி ஒன்று வாங்கிவந்து கொளுத்தினான். துன்புற்ற வேளைகளில் தமக்கு உதவிய சம்மாட்டியாருக்கு அவரது குடிமக்கள் பறை அடித்து, சங்கும் ஊதினர். அந்த ஊர் மக்கள் சிலருடன் 'பாரதியாரின்' இறுதி ஊர்வலக் காட்சிதான் செல்லையாச் சம்மாட்டிக்கும் நடந்தேறியது.

கடும் புயலில் எழுகின்ற கடல் அலைகளைக் கண்டும் மனம் கலங்காது, நெஞ்சுரத்துடன் சாதுரியமாகக் கப்பலை ஓட்டி பாதுகாப்புடன் கரைசேர்த்த கப்பல் தலைவனின் உச்ச மகிழ்ச்சிபோல சிவசம்புவின் தாயார் கமலாம்பிகை இப்போது மகிழ்ச்சியில் மிதந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'புவியியல்' துறையில் சிறந்த ஒரு விரிவுரையாளராக, இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிவசம்பு இப்போது பணியாற்றிக் கொண்டிருந்தார்.

அந்த ஆண்டில் புதிதாகச் சேர்ந்த மாணவருக்கு, அவர் விரிவுரை வழங்கிக் கொண்டிருந்தார். அங்கிருந்த மாணவி ஒருவரின் முகத்தைப் பார்க்கும்போது அடிக்கடி அவரின் மனக்கண்ணில் ஏதோ தோன்றி மறைந்து கொண்டிருந்தது. அதுபற்றி அந்த மாணவியிடம் கேட்கவேண்டும் என்று பல தடவை அவர் நினைப்பார். ஆனால் வேலைப்பழுவில் அதை மறந்துவிடுவார். இவ்வாறாக ஆறுமாதங்கள் கடந்து சென்றன. அன்றைய தினம் அந்த மாணவி கட்டுரை ஒன்றை அவரிடம் சமர்ப்பித்தபோது தனிமையில் பேசக்கூடிய சூழல் ஒன்று சிவசம்புவுக்கு கிடைத்தது.

"கனிமொழி! உம்மைப் பாக்கும்போது எனக்கு பழைய சம்பவங்கள் சிலது ஞாபகத்தில வருகுது" என்று பேராசிரியர் சிவசம்புதான், முதலில் உரையாடலைத் தொடங்கினார். அதன்பின் நாளும் பொழுதும் அவளின் வாழ்க்கை வரலாற்றை படிப்படியாக அவர் கேட்டறிந்தார்.

"தமிழ் ஆயுதப் போராளிகளுக்கு உதவினார் அவர்களுக்குக் கடைச் சாமான் கொடுத்தார் என்று சொல்லி, தன் தந்தையை இராணுவம் பிடித்துச் சென்றது. பத்து வருடங்களாக அவரைத் தேடாத இடங்களில்லை. ஈற்றில் காணாமல் போனோர் பட்டியலில் தன் தந்தையின் பெயரும் ஒன்றாகிவிட்டது. தாயார் 'பத்மாவதி' விதவையானார். தன் தாயின் தந்தை பஞ்சலிங்கம் சீதனமாகக் கொடுத்த தோட்டக் காணியில் கூலி ஆட்களின் உதவியுடன், தன் தாயார் காய்கனித்தோட்டம் செய்து வருகிறார். அந்த வருமானத்தில் தனது படிப்புச்செலவையும் கவனிக்கின்றார்" என்று கனிமொழி சொல்லி முடிக்கும்போது பேராசிரியரின் கண்கள் பனித்திருந்தன. அவரைப்பார்த்து கனிமொழியும் சிறிது ஆழ்ந்து யோசித்தாள்.

"சரி பிள்ளை! நீங்கள் போங்கோ பிறகு சந்திப்பம்" என்று கனிமொழியை அனுப்பி வைத்தார். அன்றிரவு அவர் தூங்குவதற்கு சிறிது நீண்ட நேரம் எடுத்தது. 'திரைப்படம்' போன்ற இத்தகைய சம்பவங்கள், தன் வாழ்விலும் நடைபெறும் என்று சிவசம்பு கனவிலும் நினைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த வாரம் வெள்ளிக்கிழமை பின்னேரம், தமது இளமைக்கால நிகழ்வுகளை கனிமொழிக்கு விபரமாகச் சொல்லி முடித்தபோது மலைபோன்ற ஒரு பாரம் சிவசம்புவின் இதயத்திலிருந்து இறங்கியதால் அவரின் முகம் திருப்தியுடன் காணப்பட்டது.

"பிரமச்சாரியான எனக்கு, இனி நீதான் என் சொந்தப் பிள்ளை. இதை உமது அம்மாவுக்கு தயவு செய்து தெரிவிக்கவேண்டாம்" என்று கூறிய சிவசம்பு நிம்மதிப் பெருமூச்சு ஒன்றை வெளியே விட்டார்.

கனிமொழியின் கண்களில் நிறைந்த நீரில் புத்தொளி ஒன்று வீசியது. மீண்டும் தன் தந்தையார் தனக்குக் கிடைத்த முழு உணர்வை, அவள் அன்றிலிருந்து பெற்றுக்கொண்டாள். கல்வி, செல்வம் போன்ற தேவைகளில் உதவியும் ஆலோசனையும் கனிமொழிக்கு கடல்போல் கிடைத்தன. அவளும் பதினாறடி பாய்ந்தாள். முதுமாணிப் பட்டத்தையும் முதல் வகுப்பில் அவள் வெற்றி பெற்றாள். பல்கலைக்கழக நிர்வாகம் வெளிநாட்டுப் படிப்புக்கான புலமைப்பரிசிலை வழங்கி கனிமொழியை கௌரவித்தது.

'தரம்மிக்க ஆய்வுகளை மேற்கொண்டு நிறைவுபெற்ற ஒரு 'கலாநிதியாக' பிறந்த தன் பொன்நாடு திரும்பி அங்கு சேவையாற்ற வேண்டும்' என்ற உயர்ந்த நோக்குடன் அத்திலாந்திக் பெருங்கடலின் மேலே அமெரிக்காவை நோக்கி கனிமொழி பறந்து கொண்டிருந்தாள்...

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருஞ்சொற்பத விளக்கம்

வல்லுவம் : சீலைத்துணியால் தைக்கப்பட்ட சிறிய பை. இதற்குள் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை என்பவற்றை வைத்துத் தொழிலாளர் எடுத்துச் செல்வர்.

கடையார்க் குட்டை :
வள்ளத்தின் பின்பக்க நுனிப் பகுதி.

அணியம் : வள்ளத்தின் முன்பக்க நுனிப்பகுதி.

தூர்மடி : மீனைத் தாங்கிவரும் பலமான நூலால் பின்னப்பட்ட பெரிய பை.

மீன் அம்மிப் போச்சு:

மீன் குவியல் மிகவும் தொகையாக, நெருக்கமாகத் தூர்மடியினுள் நிரம்புதல்.

உறிக்கயிறு : பெல்ற் போன்றது. இடுப்பில் அணிந்து வலையைக் கட்டி இழுக்கும் ஒரு கருவி.

கொட்டில் : பனை ஓலை, தென்னம் ஓலைக்கிடுகு என்பவற்றால் வேயப்பட்ட சிறிய வீட்டை கொட்டில் என்றும் சொல்வர்.

சிப்பம் : உணங்குமீன் எனப்படும் காய்ந்த கருவாட்டை ஏறத்தாழ நூறு இறாத்தல் மட்டில்; பனை ஓலை அல்லது தென்னம் கிடுகால் செய்யப்பட்ட பெட்டிகளுக்குள் போட்டு இறுக்கமாக வரிந்து கட்டுவர். இதைச் சிப்பம் என்பர்.

விளக்குமாறு : வீடு அல்லது முற்றம் என்பனவற்றைத் தூய்மைப்படுத்தும் துடைப்பங்கட்டை. குப்பை கூட்டும் கருவி.

கடலில் கறுப்பு போடுதல் :

அரச அதிகாரிகளால் குறிப்பிட்ட இடத்தில், பனை, தென்னை ஓலைகளைப் பெரிய கல்லில் கட்டிக் கடலில் போடுவர். இதை 'கறுப்புப் போடுதல்' என்பர். இவ்விடத்தில் தூண்டில் போட்டு மீன்களைப் பிடிப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பான் : பலமான தடித்த கயிறு.

பொங்கலாண்டி :

தொழிலாளர் குழுவுக்குச் சமையல் செய்யும் நபர்.

பொங்கல்வாடி :

தொழிலாளர்களுக்குச் சமையல் செய்யும் கூரையுள்ள சிறிய கொட்டில் வீடு.

கால்கட்டுப் போடுதல் :

ஆண்களுக்குக் கலியாணம் முடித்துக் கொடுத்தல்.

புதிர் சாப்பிடுதல் :

தை மாசத்தில் வயலில் வெட்டி எடுத்த புது நெல் அரிசியில் சாதம் சமைத்து சூரியனுக்குப் படைத்துச் சாப்பிடுதல்.

காவாலியள் : தாய் தந்தை உறவினரின் கட்டுப்பாட்டை மீறி அலைகின்ற பொடியன்கள்.

* இந்நாவலின் நிகழ்வுகள் பெயர்கள் கற்பனையாகப் புனையப் பட்டவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

659377

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நெய்தல் நிலத்தின் கதை



தொழில்நுட்ப வீச்சுக்களால் உலகம் ஒரே கிராமம் ஆகியுள்ள இன்றைய சூழலில் தமிழ் இனத்தவரும் உலகத் தமிழர்கள் என்ற ஒரு பொது அடையாளத்தையும் கொண்டுள்ளனர். முத்துராஜா இலங்கையில் பிறந்தாலும் புலம்பெயர்ந்து கனடா நாட்டில் வாழ்ந்து வருகின்றார். தமிழியலில் முதுமாணிப் பட்டதாரி. தற்போது Ph.D., ஆய்வுத் துறையையும் மேற்கொள்ள உள்ளார். வளர்ந்துவரும் எழுத்தாளர்; கவிஞர்.

இவரின் "ஆழியவளை - யாழ்ப்பாணத்துக் கடலோரக் கிராமம் ஒன்றின் மரபும் மாற்றமும்" எனும் ஆய்வு நூல் இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் விருதைப் பெற்றுள்ளது. "சுனாமி" எனும் கவிதைத் தொகுப்பு தற்போதும் விற்பனையில் உள்ளது.

"ஒரு நெய்தல் நிலத்தின் கதை" எனும் இப்புனைவு வடிவம் முத்துராஜாவின் மூன்றாவது படைப்பாகும். இந்நாவல் சமூக மானிடவியலை ஆழமாகக் கொண்டுள்ளது. மனிதநேயம், ஒருமைப்பாடு முதலியவற்றுக்கு ஊக்கம் கொடுக்கின்றது. பரவலான வாசிப்பைத் தேடுகின்றது.

ISBN: 978-81-234-1587-7

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-B, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 098.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9 788123 415871
Code No. A1979 Rs.170/-